# TNPSC தேர்வுப் பெட்டகம்

# நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2021

www.tnpscthervupettagam.com




























SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள்** ........ 12
**தமிழ்நாடு செய்திகள்** ........ 22
கீழடியில் வெள்ளி நாணயம் ........ 22
தமிழறிஞர் இரா. இளங்குமரனார் காலமானார் ........ 22
இரண்டாவது திருநங்கை துணைக் காவல் ஆய்வாளர் - தமிழ்நாடு ........ 23
தமிழக சட்டப் பேரவையின் 100வது ஆண்டு நிறைவு ........ 23
தகைசால் தமிழர் – N. சங்கரய்யா ........ 24
வன்னியர்களுக்கான 10.5% இடஒதுக்கீடு ........ 24
பொற்பனைக் கோட்டையில் அகழாய்வு ........ 24
திருச்சி கார்பைன் ........ 25
அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு ........ 25
மக்களைத் தேடி மருத்துவம் ........ 25
தமிழ் அர்ச்சனை ........ 25
கோயம்பத்தூர் இரயில் நிலையம் – பிளாட்டினம் தரநிலை ........ 26
இந்திய ஆணழகன் போட்டி ........ 27
வெள்ளை அறிக்கை – தமிழகப் பொருளாதாரம் ........ 27
சிறந்த மாநகராட்சி, நகராட்சி & பேரூராட்சி ........ 28
முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த தினம் ........ 28
மின்னணு நிதிநிலை அறிக்கை (இ-பட்ஜெட்) – தமிழ்நாடு ........ 29
மதுரை ஆதினத்தின் தலைமை மடாதிபதி ........ 29
வேளாண் பட்ஜெட் – தமிழ்நாடு ........ 30
சுதந்திர தின விழா விருதுகள் – தமிழ்நாடு ........ 30
அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக நியமனம் ........ 31
தமிழ்நாடு மற்றும் சுதந்திரப் போராட்டம் ........ 32
பண்டையகால குத்துவாள் கண்டுபிடிப்பு – தமிழ்நாடு ........ 32
தமிழக பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள் ........ 33
வேளாண் பட்ஜெட் – முக்கிய நடவடிக்கைகள் ........ 33
தனி வேளாண் பட்ஜெட்டைத் தாக்கல் செய்த 3வது மாநிலம் – தமிழ்நாடு ........ 34
ஆசிரியர்களுக்கான தேசிய விருது ........ 34
இயல், இசை, நாடக மன்ற தலைவர் ........ 34
மறைந்த மு.கருணாநிதி அவர்களுக்கு நினைவிடம் ........ 35
கலைஞர் நகர மேம்பாட்டுத் திட்டம் ........ 36
மாநகராட்சிக் கழகங்களாக மாற்றப் பட்ட நகராட்சிகள் ........ 36
உயர்கல்வி அமைச்சரின் அறிவிப்புகள் ........ 36
சிறந்த மூன்றாம் பாலினத்தவர் – கிரேஸ் பானு ........ 36
தொழில்முறைப் படிப்புகளில் மாநில அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு ........ 37

சிங்காரச் சென்னை 2.0 ........ 38
இலங்கை தமிழ் அகதிகளுக்கான நலத்தொகை ........ 39
ஆசிரியர் தகுதித் தேர்வு........ 39
தேசியச் செய்திகள்........ 40
ரஃபேல் படைப்பிரிவு – ஹாசிமாரா........ 40
திருநங்கைகளுக்கான கரிமா கிரஹாஸ்........ 40
கடல்சார் போக்குவரத்திற்கான உதவிகள் மசோதா 2021 ........ 41
மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதம் – இந்தியா ........ 41
சிறார் நீதி (குழந்தை நலன் மற்றும் பாதுகாப்பு) திருத்த மசோதா ........ 42
வட்டார மொழிகளில் உயர்கல்வி........ 42
மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு........ 42
உறுதிபடுத்தப்பட்ட பாதுகாப்பு / புலிகளின் தரநிலைகளில் இந்தியாவின் 14 புலிகள் காப்பகங்கள் . 43
தேசிய ஊனீரியல் கணக்கெடுப்பு (மாநில அளவில்)........ 44
சம்பந்தர் ........ 44
லித்தியம் ஆய்வுத் திட்டங்கள் ........ 45
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஆகஸ்ட் மாத தலைமை – இந்தியா........ 45
மூலோபாய பெட்ரோலிய இருப்புகள் (வளங்கள்) திட்டம்........ 46
சிக்கிம் பிரிவிற்கான நேரடித் தொடர்பு இணைப்பு........ 46
இ-ரூபி டிஜிட்டல் பணவழங்கீட்டு முறை........ 47
இலகுவான மெட்ரோ இரயில்........ 48
அஸ்வகந்தம் ........ 48
தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை ........ 49
வேலைவாய்ப்பின்மையினால் நிகழும் தற்கொலைகள் ........ 49
பாதுகாப்பான தளவாட ஆவணப் பரிமாற்றம்........ 49
தேசியப் புள்ளி விவரங்கள் நிறுவனத்தின் கணக்கெடுப்பு........ 49
மின் விநியோகத் துறை குறித்த அறிக்கை ........ 50
நீலச் சுதந்திர நடவடிக்கை........ 50
சர்க்கரை தொழில்துறைகளுக்கான உரிமக் கட்டுப்பாடு நீக்கம் – மத்திய அரசு........ 51
உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2021........ 51
பள்ளிக் கல்விக்கான சமக்ரா சிக்சா திட்டம்........ 52
ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் – உச்ச நீதிமன்றம் ........ 52
நொடிப்பு நிலை மற்றும் திவால் குறியீடு (திருத்தம்) மசோதா........ 53
Fortune குளோபல் 500 பட்டியல் – 2021 ........ 53
மினர்வாயா பென்டலி ........ 54
வேளாண் தானியங்கு வானிலை மையங்கள்........ 54
சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் ........ 55
கடல் மீன்வளம் மீதான தேசியக் கொள்கை, 2017 ........ 55
ஐ.என்.எஸ். விக்ராந்த் ........ 55
ஐ.என்.எஸ். கஞ்சர் ........ 56

உலகின் மிக உயரமான சாலை – லடாக் ..... 56
2031 ஆம் ஆண்டில் இந்தியாவின் அணுசக்தித் திறன் ..... 57
பட்டியலினப் பழங்குடியினர் பட்டியலைத் திருத்துவதற்கான மசோதா ..... 57
தரமான உற்பத்தி முறைக்கான சான்றிதழ் – கோவாக்சின் ..... 58
TRIFED நிறுவனத்தின் 34வது நிறுவன தினம் ..... 58
சுயபுணரமைப்புப் பொருட்கள் ..... 59
தேசிய விவசாயிகள் தரவுதளம் ..... 59
நெகிழி கலக்கப்பட்ட கைவினைக் காகிதம் ..... 59
இந்தியாவின் முதலாவது இருதயச் செயலிழப்பு பயோடாங்க் ..... 60
நீதிபதி மற்றும் மக்கள்தொகை இடையேயான விகிதம் ..... 60
இந்திய விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் (திருத்தம்) மசோதா, 2021 ..... 61
பிளிங்கனின் இந்திய வருகை ..... 61
ஜான்சன் & ஜான்சன் தடுப்பு மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு அனுமதி ..... 61
பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சார்த்த அபியான் திட்டம் ..... 62
உள்நாட்டு நுழைவு அனுமதி முறை நீக்கம் – லடாக் ..... 63
சோதனைத் தள தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு ..... 63
சயத் தல்வார் 2021 ..... 63
உஜ்வாலா - 2 திட்டம் ..... 64
PM – DAKSH ..... 64
லட்சத்தீவில் தண்ணீர் மாளிகைகள் ..... 65
கலப்பு கோவிட் தடுப்பு மருந்து ..... 65
விலங்கு டி.என்.ஏ ஆய்வகம் ..... 65
127வது அரசியலமைப்புத் திருத்த மசோதா ..... 66
சர்லா துக்ரால் ..... 66
இரயில் மதத் ..... 67
இந்தியாவின் 5-அம்சத் திட்டம் ..... 67
சமையல் எண்ணெய்கள் குறித்த தேசிய திட்டம் – பாமாயில் ..... 67
இந்தியாவின் முதியோர் மக்கள்தொகை ..... 68
தீர்ப்பாயச் சீர்த்திருத்தங்கள் மசோதா, 2021 ..... 69
உலகின் உயரமான நடமாடும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரங்கள் ..... 69
N லைன் ரக கார்கள் – ஹூண்டாய் ..... 69
காகோரி இரயில் நடவடிக்கை ..... 69
அல் மொஹெத் அல் ஹிந்தி 2021 ..... 70
ஜிஎஸ்எல்வி - FI0 - EOS - 3 ..... 71
மலபார் கடற்படைப் பயிற்சிகள் ..... 71
குறையொலி சீர்வேக ஏவுகணை – நிர்பய் ..... 71
தேசிய வாகனக் கழிவுக் கொள்கை ..... 72
பஹ்ரைன் நாட்டிற்கு ஆப்பிள்கள் ஏற்றுமதி – APEDA ..... 73
யானைகள் மற்றும் புலிகளுக்கான பொதுக் கணக்கெடுப்பு ..... 74

வைப்புத் தொகை காப்பீடு மற்றும் கடன் உத்திரவாதக் கழகம் (திருத்தம்) மசோதா, 2021 ........ 75
Fit India Freedom Run 2.0 ........ 75
வருடாந்திர தொழிலாளர் சக்தி ஆய்வு (2019-2020) ........ 76
மருத்துவர் மற்றும் மக்கள்தொகை விகிதம் ........ 77
செயற்கைக்கோள் தொலைபேசி வசதி ........ 77
முதியோர்களுக்கான வாழ்க்கைத் தரக் குறியீடு 2021 ........ 77
'Honour First' ........ 78
தேசப் பிரிவினையின் நினைவு தினம் ........ 78
மரபணு மாற்றப்பட்ட சோயாபீன் ........ 79
ராம்சார் பட்டியலில் புதிய ஈரநிலங்கள் ........ 79
IBSA நாடுகளின் சுற்றுலா அமைச்சர்கள் மாநாடு ........ 80
நாசி வழித்  தடுப்பு மருந்து – BBV154 ........ 80
வந்தே பாரத் இரயில்கள் ........ 80
டீசல் – நேரடி விற்பனை ........ 81
மாணவிகளுக்கான சைனிக் பள்ளிகள் ........ 81
ஆற்றலில் தற்சார்பு – 2047 ........ 82
சன்சிரைய்யா ........ 82
பல்வேறு திட்டங்களின் கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கீடு ........ 83
TAPAS ........ 83
'IndiGau' ........ 83
வடிவமைப்பு வள மையம் – சென்னை ........ 84
நீரியல் வானிலைப் பேரிடர்கள் பற்றிய தரவுகள் ........ 84
இந்துஸ்தான் – 228 ........ 85
பாரத் இணையவசதித் திட்டம் ........ 85
விருக்சரோபன் அபியான் – 2021 ........ 86
NDA தேர்வில் பெண்களின் பங்கேற்பு ........ 86
மாணாக்கர் தொழில்முனைவுத் திட்டம் 3.0 ........ 87
கொங்கன் பயிற்சி 2021 ........ 87
அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி சவால் – 2021 ........ 88
இருதரப்பு கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் வியட்நாம் ........ 88
சமையல் எண்ணெய்களுக்கான தேசிய திட்டம் ........ 89
UNITE AWARE ........ 90
உபார்தே சிதாரே நிதி ........ 90
மேம்படுத்தப்பட்ட சாஃப் தொழில்நுட்பம் ........ 90
பொதுத் துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வு 2019 – 20 ........ 91
இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதி ........ 92
இந்தியாவின் முதலாவது மின்சார வாகனங்களுக்கு ஏற்ற வகையிலான நெடுஞ்சாலை ........ 92
ஆரோக்கிய தாரா 2.0 ........ 92
மணிராங்க் சிகரத்தில் முப்படைகளின் அனைத்து மகளிர் அணி ........ 93

இந்தியப் பாதுகாப்பு புத்தாக்க நிறுவன சவால் – 5வது பதிப்பு ..... 94
பொருளாதார வளர்ச்சிக் கழக நிறுவனம் – புதிய அதிபர் ..... 94
பேரிடர் மேலாண்மை – இந்தியா மற்றும் வங்காள தேசம் ..... 95
சைகோவ்–டி தடுப்பு மருந்து ..... 95
சிறு வணிகக் கடன் முன்னெடுப்பு ..... 96
AK – 103 துப்பாக்கி ..... 96
இந்தியாவின் மிக உயரமான மூலிகைப் பூங்கா ..... 97
மலபார் கலகம் – 1921 ..... 97
ஹீருன் குளோபலின் மிகவும் மதிப்பு மிக்க 500 நிறுவனங்களின் பட்டியல் – 2021 ..... 98
INSACOG ஆய்வு ..... 98
ஜலகன்யகா ..... 99
ARMY – 2021 ..... 99
சைர்-அல்-பஹ்ர் கடற்படைப் பயிற்சி ..... 100
நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மீதான N.S. விஸ்வநாதன் குழு ..... 101
யுக்தாரா தளம் ..... 101
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இயந்திரமயமாக்கப்பட்ட சக்கர நாற்காலி – 'நியோபோல்ட்' ..... 102
படைப்பிரிவு தலைமைத் தளபதி ஆகும் 5 பெண் அதிகாரிகள் ..... 102
நாராயண் ரானே கைது ..... 103
உலகளாவிய உற்பத்தி இடர்க் குறியீடு ..... 104
போக்குவரத்தில் கரிம நீக்கத்திற்கான மன்றம் ..... 104
இ-ஷ்ராம் தளம் ..... 105
வரலாற்றுச் சிறப்புமிக்க வாரக் கொண்டாட்டங்கள் ..... 105
GUAREX ..... 106
இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதி ..... 107
KAZIND – 21 ..... 107
m-RNA அடிப்படையிலான இந்தியாவின் முதல் கோவிட்-19 தடுப்பு மருந்து ..... 108
சுஜாலாம் ..... 108
கரும்பிற்கு இதுவரை இல்லாத அளவிலான நியாய மற்றும் இலாப விலை ..... 109
மலபார் பயிற்சி ..... 109
கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ..... 110
ஹைட்ரஜன் மின்பகுப்பு பல்முனைத் தொழிற்சாலை ..... 110
மாலே இணைப்புத் திட்டம் ..... 111
WEP Nxt ..... 111
EASE 4.0 ..... 112
NERDSD இலக்கு குறியீட்டு அறிக்கை மற்றும் முகப்புப் பக்கம் ..... 112
ஆனந்தா கைபேசி செயலி ..... 113
காசநோய் ஒழிப்புக் கூட்டிணைவு வாரியத்தின் தலைவர் ..... 113
SAMRIDH திட்டம் ..... 114
INDIASize ..... 114

"Shared Density 2021" - பாதுகாப்புப் பயிற்சி ..... 115
அதிகம் கண்காணிக்கப்பட்ட நகரங்கள் ..... 115
இந்தியா-ஜெர்மனி கூட்டுப் பயிற்சி ..... 116
தீபார் பீல் வனவிலங்குச் சரணாலயம் ..... 116
காண்டீவ் பயிற்சி ..... 117
சர்வதேசச் செய்திகள் ..... 118
செரண்டிபிட்டி சபையர் ..... 118
K2 சிகரத்தில் ஏறிய இளம் வயது வீரர் ..... 118
7 புதிய உலகப் பாரம்பரியத் தளங்கள் சேர்ப்பு ..... 119
உலகளாவிய மேம்பாட்டிற்கான முத்தரப்பு ஒத்துழைப்பு ..... 119
முகவர் ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா ..... 119
உலகளாவியப் புகையிலைத் தொற்று குறித்த அறிக்கை 2021 ..... 120
ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான நிரந்தர மன்றம் ..... 121
பன்னாட்டு சூரியசக்தி கூட்டிணைவு கட்டமைப்பு ஒப்பந்தம் – ஜெர்மனி ..... 121
இப்ராஹிம் ரைசி ..... 121
ஃபோர்ப்ஸ் நிகழ்நேர கோடீஸ்வரர்கள் பட்டியல் ..... 122
DBS வங்கி ..... 122
பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான கூட்டணி ..... 122
கில்கிட் – பல்திஸ்தான் ..... 123
சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நீதி அமைச்சர்கள் சந்திப்பு ..... 124
மார்பர்க் வைரஸ் நோய் ..... 124
உலக இளையோர் மேம்பாட்டுக் குறியீடு, 2020 ..... 124
DABUS – காப்புரிமை ..... 125
ஆசியான் பிராந்திய மன்றத்தின் வெளியுறவு அமைச்சர்களின் 28வது சந்திப்பு ..... 125
கொரோனா வைரஸ் தொடர்பான கண்டுபிடிப்புகளின் தரவரிசை ..... 125
Wolf – Warrior இராஜதந்திரமுறை ..... 126
SEACAT கடற்படைப் பயிற்சி ..... 127
காபூலில் தாலிபன் படைகள் ..... 127
SAGO ..... 128
தெற்காசியாவின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் மன்றம் ..... 128
தொலை உணர்வு செயற்கைக்கோள் தரவுப் பகிர்வில் ஒத்துழைப்பு ..... 129
இந்தியாவில் வியட்நாம் தூதரக அலுவலகம் ..... 129
கொலராடோ ஆற்றுப்படுகை – தண்ணீர் பற்றாக்குறை ..... 129
ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ..... 130
ஆப்கானிஸ்தானில் நிலவும் பட்டினி நிலை ..... 130
குழந்தைகளின் பருவநிலை இடர்க் குறியீடு ..... 131
3 வயது குழந்தைகளுக்கான கோவிட் எதிர்ப்பொருள் சோதனை – இஸ்ரேல் ..... 132
வெப்பமண்டலப் புயல் – ஹென்றி ..... 132
100% புதைபடிமமற்ற ஹைட்ரஜன் ..... 132

உலகப் பொருளாதார மன்றத்தின் 'நிலையான மேம்பாட்டின் தாக்கம்' குறித்த உச்சி மாநாடு – 2021 ........ 133
பாதுகாப்பான நகரங்களின் குறியீடு 2021 ........ 133
Fatah – 1 ........ 134
உலகின் உயரமான ராட்டினம் ........ 134
ஹவானா குறைபாட்டு நோய் ........ 135
எப்பொழுதும் உள்ள (என்டமிக்) நிலையை எட்டும் கோவிட்-19 தொற்று ........ 136
பொருளாதாரச் செய்திகள் ........ 137
முன்தேதியிட்ட வருமான வரிச் சட்டப்பிரிவு நீக்கம் ........ 137
செல்வச் சிறப்புமிக்க கிராமம் ........ 137
ரூ.3 டிரில்லியன் சந்தை மூலதனத்தை எட்டிய 4வது தகவல் தொழில்நுட்ப நிறுவனம் – HCL ........ 137
சந்தை மூலதனம் – TCS ........ 138
நிதி உள்ளடக்கக் குறியீடு – RBI ........ 139
புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டில் ராதாகிஷன் தமானி ........ 139
ஐசிஐசிஐ, ஸ்டான்சார்ட் மற்றும் HSBC - 'பரிமாற்று வணிக ஒப்பந்தம்' ........ 140
உலகளாவிய இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீடு – 2021 ........ 140
இணையவழிப் பாதுகாப்பு பல்முனை நன்கொடையாளர் அறக்கட்டளை நிதி ........ 141
தேசியப் பணமாக்கல் தொடர் திட்டம் ........ 141
100 பில்லியன் டாலர் சந்தை மூலதனத்தைக் கடந்த இன்போசிஸ் நிறுவனம் ........ 142
பாரத்பே – புதிய செயலி ........ 142
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 143
குறுகிய காமா கதிர் வெடிப்புகள் ........ 143
உலகின் முதல் மறுபதிவு செய்யக் கூடிய வணிக செயற்கைக்கோள் ........ 143
நிசார் செயற்கைக்கோள் ........ 144
சனி மற்றும் புவி ........ 144
நிலவின் மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகள் ........ 145
உயிருள்ள மூளையிலுள்ள புரதங்களைக் கண்டறிய புதிய முறை ........ 145
பென்சில் இழையைப் பயன்படுத்தி கோவிட் பரிசோதனை ........ 146
டைனோசர்களின் அழிவுக்குக் காரணமான குறுங்கோளின் தோற்றம் ........ 146
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'அணுக்கரு இணைவு' ........ 147
கோவிட்-19 மற்றும் காசநோய் தொற்றுநோய்களின் இணைவு – ஆய்வு ........ 147
குறுங்கோள் 2016 AJ193 ........ 147
நிலவில் சூரியனால் தூண்டப்பட்ட மாற்றம் கண்டுபிடிப்பு ........ 148
செவ்வாய்க் கிரக மாதிரிகள் – JAXA ........ 148
மூன்று கருந்துளைகளின் இணைவு கண்டறியப்பட்டது ........ 149
குவாண்டம் கணினி உருவகக் கருவித் தொகுப்பு ........ 149
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 150
சர்வதேச தூய காற்று ஊக்கத் திட்டம் – இந்தூர் ........ 150
பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் 2021 ........ 151

மின்கழிவுகள் உற்பத்தி ........ 151
சிறுத்தைகள், இணை இரையுண்ணிகள் மற்றும் பெரிய தாவர உண்ணிகளின் நிலை – 2018 ........ 152
பவளப் பாறைகளைப் பாதிக்கும் சன்ஸ்கிரீன் லோசன்களுக்குத் தடை – தாய்லாந்து ........ 153
ஆக்ஸ்பாம் அமைப்பின் அறிக்கை ........ 153
அரபிக்கடலில் அடிக்கடி உருவாகும் புயல்கள் : இந்திய வானிலை ஆய்வு மையத்தின் ஆய்வறிக்கை ........ 153
பருவநிலை மாற்றம் 2021 அறிக்கை ........ 154
House Fresh அறிக்கை ........ 155
கிகாலி திருத்தம் ........ 155
கிரீன்லாந்து சிகரத்தில் மழை ........ 156
புதிய விலங்குகள் கண்டுபிடிப்பு 2020 ........ 156
மாநிலச் செய்திகள் ........ 158
ராஜா மிர்ச்சா ஏற்றுமதி ........ 158
இளஞ்சிவப்பு (பிங்க்) பாதுகாப்புத் திட்டம் ........ 158
தேவரண்யா திட்டம் ........ 159
கிருஷிகர்ணா திட்டம் ........ 159
சிறுத்தைகளின் டி.என்.ஏ. விவரக்குறிப்பு – ஒடிசா ........ 159
இரட்டைச் சாலை சுரங்கப் பாதை ........ 160
குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பிற்கான வலையமைப்பு ........ 160
SKOCH விருதுகள் – மேற்கு வங்காளம் ........ 161
தகவல் தொழில்நுட்பத் துறைக்கான ராஜீவ் காந்தி விருது ........ 161
இந்தியாவின் முதலாவது தண்ணீர் உபரி நகரம் ........ 162
நகரப் பகுதிகளில் வன வளங்களுக்கான உரிமைகள் ........ 162
வண்ணக் குறியீட்டு முறை – கோவிட் தடுப்பு நடவடிக்கை ........ 162
அசாம் கால்நடைப் பாதுகாப்பு மசோதா, 2021 ........ 163
முதலாவது ஆளில்லா விமானத் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையம் ........ 164
தேச பக்தர்கள் தினம் – மணிப்பூர் ........ 164
மரபணு வங்கி – புதுடெல்லி ........ 164
ஸ்மார்ட் சுகாதார அட்டைகள் – ஒடிசா ........ 165
அலிகரின் பெயர் மாற்றம் ........ 165
ஒரு கைதியின் வாழ்க்கை ........ 166
ஆந்திரப் பிரதேசத்தில் 3 தண்ணீர் உபரி நகரங்கள் ........ 166
வாஞ்சுவா திருவிழா – அசாம் ........ 167
வாத்சல்யா திட்டம் ........ 168
பசையடுக்குப் பிரிவின் உட்பிரிவு – ஹரியானா ........ 168
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 169
இந்தியாவின் சிறந்த சிறுவணிக வெற்றியாளர்கள் – ஐக்கிய நாடுகள் சபை ........ 169
நாட்வெஸ்ட் குரூப் எர்த் ஹீரோஸ் விருது ........ 169
லோகமான்யா திலகர் விருது 2021 ........ 169

மகாராஷ்டிரா பூஷன் விருது 2021 ........ 170
ஈஸ்னர் விருது ........ 170
இந்தியத் தலைமைக் கணக்கு கட்டுப்பாட்டாளர் ........ 171
கடற்படை அதிகாரிகளின் புதிய துணைத் தலைவர் ........ 171
பேராசிரியர் C.R. ராவ் நூற்றாண்டு நினைவுத் தங்கப்பதக்கம் ........ 171
டாக்டர் திருதி பானர்ஜி – இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் புதிய இயக்குநர் ........ 172
மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது ........ 172
ரேகா சர்மா ........ 173
Order of British Columbia விருது ........ 173
புரூனெல் பதக்க விருது ........ 174
AI கேம் சேஞ்சர் விருது ........ 174
வீரதீர விருதுகள் ........ 175
தேசிய இளையோர் விருது ........ 175
காங்கிரசினல் தங்கப் பதக்கம் ........ 176
மகி காஜி ........ 176
தீக்சா ஷிண்டே ........ 176
மெல்போர்ன் விருதுகள் 2021 – இந்தியத் திரைப்பட விருதுவிழா ........ 177
ஸ்ரீபசவா சர்வதேச விருது ........ 177
EASE சீர்திருத்தக் குறியீட்டு விருது 2021 ........ 178
டாக்டர் கெயில் ஓம்வெட் ........ 178
விளையாட்டுச் செய்திகள் ........ 179
இணையவழி சதுரங்கப் போட்டி ........ 179
பி.வி. சிந்துவின் சாதனை ........ 180
பாரா ஒலிம்பிக் கருத்துருப் பாடல் வெளியீடு ........ 180
லாவ்லினா போர்கோஹெய்ன் ........ 180
ரவிக்குமார் தாஹியா வெள்ளிப் பதக்கத்தினை வென்றார் ........ 181
இந்திய ஆடவர் ஹாக்கி அணி – வெண்கலப் பதக்கம் ........ 182
பஜ்ரங் புனியா – வெண்கலப் பதக்கம் ........ 182
நீரஜ் சோப்ரா – தங்கப் பதக்கம் ........ 182
டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் 2021 மற்றும் இந்தியா ........ 183
Flame of Hope (நம்பிக்கையின் சுடர்) ........ 184
டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 3வது வீரர் ........ 184
சர்வதேச இராணுவ விளையாட்டுப் போட்டிகள் ........ 185
ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்ப்பு ........ 185
டோக்கியோ பாராலிம்பிக்ஸ் – இந்திய அணி ........ 185
ஹர்சித் ராஜா ........ 186
இந்திய ஹாக்கி அணி – ஒடிசாவின் நிதி உதவி ........ 186
டோக்கியோ 2020 – கோடைகால பாராலிம்பிக் போட்டிகள் ........ 187
மகளிருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் – சைலி சிங் ........ 187

NBA போட்டியில் பிரின்ஸ்பால் சிங் ..... 188
பாவினா படேல் – வெள்ளிப் பதக்கம் ..... 189
முக்கிய தினங்கள் ..... 189
நண்பர்கள் தினம் 2021 – ஆகஸ்ட் 01 ..... 189
தேசிய மலை ஏறுதல் தினம் – ஆகஸ்ட் 01 ..... 189
இஸ்லாமிய மகளிர் உரிமைகள் தினம் – ஆகஸ்ட் 01 ..... 190
உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரம் – ஆகஸ்ட் 01 – 07 ..... 190
ஹிரோசிமா தினம் – ஆகஸ்ட் 06 ..... 190
தேசிய கைத்தறி தினம் – ஆகஸ்ட் 07 ..... 191
சர்வதேச பூனைகள் தினம் – ஆகஸ்ட் 08 ..... 191
நாகசாகி தினம் – ஆகஸ்ட் 09 ..... 192
உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் – ஆகஸ்ட் 09 ..... 192
வெள்ளையனே வெளியேறு தினம் – ஆகஸ்ட் 09 ..... 193
உலக சிங்கங்கள் தினம் – ஆகஸ்ட் 10 ..... 193
உலக உயிரி எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10 ..... 194
சர்வதேச இளையோர் தினம் – ஆகஸ்ட் 12 ..... 194
தேசிய நூலகர்கள் தினம் – ஆகஸ்ட் 12 ..... 194
சர்வதேச இடதுகை பழக்கமுள்ளோர் தினம் – ஆகஸ்ட் 13 ..... 195
தேசிய துக்க தினம் (வங்காள தேசம்) – ஆகஸ்ட் 15 ..... 195
உலக ப்ரீ-டயாபட்டீஸ் (நீரிழிவுக்கு முந்தைய நிலை) தினம் – ஆகஸ்ட் 14 ..... 196
உரிமை மாற்ற தினம் – ஆகஸ்ட் 16 ..... 196
நவ்ரோஷ் முபாரக் தினம் – ஆகஸ்ட் 16 ..... 197
உலக மனிதநேய தினம் – ஆகஸ்ட் 19 ..... 197
உலகப் புகைப்பட தினம் – ஆகஸ்ட் 19 ..... 198
அக்சய் உர்ஜா திவாஸ் – ஆகஸ்ட் 20 ..... 198
உலக கொசு தினம் – ஆகஸ்ட் 20 ..... 199
சத்பவனா திவாஸ் – ஆகஸ்ட் 20 ..... 199
சமஸ்கிருத வாரம் – ஆகஸ்ட் 19 முதல் 25 வரை ..... 200
உலக முதியோர் தினம் – ஆகஸ்ட் 21 ..... 200
தீவிரவாதத்தினால், பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21 ..... 200
சமஸ்கிருத தினம் – ஆகஸ்ட் 22 ..... 201
மதம் (அ) நம்பிக்கை சார்ந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினம் – ஆகஸ்ட் 22 ..... 201
தேசிய தேனீக்கள் தினம் 2021 – ஆகஸ்ட் 21 ..... 201
சென்னை தினம் – ஆகஸ்ட் 22 ..... 202
ஸ்டாலினியவாதம் மற்றும் நாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கான ஐரோப்பிய தினம் – ஆகஸ்ட் 23 ..... 202
அடிமை வர்த்தகம் மற்றும் அதன் ஒழிப்பினை நினைவு கூறுவதற்கான சர்வதேச நினைவு தினம் – ஆகஸ்ட் 23 ..... 203

உலகத் தொழில்முனைவோர் தினம் – ஆகஸ்ட் 21 ........ 203
உலக தண்ணீர் வாரம் – ஆகஸ்ட் 23 முதல் 27 வரை ........ 204
சர்வதேச நாய்கள் தினம் – ஆகஸ்ட் 26 ........ 204
அணுசக்தி சோதனைக்கு எதிரான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 29 ........ 204
தேசிய விளையாட்டு தினம் – ஆகஸ்ட் 29 ........ 205
தெலுங்கு மொழி தினம் – ஆகஸ்ட் 29 ........ 205
ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30 ........ 206
சிறுதொழில் தினம் – ஆகஸ்ட் 30 ........ 206
சர்வதேச திமிங்கலச் சுறா தினம் – ஆகஸ்ட் 30 ........ 207
அதிகப்படியான மருந்து உட்கொள்ளல் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 31 207
இதரச் செய்திகள் ........ 208
தேசிய அந்துப்பூச்சி வாரம் - ஜூலை 17/25, 2021 ........ 208
ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிலைய விருது தரவரிசை – 2021 ........ 208

# TNPSC துளிகள்

- அனைத்து அரசுப் பணிகளிலும் திருநங்கைச் சமுதாயத்தினருக்கு இடஒதுக்கீடு வழங்கியுள்ள முதல் மாநிலமாக கர்நாடக மாநிலம் மாறியுள்ளது.
    - அம்மாநில அரசானது அவர்களுக்கு 1% இட ஒதுக்கீட்டினை வழங்குகிறது.
- கென்யா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகள் இணைந்து உலக கல்வி உச்சி மாநாட்டினை லண்டன் நகரில் நடத்துகின்றன.
    - கல்விக்கான உலகளாவிய கூட்டிணைவிற்காக வேண்டி 5 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு நிதி திரட்டுவதே இம்மாநாடு நடத்தப் படுவதன் நோக்கமாகும்.
- இந்தியாவின் கோடீஸ்வர முதலீட்டாளரான ராகேஷ் ஜுன்ஜுன்வாலா 'ஆகாஷா ஏர்' எனப்படும் தனது சொந்த, குறைந்த விலை கொண்ட, விமானச் சேவை நிறுவனத்தைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.
    - எர்பிஎன்பி மற்றும் பார் கேபிடல் மேனேஜ்மென்ட் ஆகிய நிறுவனங்கள் ஆகாஷா ஏர் நிறுவனத்தில் முதலீடு செய்யும் நிறுவனங்களாகும்.
- மிக்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த 25 வயதான வைதேகி தோங்ரே என்பவர் 2021 ஆம் ஆண்டு அழகிப் போட்டியில் மிஸ் இந்தியா-அமெரிக்கா பட்டத்தினை வென்றுள்ளார்.
    - கதக் எனும் இந்தியப் பாரம்பரிய நடனக்கலையில் அவர் ஆற்றிய சிறந்த அரங்கேற்றத்திற்காக இந்த போட்டியில் அவருக்கு 'மிஷ் டேலண்டட்' (Miss Talented) என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோவிலுள்ள சிட்டியோ பர்லே மார்க்ஸ் தளம் எனும் இயற்கைத் தோட்டமானது யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
    - பிரேசில் நாட்டின் இயற்கை கட்டிடக்கலை வல்லுநர் பர்லே மார்க்சின் நினைவாக இந்த இடத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- சர்வதேச நாணய நிதியமானது, கோவிட் – 19 பெருந்தொற்றின் இரண்டாவது அலையின் காரணமாக 2021 – 22 ஆம் நிதி ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான வளர்ச்சியினை 9.5% ஆக கணித்துள்ளது.
    - இதற்கு முன்பாக இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 12.5% ஆக கணிக்கப் பட்டிருந்தது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின், கீழ் இயங்கும் இராணுவ உற்பத்தித் துறையானது 'சிறப்பான இராணுவ அமைப்பிற்கான புதிய கண்டுபிடிப்புகள்' (Innovations for Defence Excellence (iDEX)) எனும் மத்திய அரசின் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - சுமார் 300 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் புதுமைப் படைப்பாளர்களுக்கும், சுமார் 20 பங்குதாரர் புத்தாக்க நிறுவன அமைப்புகளுக்கும் பாதுகாப்பு புதுமை கண்டுபிடிப்பு அமைப்பின் மூலம் வேண்டிய நிதி உதவியை வழங்குவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.
- ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவற்றையடுத்து அதிக அந்நியச் செலாவணி இருப்புகளைக் கொண்டுள்ள நாடாக தற்போது சீனா திகழ்கிறது.
    - இந்தியா அதிக அந்நியச் செலாவணி இருப்புகளுடன் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி நான்காம் இடத்தினைப் பெற்றுள்ளது.

- திவ்யா நயன் (Divya Nayan) என்ற பெயரில் பார்வையற்றோருக்கான தனிப்பட்ட வாசிப்புக் கருவியை சண்டிகரிலுள்ள சிஎஸ்ஐஆர்-மத்திய அறிவியல் கருவிகள் நிறுவனம் (CSIR-Central Scientific Instruments Organisation (CSIO)) உருவாக்கியுள்ளது.
    - இந்தக் கருவியைப் பயன்படுத்தி, எந்த அச்சிடப்பட்ட அல்லது டிஜிட்டல் ஆவணத்தையும் குரல் வழியாக அணுகலாம்.
- 2021 ஆம் நிதியாண்டில் கடன்களைத் தள்ளுபடி செய்த பொதுத்துறை வங்கிகளின் பட்டியலில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (State Bank of India) முதலிடத்தில் உள்ளது.
    - இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் பஞ்சாப் நேஷனல் வங்கி ஆகியவை பெற்றுள்ளன.
- BRICS நாடுகளின் தீவிரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதற்காக வேண்டி BRICS தீவிரவாத எதிர்ப்புச் செயல்திட்டமானது உறுதி செய்யப்பட்டுள்ளது.
    - இது குறித்த ஒரு விவாதமானது BRICS அமைப்பின் தீவிரவாத எதிர்ப்புச் செயற் குழுவின் 6வது சந்திப்பில் நடைபெற்றது.
- மியான்மர் நாட்டு இராணுவமானது அவசர நிலையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
    - இராணுவ அரசானது தன்னை "தற்காலிக அரசு" எனப் பெயரிட்டு மின் ஆங்க் ஹலாய்ங் என்பவரைப் பிரதமராக நியமித்துள்ளது.
- அசாம் மற்றும் மிசோரம் ஆகிய மாநில முதல்வர்கள் தங்களது மாநிலங்களுக்கு இடையிலான எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றமான ஒரு சூழ்நிலையைக் குறைக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர்.
    - இந்த இரு மாநிலங்களும் 164.6 கி.மீ. தொலைவிலான பதற்றம் மிக்க எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசி வழங்கிய (100%) முதல் இந்திய நகரமாக புவனேஷ்வர் உருவெடுத்துள்ளது.
    - 55 மையங்களில் எல்லா நேரங்களிலும் தடுப்பூசி சேவையை வழங்கி வரும் புவனேஷ்வர் மாநகராட்சிக் கழகத்திற்கு இப்பெருமை சேரும்.
- நேஷனல் ஜியோகிராஃபிக் எனும் தொலைக்காட்சி நிறுவனமானது துபாயின் 'Museum of the Future' எனும் ஒரு அருங்காட்சியகத்தினை உலகின் மிக அழகான அருங்காட்சியகங்களுள் ஒன்றாக பட்டியலிட்டுள்ளது.
    - அதனுடைய கட்டிடக்கலை மற்றும் அதிநவீன தொழில்நுட்பப் புதுமைக்காக வேண்டி இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமி ஆகியோர், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஈராக்கில் மேற்கொள்ளப் படும், அமெரிக்கப் போர் பணியை முறைப்படி நிறுத்துவதற்கான ஒப்பந்தம் குறித்து அறிவித்தனர்.
- உலகளாவிய முதல் 100 இடங்களில் இருந்து வெளியேறி மும்பை மற்றும் பெங்களூரு ஆகியவை முறையே 106 மற்றும் 110 ஆகிய இடங்களில் உள்ளன.
    - QS சிறந்த மாணவர்களுக்கான நகரங்கள் தரவரிசையின் சமீபத்தியப் பதிப்பில் இந்த தகவல்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.
- இன்டஸ்இந்த் வங்கியினை ஒரு முகமை வங்கியாகச் செயல்படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

- இன்டஸ்இந்த் வங்கியானது ஒரு முகமை வங்கியாக அரசினால் இயக்கப்படும் அனைத்து வகையான வணிகம் தொடர்பான பரிவர்த்தனைகளையும் மேற்கொள்வதற்கு தகுதி பெறுகிறது.

❖ ஆகஸ்ட் 04 அன்று சர்வதேச படைச்சிறுத்தை தினமானது (Clouded Leopard Day) அனுசரிக்கப் பட்டது.

- இத்தினமானது சர்வதேச அளவிலான விழிப்புணர்வையும், காப்பகங்கள் மற்றும் வனப்பகுதிகளில் படைச்சிறுத்தைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சியையும் உருவாக்குகிறது.

❖ ரூர்க்கியின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது "உத்தரகாண்ட் பூகம்ப எச்சரிக்கைச் செயலியை" வெளியிட்டுள்ளது.

- இது இந்தியாவின் முதலாவது பூகம்ப முன்னெச்சரிக்கைக்கான கைபேசிச் செயலியாகும்.

❖ அமெரிக்காவில் நடத்தப்படும் கல்லூரிச் சேர்க்கைக்கான தரநிலைத் தேர்வுகளான SAT மற்றும் ACT ஆகியவற்றில் சிறப்பான மதிப்பெண்ணைப் பெற்றதற்காக 11 வயதான இந்திய அமெரிக்கச் சிறுமி நடாசா பெரி என்பவரை உலகின் சிறந்த மாணவர்களில் ஒருவராக அமெரிக்காவின் முன்னணி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

- கல்வி மதிப்பீட்டுத் தேர்வு (SAT) மற்றும் அமெரிக்கக் கல்லூரித் தேர்வு (ACT) ஆகிய இரண்டும், ஒரு மாணவரைக் கல்லூரிச் சேர்க்கைக்கு அனுமதிக்கலாமா என்பது குறித்து நிர்ணயிப்பதற்காக பல்வேறு கல்லூரிகளால் நடத்தப்படும் தரநிலைத் தேர்வுகளாகும்.

❖ இந்திய அரசு, மத்திய நீர் வள ஆணையம், 10 பங்கேற்பு மாநிலங்களின் அரசுப் பிரதிநிதிகள் மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து நீண்ட கால அளவிலான அணைப் பாதுகாப்புத் திட்டத்திற்கான ஒரு செயல்திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தச் செயல்திட்டம் உதவும்.

❖ ஆக்சிஸ் வங்கியானது தனது வாட்ஸ்அப் வழி வங்கிச் சேவையில் ஒரு மில்லியன் என்பதிற்கும் மேலான வாடிக்கையாளர்களைப் பெற்று ஒரு புதிய மைல்கல்லை கடந்துள்ளது.

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆக்சிஸ் வங்கியானது வாட்ஸ் அப் தளத்தில் தனது வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தியது.

❖ இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய ஹைட்ரஜன் உற்பத்தி வழிமுறையை வெளிக் கொணர்ந்துள்ளனர்.

- வெளிப்புறக் காந்தப்புலத்தின் முன்னிலையில் (magneto-electrocatalysis) மேற் கொள்ளப்படும் நீர் மின்னாற்பகுப்பு மூலம் ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதே இந்தப் புதிய வழிமுறையாகும்.

❖ இந்திய ஹாக்கி மகளிர் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்ஜோர்ட் மரிஜ்னே (Sjoerd Marijne) தனது பதவியில் இருந்து விலகி உள்ளார்.

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்திற்கான பிரிட்டன் அணிக்கு எதிரான இந்திய அணியின் போட்டி தான் இந்திய அணியுடனான தனது கடைசிப் பணி என்று அவர் தெரிவித்து உள்ளார்.

- வந்தனா கட்டாரியா ஒலிம்பிக் போட்டியில் ஹாட்ரிக் கோல் அடித்த முதல் இந்திய ஹாக்கி வீராங்கனை எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
  - டோக்கியோவிலுள்ள ஓய் ஹாக்கி அரங்கில் நடைபெற்ற போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியினை 4-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்ற போட்டியில் இச்சாதனையானது நிகழ்த்தப்பட்டது.
- அத்தியாவசியப் பாதுகாப்பு (இராணுவ) சேவைகளில் ஈடுபடும் உற்பத்தி அலகுகளில் போராட்டங்கள், பணிமனை அடைப்பு மற்றும் வேலை நிறுத்தம் போன்றவற்றை தடை செய்வதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கும் ஒரு மசோதாவினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
  - இராணுவத்திற்குத் தேவைப்படும் பொருட்கள் (அ) உபகரணங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள உற்பத்தி அலகுகள் (அ) துறைகளே அத்தியாவசிய இராணுவச் சேவைகள் ஆகும்.
- ரஷ்ய நாட்டு ஆய்வுப் பெட்டகமான நவ்கா அதன் இலக்குடன் இணைக்கப் பட்டதை அடுத்து சர்வதேச விண்வெளி நிலையம் தனது பயணத்தை நிறுத்தியுள்ளது.
  - நவ்கா என்பது ரஷ்ய நாட்டின் ராஸ்கோஸ்மாஸ் என்ற நிறுவனத்தின் நிதியுதவியுடன் உருவாக்கப் பட்ட சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஒரு பல்பயன்பாட்டு ஆய்வகப் பெட்டகம் ஆகும்.
- G20 நாடுகளின் கலாச்சார அமைச்சர்களின் முதல் சந்திப்பானது இத்தாலியிலுள்ள ரோம் நகரில் நடத்தப் பட்டது.
  - கலோசியம் மற்றும் பெலாசோ பார்பெரினி ஆகியவை G20 மாநாட்டை ரோமில் நடத்தின.
- C.A. பவானி தேவி ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்கும் முதல் இந்திய வாள்வீச்சு வீரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
  - பவானி சென்னையில் பிறந்தவராவார்.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 04 ஆம் தேதி அன்று தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினமானது அனுசரிக்கப் படுகிறது.
  - இத்தினமானது எலும்பு மூட்டுக்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது குறித்த அவசியம் பற்றி விழிப்புணர்வைப் பரப்புகிறது.
- தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டிற்கான பாரத் கேசரி டங்கல் என்ற மல்யுத்தப் போட்டியில் இந்திய மல்யுத்த வீரர் லபான்சு சர்மா வெற்றி பெற்றுள்ளார்.
  - உத்தரகாண்ட் மாநிலம் உருவான 20 ஆண்டுகளுக்குப் பிறகு இதுவரை நிலவிய நீண்டகால இடைவெளியை உடைத்து அந்த மாநிலத்திற்கான பாரத் கேசரி என்ற பட்டத்தினை இவர் வென்றுள்ளார்.
- லடாக் ஒன்றியப் பிரதேசத்தில் ஒரு மத்தியப் பல்கலைக்கழகத்தை (சிந்து மத்தியப் பல்கலைக் கழகம்) நிறுவுவதற்கான மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.
  - லே மற்றும் கார்கில் உள்ளிட்ட லடாக்கின் அனைத்துப் பகுதிகளின் கல்வித் தேவையையும் இந்தப் பல்கலைக் கழகம் பூர்த்தி செய்யும்.
- சர்வதேச மன்னிப்பு தினமானது நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் மன்னிப்பு கோரச் செய்வதையும் மன்னிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

- ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது ஞாயிறன்று (01-08-2021) உலகம் முழுவதும் சர்வதேச மன்னிப்பு தினம் அனுசரிக்கப்படுகின்றது.

❖ சமீபத்தில், தமிழ்நாடு பாடத்திட்ட அறிவுரைக் குழுவின் ஒரு உறுப்பினராக சுப. வீர பாண்டியனை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு உள்ளது.

❖ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் முதலாவது இணைய ஆளுகை மன்றமானது (Internet Governance Forum) நடத்தப் படும் என அறிவித்துள்ளது.

- இம்மன்றமானது "டிஜிட்டல் இந்தியாவிற்கான உள்ளார்ந்த இணையம்" எனும் ஒரு கருத்துருவுடன் நடத்தப்படும்.

❖ 2020 ஆம் ஆண்டில் தேசியக் கல்விக் கொள்கையைச் செயல்படுத்துவது தொடர்பான ஒரு ஆணையை வெளியிட்ட இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறி உள்ளது.

- இக்கொள்கையானது தற்போதைய கல்வியாண்டு (2021-22) முதல் நடைமுறைக்கு வரும்.

❖ நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது இந்திய அமைச்சரவைச் செயலாளரான ராஜீவ் கௌபாவின் பணிக் காலத்தினை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டித்துள்ளது.

- இவரின் பதவிக் காலம் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதியோடு நிறைவடைய இருந்தது.

❖ நெகிழிகளால் ஆன தேசியக் கொடிகளை மக்கள் பயன்படுத்தாது இருப்பதை உறுதி செய்யுமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இந்த அறிவிப்பானது வெளியிடப் பட்டுள்ளது.

❖ பாரதிய உத்யோக் வியாபார் மண்டல் அமைப்பின் நிறுவன தினத்தின் நினைவாக ஆகஸ்ட் 09 ஆம் தேதியானது இந்தியாவில் தேசிய வார்த்தகர்கள் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.

- இத்தினத்தையொட்டி மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் வர்த்தகர்களிடையே உரையாற்றினார்.

❖ டிஜிட்டல் வங்கி மோசடிகள் குறித்து மக்களை எச்சரிப்பதற்காக வேண்டி, பொது விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஒன்றினை இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கியுள்ளது.

- இந்த புதியப் பிரச்சாரத்திற்காக ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவினை இந்திய ரிசர்வ் வங்கி நியமித்துள்ளது.

❖ முதலாவது வன்தன் வருடாந்திர விருது விழாவில் (2020-21) நாகாலாந்து மாநிலத்திற்கு ஏழு தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

- இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு நிறுவனத்தின் 34வது நிறுவனத் தினத்தின் கொண்டாட்டத்தின் போது இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

❖ கிரேக்கத்தின் இரண்டாவது மிகப்பெரிய தீவான ஈவியா' என்ற தீவின் வடக்கு முனையில் பெரிய அளவில் காட்டுத்தீ தொடர்ந்து எரிந்து கொண்டே உள்ளது.

- காட்டுத்தீ என்பது காடுகள், புல்வெளிகள் போன்ற இயற்கையான நிலப் பரப்புகளில் எதிர்பாராத விதமாக ஏற்படும் தீ விபத்து ஆகும்.

❖ கோவாக்சின் தடுப்பு மருந்தினை உற்பத்தி செய்வதற்காக, தெற்கு குஜராத்திலுள்ள அங்கலேஷ்வர் என்னுமிடத்தில் பாரத் பயோடெக் நிறுவனத்தின் உற்பத்தி மையத்தினை நிறுவுவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- கோவாக்சின் என்பது இந்திய நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் கோவிட்-19 தடுப்பு மருந்தாகும்.

❖ 75வது சுதந்திர தினத்தின் கருத்துரு, "Nation First Always First" என்பதாகும்.

- இந்த ஆண்டு நாட்டின் 75வது சுதந்திர தினமானது செங்கோட்டையில் கொண்டாடப்பட உள்ளது.

❖ உலகெங்கிலுமுள்ள யானைகளின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்புக்காக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று உலக யானைகள் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

- உலக யானைகள் தினமானது 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று தொடங்கப் பட்டது.

❖ ஈரானின் புதிய அதிபர் இப்ராஹிம் ரைசி, முகமது மொக்பர் என்பவரை அந்நாட்டின் முதலாவது துணை அதிபராக நியமித்துள்ளார்.

- முகமது மொக்பர், செட்டாட் எனப்படும் ஒரு அறக்கட்டளைக்கு பல ஆண்டுகளாக தலைமை தாங்கி வந்தவராவார்.

❖ டெல்லியின் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தேசியத் தலைநகரில் முகமற்ற போக்குவரத்துச் சேவையைத் தொடங்கி வைத்துள்ளார்.

- இந்த முன்னெடுப்பின் கீழ், வாகனங்களுக்கான ஓட்டுநர் சோதனைகள் மற்றும் தகுதிச் சோதனைகள் தவிர, 33 போக்குவரத்துச் சேவைகள் முழுவதுமாக முகமற்ற மற்றும் இணைய தளச் சேவையாக மாற்றப்படும்.

❖ கொரோனா காரணமாக ஆதரவற்ற நிலையில் தவிக்கும் குழந்தைகளுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 1% இடஒதுக்கீடு வழங்குவதற்கு மகாராஷ்டிர மாநில அரசு முடிவு செய்துள்ளது.

- வயது, தேர்வுக் கட்டணம், கல்வி உதவித்தொகை, பட்டியலினச் சாதியினருக்குக் கல்விக் கட்டணத்தைத் திரும்பச் செலுத்துதல் உள்ளிட்டச் சலுகைகளை வழங்கவும் அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

❖ சுற்றுச்சூழல் அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டிற்கான நெகிழிக் கழிவு மேலாண்மைத் திருத்த விதிகளை சமீபத்தில் அறிவித்தது.

- இந்தப் புதிய விதிகளானது 2022 ஆம் ஆண்டிற்குள் "குறைவானப் பயன்பாடு மற்றும் அதிகளவில் குப்பையாக குவிக்கப்படும்" ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களைத் தடை செய்ய விழைகின்றது.

❖ சாஃப்ட்வொர்த்தி (SoftWorthy) எனும் இந்திய நிறுவனத்திற்கு அமெரிக்காவின் மதிப்பு மிக்க தேசிய அறிவியல் அறக்கட்டளையின் புத்தாக்கப் பிரிவு அணி விருதானது வழங்கப் பட்டுள்ளது.

- விருது பெற்றுள்ள சாஃப்ட்வெர்த்தி நிறுவனத்தின் திட்டமானது ஓட்டுநரில்லா வாகனங்கள் மற்றும் ஆற்றல் செயல்திறனுடன் கூடிய ஸ்மார்ட் கட்டிடங்கள் போன்ற புதிய தொழில்நுட்பப் பயன்பாடுகளின் மேம்பாட்டில் ஈடுபாடு செலுத்துகிறது.

- தொற்றுநோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட 2020-21 ஆம் நிதியாண்டில், 2020 ஆம் ஆண்டில் 141 ஆக இருந்த இந்தியக் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையானது 136 ஆக குறைந்துள்ளது.
    - வருமான வரி விவரங்களுக்கான அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மொத்தக் கூட்டு வருமானத்தின் அடிப்படையில் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 13 அன்று சர்வதேச ஓநாய் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
    - இந்தக் காட்டு நாய் வகை உயிரினம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று உலக உடலுறுப்பு தான தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
    - உடலுறுப்பு தானத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இறந்த பிறகு உடல் உறுப்புகளை தானம் செய்ய மக்களை ஊக்குவிக்கவும் வேண்டி இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- கஸ்னவி என்றழைக்கப்படும் நிலத்திலிருந்து நிலத்தினை நோக்கிப் பாயக் கூடிய அணுசக்தித் திறன் கொண்ட உந்துவிசை ஏவுகணையின் ஒரு சோதனையினை பாகிஸ்தான் நாடு வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
    - இது இராணுவ உத்திசார் படைகளின் செயல்பாட்டுத் தயார் நிலையை உறுதி செய்வதன் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று உலக பல்லிகள் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
    - பல்லிகள் அழிந்து வருவது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தேசிய ஹைட்ரஜன் திட்டத்தினை செங்கோட்டையிலிருந்துத் தொடங்கி வைத்தார்.
    - இத்திட்டமானது பசுமை ஹைட்ரஜனின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான ஓர் உலக மையமாக இந்தியாவை உருவாக்குவதற்கு விழைகிறது.
- இந்திய மகளிர் ஹாக்கி அணியின் வீராங்கனை வந்தனா கட்டாரியா அவர்கள் உத்தரகாண்ட் மாநிலத்தின் பெண்கள் அதிகாரமளிப்பு மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறையின் விளம்பரத் தூதராக செயல்பட உள்ளார்.
- புதுடெல்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனமானது, தனது வளாகத்தினுள்ளேயே ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்த முதல் இந்திய மருத்துவமனை என்று உருவெடுத்துள்ளது.
    - இதற்காக AIIMS நிறுவனமானது டெல்லி தீயணைப்புச் சேவையுடன் கைகோர்த்து உள்ளது.
- போலந்தின் வ்ரோக்லாவில் நடைபெற்ற இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் புதிய 21 வயதிற்குட்பட்ட உலக சாம்பியனாக கோமாலிகா பாரி என்பவர் சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

- தீபிகா குமாரியை அடுத்து 21 வயதிற்குட்பட்டோர் மற்றும் 18 வயதிற்குட்பட்டோர் ஆகியோருக்கான உலக சாம்பியன் ஆகிய இரு பட்டங்களையும் வென்ற இரண்டாவது இந்தியப் பெண்மணி இவரே ஆவார்.

❖ 15 வயதான இளம் வயது இந்திய கிராண்ட் மாஸ்டர் ரௌனக் சத்வானி இத்தாலியில் நடைபெற்ற 19வது ஸ்பிலிம்பெர்கோ ஓபன் செஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

- ரௌனக் சத்வானி நாக்பூரைச் சேர்ந்தவராவார்.

❖ ஆப்கானிஸ்தானின் முதல் துணை அதிபர் அம்ருல்லா சாலே தன்னைத் தன்னை ஆப்கானிஸ்தானின் சட்டமுறையிலான தற்காலிக அதிபராக அறிவித்துள்ளார்.

❖ உத்தரப் பிரதேச அரசானது சஹ்ரான்பூரின் தியோபந்த் எனுமிடத்தில் தீவிரவாத எதிர்ப்புக் குழு படைகளுக்கான ஒரு பயிற்சி மையத்தினை நிறுவுவதற்கு முடிவு செய்து உள்ளது.

- தியோபந்த் எனுமிடமானது உத்தராஞ்சல் மற்றும் ஹரியானா மாநில எல்லையில் அமைந்துள்ளது.

❖ ஆகஸ்ட் 19 ஆம் தேதியானது வருடாந்திர சர்வதேச ஒராங்குட்டான் தினமாகும்.

- இந்த சர்வதேச நிகழ்வானது, மிகவும் அருகி வரும் ஒராங்குட்டான் இனங்களின் பாதுகாப்பினை மேம்படுத்துவதையும் அவற்றின் வாழ்விடத்தின் நலன் பேணுவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2021 ஆம் ஆண்டு உலக தடகள U20 சாம்பியன்சிப் போட்டிகளானது கென்யாவிலுள்ள நைரோபியில் தொடங்கப்பட்டுள்ளது.

- உலக U20 சாம்பியன்சிப் போட்டிகளானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 முதல் ஆகஸ்ட் 22 வரை நடத்தப் படுகின்றன.

❖ ஆம்வே இந்திய நிறுவனமானது ஒலிம்பிக் பதக்க வீராங்கனை சைக்கோம் மீராபாய் சானுவை, ஆம்வே மற்றும் அதன் நியூட்ரிலைட் ரக தயாரிப்புப் பொருட்களுக்கான விளம்பரத் தூதராக நியமித்துள்ளது.

- பளு தூக்கும் வீராங்கனையான சானு, 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் மகளிருக்கான 49 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றவராவார்.

❖ லியோனெல் மெசி, பார்சிலோனாவுடனான 21 ஆண்டு காலப் பயணத்திற்குப் பிறகு அந்த அணியிலிருந்து விலகி பாரீஸ் செயின்ட் ஜெர்மாய்ன் கால்பந்து அணியில் இணைந்துள்ளார்.

- பார்சிலோனா அணி என்பது அவர் தனது தொழில்முறை கால்பந்து விளையாட்டைத் தொடங்கிய அணியாகும்.

❖ சீனாவின் தேசியப் பாராளுமன்றமானது மூன்று குழந்தைகள் கொள்கையினை ஒரு சட்டமுறையாக்கியுள்ளது.

- சீனாவின் பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டுள்ள சரிவினைத் தடுக்கும் நோக்கில் மூன்று குழந்தைகள் கொள்கையானது ஒரு முக்கிய கொள்கையாகக் கருதப் படுகிறது.

❖ டெல்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் கன்னாட் என்னுமிடத்தில் பாபா கரக் சிங் மார்க் எனுமிடத்தில் நாட்டின் முதலாவது பனிப்புகை கோபுரத்தினை திறந்து வைத்தார்.

- இந்தப் பனிப்புகை கோபுரமானது ஒவ்வொரு விநாடிக்கும் 1000 கன மீட்டர் அளவிலான காற்றைச் சுத்தம் செய்து, டெல்லியில் நிலவும் pm2.5 மற்றும் pm10 ஆகிய மாசுக்களின் அளவைக் குறைக்கும்.

❖ ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 21 ஆம் தேதியானது உலக ஃபேஷன் (நாகரீகப் பாணி) தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- இத்தினமானது அடிப்படையில் ஃபேஷன் துறையைக் கொண்டாடுவதற்கும், நமது அன்றாட வாழ்வில் இத்துறையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்கும் வேண்டி கடைபிடிக்கப்படுகிறது.

❖ மதுரை ஆதீனத்தின் புதிய சன்னிதானமாக ஹரிகர தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகளுக்குப் பட்டம் சூட்டப்பட்டது.

- இவர் 293வது மதுரை ஆதீனமாகப் பொறுப்பேற்பார்.

❖ ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார், ஹிசார் விமான நிலையத்தை மகாராஜா அக்ரசேன் சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்வதாக அறிவித்துள்ளார்.

- ஹிசார் விமான நிலையமானது ஓர் உள்நாட்டு விமான நிலையமாகும். மேலும் இது DGCA உரிமம் பெற்ற மாநிலத்தின் முதல் பொதுத்துறை விமான நிலையம் ஆகும்.

❖ லாத்வியாவின் ரைகா என்னுமிடத்தில் நடைபெற்ற RTU ஓபன் பிளிட்ஸ் செஸ் (சதுரங்கம்) போட்டியில் (RTU Open blitz chess title) R. பிரக்ஞானந்தா வெற்றி பெற்று உள்ளார்.

- R. பிரக்ஞானந்தா, கிராண்ட்மாஸ்டர் பட்டத்தைப் பெற்ற 5வது இளம்வயது நபர் ஆவார்.

❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த மூத்த பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் மணிப்பூரின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- நஜ்மா ஹெப்துல்லா ஓய்வு பெற்றதையடுத்து அம்மாநில ஆளுநர் பதவி காலியாக இருந்தது.

❖ 2026 ஆம் ஆண்டுக்குள் இந்தியா மேலும் 100 நிலநடுக்க ஆய்வகங்களை (observatories) நிறுவும் என அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்தர் சிங் கூறியுள்ளார்

- மேலும், இந்த ஆண்டின் இறுதிக்குள் நாட்டில் மேலும் 35 நிலநடுக்க ஆய்வகங்கள் நிறுவப் படும் எனவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

❖ துருக்கி நாட்டின் அதிபர் ரெசெப் தயிப் எர்டோகன் (Recep Tayyip Erdogan), தமது நாடு ஒரு போதும் ஐரோப்பிய அகதிகளின் புகலிடமாக மாறாது என எச்சரித்துள்ளார்.

- கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் அதிகரித்த அதிக வேலையின்மை உள்ளிட்ட பல சிக்கல்களுடன் அந்நாடு போராடி வருவதால், துருக்கி நாட்டில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான உணர்வு அதிகமாக உள்ளது.

❖ 2016 ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற மாரியப்பன் தங்க வேலுவிற்குப் பதிலாக, ஆசியப் போட்டிகளில் தங்கம் வென்ற தெக்சாந்த் தொடக்க விழாவில் தேசியக் கொடியை ஏந்தி இந்திய அணியை வழி நடத்துவார்.

- மாரியப்பன் டோக்கியோவிற்கு சென்ற விமானத்தில் கோவிட்-19 தொற்றுள்ள அயல்நாட்டுப் பயணியுடன் அவர் தொடர்பில் இருந்ததாக இந்திய பாராலிம்பிக் குழு தெரிவித்தது.

- தமிழக அரசானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் வரிசையில் ரூ.100 கோடி மதிப்பிலான ஒரு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்த உள்ளது.
    - நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி இது தொடங்கப்பட உள்ளது.
- காபூலில் இருந்து தனது குடிமக்களையும் ஆப்கன் தரப்பினரையும் வெளிவேற்றச் செய்வதற்காக வேண்டி இந்தியா மேற்கொள்ளும் ஒரு சிக்கலான நடவடிக்கைக்கு “ஆபரேஷன் தேவி சக்தி” எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- கர்நாடகாவையடுத்து 2020 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையினை அமல்படுத்திய 2வது இந்திய மாநிலமாக மத்தியப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- தீவு நாடான தனது நாட்டில் பண வழங்கீட்டிற்காக இணைய சங்கேதப் பணத்தினை அங்கீகரித்து ஒழுங்குமுறைப் படுத்தப் போவதாக கியூப அரசு அறிவித்துள்ளது.
    - கியூப நாட்டில் தொழில்நுட்ப ஆர்வலர்கள் மத்தியில் இணைய சங்கேதப் பணம் பிரபலமடைந்ததாலும் அவர்கள் டாலர்களைப் பயன்படுத்துவது கடினமானதைத் தொடர்ந்தும் இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஆகஸ்ட் 26 ஆம் தேதியானது அமெரிக்க நாடாளுமன்றக் காங்கிரசினால் மகளிர் சமத்துவ தினமாக அறிவிக்கப் பட்டது.
    - இந்த தேதியானது பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கான 1920 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் நினைவாக தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இந்திய கிராண்ட் மாஸ்டர் S.P. சேதுராமன், பார்சிலோனா ஓபன் செஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
    - அதில் இந்திய நாட்டைச் சேர்ந்த கார்த்திகேயன் முரளி மூன்றாமிடத்தைப் பெற்று உள்ளார்.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை ஏற்கனவேயுள்ள (தமிழகம்) அவரது பணிகளோடுச் சேர்த்து பஞ்சாபின் ஆளுநராகவும் நியமித்துள்ளார்.
    - சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தின் நிர்வாகியாகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியன் ஆயில் எண்ணெய் நிறுவனமானது மதுரா சுத்திகரிப்பு மையத்தில் இந்தியாவின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் ஆலையினைக் கட்டமைக்க உள்ளது.
    - இந்தியாவின் மிகப்பெரிய எரிபொருள் சுத்திகரிப்பு மற்றும் கச்சா எண்ணெய் ஏற்றுமதி நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனம், ஹைட்ரஜன் எரிபொருளை உருவாக்குவது மட்டுமின்றி உயிரி எரிபொருள் உற்பத்தியையும் விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கீழடியில் வெள்ளி நாணயம்

- சிவகங்கையிலுள்ள கீழடியில் நடைபெற்று வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் அச்சு பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த நாணயங்களைப் பயன்படுத்தி இப்பகுதியின் மக்கள் வட இந்தியாவுடன் வணிகம் செய்துள்ளனர் என்பதை இது குறிக்கிறது.
- இந்த நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள சந்திரன், சூரியன், காளை, எருது மற்றும் வடிவியல் குறியீடுகள் கீழடியின் மக்கள் வர்த்தகச் சமுதாயத்தினர் என்பதைக் குறிக்கிறது.
- அச்சு பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் மகாஜனபத காலத்திலிருந்து புழக்கத்தில் இருந்தன.



## தமிழறிஞர் இரா. இளங்குமரனார் காலமானார்

- தமிழக அரசின் திரு.வி.க. விருது பெற்ற மூத்த தமிழறிஞரான இரா. இளங்குமரனார் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- அவருக்கு வயது 94 ஆகும்.
- இவர் நெல்லை மாவட்டத்தில் வாழவந்தாள்புரம் என்ற கிராமத்தில் பிறந்தவர் ஆவார்.
- இவர் முழுமையாக கிடைக்கப் பெறாத குண்டலகேசி காப்பியத்தைத் தன்னுடைய கற்பனைத் திறனால் முழுமை செய்தவர் ஆவார்.



- அவர் அந்நூலினை 1958 ஆம் ஆண்டில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அரங்கேற்றம் செய்தார்.
- 1963 ஆம் ஆண்டில் இவர் எழுதிய திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு என்ற நூலை அப்போதையப் பிரதமர் நேரு வெளியிட்டார்.

## இரண்டாவது திருநங்கை துணைக் காவல் ஆய்வாளர் - தமிழ்நாடு

- தமிழகத்தின் முதல் திருநங்கை துணைக் காவல் ஆய்வாளராக 2017 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தை சேர்ந்த பிரித்திகா யாஷினி தேர்ச்சி பெற்றார்.
- அவருக்கு அடுத்தபடியாக, தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த சிவன்யா எனும் திருநங்கை தமிழகத்தின் இரண்டாவது துணைக் காவல் ஆய்வாளராக தேர்ச்சி பெற்றுள்ளார்.
- சிவன்யா திருவண்ணாமலை மாவட்டம், பாவுப்பட்டு கிராமத்தில் வசிக்கிறார்.



## தமிழக சட்டப் பேரவையின் 100வது ஆண்டு நிறைவு

- செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள சட்டப்பேரவையின் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தினைக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- மேலும் 5 முறை முதலமைச்சராகப் பணியாற்றிய திரு. மு. கருணாநிதி அவர்களின் உருவப் படத்தையும் திரு. கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்.
- கடந்த 40 ஆண்டுகளில் மாநிலத்தின் ஒரு முக்கிய நபரின் உருவப் படமானது குடியரசுத் தலைவரால் திறந்து வைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அப்போதைய குடியரசுத் தலைவர் N. சஞ்சீவ் ரெட்டி அவர்கள் முன்னாள் முதல்வர் K. காமராஜர் அவர்களுடைய உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

## தகைசால் தமிழர் – N. சங்கரய்யா



- மூத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் N. சங்கரய்யா முதலாவது தகைசால் தமிழர் விருதினைப் பெற உள்ளார்.
- இந்த விருதானது தமிழ்மொழியில் சிறந்து விளங்குபவர்களைக் கௌரவிப்பதற்காக வேண்டி இந்த ஆண்டு தி.மு.க அரசினால் நிறுவப்பட்டது.
- சென்னையில் நடைபெற உள்ள சுதந்திர தின விழாவின் போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திரு. சங்கரய்யாவிற்கு இந்த விருதினை வழங்குவார்.
- இந்த விருதானது 10 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையையும் ஒரு பாராட்டுப் பத்திரத்தையும் உள்ளடக்கியது ஆகும்.

## வன்னியர்களுக்கான 10.5% இடஒதுக்கீடு

- வன்னியர் சமுதாயத்தினருக்கு ஒதுக்கப்பட்ட 10.5% உள்ஒதுக்கீட்டினை அமல்படுத்துமாறு தமிழக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- இந்த இடஒதுக்கீடானது இந்தக் கல்வியாண்டு முதல் அரசுப் பணிகளிலும் அரசு கல்வி நிறுவனங்களிலும் அமல்படுத்தப்படும்.

## பொற்பனைக் கோட்டையில் அகழாய்வு

- தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் சிவா V. மெய்யநாதன் புதுக்கோட்டையின் பொற்பனைக் கோட்டையில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட உள்ள தொல்லியல் அகழாய்வுகளைத் தொடங்கி வைத்தார்.
- பல ஆண்டுகளுக்கு முன்பு பொற்பனைக் கோட்டையில் ஒரு கோட்டை இருந்ததாக தகவல்கள் உள்ளன.
- இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள சான்றுகள் 1,800 ஆண்டுகளுக்கு முந்தையவை எனத் தொல்லியலாளர்கள் கூறுகின்றனர்.
- 2013 ஆம் ஆண்டில் தொல்லியல் துறை மாணவர்கள் சிலர் 1,800 ஆண்டுகள் பழமையான கால்வாய் ஒன்றைக் கண்டறிந்தனர்.

## திருச்சி கார்பைன்

- ❖ தமிழ்நாட்டிலுள்ள திருச்சி படைக்கலன் தொழிற்சாலையானது உயர் தொழில்நுட்ப மிக்க மற்றும் குறைவான ஒலி எழுப்பக்கூடிய புதிய ரக துப்பாக்கியை அறிமுகம் செய்துள்ளது.
- ❖ இது திருச்சி கார்பைன் (திரிகா) என அழைக்கப்படுகிறது.
- ❖ இது திருச்சி தாக்குதல் ரக துப்பாக்கியின் (Trichy Assault Rifle) சிறிய வடிவமாகும்.

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு

- ❖ வரவிருக்கும் கல்வியாண்டு முதல் தொழில்முறைப் படிப்பிற்கானச் சேர்க்கைகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள்ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இதில் பொறியியல், வேளாண் கல்வி, கால்நடை மருத்துவம், மற்றும் மீன்வளம் ஆகிய படிப்புகள் அடங்கும்.
- ❖ இதே போன்ற இடஒதுக்கீட்டுக் கொள்கையானது 2020-21 ஆம் கல்வியாண்டு முதல் மருத்துவப் படிப்புச் சேர்க்கைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## மக்களைத் தேடி மருத்துவம்

- ❖ தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகஸ்ட் 05 அன்று மக்களுக்கு வீடு தேடி மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக வேண்டி "மக்களைத் தேடி மருத்துவம்" எனும் ஒரு சுகாதார நலத் திட்டத்தினை கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஒசூரில் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த ஆண்டின் இறுதிக்குள் மாநிலம் முழுவதும் இந்தச் சேவையை விரிவுபடுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ இத்திட்டமானது இதே சமயத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் P.K. சேகர் பாபு மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோரால் சென்னையிலும் தொடங்கி வைக்கப்பட்டது.

## தமிழ் அர்ச்சனை

- ❖ இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் P.K. சேகர்பாபு தமிழகத்திலுள்ள 47 முக்கியக் கோவில்களில் 'அன்னைத் தமிழ் அர்ச்சனை' எனும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ❖ பக்தர்களின் வேண்டுகோளின் பேரில், அர்ச்சகர்கள் தமிழில் 'போற்றி' (அர்ச்சனை) மந்திரத்தைத் தமிழில் பாடுவார்கள்.
- ❖ 14 வெவ்வேறு 'போற்றிகளின்' தொகுப்புகளானது ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




## கோயம்பத்தூர் இரயில் நிலையம் – பிளாட்டினம் தரநிலை

- கோயம்பத்தூர் இரயில் நிலையமானது இந்தியப் பசுமை கட்டிடக் கழகத்திடமிருந்து (Indian Green Building Council - IGBC) பிளாட்டினம் தரநிலையைப் பெற்றுள்ளது.
- இந்த நிலையிலான பசுமைச் சான்றிதழைப் பெற்ற தெற்கு இரயில்வேயின் ஒரே இரயில் நிலையமும், 6வது இந்திய இரயில் நிலையமும் இதுவே ஆகும்.
- கோயம்பத்தூர் தவிர, IGBC அமைப்பின் பிளாட்டினம் தரச் சான்றிதழைப் பெற்றுள்ள மற்ற 5 இரயில் நிலையங்கள் செகந்திராபாத், புதுடெல்லி, ஜெய்ப்பூர், விசாகப் பட்டினம் மற்றும் அசன்சோல் ஆகியனவாகும்.
- இந்திய இரயில்வேயின் சுற்றுச்சூழல் இயக்குநரகத்தின் ஆதரவோடு 'பசுமை இரயில் நிலையத் தரநிலை முறையினை' IGBC உருவாக்கியது.
- இது இரயில் நிலையங்கள் பசுமைக் கருப்பொருட்களை ஏற்றுக் கொள்வதை எளிதாக்குவதற்கானதாகும்.
- நிலையச் செயல்பாடு மற்றும் மேலாண்மை காரணமாக ஏற்படும் மோசமான சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைப்பதில் இது உதவும்.


Indian Green Building Council (IGBC)
hereby certifies that
Coimbatore Junction Railway Station
Southern Railway
(IGBC Registration No. GRST 210047)
IGBC Green Railway Stations Rating System
Platinum
August 2021

## இந்திய ஆணழகன் போட்டி

- டெல்லியில் நடந்த இந்திய ஆணழகன் போட்டியில் சென்னை சட்டக் கல்லூரி இறுதியாண்டு மாணவர் கவுஷிக் ராம், 'மிஸ்டர் இந்தியா', 'மிஸ்டர் தமிழ்நாடு' ஆகிய 2 பட்டங்களையும் பெற்று வெற்றிக் கோப்பையைத் தட்டிச்சென்றார்.
- டெல்லி அருகே ஆக்ராவில் 'இந்திய ஆணழகன் - 2021' என்ற போட்டியானது, 'ஸ்டார்' லைப்' என்ற அமைப்பின் மூலம் நடத்தப்பட்டது.

## வெள்ளை அறிக்கை – தமிழகப் பொருளாதாரம்

- தமிழக நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் P.T.R. பழனிவேல் தியாகராஜன் சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தில் மாநிலத்தின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையினை வெளியிட்டார்.
- தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற நிதி முறைகேடுகள் குறித்து இந்த வெள்ளை அறிக்கை மேற்கோளிட்டுக் காட்டியுள்ளது.
- தமிழகத்தில் 2006-11 ஆகிய ஆண்டுகளில் 10.15% ஆக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வருடாந்திர வளர்ச்சி வீதமானது 2016-20 ஆகிய ஆண்டுகளில் 7.22% ஆகக் குறைந்துள்ளது என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- கடந்த 8 ஆண்டுகளாக தமிழகத்தில் வருவாய்ப் பற்றாக்குறை மோசமாகி வருகிறது.
- 2020-21 ஆம் நிதியாண்டிற்கான வருவாய்ப் பற்றாக் குறையானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.16% ஆகும்.
- அரசுக் கடன்கள் அதிகரித்து வருவதால் மாநிலத்தின் நிதிப்பற்றாக் குறையானது பிரதானமாக அதிகரித்து வருகிறது.
- நிதிப் பற்றாக்குறையானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 4.43% ஆக உள்ளது.
- தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும் 2,63,976 ரூபாய் பொதுக் கடன் உள்ளது.
- பொதுக் கடனானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 26.69% ஆகும்.
- மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் கணிசமான அளவில் சரிவு ஏற்பட்டுள்ளது.

- 2020-21 ஆம் ஆண்டில் மானியங்களானது வருவாய்ச் செலவினத்தில் 27.06% ஆகவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3.21% ஆகவும் உயர்ந்துள்ளது.
- மின்சாரத்திற்கான மானியமானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் அதிக பட்சமாக 1.10% ஆக உள்ளது.
- உணவு மானியமானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 0.49% ஆக உள்ளது.
- போக்குவரத்து மீதான மானியமானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 0.19% ஆக உள்ளது.

## சிறந்த மாநகராட்சி, நகராட்சி & பேரூராட்சி




- 2021 ஆம் ஆண்டிற்கான தமிழகத்தின் சிறந்த மாநகராட்சிக்கான முதல்வர் விருதுக்கு தஞ்சாவூர் மாநகராட்சி தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- சிறந்த நகராட்சியாக முதல் பரிசுக்கு உதகை நகரமும், இரண்டாம் பரிசுக்கு திருச்செங்கோடு நகரமும் மற்றும் மூன்றாம் பரிசுக்கு சின்னமனூர் நகரமும் தேர்வாகியுள்ளன.
- சிறந்த பேரூராட்சியாக முதல் பரிசுக்கு திருச்சியின் கல்லகுடி, இரண்டாம் பரிசுக்கு கடலூரின் மேல்பாட்டம்பாக்கம், மூன்றாம் பரிசுக்கு சிவகங்கையின் கோட்டையூர் ஆகியவை தேர்வாகியுள்ளன.

## முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த தினம்

- தமிழகச் சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையானது முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாளானது அரசு விழாவாகக் கொண்டாடப் படும் என்று அறிவித்துள்ளது.
- முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாளானது தமிழ் மாதமான ஆடி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.
- 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழப் பேரரசரான இவர் சோழர்களின் தலைநகரினை இன்றைய அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் என்னுமிடத்திற்கு மாற்றி அங்கு பெருவுடையார் ஆலயம் ஒன்றையும் கட்டியவராவார்.
- இந்த ஆலயமானது யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களுள் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.



## மின்னணு நிதிநிலை அறிக்கை (இ-பட்ஜெட்) – தமிழ்நாடு


- தேர்தலில் வெற்றி பெற்ற பிறகான தி.மு.க அரசின் முதல் பட்ஜெட்டினை (நிதிநிலை அறிக்கை) நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் சமர்ப்பித்தார்.
- ஒரு மாநிலம் காகிதமில்லாத வகையிலான நிதி நிலை அறிக்கையினைத் தாக்கல் செய்வது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறையாகும்.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறையானது யதார்த்தமற்ற வகையில் வழக்கமான நிலைக்கு மாறான இடைக்கால பட்ஜெட் மதிப்பீடான 41,417.30 கோடி ரூபாயிலிருந்து திருத்தி அமைக்கப்பட்ட பட்ஜெட் மதிப்பீட்டில் 58,692.68 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப் படுகின்றது.
- மாநிலத்திலுள்ள காடுகள் மற்றும் மரங்களின் மொத்தப் பரப்பளவை 33% ஆக அதிகரிப்பதற்கான பசுமை தமிழகத் திட்டத்தினை திரு. ராஜன் அறிவித்தார்.
- மேலும் பருவநிலை மாற்ற ஏற்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மீது ஈடுபாடு செலுத்தும் வகையிலான தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டத்தினையும் அவர் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் செலுத்த வேண்டிய 2,756 கோடி ரூபாய் கடனையும் தள்ளுபடி செய்வதாக அரசு அறிவித்து உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இதுவரையில் 36,000 கோடி ரூபாய் கடன் பெற்று உள்ளது.
- கடன் பெறுதலில் மற்ற மாநிலங்களிடையே தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.

## மதுரை ஆதினத்தின் தலைமை மடாதிபதி

- பழம்பெரும் சைவ மடங்களுக்கான குருக்களில் ஒருவரான அருணகிரிநாத ஞான சம்பந்த தேசிக பரமாச்சரியார் தனது 77வது வயதில் காலமானார்.
- இவர் மதுரை ஆதீனத்தின் 292வது மடாதிபதி ஆவார்.
- இந்த மடாலயமானது கிட்டத்திட்ட 1300 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது.
- இது சைவத் துறவி திருஞான சம்பந்தரால் புதுப்பிக்கப்பட்டதாகும்.



## வேளாண் பட்ஜெட் – தமிழ்நாடு




- வேளாண்மைக்கான முதலாவது பிரத்தியேகமான பட்ஜெட் (34220 கோடிகள்) 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது.
- தண்ணீர் வளத்தினை நியாயமான முறையில் பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.
- 1.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் சிறு பாசன வசதிகள் (micro-irrigation structures) அமைக்கப்படும்.
- 5 வருட காலக்கட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை அரசு செயல்படுத்தும்.
- இது அனைத்து கிராமங்களிலும் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சியையும் தன்னிறைவையும் உறுதி செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- தமிழகத்தில் கிணற்று நீர்ப் பாசனத்திற்கான அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டி சூரிய சக்தியினால் இயங்கும் பம்புகளை உபயோகிக்க ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டத்தினையும் மாநில அரசு செயல்படுத்த உள்ளது.

## சுதந்திர தின விழா விருதுகள் – தமிழ்நாடு

- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தைரியம் மிக்க மற்றும் துணிச்சல் மிக்க நிறுவனத்திற்கான கல்பனா சாவ்லா விருதினை P. சண்முகப்பிரியா என்பவருக்கு அவரது மறைவிற்குப் பிறகு வழங்கினார்.

- மறைந்த டாக்டர் P. சண்முகப் பிரியா மதுரையிலுள்ள அனுப்பானடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபு ரிந்து வந்த ஒரு மருத்துவ அலுவலர் ஆவார்.
- டாக்டர் A.P.J. அப்துல் கலாம் விருதானது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சிறந்த பேராசிரியர் டாக்டர் M. லக்சுமணன் என்பவருக்கு வழங்கப்பட்டது.
- மூத்த கம்யூனிஸ்ட் தலைவரும் நூறு வயதை எட்டிய தலைவருமான N. சங்கரய்யா அவர்களுக்கு முதலாவது தகைசால் விருதினை முதல்வர் வழங்கினார்.
- கிண்டியிலுள்ள அரசு கொரோனா மருத்துவமனையின் இயக்குநர் K. நாராயணசாமி அவர்களுக்கு முதலமைச்சரின் சிறந்த நடைமுறைகளுக்கான விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளி மாணவர்களின் சுயாதீனமானக் கற்றலை எளிதாக்கியதற்காக பிரசிடென்சி கல்லூரிக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஔவையார் விருதானது சாந்தி துரைசாமி என்பவருக்கு வழங்கப்பட்டது.
- தூத்துக்குடியைச் சேர்ந்த கிரேஸ் பானு என்பவருக்கு சிறந்த மாற்றுப் பாலினத்தவர் விருதானது வழங்கப்பட்டது.

## அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக நியமனம்



- தி.மு.க அரசானது, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த 24 பயிற்சி பெற்ற ‘அர்ச்சகர்களை’ பல்வேறு கோவில்களில் அர்ச்சகர்களாக நியமித்துள்ளது.
- இந்து சமய அறநிலையத் துறையால் நடத்தப்படும் தமிழகத்திலுள்ள கோயில்களில் ஏற்கனவே இரண்டு பிராமணரல்லாத அர்ச்சகர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.
- முதலாவது அர்ச்சகராக மாரிசாமி என்பவர் மதுரையிலுள்ள ஒரு ஐயப்பன் கோயிலில் 2018 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.
- இரண்டாவதாக தியாகராஜன் என்பவர் மதுரையிலுள்ள கணேசன் ஆலயம் ஒன்றில் 2020 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.
- தற்போது, சுகாஞ்சனா கோபிநாத் என்பவர் சென்னையிலுள்ள தேனுபுரிஸ்வரர் கோயிலில் ஒரு ஓதுவாராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இதன் மூலம் தமிழ்நாட்டின் முதல் பெண் ஓதுவார் எனும் பெருமையை இவர் பெற்று உள்ளார்.

## தமிழ்நாடு மற்றும் சுதந்திரப் போராட்டம்



- தமிழக அரசானது இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழகம் ஆற்றியப் பங்களிப்பினை விவரிக்கும் ஒரு ஆவணத்தினைத் தொகுத்து வெளியிட உள்ளது.
- சென்னையில் சிவானந்தா சாலை மற்றும் காமராஜர் சாலை சந்திப்பில் ஒரு நினைவுத் தூணினை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- 75வது சுதந்திர தினத்தின் நினைவாக இந்த தூணானது எழுப்பப் பட்டுள்ளது.
- மேலும் இவர், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை 17,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாகவும் அவர்களின் குடும்ப ஓய்வூதியத்தை 8,500 ரூபாயிலிருந்து 9,000 ரூபாயாகவும் உயர்த்தி அறிவித்தார்.
- மதுரையிலுள்ள காந்தி நினைவு அருங்காட்சியகமானது புனரமைக்கப்படும் எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

## பண்டையகால குத்துவாள் கண்டுபிடிப்பு – தமிழ்நாடு

- தமிழ்நாட்டிலுள்ள கொந்தகை கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட புதையுண்ட தாழி ஒன்றில் துருப்பிடித்த இரும்பு குத்துவாள் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- கொந்தகை பகுதியானது கீழடி நாகரிகத்தின் ஒரு புதையிடப் பகுதியாகக் கருதப் படுகிறது.
- எலும்புகள், ஆயுதங்கள் மற்றும் இதர சிலப் பொருட்களோடு புதைக்கப்பட்ட தாழிகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த வகையிலான ஆயுதமானது சங்க காலத்திய வீரர்களால் (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை) பயன்படுத்தப்பட்டது.
- தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில், சங்க காலமானது முன்பு கணிக்கப் பட்டதை விட முன்னதாகவே சுமார் கி.மு. 600 ஆம் ஆண்டிலேயே தொடங்கியதாக சில

ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



## தமிழக பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள்

- 9 மாதங்களாக இருந்த பெண்களுக்கான மகப்பேறு விடுப்புக் காலமானது 12 மாதங்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- பழனியில் ஒரு புதிய சித்தப் பல்கலைக்கழகமானது நிறுவப்பட உள்ளது.
- கோயம்புத்தூரில் ஒரு பாதுகாப்புத் தொழில்துறைப் பூங்காவானது நிறுவப்பட உள்ளது.
- அடுத்த 10 ஆண்டுகளில், 'பசுமை இயக்க' முன்னெடுப்பின் ஒரு பகுதியாக பெரிய அளவில் மரக்கன்றுகள் நடும் இயக்கமானது நடத்தப்படும்.
- சிறு கிராமங்களில் (குக்கிராமம்) அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது தொடங்கப்படும்.
- திருச்சிராப்பள்ளியில் ஒரு புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகங்கள் நிறுவப்பட உள்ளன.
- சென்னையிலுள்ள நந்தம்பாக்கத்தில் ஒரு ஃபைனான்சில் டெக் சிட்டியானது (நிதியியல் தொழில்நுட்ப நகரம்) கட்டமைக்கப் படும்.

## வேளாண் பட்ஜெட் – முக்கிய நடவடிக்கைகள்

- இயற்கை வேளாண்மைக்காக வேளாண் துறையின் கீழ் ஒரு தனிப் பிரிவு உருவாக்கப் படும்.
- 'கிராமப்புற இளையோர் வேளாண் திறன் மேம்பாட்டுத் திட்டமானது' செயல்படுத்தப் படும்.
- இது கல்வி கற்ற இளைஞர்களை தங்களது சொந்த ஊர்களில் விவசாயத்தினை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல ஊக்குவிக்கும்.
- ஒருங்கிணைந்த வேளாண் அமைப்பானது செயல்படுத்தப்படும்.
- இயற்கைப் பேரிடர்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக வேண்டி வேளாண் மண்டலக் குழுக்கள் அமைக்கப்படும்.
- சென்னையில் வேளாண்மைக்கென தனி அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- ஒட்டன்சத்திரம் மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் நவீன குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும்.

- குன்னூர் மற்றும் கோத்தகிரி எல்லையில் அமைந்துள்ள எடப்பள்ளி கிராமத்தில் ஒருங்கிணைந்த கிராமப்புற வேளாண் சந்தை வளாகமானது அரசினால் அமைக்கப் படும்.
- சென்னை மாநகராட்சியிலுள்ள கொளத்தூரில் 'நவீன வேளாண் சந்தைப்படுத்துதல் மையமானது' அமைக்கப்படும்.
- கிருஷ்ணகிரி மாவட்டம் அருகே உள்ள ஜீனூர் என்னுமிடத்தில் ஒரு புதிய தோட்டக் கலைக் கல்லூரியானது நிறுவப்படும்.
- ஈரோடு அருகேயுள்ள பவானி சாகர் எனுமிடத்தில் மஞ்சள் ஆராய்ச்சி மையமானது நிறுவப் படும்.

## தனி வேளாண் பட்ஜெட்டைத் தாக்கல் செய்த 3வது மாநிலம் – தமிழ்நாடு

- தனி வேளாண் பட்ஜெட்டை (நிதிநிலை அறிக்கை) தாக்கல் செய்த 3வது மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.
- கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களையடுத்து தமிழகமானது தனியொரு வேளாண் பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளது.
- வேளாண்மைக்கென தனியொரு பட்ஜெட்டை தாக்கல் செய்யும் நடைமுறையானது 2011 – 12 ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தினால் தொடங்கப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து 2013 – 14 ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரதேசமும் தாக்கல் செய்தது.

*குறிப்பு*

- இந்திய அரசியலமைப்பின் 202வது சட்டப்பிரிவானது ஒரு மாநிலமானது ஒரு நிதி ஆண்டின் வருவாய் மற்றும் செலவினங்களின் மதிப்பீட்டு அறிக்கையினை (பொதுவாக 'பட்ஜெட்' (அ) வருடாந்திர நிதிநிலை அறிக்கை என கூறப்படுகிறது) தாக்கல் செய்வதற்கு வழிவகை செய்கிறது.

## ஆசிரியர்களுக்கான தேசிய விருது

- மத்திய அரசினால் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான தேசிய விருதினைப் பெற்றவர்களுள் ஆஷா தேவியும் ஒருவராவார்.
- இவர் திருச்சியிலுள்ள பிராட்டியூர் எனுமிடத்தில் அமைந்த பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஆவார்.
- இவர் இந்த விருதிற்காக இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 44 ஆசிரியர்களுள் ஒருவரும், தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆசிரியர்களுள் ஒருவரும் ஆவார்.
- தமிழ்நாட்டிலிருந்து இந்த விருதினைப் பெறும் 2வது ஆசிரியை D.லலிதா என்பவர் ஆவார்.
- இவர் மொடக்குறிச்சி எனுமிடத்திலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஆவார்.

## இயல், இசை, நாடக மன்ற தலைவர்

- தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்ற புதிய தலைவராக நடிகரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வாகை சந்திரசேகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- ஒன்றிய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாடமியின் நோக்கங்களை மாநில அளவில் செயல்படுத்தவும், தமிழக கலைகளைப் பாதுகாத்து வளர்க்கவும், தமிழக அரசின் திட்டங்களால் கலைஞர்கள் பலனடையச் செய்யவும், பல்வேறு கலை பணிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தவும் வேண்டி வாகை சந்திரசேகரை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் புதிய தலைவராக நியமித்துள்ளதாக கூறப்பட்டு உள்ளது.
- இவர் 1991 ஆம் ஆண்டு கலைமாமணி விருதும், 2003 ஆம் ஆண்டு சிறந்த நடிகருக்கான தேசிய விருதும் பெற்றவராவார்.



## மறைந்த மு.கருணாநிதி அவர்களுக்கு நினைவிடம்

- மறைந்த தி.மு.க தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதி அவர்களுக்குச் சென்னை காமராஜர் சாலையிலுள்ள மெரினாவில் ஒரு நினைவிடம் அமைக்கப் பட உள்ளது.
- ஒரு நவீன தமிழகத்தை உருவாக்குவதில் அவர் ஆற்றிய முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த நினைவிடமானது அமைக்கப்பட உள்ளது.
- தமிழக சட்டசபையின் 110வது விதியின் கீழ் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.
- 110வது விதியின் கீழ், எந்தவொரு விவாதமும் இல்லாமல் நிறைவேற்றக் கூடிய வகையில் ஒரு தீர்மானத்தினைச் சட்டசபையில் அறிவிக்கவோ அல்லது கொண்டு வரவோ முதலமைச்சருக்கு அதிகாரம் உள்ளது.



## கலைஞர் நகர மேம்பாட்டுத் திட்டம்

- கலைஞர் நகர மேம்பாட்டுத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்த உள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றினால் தங்களது வேலைகளை இழந்த நகர்ப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- கோவிட் தொற்றுநோயைத் தொடர்ந்து நகர்ப்புறங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் C. ரங்கராஜன் தலைமையிலான குழு பரிந்துரைத்திருந்தது.
- நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் சமூக நலக் கூடம், சந்தைகள், நவீன நூலகங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு இதன் மூலம் உருவாக்கப் படும்.

## மாநகராட்சிக் கழகங்களாக மாற்றப் பட்ட நகராட்சிகள்

- தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிக் கழகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- பல்லாவரம், செம்பாக்கம், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதன் அருகிலமைந்த நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் பஞ்சாயத்துகளை இணைத்து தாம்பரம் மாநகராட்சிக் கழகமானது உருவாக்கப்படும்.
- இந்த தரம் உயர்த்தும் நடவடிக்கையானது ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் பதவியில் இடையிடாது.
- அவர்களின் பதவிக் காலம் முடியும் வரை அவர்கள் அந்தந்தப் பதவியிலிருப்பர்.

## உயர்கல்வி அமைச்சரின் அறிவிப்புகள்

- திருவாரூர் மாவட்டத்தின் கூத்தநல்லூரில் ஒரு மகளிர் கல்லூரி உட்பட 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாநில அரசு திறக்க உள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திருக்கோவிலூர், ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டத்தில் மானூர், திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், தர்மபுரி மாவட்டத்தில் எரியூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டத்தில் சேர்க்காடு ஆகிய பகுதிகளில் புதிய கல்லூரிகள் அமைக்கப்பட உள்ளன.
- எல்லாப் பகுதிகளிலும் மாணாக்கர் சேர்க்கையை அதிகரிப்பது மற்றும் சமமான உயர் கல்வியை வழங்குவதே இதன் நோக்கமாகும.
- அடுத்த ஆண்டு முதல் கட்டிடப் பொறியியல் மற்றும் இயந்திரப் பொறியியல் பாடப் பிரிவுகளில் பட்டயக் கல்வி பாடப் பிரிவுகள் தமிழில் வெளியிடப்படும்.
- ஈரோட்டிலுள்ள சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றப்படும்.

## சிறந்த மூன்றாம் பாலினத்தவர் – கிரேஸ் பானு

- 30 வயதான சமூக ஆர்வலர் திருநங்கை கிரேஸ் பானுவிற்கு தமிழக அரசின் முதலாவது "சிறந்த மூன்றாம் பாலினத்தவர்" என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.


- சமுதாயத்தின் நன்மைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்காக வேண்டி அவருக்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது தமிழக சமூக நலம் மற்றும் மகளிர் அதிகாரமளிப்புத் துறையினால் வழங்கப் படுகிறது.
- திருநங்கைச் சமுதாயத்தினரையும் சமூக நலனுக்காக அவர்கள் ஆற்றும் பங்களிப்பினையும் அங்கீகரிக்கும் வகையில் தமிழக அரசினால் முதன்முறையாக இந்த விருதானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.




## தொழில்முறைப் படிப்புகளில் மாநில அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு

- மாநில அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு "முன்னுரிமை அடிப்படையில்" 7.5% இட ஒதுக்கீட்டினை வழங்குவதற்கான ஒரு மசோதாவினை தமிழக சட்டசபை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது பல்கலைக்கழகங்கள், தனியார் கல்லூரிகள், அரசு உதவி பெறும் மற்றும் அரசுக் கல்லூரிகளில் அளிக்கப்படும் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் மற்றும் இதர தொழில்முறைப் படிப்புகளில் இளங்கலைப் பட்டப் படிப்பிற்கான சேர்க்கையில் செயல்படுத்தப்படும்.
- இந்த இட ஒதுக்கீட்டினைப் பெற மாணாக்கர்கள் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழகத்திலுள்ள மாநில அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்றிருக்க வேண்டும்.
- அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கும் தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும் இடையே ஒரு உண்மையான சமத்துவ நிலையைக் கொண்டு வருவதற்காக வேண்டி ஓர் உறுதிபாட்டு நடவடிக்கையினை மேற்கொள்ள இந்த மசோதா முயல்கிறது.

- அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் ஆகியோரிடையே "நடைமுறையில் சமத்துவமின்மை" நிலவி வருவது நீதிபதி D. முருகேசன் குழு சமர்ப்பித்த ஒரு அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.




## சிங்காரச் சென்னை 2.0




- தமிழக முதல்வர் சிங்காரச் சென்னைத் திட்டத்தைப் புதுப்பித்து இருக்கிறார்.
- 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் திமுக வெற்றி பெற்ற பிறகு சென்னையின் மேயராக இருந்த மு.க. ஸ்டாலின் சென்னை நகரைக் குப்பையற்ற ஒரு நகரமாக மாற்றவும் மேம்பாலங்கள் உள்ளிட்ட சாலை உள்கட்டமைப்பு வசதிகளோடு தரம் உயர்த்தவும் வேண்டி "சிங்காரச் சென்னை" என்ற ஒரு தலைமைத் திட்டத்தின் கீழ் பல திட்டங்களை வகுத்தார்.
- இத்திட்டத்தின் 2வது பதிப்பானது தூய்மையான மற்றும் பசுமையான நகரமாக்கல் திட்டத்தினைத் தொடரச் செய்வதோடு நகரின் கடற்கரை, கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறையை நல்ல முறையில் பயன்படுத்தவும் ஈடுபாடு செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தில் குப்பைகள் மற்றும் சுவரொட்டிகள் இல்லாத சென்னை என்ற திட்டமும் அடங்கும்.

- மேலும், இது ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர் குழாய் இணைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்பு மற்றும் தரமான கழிவறைகளைப் பயன்படுத்துதல் போன்ற வசதிகளையும் உள்ளடக்கும்.
- 'சென்னை தினம்' மற்றும் 'சென்னை சங்கமம்' உள்ளிட்டக் கலாச்சார நிகழ்வுகளும் இதில் ஊக்குவிக்கப்படும்.

## இலங்கை தமிழ் அகதிகளுக்கான நலத்தொகை

- மாநிலத்திலுள்ள சிறப்பு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனுக்காக 317.40 கோடி ரூபாய் உதவித் தொகையினை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வதற்காக இத்தொகை ஒதுக்கப்படும் என்று முதல்வர் கூறினார்.
- முகாம்களில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு மாதாந்திர உதவித் தொகையினை ஏற்கனவே தமிழக அரசு வழங்கி வருகிறது.
- ஒரு குடும்பத்தில் ஒருவருக்கான மாதாந்திர உதவித் தொகை 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும் மற்ற உறுப்பினர்களுக்கான உதவித் தொகை 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாகவும் 12 வயதிற்கு கீழான குழந்தைகளுக்கான உதவித் தொகை 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.
- இனிமேல் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப் படும்.

## ஆசிரியர் தகுதித் தேர்வு

- ஆசிரியர் தகுதித் தேர்வுச் சான்றிதழானது வாழ்நாள் முழுவதும் செல்லுபடியாக்கப் படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இதற்கு முன்பு இது 7 ஆண்டுகள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.
- இந்த ஆணையானது ஆசிரியர் பணிசேர்ப்பு வாரியத்தினால் ஏற்கெனவே வழங்கப் பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வு சான்றிதழ்களுக்கும் பொருந்தும்.



# தேசியச் செய்திகள்

## ரஃபேல் படைப்பிரிவு – ஹாசிமாரா

- மேற்கு வங்கத்தின் ஹாசிமாராவிலுள்ள விமானப் படை மையத்தின் 101வது படைப் பிரிவில் ஜெட் விமானங்கள் அதிகாரப்பூர்வ முறையில் இணைத்து, இந்திய விமானப் படை தனது இரண்டாவது ரஃபேல் போர் விமானப் படைப் பிரிவினைத் தொடங்கி உள்ளது.
- இந்திய விமானப் படையானது இதுவரையில் 26 ரஃபேல் ஜெட் விமானங்களை எட்டுத் தொகுதிகளாகப் படையில் இணைத்துள்ளது, இதற்கு முந்தையத் தொகுதியானது ஜூலை 21 அன்று இணைக்கப்பட்டது.
- 'Falcons of Chamb and Akhnoor' என்று புகழப்படும் இந்தப் படைப் பிரிவானது பாலம் (Palam) என்னுமிடத்தில் 1949 ஆம் ஆண்டு மே 01 அன்று உருவாக்கப்பட்டது.
- இது அன்றையக் காலங்களில் ஹார்வர்டு, ஸ்பிட்ஃபைர், வேம்பைர், Su-7 மற்றும் MiG-21M போன்ற விமானங்களை இயக்கியது.
- மேலும் 1965 மற்றும் 1971 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தானியப் போர்களிலும் இப்படையானது பங்கேற்றது.
- நம்பர் 17 கோல்டன் ஆரோவ்ஸ் (Golden Arrows) எனப்படும் முதலாவது ரஃபேல் படைப் பிரிவானது அம்பாலாவில் அமைந்துள்ளது.




## திருநங்கைகளுக்கான கரிமா கிரஹாஸ்

- சமுதாயம் சார்ந்த தன்னார்வ அமைப்புகளின் உதவியுடன் திருநங்கைகளுக்கான கரிமா கிரஹாஸ் அமைக்கப்பட்டு வருகின்றது.
- திருநங்கைகளுக்கு பாதுகாப்பான இருப்பிட வசதியை வழங்கும் நோக்கோடு 12 காப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- இது போன்ற காப்பிடங்கள் மகாராஷ்டிரா, டெல்லி, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், பீகார், சத்தீஸ்கர், தமிழ்நாடு மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

## கடல்சார் போக்குவரத்திற்கான உதவிகள் மசோதா 2021

- ❖ பாராளுமன்றமானது 2021 ஆம் ஆண்டு கடல்சார் போக்குவரத்திற்கான உதவிகள் மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இந்த மசோதாவானது 1927 ஆம் ஆண்டு கலங்கரை விளக்கச் சட்டத்தினை ரத்து செய்து அதற்குப் பதிலாக இதனைச் சட்டமாக்க உள்ளது.
- ❖ இந்தியாவில் கடல்சார் போக்குவரத்திற்கான உதவிகளை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றுக்கான ஒரு கட்டமைப்பினை இந்த மசோதா வழங்க முனைகிறது.
- ❖ இந்த மசோதாவின் படி மாவட்டங்களுக்கான தலைமை இயக்குநர், துணைத் தலைமை இயக்குநர்கள் அல்லது இயக்குநர்கள் ஆகியோரை மத்திய அரசு நியமிக்க உள்ளது.
- ❖ அதன் தலைமை இயக்குநர், இந்தப் போக்குவரத்திற்கான உதவிகள் தொடர்பான விசயங்களில் மத்திய அரசிற்கு அறிவுரை வழங்குவார்.
- ❖ இதன் விதிமுறைகளானது கடற்கரையோரப் பகுதிகள், கண்டத் திட்டு மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு கடல்சார் மண்டலங்கள் உட்பட ஒட்டு மொத்த நாட்டிற்கும் பொருந்தும்.




## மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதம் – இந்தியா

- ❖ 2018-19 ஆம் ஆண்டில் 5.1% ஆக இருந்த மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2019-20 ஆம் ஆண்டில் 4.2% ஆக குறைந்துள்ளது.
- ❖ தேசியப் புள்ளிவிவர நிறுவனம் மேற்கொண்ட வருடாந்திர தொழில்வள கணக்கெடுப்பில் இந்தத் தரவுகள் கூறப்பட்டுள்ளன.
- ❖ 2018-19 ஆம் ஆண்டின் 24.5% ஆக இருந்த மகளிர் தொழில்வளப் பங்கேற்பு வீதமானது 2019-20 ஆம் ஆண்டில் 30% ஆக உயர்ந்துள்ளது.
- ❖ 2020-21 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்பில் (நாள் கணக்கில்) மகளிரின் பங்கு சுமார் 207 கோடியாக உயர்ந்துள்ளது.

## சிறார் நீதி (குழந்தை நலன் மற்றும் பாதுகாப்பு) திருத்த மசோதா

- ❖ இந்த மசோதாவானது சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.
- ❖ குழந்தை தத்தெடுப்பு மற்றும் குழந்தை நலன் குறித்த விசயங்களில் கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகளின் பங்கினை இந்த மசோதா அதிகரிக்க முனைகிறது.
- ❖ இந்த மசோதாவானது 2015 ஆம் ஆண்டு சிறார் நீதிச் சட்டத்தினைத் திருத்த உள்ளது.
- ❖ ஒரு குடிமையியல் நீதிமன்றத்தினால் ஆணை வழங்கப்பட்ட பின்னரே குழந்தை தத்தெடுப்பு உறுதிபடுத்தப் படும் என இச்சட்டம் கூறுகிறது.
- ❖ நீதிமன்றத்திற்குப் பதிலாக கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட நீதிபதி அந்த தத்தெடுப்பு ஆணையை வழங்குவார் என்று இந்தப் புதிய மசோதா மாற்றியமைக்க உள்ளது.

> - The Bill seeks to amend the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015.
> - The amendments include authorizing District Magistrate including Additional District Magistrate to issue adoption orders to ensure speedy disposal of cases and enhance accountability.
> - Defining eligibility parameters for appointment of Child Welfare Committee members and the categorizing previously undefined offences as serious offences are some of the other aspects of the Bill.


## வட்டார மொழிகளில் உயர்கல்வி

- ❖ அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றமானது கல்லூரிகளில் நாட்டின் வட்டார மொழிகளில் மேலும் பல பாடத்திட்டங்களை வழங்குவதற்காக அதற்கான மூல ஆதாரங்களின் தரவு தளத்தினை உருவாக்கி வருவதாக அறிவித்துள்ளது.
- ❖ தொழில்நுட்பக் கல்வி துறையில் வட்டார மொழிகளை மேம்படுத்துவதற்காக இந்த முயற்சியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ எட்டு மாநிலங்களிலுள்ள 14 பொறியியல் கல்லூரிகளானது 5 இந்திய மொழிகளில் பொறியியல் படிப்பினைத் தொடங்க உள்ளது.
- ❖ அவை வங்காளம், இந்தி, தெலுங்கு, தமிழ் மற்றும் மராத்தி.

## மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு

- ❖ அகில இந்திய இட ஒதுக்கீட்டுத் திட்டத்தின் (All India Quota – AIQ) கீழ், மருத்துவ மற்றும் பல்மருத்துவத்திற்கான இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீட்டினையும் பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீட்டினையும் மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளின் இளங்கலைப் படிப்பில் 15% இடமும் முதுகலைப் படிப்பில் 50% இடமும் வேற்று மாநில மாணவர்களின் சேர்க்கைக்காக குடியிருப்புத் தகுதி தேவையற்ற இடங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

- மீதமுள்ள இடங்கள் ஆனது அந்தந்த மாநிலத்தின் மாணவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளன.
- AIQ திட்டமானது உச்சநீதிமன்றத்தின் ஆணையின் கீழ் 1986 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டது.





## உறுதிபடுத்தப்பட்ட பாதுகாப்பு / புலிகளின் தரநிலைகளில் இந்தியாவின் 14 புலிகள் காப்பகங்கள்

- இந்தியாவிலுள்ள 14 புலிகள் காப்பகங்களானது உலகளாவிய உறுதிபடுத்தப்பட்ட பாதுகாப்பு/புலிகளின் தரநிலைகளின் அங்கீகாரத்தை (Conservation Assured / Tiger Standards – CA/TS) பெற்றுள்ளன.
- அந்த 14 புலிகள் காப்பகங்கள் : அசாமில் உள்ள மனாஸ், காசிரங்கா, ஒராங்; மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாத்பூரா, கன்ஹா, பன்னா; மகாராஷ்டிராவில் உள்ள பெஞ்ச்; பீகாரில் உள்ள வால்மீகி, உத்தரப் பிரதேசத்தில் உள்ள துத்துவா, மேற்கு வங்காளத்தின் சுந்தரவனக்காடுகள்; கேரளாவில் உள்ள பரம்பிக்குளம்; கர்நாடகாவில் உள்ள பந்திப்பூர் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள முதுமலை, ஆனைமலை ஆகியன ஆகும்.



- 2013 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்ட CA/TS (Conservation Assured | Tiger Standards) என்ற அங்கீகாரமானது உலகளாவியப் புலிகள் வாழிட நாடுகள் என்ற கூட்டமைப்பினால் ஓர் அங்கீகாரத் தரநிலையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது இங்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் தரமான மேலாண்மைக்காக வேண்டி குறைந்தபட்ச தரநிலைகளை நிர்ணயித்து அது தொடர்பான வளங்காப்பு பகுதிகளில் இந்தத் தரநிலைகளின் மதிப்பீட்டினையும் மேற்கொள்ளச் செய்கிறது.

## தேசிய ஊனீரியல் கணக்கெடுப்பு (மாநில அளவில்)




- மத்தியப் பிரதேச மக்களிடையே புதிய கொரோனா வைரசிற்கு எதிரான நோய் எதிர்ப் பொருள் ஆனது அதிகம் (79%) காணப்படுகின்றது.
- இதனையடுத்து ராஜஸ்தான் (76%) மற்றும் பீகார் (75%) ஆகியவை உள்ளன.
- கணக்கிடப்பட்ட 21 மாநிலங்களில் கேரள மாநில மக்களிடையே குறைவான அளவே இவை காணப்படுகின்றன.
- கேரளாவை அடுத்து அசாம் (50%) மற்றும் மகாராஷ்டிரா (58%) மாநில மக்களிடையே குறைவான நோய் எதிர்ப்பொருள் பிரிவுகள் காணப்படுகின்றன.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் தேசிய சீரோலாஜி (நோய் எதிர்ப் பொருளியல்) மேற்கொண்ட கணக்கெடுப்பில் இந்தத் தரவுகள் கொடுக்கப்பட்டு உள்ளன.

## சம்பந்தர்

- ஆஸ்திரேலியாவின் தேசிய கலைக் காட்சிக் கூடமானது தனது ஆசிய கலைத் தொகுப்பிலிருந்து சம்பந்தர் உள்ளிட்ட 14 கலைப் படைப்புகளை இந்தியாவிற்குத் திரும்பத் தர உள்ளதாக அறிவித்துள்ளது.
- 12 ஆம் நூற்றாண்டின் நடனமாடும் ஒரு குழந்தைத் – துறவியான சம்பந்தர் சோழ வம்சத்தைச் சேர்ந்தவராவார்.
- சம்பந்தர் நாயன்மார்களுள் ஒருவராவார்.
- நாயன்மார்கள் 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரையில் தென்னிந்தியாவில் வெகுவாக புகழ்பெற்று திகழ்ந்த 63 முனிவர்களின் ஒரு குழுவாகும்.

- பக்திக் கவிதைகள் மற்றும் பாடல்கள் மூலம் சிவ வழிபாட்டினைப் பிரபலப் படுத்தச் செய்ததில் இவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.



## லித்தியம் ஆய்வுத் திட்டங்கள்

- இந்தியப் புவியியல் ஆய்வு அமைப்பானது அரசின் ஆற்றல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் ஏழு லித்தியம் ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.
- இராஜஸ்தான் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் அணுசக்தித் துறையின் கீழ் இயங்கும் அணுசக்தி கனிமங்கள் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான இயக்குநரகத்தினால் லித்தியம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*குறிப்பு*

- லித்தியம் அயனி மின்கலன்களின் தயாரிப்பு மற்றும் இதரப் பயன்பாடுகளுக்கு இந்தியாவில் போதுமான அளவு லித்தியம் வளங்கள் இல்லை.
- பெரும்பாலான லித்தியம் மின்கலன்கள் நாட்டினுள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஆகஸ்ட் மாத தலைமை – இந்தியா

- ஆகஸ்ட் மாதத்திற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்றுள்ளது.
- தீவிரவாதத்திற்கு எதிரான போர், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அமைதி காப்பு ஆகிய மூன்று முக்கியப் பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகளை இந்தியா ஏற்பாடு செய்ய உள்ளது.
- ஐக்கிய நாடுகள் அவைக்கான நிரந்தர இந்தியப் பிரதிநிதி S. திருமூர்த்தி அவர்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஆகஸ்ட் மாத செயல் திட்டங்கள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பினை நடத்த உள்ளார்.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கான இந்தியாவின் 2 ஆண்டு கால நிரந்தர உறுப்பினரல்லாத பொறுப்பு துவங்கியது.
- இது 2021 – 22 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினரல்லாத பொறுப்பின் போதான இந்தியாவின் முதலாவது தலைமைப் பொறுப்பாகும்.

## மூலோபாய பெட்ரோலிய இருப்புகள் (வளங்கள்) திட்டம்




- மூலோபாய பெட்ரோலிய வளங்கள் திட்டத்தின் (strategic petroleum reserves) இரண்டாம் கட்டத்தின் கீழ், சண்டிகோல் மற்றும் படூர் ஆகிய இடங்களிலுள்ள 6.5 மில்லியன் மெட்ரிக் டன் சேமிப்பு திறன் கொண்ட மையங்களில் மேலும் இரண்டு வணிக மற்றும் மூலோபாய மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- இந்திய அரசின் மூலோபாய பெட்ரோலிய வளங்கள் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் மொத்தம் 5.33 மில்லியன் மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட பெட்ரோலியச் சேமிப்பு கிடங்குகள் நிறுவப்பட்டன.
- அவை,
    - விசாகப்பட்டினம்,
    - மங்களூரு மற்றும்
    - படூர்.
- மூலோபாய பெட்ரோலிய வளங்கள் (இருப்புகள்) என்பது இயற்கைப் பேரிடர், போர் (அ) இதரப் பேரழிவுகளின் போது வழங்கீட்டில் ஏற்படும் இடையூறு போன்ற எந்தவொரு கச்சா எண்ணெய் தொடர்பான நெருக்கடியையும் சமாளிப்பதற்காக வேண்டி வைத்திருக்கப் படும் மிகப்பெரியச் சேமிப்புக் கிடங்கு ஆகும்.

## சிக்கிம் பிரிவிற்கான நேரடித் தொடர்பு இணைப்பு

- இந்திய மற்றும் சீன நாட்டு இராணுவங்கள் வடக்கு சிக்கிம் பிரிவில் ஒரு நேரடித் தொடர்பு இணைப்பினை நிறுவியுள்ளன.
- இப்பகுதியிலுள்ள அசல் எல்லைக் கோட்டுப் பகுதிகளில் நம்பிக்கைத் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

- இந்த நேரடித் தொடர்பு இணைப்பானது, வடக்கு சிக்கிமின் கோங்ரா லா என்ற பகுதியிலுள்ள இந்திய இராணுவத்திற்கும் திபெத்திய தன்னாட்சிப் பகுதியின் கம்பா சாங் என்ற பகுதியிலுள்ள சீன மக்கள் விடுதலை இராணுவத்திற்கும் இடையே நிறுவப் பட்டுள்ளது.
- இது 3,488 கி.மீ. நீளமான அசல் எல்லைக் கோட்டின் ஊடாக கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு இடையே வழங்கப்பட்டுள்ள 6வது நேரடித் தொடர்பு இணைப்பு ஆகும்.
- தற்போது கிழக்கு லடாக், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றிலும் இரண்டு நேரடித் தொடர்பு இணைப்புகள் உள்ளன.



## இ-ரூபி டிஜிட்டல் பணவழங்கீட்டு முறை




- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 அன்று பிரதமர் நரேந்திர மோடி 'இ-ரூபி டிஜிட்டல் பணவழங்கீட்டு முறை' என்ற ஒரு முறையினைத் தொடங்கி வைத்தார்.
- இ-ரூபி என்பது இணையவழி ரசீது அடிப்படையிலான ஒரு பணவழங்கீட்டு முறை ஆகும்.
- இது அரசிற்கும் பயனாளிகளுக்கும் இடையேயான தொடர்புகளை வரையறுக்கச் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.
- இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மற்றும் வேறு எவருக்கும் சென்றடையா வண்ணம் அரசின் நலத் திட்டப் பலன்கள், குறிப்பிட்ட பயனாளிகளை சென்றடைவதை இத்தளம் உறுதி செய்கிறது.

- இ-ரூபி என்பது பயனாளிகள் பற்று அட்டைகள், டிஜிட்டல் பணவழங்கீட்டுச் செயலிகள் (அ) இணைய வங்கி வசதி போன்றவற்றைப் பயன்படுத்தாமலேயே ரசீதினைப் பெறச் செய்து ஒரு முறை பணம் செலுத்தக் கூடிய செயல்முறையாகும்.
- இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகமானது தனது ஒருங்கிணைந்த பணவழங்கீட்டு இடைமுகத் தளத்தில் இந்த இ-ரூபி தளத்தினை உருவாக்கியுள்ளது.
- இது நிதிச் சேவைத் துறை, சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றினால் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.

## இலகுவான மெட்ரோ இரயில்

- தித்தாகர் வேகன்ஸ் லிமிடெட் என்ற நிறுவனமானது இத்தாலியில் உள்ள தனது ஆலையில் புனே மெட்ரோ இரயில்களுக்கான முதல் இரயிலினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- மொத்தமாக இத்தாலியிலிருந்து 34 இரயில்கள் அனுப்பப்பட உள்ளன.
- புனே மெட்ரோ இரயில் இணைப்பிற்கான இந்த இரயில் பெட்டிகள் இந்தியாவில் முதன்முறையாக அலுமினியத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.
- நித்தாகர் வேகன்ஸ் என்பது மேற்கு வங்காளத்தின் தித்தாகர் என்னுமிடத்தில் அமைந்துள்ள இரயில் பெட்டிகள் தயாரிப்பு நிறுவனமாகும்.



## அஸ்வகந்தம்

- ஆயுஷ் அமைச்சகமானது அஸ்வகந்தத்தின் மீதான ஒரு மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ள உள்ளது.
- இது ஐக்கிய ராஜ்ஜியத்திலுள்ள லண்டன் சுகாதாரம் மற்றும் வெப்ப மண்டல மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து, மேற்கொள்ளப்பட உள்ளது.
- இந்தக் குழுவானது கோவிட்-19 தொற்று மீது இம்மருந்தினுடைய செயல்திறனைச் சோதித்துப் பார்க்க உள்ளது.
- அகில இந்திய ஆயுர்வேத கல்வி நிறுவனம் மற்றும் லண்டன் சுகாதார மற்றும் வெப்ப மண்டல மருத்துவக் கல்லூரி ஆகியவை அஸ்வகந்தத்தின் மீதான மருத்துவச் சோதனைக்காக வேண்டி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை சமீபத்தில் மேற் கொண்டன.
- கோவிட்-19 நோயாளிகள் மீது இந்த மருந்தினுடைய செயல்திறனைக் கண்டறிய வேண்டி ஓர் அயல்நாட்டு நிறுவனத்துடன் ஆயுஷ் அமைச்சகம் கைகோர்ப்பது இதுவே முதல்முறையாகும்.

*குறிப்பு*

- அஸ்வகந்தத்தினுடைய அறிவியல் பெயர் விதானியா சோம்னிஃபெரா (withania somnifera) என்பதாகும்.
- இது பொதுவாக 'இந்திய குளிர்கால செர்ரிப் பழம்' என்றும் அழைக்கப்படுகிறது.

## தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை

- தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையினை நிறுவுவதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.
- நாட்டின் ஆராய்ச்சிச் சூழலை வலுப்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- இது நாட்டின் தொழில்துறை, கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றை இணைக்கும் ஓர் அமைப்பாக செயல்படும்.

## வேலைவாய்ப்பின்மையினால் நிகழும் தற்கொலைகள்

- 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் அண்டு வரையிலான காலகட்டத்தில் வேலை வாய்ப்பின்மையினால் நிகழும் தற்கொலைகளின் எண்ணிக்கை 24 சதவீதம் உயர்ந்துள்ளது.
- தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகத்தின் தரவுகளில் இத்தகவல் கூறப்பட்டுள்ளது.
- கர்நாடக மாநிலத்தில் 2019 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பின்மை காரணமாக அதிக எண்ணிக்கையிலான (553) தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- இதனையடுத்து மகாராஷ்டிரா மாநிலமும் (452) தமிழ்நாடு மாநிலமும் (251) உள்ளன.

## பாதுகாப்பான தளவாட ஆவணப் பரிமாற்றம்

- இந்திய அரசானது பாதுகாப்பான தளவாட ஆவணப் பரிமாற்றத்தினைத் தொடங்கி உள்ளது.
- தளவாட செலவினங்களைக் குறைப்பதற்கும், தளவாடங்களின் செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பன்முகத் தன்மையைப் பெருமளவில் ஊக்குவிப்பதற்கும் வேண்டி இந்த முயற்சியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பசுமை இல்ல வாயு உமிழ்வினை அளவிடும் ஒரு கணிப்பானும் (கால்குலேட்டர்) இதில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த டிஜிட்டல் முன்முயற்சிகளானது அரசினாலும் எந்தவொரு தனியார் நிறுவனங்களினாலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாத சில பகுதிகளிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்காக வேண்டி தொடங்கப்பட்டுள்ளன.

## தேசியப் புள்ளி விவரங்கள் நிறுவனத்தின் கணக்கெடுப்பு

- தேசியப் புள்ளிவிவரங்கள் நிறுவன அமைப்பானது 8வது வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பினை சமீபத்தில் வெளியிட்டது.
- 2020 ஆம் ஆண்டின் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை வீதமானது 13.3% ஆக அதிகரித்துள்ளதாக இந்தக் கணக்கெடுப்பில்

கூறப்பட்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டின் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை வீதமானது 8.4% ஆக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அனைத்து வயதினருக்குமான தொழிலாளர் வளப் பங்கேற்பு வீதமானது 37% ஆகும்.
- 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் வேலை வாய்ப்பின்மை வீதமானது 20.9% ஆக இருந்தது.




## மின் விநியோகத் துறை குறித்த அறிக்கை

- இந்தியாவின் மின் விநியோகத் துறையை மாற்றியமைக்கும் சீர்திருத்த செயல் முறைகளை வழங்குவதற்கான மின்விநியோகத் துறை குறித்த ஒரு அறிக்கையினை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- இது மின் விநியோகத் துறையில் ஒரு கொள்கை உருவாக்கத்தினை மேம்படுத்தச் செய்வதற்கான படிமுறைகளை வழங்கும்.
- இந்த அறிக்கைக்கு “மின் விநியோகத் துறையை மாற்றியமைத்தல்” என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- இது நிதி ஆயோக், RMI மற்றும் RMI India ஆகியவற்றால் இணைந்து தயாரிக்கப்பட்டது.

## நீலச் சுதந்திர நடவடிக்கை

- சியாச்சின் பனிப்பாறைகளில் ஏறுவதற்கு மாற்றுத் திறனாளிகள் குழு ஒன்றை வழி நடத்திச் செல்வதற்கு Team Claw என்ற அமைப்பிற்கு இந்திய அரசானது அனுமதி வழங்கி உள்ளது.
- இது மாற்றுத்திறனாளிகள் அடங்கிய இப்பெரியக் குழுவிற்கு ஒரு புதிய உலக சாதனையாக அமையும்.
- இந்தப் பயணமானது நீலச் சுதந்திர நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப் படுகிறது.
- நீலச் சுதந்திர நடவடிக்கையானது 2019 ஆம் அண்டில் CLAW Global எனும் ஒரு அமைப்பினால் தொடங்கப்பட்டதாகும்.

- CLAW Global என்பது இந்திய இராணுவம் மற்றும் இந்தியக் கடற்படையின் முன்னாள் சிறப்புப் படைப்பிரிவு இயக்குநர்கள் அடங்கிய ஒரு குழுவாகும்.



## சர்க்கரை தொழில்துறைகளுக்கான உரிமக் கட்டுப்பாடு நீக்கம் – மத்திய அரசு

- நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுவதை ஊக்குவிக்கும் வகையில் சர்க்கரை தொழில்துறைகளுக்கு உரிமக் கட்டுப்பாடு முறையை மத்திய அரசு நீக்கியுள்ளது.
- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.
- அதிக கரும்பு உற்பத்தி எனும் சிக்கலுக்கு ஒரு நீண்டகால தீர்வாக பெட்ரோலுடன் எத்தனாலைக் கலப்பதற்கான ஒரு செயல்முறைக்காக வேண்டி மிதமிஞ்சிய கரும்புகளைப் பயன்படுத்துவதற்கு சர்க்கரை ஆலைககளை அரசு ஊக்குவிக்கிறது.
- இது ஒரு பசுமை எரிபொருளாக மட்டுமின்றி கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் அந்நிய செலாவணியையும் மிச்சப்படுத்த உதவும்.

## உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2021

- 2021 ஆம் ஆண்டு உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து என்ற ஒரு மசோதாவினை பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இது 1917 ஆம் ஆண்டு உள்நாட்டு கப்பல் போக்குவரத்துச் சட்டத்திற்கு மாற்றாக அமல்படுத்தப் படும்.
- இந்த மசோதா நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை வழங்க முனைகிறது.
- இது ஒரு மின்னணுத் தளத்தில் கப்பல் குறித்த தகவல்கள், அதன் பதிவு மற்றும் பணியாளர்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்வதற்கான ஒரு மைய தரவுத் தளத்தினை வழங்குகிறது.
- கப்பல்கள், படகுகள், பாய்மரக் கப்பல்கள், கொள்கலன் ஏந்திச் செல்லும் கப்பல்கள் மற்றும் பயணப் படகுகள் உள்ளிட்ட இயந்திரமயமாக்கப் பட்ட உள்நாட்டுக் கப்பல்களுக்கான வரையறையை இம்மசோதா வழங்குகிறது.
- உள்நாட்டு நீர்நிலைகளில் கப்பல்களை இயக்குவதற்கு என்று அனைத்துக் கப்பல்களும் ஆய்வுச் சான்றிதழ் மற்றும் பதிவுச் சான்றிதழ் போன்றவற்றைப் பெற்றிருக்க வேண்டும்.

- அவசரகாலத் தயார்நிலை, மாசுக் கட்டுப்பாடு மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தினை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாநிலத்திலும் மேம்பாட்டு நிதி உருவாக்கப் படும்.

## பள்ளிக் கல்விக்கான சமக்ரா சிக்சா திட்டம்




- பள்ளிக் கல்விக்கான சமக்ரா சிக்சா திட்டத்தினை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சமக்ரா சிக்சா திட்டமானது ஆரம்பக் கல்வி முதல் 12 ஆம் வகுப்பு வரையில் முழு பள்ளிக் கல்வியையும் உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும்.
- இத்திட்டமானது கல்விக்கான நிலையான மேம்பாட்டு இலக்கின் (4) வழியே உருவாக்கப் பட்டது.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியைக் கிடைக்கச் செய்தலை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் – உச்ச நீதிமன்றம்

- மரண தண்டனைக்குட்பட்டவர்கள் உள்ளிட்ட அனைத்து வகை கைதிகளையும் ஒரு மாநில ஆளுநர் மன்னிக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ஒரு சிறைக் கைதி குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை நிறைவு செய்வதற்கு முன்பாகவே ஆளுநர் அந்தக் கைதிக்கு மன்னிப்பு வழங்க இயலும்.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 433A என்ற பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சில விதிமுறைகளை ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் மீறுவதாக உச்சநீதிமன்ற அமர்வு கூறியது.
- 433A பிரிவானது ஒரு கைதி 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை நிறைவு செய்த பின்னர் மட்டுமே அதைக் குறைக்க முடியும் என்று கூறுகிறது.
- உண்மையில் 161வது சட்டப் பிரிவின் கீழான ஆளுநரின் மன்னிப்பு அதிகாரமானது மாநில அரசால் செயல்படுத்தப் படுகிறதே தவிர ஆளுநரின் சொந்த விருப்பால் அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.

*குறிப்பு*

- இந்திய அரசியலமைப்பின் 161வது சட்டப் பிரிவானது சட்டத்திற்குப் புறம்பாக குற்றம் புரிந்த எந்தவொரு நபருக்கும் மன்னிப்பு வழங்குவதற்கும், அவரைத் தண்டனையிலிருந்து விடுவிக்கச் செய்வதற்கும், அவருக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கும் (அ) இடைநீக்கம் செய்வதற்கும், தள்ளுபடி செய்வதற்கும் ஒரு மாநில ஆளுநருக்கு அதிகாரத்தை அளிக்கிறது.
- இப்போது வரை, மரண தண்டனை உள்ளிட்ட அனைத்து வழக்குகளிலும் கைதிகளை மன்னிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உள்ளது.
- இருப்பினும் ஆளுநருக்கான இந்த விதிமுறையானது சமீபத்தில் உச்சநீதிமன்றத்தால் மாற்றியமைக்கப் பட்டது.

## நொடிப்பு நிலை மற்றும் திவால் குறியீடு (திருத்தம்) மசோதா

- பாராளுமன்றமானது சமீபத்தில் நொடிப்பு நிலை மற்றும் திவால் குறியீடு (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 அன்று அறிவிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு நொடிப்பு நிலை மற்றும் திவால் குறியீடு (திருத்தம்) என்ற ஒரு அவசரச் சட்டத்திற்கு மாற்றாக அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.
- இந்த சமீபத்திய திருத்தமானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஒரு மாற்றுவகை நொடிப்பு நிலைத் தீர்வு முறையை வழங்கும்.
- இந்தத் தீர்வு முறையானது முன்பே தொகுத்தமைக்கப்பட்ட தொகுப்பு நிலைத் தீர்வு முறை என்று அழைக்கப்படும்.
- மேலும் பெருநிறுவனக் கடனாளிகளின் நொடிப்பு நிலைச் சிக்கல்களை 330 நாட்களுக்குள் தீர்ப்பதற்காக வேண்டி ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்ட செயல் முறையை அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்தத் தீர்வு முறையானது பெரு நிறுவன நொடிப்புநிலைத் தீர்வுச் செயல்முறை எனப்படும்.
- இந்த முறையின் கீழ், ரூ. 1 லட்சம் அளவிலான நொடிப்பு நிலையாக இருந்தால் கடனாளிகள் அல்லது கடன் வழங்குநர்கள் பெருநிறுவன நொடிப்பு நிலைத் தீர்வு செயல்முறையைத் தொடங்க விண்ணப்பிக்கலாம்.
- பெருநிறுவன நொடிப்பு நிலைத் தீர்வு செயல்முறையின் கீழ் நொடிப்பு நிலைத் தீர்வு குறித்து முடிவு செய்வதற்கு ஒரு கடன் வழங்குநர் குழுவும் அமைக்கப்படும்.

## Fortune குளோபல் 500 பட்டியல் – 2021

- Fortune நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு குளோபல் 500 பட்டியலில் ஏழு இந்திய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- ‘Fortune குளோபல் 500’ என்பது வணிக வருவாயின் அடிப்படையில் உலகின் 500 முன்னணி நிறுவனங்களை தரவரிசைப்படுத்தும் ஒரு வருடாந்திரப் பட்டியலாகும்.
- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது வருவாய் அடிப்படையில் இப்பட்டியலில் உயர்தரவரிசையிலுள்ள ஒரு இந்திய நிறுவனமாகும்.

- இது உலக அளவில் 155வது இடத்தில் உள்ளது.
- உலகளவில் வால்மார்ட் நிறுவனமானது இந்தப் பட்டியலில் தொடர்ந்து 8 ஆண்டுகளாகவும் 1995 ஆம் ஆண்டு முதல் 16வது முறையாகவும் வருவாய் அடிப்படையில் முதலிடத்தில் உள்ளது.

**List of 7 Indian Companies**

- Reliance Industries (155)
- State Bank of India (205)
- Indian Oil (212)
- Oil & Natural Gas (243)
- Rajesh Exports (348)
- Tata Motors (357)
- Bharat Petroleum (394)

## மினர்வாயா பென்டலி



- புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள இந்த இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் தெற்குப் பகுதியில் (கேரளா மற்றும் தமிழ்நாடு) மட்டுமே காணப்படுகின்றன.
- இந்த இனங்களானது இதுவரை கண்டறியப்பட்ட சிறிய வகை மினர்வரியன் தவளை இனங்களில் ஒன்றாகும்.
- இது டைக்ரோகுளோசிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.
- டெல்லி பல்கலைக்கழகத்தில் ஒரு முறையான ஆய்வகத்தை நிறுவுவதற்கு மகத்தான ஆதரவு மற்றும் ஊக்கத்தை வழங்கிய பேராசிரியர் தீபக் பென்டல் என்பவரைக் கௌரவிக்கும் வகையில் இந்த இனங்களுக்கு அவருடையப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## வேளாண் தானியங்கு வானிலை மையங்கள்

- இந்திய வானிலை ஆய்வு மையமானது வேளாண் தானியங்கு வானிலை மையங்களை நிறுவியுள்ளது.
- மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு வானிலை முன்னறிவிப்பினை வழங்குவதற்காக வேண்டி இந்த மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டமைப்பின் கீழ் இயங்கும் கிருஷி விஞ்ஞான் கேந்திர மையங்களில் அமைந்துள்ள மாவட்ட வேளாண் வானியல் மைய அலகுகளில் இது நிறுவப்பட்டுள்ளது.
- கிராமின் கிருஷி மௌசம் சேவா எனும் திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான வேளாண் வானியல் ஆலோசகச் சேவைகளை வழங்குவதற்காக வேண்டி 200 மாவட்ட வேளாண் வானியல் மையங்களில் வேளாண் தானியங்கு வானிலை மையங்கள் நிறுவப் பட்டு உள்ளன.

## சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்

- 1023க்கும் மேற்பட்ட சிறப்பு விரைவு நீதிமன்றங்களை மேலும் இரண்டு வருடங்களுக்கு (ஏப்ரல் 2021 – மார்ச் 2023) மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாக தொடருவதற்கு மத்திய அரசானது சமீபத்தில் அனுமதி வழங்கியுள்ளது.
- இதில் 389 பிரத்தியேக போக்சோ (பாலியல் ரீதியிலான குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல்) நீதிமன்றங்களும் அடங்கும்.
- இதற்கான மத்திய அரசின் பங்கானது நிர்பயா நிதியிலிருந்து வழங்கப்படும்.
- விரைவு நீதிமன்றங்கள் குறித்த பரிந்துரையானது 2000 ஆம் ஆண்டில் 11வது நிதி ஆணையத்தினால் வழங்கப்பட்டது.

## கடல் மீன்வளம் மீதான தேசியக் கொள்கை, 2017

- இந்திய நீர்நிலைகளில் கடல்மீன் பிடித்தலை ஊக்குவிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு கடல் மீன்வளம் மீதான தேசியக் கொள்கையினை (National Policy on Marine Fisheries – NPMF) அரசு அறிவித்துள்ளது.
- நீலப் புரட்சியை ஊக்குவிப்பதில் ஈடுபாடு செலுத்தும் நீல வளர்ச்சி முன்னெடுப்பினை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதலை NPMF வழங்கும்.
- இந்தியாவின் தற்கால மற்றும் எதிர்காலத் தலைமுறையினரின் நன்மைக்காக நிலையான மீன்பிடி முறை மூலம் இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தின் கடல்வாழ் வளங்களின் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் ஒருமைப்பாட்டினை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NPMF கொள்கையின் உத்திகளானது 7 தூண்களை அடிப்படையாகக் கொண்டது.
- அவை நிலையான மேம்பாடு, மீனவர்களின் சமூக-பொருளாதார மேம்பாடு, துணை நிறுவனங்களிடையே கொள்கை, கூட்டிணைவு, தலைமுறைகளுக்கிடையேயான சமத்துவம், பாலின நீதி மற்றும் முன்னெச்சரிக்கைமிக்க அணுகுமுறை ஆகியன ஆகும்.

## ஐ.என்.எஸ். விக்ராந்த்

- இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட விமானந் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ் விக்ராந்த் தனது முதலாவது கடல்பயணச் சோதனையை மேற்கொண்டது.
- இந்தியாவினுள்ளேயே இராணுவ உபகரணங்களை உற்பத்தி செய்வதனை இது ஊக்குவிக்கிறது.
- இது 2022 ஆம் ஆண்டில் முழுமையாக செயல்பாட்டுக்கு உட்படுத்தப்படும்.

- கடற்படையானது இக்கப்பலைப் படையில் இணைத்து அதன் பின்பு விமானச் சோதனைகளை மேற்கொள்ள உள்ளது.
- விமானச் சோதனையின் போது ரஷ்ய நாட்டுத் தயாரிப்பான MiG 29K போர் விமானங்களின் ஏற்ற இறக்கச் சோதனைகள் மேற்கொள்ளப் படும்.
- ஐ.என்.எஸ் விக்ராந்த் கப்பலானது 44000 டன் எடை கொண்ட விமானந் தாங்கிக் கப்பலாகும்.
- இது கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் கட்டமைக்கப்பட்டது.

## ஐ.என்.எஸ். கஞ்சர்

- இந்தியக் கடற்படை கப்பலான ஐ.என்.எஸ் கஞ்சர் ஒடிசாவிலுள்ள கோபாலபுரத்தில் அமைந்த பழமை வாய்ந்த கடற்கரைத் துறைமுகத்திற்கு வருகை புரிந்த முதல் இந்தியக் கடற்படைக் கப்பலாகும்.
- அசாதி கா அம்ரித் மகோத்சவ் மற்றும் சுவர்ணிம் விஜய் வர்ஷ் ஆகிய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்த இரண்டு நாட்கள் அளவிலான வருகையானது ஏற்பாடு செய்யப் பட்டது.
- இது 75வது சுதந்திர தினம் மற்றும் 1971 ஆம் ஆண்டு போரின் 50 ஆம் ஆண்டு நிறைவு ஆகியவற்றை நினைவு கூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## உலகின் மிக உயரமான சாலை – லடாக்




- லடாக்கின் உம்லிங்லா கணவாயில், எல்லைச் சாலைகள் அமைப்பானது உலகின் மிக உயரமானச் சாலையை அமைத்து அதற்கு அஸ்பால்ட் பூச்சினைப் பூசியுள்ளது.
- உலகின் உயரமான, வாகனத்தினால் பயணிக்க ஏதுவான இந்தச் சாலையானது 19,300 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- இந்தச் சாலையின் நீளம் 52 கி.மீ. ஆகும்.
- இச்சாலையானது கிழக்கு லடாக்கின் சுமெர் பிரிவிலுள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் உம்லிங்லா கணவாயினூடாக செல்கிறது.

## 2031 ஆம் ஆண்டில் இந்தியாவின் அணுசக்தித் திறன்

- இந்தியாவின் அணுசக்தித் திறனானது 2031 ஆம் ஆண்டில் தற்போது உள்ள 6,780 மெகா வாட் திறனிலிருந்து 22,480 மெகாவாட் திறனாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவில் தற்போது 22 அணு உலைகள் உள்ளன.
- காக்ரபார் அணு உலை-3 (700 மெகாவாட்) ஆனது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மின்சாரக் கட்டமைப்போடு இணைக்கப்பட்டது.
- 8000 மெகாவாட் திறனுடைய 10 அணு உலைகள் தற்போது கட்டுமானப் பணியில் உள்ளன.
- அதில் பாரதிய நபிக்யா வித்யுத் நிகாம் லிமிடெட் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்டு வரும் 500 மெகாவாட் திறனுடைய முன்மாதிரி அதிவேக உற்பத்தி உலையும் உள்ளடங்கும்.
- கூடுதலாக, ஒவ்வொன்றும் 700 மெகாவாட் திறன் கொண்ட உள்நாட்டிலேயேத் தயாரிக்கப் பட்ட அழுத்த கனநீர் உலைகள் (Pressurized Heavy Water Reactors) தொடர் முறையில் (fleet) நிறுவப்பட உள்ளன.




## பட்டியலினப் பழங்குடியினர் பட்டியலைத் திருத்துவதற்கான மசோதா

- 2021 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலினப் பழங்குடியினர்) ஆணை (திருத்தம்) என்ற ஒரு மசோதாவினை மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலினப் பழங்குடியினர்) ஆணையினைத் திருத்தி அமைக்கிறது.
- இம்மசோதா, அருணாச்சலப் பிரதேசத்தின் அபோர் வகை பழங்குடியினரை அறிவிக்கப்பட்ட பட்டியலினப் பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்குகிறது.
- இது சில குறிப்பிட்ட பழங்குடியினருக்குப் பதிலாக இதர சில பழங்குடியினரை அந்தப் பட்டியலில் சேர்க்கிறது.
- அவை தாய் காம்தி, மிஷ்மி-கமான் (மிஜீ மிஷ்மி), இடு (மிஷ்மி) மற்றும் தரோன் (திகாரு மிஷ்மி) ஆகியனவாகும்.
- அரசியலமைப்புச் சட்டமானது, வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பட்டியலினப் பழங்குடியினரைக் குறிப்பிடுவதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கிறது.
- மேலும் அறிவிக்கப்பட்டப் பட்டியலினப் பழங்குடியினரின் பட்டியலைத் திருத்தி அமைக்கவும் அது பாராளுமன்றத்திற்கு அனுமதி வழங்குகிறது.

## தரமான உற்பத்தி முறைக்கான சான்றிதழ் – கோவாக்சின்

- பாரத் பயோடெக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பு மருந்தான 'கோவாக்சின்' ஹங்கேரி நாட்டு ஆணையத்திடமிருந்து தரமான உற்பத்தி முறையைப் பின்பற்றியதற்கானச் சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இது ஐரோப்பிய ஒழுங்குமுறை அமைப்புகளிடமிருந்து பாரத் பயோடெக் பெற்ற முதலாவது EUDRAGDMP இணக்கச் சான்றிதழாகும்.




## TRIFED நிறுவனத்தின் 34வது நிறுவன தினம்



- இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு நிறுவனமானது (TRIFED – Tribal Co-operative Marketing Development Federation Limited) ஆகஸ்ட் 06 அன்று தனது 34வது நிறுவன தினத்தைக் கொண்டாடுகின்றது.
- TRIFED நிறுவனமானது 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று நிறுவப்பட்டது.
- பழங்குடியினரின் சமூக-பொருளாதார மேம்பாடு எனும் உயரிய நோக்கோடு ஒரு தேசிய அளவிலானக் கூட்டுறவு அமைப்பாக இது நிறுவப்பட்டது.

## சுயபுணரமைப்புப் பொருட்கள்

- கொல்கத்தாவின் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது கரக்பூரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து தகைவுமின் மூலக்கூறு படிகங்களை (piezoelectric molecular crystals) உருவாக்கியுள்ளது.
- இந்தப் படிகங்கள் தனது இயந்திரப் பழுதுகளை இயந்திர மோதல்களால் உருவாகும் மின்னூட்டங்களைக் கொண்டு தாமாகவே பழுது செய்து கொள்கின்றன.
- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஆதரவு பெற்ற இந்த ஆராய்ச்சியானது 'Science' எனும் இதழில் வெளியிடப் பட்டுள்ளது.
- ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த தகைவுமின் மூலக்கூறு படிகங்கள் பைபிரசோல் கரிமப் படிகங்கள் (bipyrazole organic crystals) என்று அழைக்கப் படுகின்றன.

## தேசிய விவசாயிகள் தரவுதளம்

- டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிலப்பதிவேடுகளைக் கொண்டு ஒன்றிய தேசிய விவசாயிகள் தரவுதளத்தினை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- விவசாயிகளுக்குச் செயல்திறன்மிக்க மற்றும் தனிப்பயனாக்கப்பட்டச் சேவைகளை (personalized services) வழங்க இது உதவும்.
- வேளாண் அமைச்சகமானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆலோசனையோடு வேளாண் துறைக்கான ஒரு தரவுக் கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## நெகிழி கலக்கப்பட்ட கைவினைக் காகிதம்

- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (KIVC - Khadi and Village Industries Commission) தனது புதுமைமிக்க நெகிழி கலக்கப்பட்ட கைவினை காகிதத்திற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளது.
- இந்த காகிதமானது REPLAN (REducing PLAstic from Nature - இயற்கையிலிருந்து நெகிழியை நீக்குதல்) என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- சுவச் பாரத் அபியான் திட்டத்திற்கான KVIC அமைப்பின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக 2018 ஆம் ஆண்டு செப்டம்பரில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- இது இந்தியாவில் இவ்வகையிலான முதல் திட்டமாகும்.
- கைவினைக் காகிதம் உருவாக்கப்படும் போது நெகிழிப் பொருட்கள் சிதைக்கப்பட்டு, தரம் குறைக்கப்பட்டு, நீர்மமாக்கப்பட்டு காகிதக் கூழுடன் சேர்த்துப் பயன்படுத்தப் படுகின்றன.

## இந்தியாவின் முதலாவது இருதயச் செயலிழப்பு பயோடாங்க்




- கேரளாவிலுள்ள ஸ்ரீசித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திலுள்ள இருதயச் செயலிழப்பிற்கான மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் சிறப்பு தேசிய மையத்தில் நாட்டிலேயே முதன்முறையாக இருதய செயலிழப்பு பயோபாங்க் (உயிரிவங்கி) ஆனது அமைக்கப்பட்டுள்ளது.
- இருதயச் செயலிழப்பு நோயாளிகளில் ஆரோக்கிய விளைவுகளைக் காட்டும் மரபணு, வளர்சிதை மற்றும் புரதவியல் குறிகாட்டிகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்வதற்காக வேண்டி இந்த பயோபாங்க் திறக்கப்பட்டுள்ளது.

## நீதிபதி மற்றும் மக்கள்தொகை இடையேயான விகிதம்

- இந்தியாவில் நீதிபதி மற்றும் மக்கள்தொகை இடையேயான விகிதமானது 2020 ஆம் ஆண்டில் 1 மில்லியன் மக்களுக்கு 21.03 நீதிபதிகள் என்று இருந்தது.
- இந்த விகிதமானது 2018 ஆம் ஆண்டில் 1 மில்லியன் மக்களுக்கு 19.87 நீதிபதிகள் எனவும், 2019 ஆம் ஆண்டில் 20.39 நீதிபதிகள் எனவும் இருந்தது.
- இந்தியாவில் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன.
- 2014 ஆம் ஆண்டில் 31 ஆக இருந்த அங்கீகரிக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 34 ஆக உயர்ந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 906 ஆக இருந்த அங்கீகரிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 1079 ஆக உயர்ந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 19,518 ஆக இருந்த அங்கீகரிக்கப்பட்ட மாவட்ட மற்றும் கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 24,225 ஆக உயர்ந்துள்ளது.

## இந்திய விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் (திருத்தம்) மசோதா, 2021

- 2021 ஆம் ஆண்டு இந்திய விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணைய (திருத்தம்) மசோதாவினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா தொலைதூரப் பகுதிகளுக்கு விமானச் சேவையினை விரிவுபடுத்துமாறு சிறிய விமான நிலையங்களை ஊக்குவிக்கிறது.
- 2008 ஆம் ஆண்டு இந்திய விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழான பெரிய விமான நிலையம் எனும் வரையறையை மாற்றி அமைத்து 2008 ஆம் ஆண்டு இந்திய விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தை (Airports Economic Regulatory Authority) இம்மசோதா திருத்தி அமைக்க உள்ளது.
- இந்தத் திருத்தத்தில் 35 லட்சம் வரை வருடாந்திர பயணிகள் போக்குவரத்தைக் கொண்டுள்ள ஒரு விமான நிலையமானது 'பெரிய விமான நிலையம்' என்று வரையறுக்கப் பட்டுள்ளது.
- இதற்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்து வரம்பானது 15 லட்சம் ஆகும்.

| | |
|---|---|
| ■ Lok Sabha passed AERA amendment Bill to modify definition of 'major airport'<br>■ A major airport is one which handles or is designed to handle 3.5 mn passengers annually<br>■ There are around 25 major airports in the country | ■ Amendment will allow the Centre to privatise a small loss-making airport, along with each of the six airports, by dubbing them<br>■ Currently, AERA determines tariff of a single airport; amendment will allow for tariff fixation of more than one airport |

## பிளிங்கனின் இந்திய வருகை

- அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள பிளிங்கன் சமீபத்தில் தனது முதல் இந்தியப் பயணத்தை மேற்கொண்டார்.
- வெளியுறவுத்துறை அமைச்சர் S. ஜெய்சங்கருடனான விரிவான பேச்சுவார்த்தைக்குப் பிறகு, பிளிங்கன் பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்தார்.
- ஆப்கனிஸ்தானின் நிலை, இந்தோ-பசிபிக் பகுதிகளில் ஈடுபாடு மற்றும் கோவிட்-19 எதிர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இந்தப் பேச்சு வார்த்தையில் இடம் பெற்றன.

## ஜான்சன் & ஜான்சன் தடுப்பு மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு அனுமதி

- இந்தியாவில் ஜான்சன் & ஜான்சன் (Johnson and Johnson's) நிறுவனத்தின் கோவிட்-19 ஒற்றைத் தவணைத் தடுப்பு மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
- இதனோடுச் சேர்த்து இந்தியாவில் தற்போது ஐந்து தடுப்பு மருந்துகள் அவசரகாலப் பயன்பாட்டில் உள்ளன.
- ஜான்சன் கோவிட் – 19 தடுப்பு மருந்து (Janssen COVID-19) எனவும் அழைக்கப்படும் இந்தத்

தடுப்பு மருந்தானது நெதர்லாந்தில் லைடன் என்னுமிடத்திலுள்ள ஜான்சன் வேக்சின்ஸ் (Janssen Vaccines) என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.




## பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சார்த்த அபியான் திட்டம்




- இத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 வரையில் ஏறக்குறைய 5 கோடி பயனாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 4 கோடி பேருக்குப் பயிற்சி வழங்கப் பட்டுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டமானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள கிராமப் புறப் பகுதிகளில் வசிக்கும் 6 கோடி நபர்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவை வழங்கச் செய்வதற்காக வேண்டி தொடங்கப்பட்டதாகும்.
- டிஜிட்டல் ரீதியாக நிலவும் இடைவெளியை நிரப்புவதையும் குறிப்பாக கிராமப்புற மக்களை இலக்காக வைத்து டிஜிட்டல் கல்வியைப் புகுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு இத்திட்டமானது தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தில் பட்டியலினச் சாதியினர், பட்டியலினப் பழங்குடியினர், சிறுபான்மை மக்கள்ர், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் போன்ற சமுதாயத்தின் விளிம்புநிலைப் பிரிவினரும் உள்ளடங்குவர்.
- இத்திட்டமானது டிஜிட்டல் இந்தியா என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டமானது இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- குடும்பத்தில் ஓர் உறுப்பினர் கூட டிஜிட்டல் கல்வியறிவினைப் பெறாத அனைத்துக் குடும்பங்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதி பெறுகின்றன.
- இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய குடும்பத்திலிருந்து 14 முதல் 60 வயதிற்குட்பட்ட ஒரு நபருக்கு மட்டும் பயிற்சி வழங்கப்படும்.

## உள்நாட்டு நுழைவு அனுமதி முறை நீக்கம் – லடாக்




- ❖ லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல விரும்பும் அனைத்துக் குடிமக்களும் உள்நாட்டு நுழைவு அனுமதி பெறும் முறையை (Inner Line Permit – ILP) லடாக் நிர்வாகம் ரத்து செய்துள்ளது.
- ❖ நியோமா, நுப்ரா மற்றும் லே & கார்கில் மாவட்டத்திலுள்ள உள்ள பகுதிகள் போன்ற எல்லைப் பகுதிகளின் சுற்றுலா வட்டாரப் பகுதிகளில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான நாள் வரம்பானது ஏழு நாட்களிலிருந்து 15 நாட்களாகத் தளர்த்தப் பட்டுள்ளது.
- ❖ ILP (Inner Line Permit) என்பது ILP அமைப்பின் கீழ் பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில் வருகை தர விரும்புவோர் (அ) அப்பகுதியைச் சாராதோர் (அ) அங்கு தங்க விரும்புவோர் வைத்திருக்க வேண்டிய ஒரு ஆவணமாகும்.
- ❖ தற்போது அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மிசோரம் மற்றும் நாகாலாந்து உள்ளிட்ட 4 வடகிழக்கு மாநிலங்கள் இந்த அமைப்பின் கீழ் உள்ளன.

## சோதனைத்  தள தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு


- ❖ சோதனைத் தள தொழில்நுட்பம் குறித்த மின் மற்றும் மின்னணுப் பொறியாளர் நிறுவனத்தின் 2வது சர்வதேச மாநாடானது சமீபத்தில் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- ❖ இந்த மாநாடானது ஒடிசாவின் சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தள அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ இந்த நிகழ்ச்சியில் உலகின் பல்வேறு பேச்சாளர்கள், பாதுகாப்பு (இராணுவ) அமைப்புகளின் சோதனை மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான பல்வேறு துறைகளில் மேற்கொண்ட தொழில்நுட்பச் சாதனைகளை முன் வைப்பார்கள்.

## சயத் தல்வார் 2021

- ❖ இந்தியக் கடற்படையும் ஐக்கிய அரபு அமீரகத்தின் கடற்படையும் அபுதாபியின் கடற்கரையருகே ‘சயத் தல்வார் 2021’ எனும் இரு தரப்பு கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- ❖ இரு கடற்படைகளுக்குமிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் இணைதிறனை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் முதன்மை நோக்கமாகும்.
- ❖ இந்தியக் கடற்படையானது ஐ.என்.எஸ். கொச்சி எனும் கப்பலுடன் இரண்டு ஒருங்கிணைந்த ‘சீ கிங் MK42B’ என்ற ஹெலிகாப்டர்களை பாரசீக வளைகுடாவில் நிறுத்தி உள்ளது.

## உஜ்வாலா - 2 திட்டம்

- ❖ உஜ்வாலா என அழைக்கப்படும் அரசின் இலவச LPG இணைப்புத் திட்டத்தின் 2வது பதிப்பினை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.
- ❖ இத்திட்டத்தின் 2வது பதிப்பானது தேர்தல் நடைபெற உள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆகஸ்ட் 10 அன்று தொடங்கப்பட்டது.
- ❖ இத்திட்டத்தின் முதலாவது பதிப்பானது உத்தரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- ❖ உஜ்வாலா – 2 திட்டத்தின் 2வது பதிப்பின் வெளியீடானது முதல் பதிப்பின் ஒரு கோடியாவது LPG இணைப்பினை உத்தரப் பிரதேசத்தின் மஹோபா மாவட்டத்தில் வழங்கும் ஒரு நிகழ்வையும் சேர்த்து பிரதமர் மோடி அவர்கள் மூலம் காணொலி வாயிலாக நிகழ்த்தப் பட உள்ளது.




## PM – DAKSH




- ❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை அமைச்சர். டாக்டர். வீரேந்திர குமார் அவர்கள் 'PM - DAKSH' எனப்படும் ஒரு இணையதளம் மற்றும் கைபேசிச் செயலியை வெளியிட்டுள்ளார்.
- ❖ இலக்கு நிர்ணயிக்கப்பட்டக் குழுக்களை திறன்மேம்பாட்டுத் திட்டங்களை அணுகச் செய்வதே இதன் நோக்கமாகும்.

- PM – DAKSH என்பது பிரதான் மந்திரி தக்சதா அவுர் குஷால்டா சம்பன் ஹித்கிரஹி (Pradhan Mantri Dakshta Aur Kushalta Sampann Hitgrahi) யோஜனா என்பதாகும்.

## லட்சத்தீவில் தண்ணீர் மாளிகைகள்

- லட்சத்தீவு ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள இயற்கை அழகை நோக்கி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் மாலத்தீவு பாணியிலான தண்ணீர் மாளிகைகள் லட்சத்தீவில் விரைவில் அமைக்கப்பட உள்ளன.
- இது இந்தியாவில் இது வகையிலான முதல் திட்டமாகும்.
- இந்த மாளிகைகள் ஆனது லட்சத்தீவிலுள்ள மினிக்காய், சுஹேலி மற்றும் கத்மத் ஆகிய தீவுகளில் நிறுவப்பட உள்ளன.
- இவை பொது - தனியார் கூட்டிணைவின் கீழ் கட்டமைக்கப்பட உள்ளன.

*குறிப்பு*

- லட்சத்தீவானது அரபிக்கடலில் அமைந்துள்ள 36 தீவுகளின் ஒரு தீவுக் கூட்டமாகும்.
- லட்சத்தீவின் தலைநகர் கவரட்டி ஆகும்.
- இது கேரள உயர்நீதிமன்றத்தின் வரம்பின் கீழ் உள்ளது.
- இது மொத்தம் 36 தீவுகளைக் கொண்டுள்ளது.
- ஆனால் 'பரலி I' எனப்படும் ஒரு தீவானது கடல் அரிப்பின் காரணமாக நீரில் மூழ்கி விட்டது.

## கலப்பு கோவிட் தடுப்பு மருந்து

- ஒரு தவணை கோவிட்சீல்ட் மற்றும் அதனைத் தொடர்ந்து ஒரு தவணை கோவாக்சின் செலுத்திக் கொள்ளுதல் பாதுகாப்பானது மற்றும் சிறப்பான நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகிறது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது தெரிவிக்கப் பட்டுள்ளது.
- 'இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் கோவிட் – 19 தடுப்பு மருந்து கலப்பு குறித்த சீரற்றத் தன்மை : பன்முகத்தன்மையின் பாதுகாப்பு மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் மதிப்பீடு' (Serendipitous Covid-19 Vaccine-Mix in Uttar Pradesh, India: Safety and Immunogenicity Assessment of a Heterologous Regime') என்று தலையிடப்பட்ட ஒரு ஆய்வானது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக அறிவியலாளர் ரஜினிகாந்த் என்பவர் தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.

## விலங்கு டி.என்.ஏ ஆய்வகம்


- ரோகிணி என்னுமிடத்திலுள்ள தடய அறிவியல் ஆய்வகத்தில் டெல்லியின் முதலாவது விலங்கு டி.என்.ஏ. ஆய்வகமானது அமைக்கப்பட்டுள்ளது.
- வனவிலங்குத் தடயவியல் என்பது குற்றவியல் விசாரணைப் பிரிவின் புதிய துறை ஆகும்.
- பசுவதை, சட்டவிரோதமான விலங்கு விற்பனை மற்றும் இது போன்ற விலங்குகள் தொடர்பான பல்வேறு வழக்குகளை உரிய நேரத்தில் தீர்த்து வைப்பதற்கு டெல்லி காவல்துறையானது இந்த விலங்கு டி.என்.ஏ. ஆய்வகத்தினைப் பயன்படுத்தும்.

## 127வது அரசியலமைப்புத் திருத்த மசோதா

- ❖ மத்திய அரசானது 127வது அரசியலமைப்பு (திருத்தம்) மசோதா, 2021 என்ற ஒரு மசோதாவினை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 அன்று மக்களவையில் அறிமுகம் செய்தது.
- ❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பின மக்களை அடையாளம் காண்பது குறித்த மாநிலங்களின் அதிகாரத்தை மீட்டெடுப்பதற்காக 102வது அரசியலமைப்பு திருத்த மசோதாவின் சில விதிமுறைகளை தெளிவுபடுத்துவதற்காக வேண்டி இந்த மசோதாவானது பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

*குறிப்பு*

- ❖ இந்திய அரசியலமைப்பின் 15(4), 15(5) மற்றும் 16(4) ஆகிய சட்டப்பிரிவுகள் சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பட்டியலை அறிவிப்பதற்கும் அவர்களை அடையாளம் காண்பதற்கும் மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கின்றன.
- ❖ மத்திய அரசும் மாநில அரசுகளும் நடைமுறை ரீதியில் தனித்தனியாக இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியலைத் தயாரிக்கின்றன.




## சர்லா துக்ரால்



- ❖ இந்தியாவின் முதல் பெண் விமானியான சர்லா துக்ரால் அவர்களின் 107வது பிறந்த நாள் அன்று (2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08) கூகுள் நிறுவனம் அவருக்கு கௌரவம் வழங்கியது.

- துக்ரால் அவர்களின் பிறந்த நாளையொட்டி கூகுள் தளம் ஒரு டூடுளை (Doodle) வடிவமைத்து வெளியிட்டது.
- 1914 ஆம் ஆண்டில் பிறந்த இவர் 1000 மணி நேரம் பறந்ததற்குப் பிறகு 'A' தர உரிமத்தினைப் பெற்ற முதல் பெண் எனும் பெருமையைப் பெற்றவராவார்.

## இரயில் மதத்

- இந்திய இரயில்வே நிறுவனமானது 'இரயில் மதத்' எனப்படும் ஒரு ஒருங்கிணைந்த ஒற்றைத் தீர்வு முறையைத் தொடங்கியுள்ளது.
- பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு உதவி அமைப்புகளை இது ஒன்றாக இணைத்துள்ளது.
- அனைத்து வகையான விசாரணைகள் மற்றும் புகார் அளிப்பதற்கு இரயில்வே அமைச்சகத்தின் 139 என்ற இலவச அழைப்பு எண்ணைப் பயன்படுத்தலாம்.
- இந்த உதவி மைய வசதியானது 12 மொழிகளில் முழு நேரமும் செயல்பாட்டில் இருக்கும்.

## இந்தியாவின் 5-அம்சத் திட்டம்

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அனைத்து நாடுகளுக்குமான உயர்நிலை விவாதத்திற்குத் தலைமை ஏற்றார்.
- பின்பு, கடல்சார் பாதுகாப்பு குறித்த இந்தியாவின் தலைமைத்துவ அறிக்கையினை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை (United Nations Security Council – UNSC) ஏற்றுக் கொண்டது.
- UNSC அமைப்பின் உயர்நிலை விவாதத்திற்குத் தலைமை தாங்கிய முதல் இந்தியப் பிரதமர் எனும் பெருமையைப் பிரதமர் மோடி அவர்கள் பெற்றுள்ளார்.
- இந்த உயர்நிலை விவாதத்தின் கருத்துரு, "கடல்சார் பாதுகாப்பின் மேம்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்பு" (Enhancing Maritime Security – A Case for International Cooperation) என்பதாகும்.
- கடல்சார் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக 5 அம்சத் திட்டத்தினை பிரதமர் மோடி தாக்கல் செய்தார்.
- அவை,
    - கடல் வர்த்தகத்திற்கானத் தடைகளை அகற்றுதல்
    - கடல்சார் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்தல்,
    - இயற்கைப் பேரிடர்கள் மற்றும் கடற்கொள்ளை (அரசு சாராத நிறுவனங்கள்) ஆகியவற்றால் வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்தல்.
    - கடல்வளங்களைப் பாதுகாத்தல்
    - முறையான கடல்சார் இணைப்பினை (உள்கட்டமைப்பு) ஊக்குவித்தல் ஆகும்.

## சமையல் எண்ணெய்கள் குறித்த தேசிய திட்டம் – பாமாயில்

- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையிலான பாமாயில் உற்பத்திக்கான புதிய தேசிய முன்னெடுப்பினை பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

- இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் பின்வருமாறு
    - சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை அடைதல்
    - விலையுயர்ந்த பாமாயில் இறக்குமதிகளால் ஆதிக்கப்படுத்தப் பட்டுள்ள உள்நாட்டுச் சமையல் எண்ணெய் மீதான விலைகளை கட்டுப்படுத்துதல்.
    - 2025-26 ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டுப் பாமாயில் உற்பத்தியினை 3 மடங்காக உயர்த்தி அதனை 11 லட்சமாக உயர்த்துதல்.
- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் அந்தமான் – நிக்கோபர் தீவுகளுக்கு இத்திட்டத்தின் கீழ் சிறப்பு முக்கியத்துவம் வழங்கப்படும்.

*குறிப்பு*

- உலகிலேயே அதிகளவில் தாவர சமையல் எண்ணெய்யை உபயோகிக்கும் நாடு இந்தியாவாகும்.
- உலகிலேயே அதிகளவில் உபயோகிக்கப் படும் தாவர எண்ணெய் பாமாயில் ஆகும்.

## இந்தியாவின் முதியோர் மக்கள்தொகை

- 2021 ஆம் ஆண்டில் 138 மில்லயனாக இருக்கும் இந்திய முதியோர் மக்கள் தொகையானது (60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர்) 2031 ஆம் ஆண்டில் 194 மில்லியனாக உயரும் (41% உயர்வு) எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- தேசியப் புள்ளிவிவர அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டு இந்தியாவின் முதியோர் மக்கள்தொகை எனும் அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, கேரள மாநிலம் அதிக முதியோர் மக்கள் தொகையினைக் கொண்டுள்ளது.
- இதனையடுத்து தமிழ்நாடு மாநிலம் உள்ளது.
- இதில் இமாச்சலப் பிரதேசம் மூன்றாமிடத்தில் உள்ளது.
- இதில் பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகியவை குறைவான விகிதத்தைக் கொண்டுள்ளன.




➢ ≥ 60 aged have increased from 83.6 m in 2006 to 98.47 m in 2011

➢ Projected increase by 2016 is 118.1 m, by 2021 143.25 to 173.18 m by 2026.

Population India Chapter-2 Census of India 2010. Vital statistics SRS report.

## தீர்ப்பாயச் சீர்த்திருத்தங்கள் மசோதா, 2021

- 2021 ஆம் ஆண்டு தீர்ப்பாயச் சீர்த்திருத்தங்கள் மசோதாவானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.
- பல்வேறு சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட 9 மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களை ரத்து செய்வதற்காக இந்த மசோதாவானது இயற்றப்பட்டுள்ளது.
- இந்தத் தீர்ப்பாயங்களில் நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளும் உயர்நீதிமன்றம் (அ) வணிக நீதி மன்றத்திற்கு இடமாற்றப் படும்.
- இந்த மசோதாவானது பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரது பொறுப்பிற்காக வேண்டிய பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் வழங்குகிறது.

## உலகின் உயரமான நடமாடும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரங்கள்

- லடாக் பகுதியிலுள்ள மேம்படுத்தப்பட்ட தரையிறக்கத் தளத்தில் உலகின் உயரமான நடமாடும் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கோபுரங்களுள் ஒன்றை இந்திய விமானப் படை கட்டமைத்துள்ளது.
- இந்தக் கட்டுப்பாட்டு கோபுரங்கள் கிழக்கு லடாக் பகுதியில் இயங்கும் நிலையான இறக்கையுடைய விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் உதவும்.
- மேலும், கிழக்கு லடாக் பகுதியில் MiG-29 மற்றும் ரஃபேல் உள்ளிட்ட போர் விமானங்களையும் இந்திய விமானப் படை பணியமர்த்தி வருகிறது.

## N லைன் ரக கார்கள் – ஹூண்டாய்

- ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனமானது 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் தனது முதலாவது N லைன் ரக கார்களை அறிமுகம் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த தென்கொரிய கார் தயாரிப்பு நிறுவனத்தின் கூற்றுப்படி, N லைன் ரக கார்கள் வாடிக்கையாளர்களுக்கு மோட்டார் ஸ்போர்ட் பாணியிலான அனுபவத்தினை வழங்கும்.
- 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட i30 ரக கார் தான் முதலாவது N ரக கார் ஆகும்.
- இந்தியாவில் N லைன் ரக கார்கள் i20 மூலம் அறிமுகப்படுத்தப் படும்.

## காகோரி இரயில் நடவடிக்கை

- உத்தரப் பிரதேச அரசானது 'காகோரி சதித் திட்டம்' எனும் வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு விடுதலை இயக்க நிகழ்வினை "காகோரி இரயில் நடவடிக்கை" எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- ஆயுதங்கள் வாங்குவதற்காக 1925 ஆம் ஆண்டில் காகோரி என்னுமிடத்தில் இரயில் கொள்ளையில் ஈடுபட்டதற்காகத் தூக்கிலிடப்பட்ட புரட்சியாளர்களை கௌரவிக்கும் விதமாக இந்தப் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*குறிப்பு*

- இந்த இரயில் கொள்ளையானது லக்னோவிற்கு அருகில் காகோரி என்னுமிடத்தில் நடைபெற்றது.
- ராம் பிரசாத் பிஸ்மில் மற்றும் அஸஃபகுல்லா கான் ஆகியோர் இதற்கானத் திட்டங்களை வகுத்தவர்களாவர்.
- இவர்கள் இந்துஸ்தான் குடியரசுக் கூட்டணியைச் சேர்ந்தவர்களாவர்.
- இக்கொள்ளையில் ஈடுபட்டதற்காக ராம் பிரசாத் பிஸ்மில், அஸ்ஃபகுல்லா கான் மற்றும் ரோஷன் சிங் ஆகியோர் 1927 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று தூக்கிலிடப் பட்டனர்.





## அல் மொஹெத் அல் ஹிந்தி 2021

- இந்தியா மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அல் மொஹெத் அல் ஹிந்தி 2021 எனப்படும் தங்களது முதல் கடற்படைப் பயிற்சியினை மேற்கொள்ள உள்ளன.
- இப்பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்தியாவின் வழிகாட்டு ஏவுகணை அழிப்புக் கப்பலான ஐ.என்.எஸ் கொச்சி சவுதி அரேபியாவைச் சென்று அடைந்துள்ளது.
- இந்தியா மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளிடையே வளர்ந்துவரும் பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்புகளின் பிரதிபலிப்பை இந்த கூட்டுக் கடற்படைப் பயிற்சி வெளிப்படுத்தும்.
- அபுதாபியின் கடற்கரையருகே மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அரபு அமீரகத்தின் கடற்படையுடனான கடற்படைப் பயிற்சிக்குப் பிறகு ஐ.என்.எஸ். கொச்சி கப்பல் சவுதி அரேபியாவைச் சென்று அடைந்தது.

*ஐ.என்.எஸ். கொச்சி*

- இது கொல்கத்தா ரகத்தைச் சேர்ந்த, ரேடாரில் புலப்படாமல் மறைய வல்ல வகையில் அமைந்த இரண்டாவது வழிகாட்டு ஏவுகணை அழிப்புக் கப்பலாகும்.
- இது Project 15A எனும் குறியீட்டுப் பெயரின் கீழ், இந்தியக் கடற்படைக்காக வேண்டி கட்டமைக்கப் பட்டது.
- இக்கப்பலானது மும்பையிலுள்ள மசகான் டாக் லிமிடெட் (Mazagon Dock Limited) என்ற நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.
- இது 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டது.

## ஜிஎஸ்எல்வி - FI0 - EOS - 3




- புவி வரைபட செயற்கைக் கோளினை (GISAT-I) ஜிஎஸ்எல்வி - FI0 – EOS – 3 ராக்கெட் மூலம் சரியான சுற்றுப் பாதையில் செலுத்துவதற்கான இந்தியாவின் முயற்சி வெற்றி பெறவில்லை.
- இஸ்ரோவின் ஜிஎஸ்எல்வி – FI0 ராக்கெட்டானது ஸ்ரீஹரிக்கோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- இது EOS-3 எனும் புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளினை விண்ணில் செலுத்த இருந்தது.
- தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கிரையோஜெனிக் மேல்நிலை எரியூட்டல் நிகழ்வானது ஏற்படாமல் போகவே இது தோல்வியில் முடிந்தது.

## மலபார் கடற்படைப் பயிற்சிகள்

- குவாட் நாடுகளின் கடற்படைகள் இந்தோ பசிபிக் பகுதியிலுள்ள குவாம் கடற்கரையருகே வருடாந்திர மலபார் கடற்பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளன.
- இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை குவாட் நாடுகள் ஆகும்.
- மலபார் கடற்படைப் பயிற்சிகளின் நோக்கமானது நான்கு குவாட் நாடுகளின் கடற்படைகளுக்கிடையே இணைந்து செயல்படும் ஒரு தன்மையினை மேம்படுத்தச் செய்வதாகும்.


## குறையொலி சீர்வேக ஏவுகணை – நிர்பய்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது நிர்பய் எனப்படும் நடுத்தர வரம்புடைய குறையொலி சீர்வேக ஏவுகணையினை (medium-range subsonic cruise missile) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- இது ஒடிசாவின் கடற்கரையருகே அமைந்துள்ள சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் சோதிக்கப்பட்டது.
- நிர்பய் என்பது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது தொழில் நுட்ப சீர்வேக ஏவுகணை ஆகும்.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப சீர்வேக ஏவுகணையான நிர்பய் என்ற ஏவகணையானது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மானிக் எனும் சுழல்விசை எந்திரத்தைக் கொண்டு வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உந்துதிறன் எந்திரம் மூலம் ஓர் ஏவுகணையினை வெற்றிகரமாக சோதித்துப் பார்ப்பது இதுவே முதல்முறையாகும்.




## தேசிய வாகனக் கழிவுக் கொள்கை




- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சமீபத்தில் தேசிய வாகனக் கழிவுக் கொள்கையினை (National Vehicle Scrappage Policy) வெளியிட்டார்.

- இக்கொள்கையானது 'தன்னார்வ வாகனத் தொடர் நவீனமயமாக்கல் திட்டம்' எனவும் அழைக்கப்படுகிறது.
- இக்கொள்கையானது இந்திய வாகனங்களை நவீனமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் சாலைகளில் இயங்கத் தகுதியற்ற வாகனங்களைச் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலும் அறிவியல் ரீதியிலும் அகற்றுவதற்கும் வேண்டி இக்கொள்கை வழிவகை செய்கிறது.
- இக்கொள்கையானது மாசற்ற, நெரிசல் இல்லாத மற்றும் வசதியான போக்குவரத்தினை அடைதல் என்ற 21 ஆம் நூற்றாண்டுக்கான இந்தியாவின் ஒரு குறிக்கோளுடன் ஒத்துப் போகிறது.
- இக்கொள்கையின்படி, வாகனங்கள் இறுதியாக அகற்றப் படுவதற்கு முன்பு, அங்கீகரிக்கப் பட்ட மற்றும் தானியங்கு மையங்கள் மூலம் அறிவியல் ரீதியாக சோதிக்கப் படும்.

## பஹ்ரைன் நாட்டிற்கு ஆப்பிள்கள் ஏற்றுமதி – APEDA





- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (Agricultural and Processed Food Products, Export Development Authority – APEDA) இமாச்சலப் பிரதேச தோட்டக்கலை உற்பத்திப் பொருட்களின் சந்தைப் படுத்துதல் மற்றும் பதப்படுத்துதல் கழக நிறுவனத்துடன் இணைந்து 5 தனித்துவ மிக்க ஆப்பிள் வகைகள் அடங்கிய முதல் சரக்குப் பெட்டகத்தினை பஹ்ரைன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.
- புதிய நாடுகளுக்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்காக வேண்டி இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- டார்க் பரோன் காலா, ராயல் டெலீசியஸ், ஸ்கார்லெட் ஸ்பர், ரெட் வேலாக்ஸ் மற்றும் கோல்டன் டெலிசியஸ் உள்ளிட்ட 5 ஆப்பிள் வகைகள் பஹ்ரைன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.
- முதல் சரக்குப் பெட்டகமானது APEDA நிறுவனத்தில் பதிவு செய்துள்ள DM எண்டர்பிரைசெஸ் எனும் நிறுவனத்தினால் ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்த ஆப்பிள்களானது, முன்னணி விற்பனையாளரான அல் ஜசிரா குழுமத்தினால் நடத்தப் படும் ஆப்பிள் விளம்பர நிகழ்ச்சியில் காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- ஆப்பிள் விளம்பர நிகழ்ச்சியானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நடைபெறும் 75வது இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தொடங்குகிறது.


## யானைகள் மற்றும் புலிகளுக்கான பொதுக் கணக்கெடுப்பு

- 2022 ஆம் ஆண்டின் அகில இந்திய யானைகள் மற்றும் புலிகள் கணக்கெடுப்பில் ஒரு புதிய கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டு நெறிமுறையைப் பின்பற்றுவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.
- புதிய நெறிமுறைகளின்படி, யானைகள் மற்றும் புலிகளுக்காக வேண்டி ஒரு பொதுக் கணக்கெடுப்பு முறையினை இந்தியா மேற்கொள்ளும்.
- தற்போது, புலிகள் கணக்கெடுப்பானது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறையும், யானைகள் கணக்கெடுப்பானது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மேற்கொள்ளப்படுகின்றன.
- சமீபத்தில் வெளியான 2018-19 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 2,997 புலிகள் உள்ளன.
- சமீபத்தில் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 29,964 யானைகள் உள்ளன.



## வைப்புத் தொகை காப்பீடு மற்றும் கடன் உத்திரவாதக் கழகம் (திருத்தம்) மசோதா, 2021

- இந்த மசோதாவானது சமீபத்தில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது 1961 ஆம் ஆண்டின் வைப்புத் தொகை காப்பீடு மற்றும் கடன் உத்திரவாதக் கழகச் சட்டத்தினைத் திருத்தி அமைக்க உள்ளது.
- ஒரு வைப்புத் தொகையாளருக்கு மீது அவர்களின் வங்கி வைப்புத் தொகையை அணுகுவதற்குத் தடை விதிக்கப் பட்டிருந்தால், அவர்களின் காப்பீட்டுத் தொகையை அணுகுவதற்கு கால வரம்பிற்கு உட்பட்ட அனுமதியினைப் பெற்றிட இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- இந்தக் காப்பீட்டு வைப்புத் தொகையை இடைக்கால அடிப்படையில் வைப்புத் தொகையாளர்களுக்குச் செலுத்துவது அக்கழகத்தின் பொறுப்பு என இந்த மசோதா கூறுகிறது.
- இக்கழகம் இந்த வைப்புத் தொகையை அதற்கான தேவை எழுப்பப் பெற்ற 90 நாட்களுக்குள் வைப்புத் தொகையாளர்களுக்கு வழங்கிட வேண்டுமென இம்மசோதா வரையறுத்துள்ளது.
- இந்த மசோதா குறித்து உரையாற்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் காப்பீட்டு வரம்பானது ஒரு லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.





## Fit India Freedom Run 2.0

- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர், 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று Fit India Freedom 2.0 எனும் தேசிய அளவிலான நிகழ்வைத் தொடங்கி வைத்தார்.
- ஆசாதி கா அம்ருத் மகோத்சவ் என்ற கொண்டாட்டத்திற்காக இது தொடங்கப்பட்டது.
- இந்நிகழ்ச்சியானது 75 தனித்துவமிக்க இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்நிகழ்வானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 02 அன்று நிறைவடைகிறது.
- இக்காலக் கட்டத்தின் போது ஒவ்வொரு மாவட்டம் மற்றும் ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த Freedom run என்ற இயக்கத்தில் பங்கேற்பர்.

- இந்நிகழ்வானது புதுடெல்லியிலுள்ள மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்திலிருந்து கொடியசைத்துத் தொடங்கப்பட்டது.
- இந்தியர்களை ஆரோக்கியமானவர்களாக மாற்ற 'ஃபிட்னஸ் கி டோஸ் ஆதா கந்தா ரோஸ்' (Fitness ki dose aadha ghanta roz) எனும் ஒரு முழக்கத்தோடு ஒவ்வொரு இல்லத்தையும் சென்றடையும் வண்ணம் இந்திய அரசானது இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- Fit India Freedom Run நிகழ்வின் முதல் பதிப்பானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தொடங்கி அக்டோபர் 02 அன்று முடிவடைந்தது.

## வருடாந்திர தொழிலாளர் சக்தி ஆய்வு (2019-2020)

- இது தேசியப் புள்ளியியல் அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் கணினியால் எடுக்கப் பட்ட இந்தியாவின் முதன் முதலான ஒரு ஆய்வாகும்.
- இதில் 2019-20 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர தொழிலாளர் சக்தி ஆய்வின் முக்கியத் தகவல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.
- 2017-18 மற்றும் 2019-20 ஆகிய காலக்கட்டத்தின் இடையில் வேலைவாய்ப்பின்மை வீதத்தில் ஏற்பட்ட சரிவு மற்றும் தொழிலாளர் சக்தி பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட உயர்வு ஆகியவற்றின் நம்பகத் தன்மையைக் காட்டும் முழு நீளத் தகவல்களை இந்த ஆய்வறிக்கை வழங்குகிறது.
- மேலும் வழக்கமான வேலைவாய்ப்பின்மை வீதத்தில் ஏற்பட்ட சரிவானது 2017-18 ஆம் ஆண்டில் 6.1% ஆகவும், 2018-19 ஆம் ஆண்டில் 5.8% ஆகவும் மேலும் 2019-20 ஆம் ஆண்டில் 4.8% ஆகவும் இருந்ததாக இந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
- 36.9% ஆக இருந்த நாட்டின் தொழிலாளர் சக்தியானது மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் 37.5% ஆகவும், பின்பு 2019-20 ஆம் ஆண்டில் அது 40.1% ஆகவும் உயர்ந்துள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.
- பொருளாதாரத்தின் மெய்வளர்ச்சி விகிதமானது 7 சதவீதத்திலிருந்து 4.2% ஆக சரிந்த காலக்கட்டத்தின் மத்தியில் இது போன்ற நேர்மறையான போக்குகள் ஏற்பட்டுள்ளன.
- இதன்மூலம், கடந்த காலங்களில் வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி எனும் முரண்பாட்டு நிலையிலிருந்து 'வளர்ச்சியற்ற வேலைவாய்ப்பு' எனும் முழு வட்டத்திற்குள் இந்தியா நுழைந்துள்ளதாகத் தெரிகிறது.



## மருத்துவர் மற்றும் மக்கள்தொகை விகிதம்

- 2024 ஆம் ஆண்டுக்குள் ஆயிரம் மக்களுக்கு ஒரு மருத்துவர் எனும் விகிதத்தை அடைதல் என்ற உலக சுகாதார அமைப்பின் இலக்கை அடைவதில் இந்தியா நன்றாக செயலாற்றி வருகிறது.
- மேலும் இந்தியாவில் 11 லட்சமாக இருந்த மருத்துவமனைப் படுக்கைகளின் எண்ணிக்கையானது 22 லட்சமாக உயர்த்தப்பட உள்ளது.
- இந்திய நாடானது கடந்த 75 ஆண்டுகளில், சுகாதாரத் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
- சுதந்திரம் பெற்ற போது 28 வயதாக இருந்த சராசரி வாழ்நாள் ஆயுட்காலமானது தற்போது 70 வயதினை நெருங்கியுள்ளது.

## செயற்கைக்கோள் தொலைபேசி வசதி

- அசாம் மாநிலத்திலுள்ள காசிரங்கா தேசியப் பூங்காவானது செயற்கைக்கோள் தொலைபேசி இணைப்பு வசதியினைப் பெற்ற முதல் இந்திய தேசியப் பூங்காவாக மாறியுள்ளது.
- வேட்டையாடுதலைத் தடுத்தல் மற்றும் ஒருங்கிணைந்தச் செயல்பாட்டினை உறுதி செய்தல் ஆகியவற்றில் உதவி வழங்குவதற்கான இந்த நடவடிக்கையானது நாட்டிலேயே முதல் வகையானதாகும்.
- பி.எஸ்.என்.எல் நிறுவனம் ஆனது இதற்கான சேவை வழங்குநர் அமைப்பாக செயல்படும் அதே நேரத்தில், இதன் மாதாந்திரச் செலவினங்களுக்கு அப்பூங்காவின் அதிகாரிகள் பொறுப்பேற்பர்.

## முதியோர்களுக்கான வாழ்க்கைத் தரக் குறியீடு 2021

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசக சபையின் தலைவர் டாக்டர். பிபேக் தேப்ராய் 2021 ஆம் ஆண்டு முதியோர்களுக்கான வாழ்க்கைத் தரக் குறியீட்டினை வெளியிட்டார்.
- இந்தக் குறியீடானது இந்தியாவில் முதியோர்களின் வாழ்க்கைத் தரம் பற்றி மதிப்பிடுகிறது.
- இது போட்டித்திறன் கல்வி நிறுவனத்தினால் (Institute for Competitiveness) உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்திய மாநிலங்களின் மக்களுடைய முதுமை எய்தலின் பிராந்திய ரீதியிலான பாங்கினை அடையாளம் கண்டு, இந்தியாவினுடைய முதியோர் மக்கள்தொகையின் ஒட்டு மொத்த நல்வாழ்வையும் மதிப்பீடு செய்கிறது.
- இக்குறியீடானது, நிதியியல் ரீதியிலான நல்வாழ்வு, சமூக நல்வாழ்வு, சுகாதார அமைப்பு மற்றும் வருமான இழப்பின்மை நிலை போன்ற நான்கு முக்கிய களங்களிலுள்ள 45 வெவ்வேறு குறிகாட்டிகளை மதிப்பீடு செய்கிறது.
- இந்த 4 களங்களில் சுகாதார அமைப்புக் களமானது (domain of Health System) 66.97 என்ற அளவில் அதிகபட்ச தேசிய சராசரியையும், அதனைத் தொடர்ந்து சமூக நல்வாழ்வு (62.34), நிதியியல் ரீதியிலான நல்வாழ்வு (44.7) மற்றும் வருமானம் இழப்பின்மை நிலை (33.03) போன்ற குறியீடுகளும் உயர்வைக் கண்டுள்ளன.

- இந்தக் குறியீடானது அதிக முதியோரைக் கொண்ட மாநிலங்கள், ஒப்பீட்டளவில் முதியோரைக் கொண்ட மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் ஆகிய 4 பிரிவுகளில் முதியோர்களுக்கான வாழ்க்கைத் தரக் குறியீட்டை வழங்குகிறது.
- அதிக முதியோரைக் கொண்ட மாநிலங்கள் பிரிவில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ஒப்பீட்டளவிலான முதியோரைக் கொண்ட மாநிலங்கள் பிரிவில் (Relatively Aged States) இமாச்சலப் பிரதேசம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அதிக முதியோரைக் கொண்ட மாநிலங்கள் என்ற பிரிவானது 5 மில்லியனுக்கும் மேற்பட்ட முதியோரைக் கொண்டுள்ள மாநிலங்களாகும்.
- ஒப்பீட்டளவில் முதியோரைக் கொண்ட மாநிலங்கள் பிரிவானது 5 மில்லியனுக்கும் குறைவான முதியோர்களைக் கொண்டுள்ள மாநிலங்களாகும்.
- சண்டிகர் மற்றும் மிசோரம் ஆகியவை முறையே ஒன்றியப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிங்கள் ஆகிய பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளன.
- ஒன்றியப் பிரதேசப் பிரிவில், ஜம்மு & காஷ்மீர் குறைவான மதிப்பைப் பெற்றுள்ளது.
- வடகிழக்குமாநிலங்கள் பிரிவில், அருணாச்சலப்பிரதேச மாநிலமானது குறைவான மதிப்பைப் பெற்றுள்ளது.
- அதிக முதியோரைக் கொண்ட மாநிலங்கள் பிரிவில் தெலுங்கானா மாநிலமானது குறைவான மதிப்பைப் பெற்றுள்ளது.
- ஒப்பீட்டளவில் முதியோரைக் கொண்டுள்ள மாநிலங்கள் பிரிவில் குஜராத் மாநிலமானது கடைசி இடத்தைப் பெற்றுள்ளது.

## ‘Honour First’

- இந்தியக் கடற்படையானது உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி வழங்கீட்டு நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது ‘Honour First’ எனும் வசதியைத் தொடங்கிய முதல் வங்கியாகும்.
- ‘Honour First’ என்பது இந்தியக் கடற்படையின் ஊழியர்கள் மற்றும் மூத்த படை வீரர்களுக்கு வங்கிச் சேவையை வழங்குவதற்கான ஒரு முதன்மையான காப்பீட்டு வங்கி வசதியாகும்.

## தேசப் பிரிவினையின் நினைவு தினம்

- ஆகஸ்ட் 14 ஆம் தேதியானது தேசப் பிரிவினை நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்துள்ளார்.
- இது ‘விபாஜன் விபிசிகா ஸ்மிருதி திவாஸ்’ (Vibhajan Vibhishika Smriti Diwas) என்றும் அழைக்கப் படும்.
- 1947 ஆம் ஆண்டில் நாட்டின் பிரிவினையின் போது நிகழ்ந்த மக்களின் போராட்டங்கள் மற்றும் தியாகங்களின் நினைவாக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.




## மரபணு மாற்றப்பட்ட சோயாபீன்

- பிளவுப்படுத்தப்பட்ட மரபணு மாற்றப்பட்ட சோயாபீன்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இது கோழி தீவனத்திற்கான ஒரு மூலப்பொருளாகும்.
- மரபணு மாற்றப்பட்ட ஒரு பயிர் அல்லது தாவரம் என்பது நவீன உயிரித் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டின் மூலம் பெறப்பட்ட மரபணுப் பொருட்களின் ஒரு புதிய கலவையாகும்.

*குறிப்பு*

- மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழுவானது மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் வணிக ரீதியிலான வெளியீட்டினை அனுமதிப்பதற்கான ஒரு உச்சநிலை அமைப்பு ஆகும்.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையமானது இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பயிர்களை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற ஒரு ஆணையமாகும்.

## ராம்சார் பட்டியலில் புதிய ஈரநிலங்கள்

- இந்தியாவிலுள்ள மேலும் 4 ஈரநிலங்கள் ராம்சார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இவை ராம்சார் உடன்படிக்கையின் படி உலக முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்களாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- அந்த 4 இடங்கள்,
    - தோல் – குஜராத்
    - வாத்வானா – குஜராத்
    - சுல்தான்பூர் – ஹரியானா மற்றும்
    - பிந்தாவாஸ் – ஹரியானா
- தற்போது இந்தியாவிலுள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கையானது 46 ஆக உயர்ந்துள்ளது.

## IBSA நாடுகளின் சுற்றுலா அமைச்சர்கள் மாநாடு

- இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் சுற்றுலாத் துறை அமைச்சர்களின் சந்திப்பினை இந்தியா காணொலி வாயிலாக நடத்தியது.
- இந்திய சுற்றுலாத் துறையின் அமைச்சர் G. கிசன் ரெட்டி இச்சந்திப்பிற்குத் தலைமை ஏற்றார்.
- உறுப்பினர் நாடுகளிடையே சுற்றுலா சார்ந்த ஒத்துழைப்பினை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு தளமாக இது அமையும்.

## நாசி வழித் தடுப்பு மருந்து – BBV154




- கொரோனா வைரசுக்கு எதிரான இந்தியாவின் முதலாவது நாசி வழித் தடுப்பு மருந்தானது உயிரித் தொழில்நுட்பத் துறையின் 2 ஆம் மற்றும் 3 ஆம் கட்ட மருத்துவப் பரிசோதனைக்கு வேண்டிய அனுமதியினைப் பெற்றுள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தானது பாரத் பயோடெக் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது ஆகும்.
- இந்தத் தடுப்பு மருந்தானது இந்தியாவில் மனித மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப் படும் இது போன்ற முதல் வகை கோவிட் – 19 தடுப்பு மருந்தாகும்.

*குறிப்பு*

- பாரத் பயோடெக் நிறுவனமானது BBV154 எனப்படும் முதலாவது நாசி வழித் தடுப்பு மருந்தினை உருவாக்கியுள்ளது.
- இது ஒரு புதிய அடினோவைரஸ் நோய்க் கடத்தி ஆகும்.
- இந்த மருந்து கோவிட் – 19 தொற்றிற்கு எதிராக வேண்டி நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு உள்நாசி தடுப்பு மருந்தாகும்.

## வந்தே பாரத் இரயில்கள்

- இன்னும் 75 வாரங்களில் நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகள் 75 வந்தே பாரத் இரயில்கள் மூலம் இணைக்கப் படும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்தார்.
- நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற நிகழ்வின் நினைவாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

- ‘ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்’ என்பது பிரித்தானிய ஆட்சியிடமிருந்து விடுதலைப் பெற்ற 75 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையிலான மத்திய அரசின் ஒரு முன்னெடுப்பாகும்.
- வந்தே பாரத் என்பது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு நடுத்தர அதிவேக இரயிலாகும்.

## டீசல் – நேரடி விற்பனை

- பாரத் பெட்ரோலியக் கழக நிறுவனமானது அதிவேக டீசலினை வீட்டுக்கு வீடு சென்று விநியோகம் செய்யும் வசதியைத் தொடங்கியுள்ளது.

***பாரத் பெட்ரோலியக் கழகம்***

- இது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் இயங்கும், இந்திய அரசிற்குச் சொந்தமான ஒரு எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் ஆகும்.
- இதன் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.
- இந்த நிறுவனமானது கொச்சின் மற்றும் மும்பை ஆகிய இடங்களிலுள்ள மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குகிறது.
- இது இந்தியாவின் 2வது மிகப்பெரிய துணைநிலை எண்ணெய் நிறுவனமாகக் கருதப் படுகிறது.


## மாணவிகளுக்கான சைனிக் பள்ளிகள்

- இந்தியா முழுவதுமுள்ள சைனிக் பள்ளிகளில் இனி மாணவிகளுக்கும் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்தார்.
- 2.5 வருடங்களுக்கு முன்பு மிசோரத்திலுள்ள சைனிக் பள்ளிகளில் பெண்களுக்கு முதன்முதலில் அனுமதி வழங்கப்பட்டது.
- சைனிக் பள்ளிகள் என்பது சைனிக் பள்ளிகள் சங்கம் என்ற அரசின் ஓர் அமைப்பின் மூலம் நிறுவப்பட்டு மேலாண்மை செய்யப்படும் ஒரு பள்ளி ஆகும்.
- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இது 1961 ஆம் ஆண்டில் அப்போதையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் V.K. கிருஷ்ண மேனன் அவர்களால் திட்டமிடப்பட்டு நிறுவப்பட்டது.
- தற்போது இந்தியாவில் 33 சைனிக் பள்ளிகள் உள்ளன.



## ஆற்றலில் தற்சார்பு – 2047

- 2047 ஆம் ஆண்டுக்குள் 'ஆற்றலில் தற்சார்பு அடைதல்' என்ற ஒரு இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- இது இந்திய சுதந்திரத்தின் நூற்றாண்டு நிறைவு ஆண்டினைக் குறிக்கின்றது (2047).
- 2047 ஆம் ஆண்டுக்குள் ஆற்றல் உற்பத்தியில் தற்சார்பு அடைந்த இந்தியாவினை உருவாக்குவதற்கு வேண்டி பெட்ரோலியத்திற்குப் பதிலாக மற்ற வகையிலான ஆற்றலைப் பிரயோகிக்கச் செய்வதற்கான 'சுழற்சிப் பொருளாதாரத் திட்டம்' (Mission Circular Economy) என்ற ஒரு திட்டத்தையும் பிரதமர் அறிவித்துள்ளார்.
- ஆற்றலில் தற்சார்பு அடைவதற்கான செயல்திட்டங்கள் பின்வருமாறு
  - பொருளாதாரத்தில் இயற்கை எரிவாயுவின் பயன்பாட்டினை அதிகரித்தல்
  - அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு வலையமைப்பு மற்றும் குழாய்வழி இயற்கை எரிவாயு வலையமைப்பு போன்றவற்றை இந்தியா முழுவதும் அமைத்தல் மற்றும்
  - பெட்ரோலில் 20% எத்தனால் கலவை மற்றும் மின்வாகனப் போக்குவரத்து.




## சன்சிரைய்யா

- நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைச் சந்தைப்படுத்தச் செய்வதற்காக வேண்டி 'சன்சிரைய்யா' (SonChiraiya) முத்திரை மற்றும் சின்னத்தினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது வெளியிட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது நகர்ப்புற சுய உதவிக் குழுப் பெண்களின் தயாரிப்புப் பொருட்களுக்கான அதிகரித்துள்ள தெரிவு நிலை (increased visibility) மற்றும் ஒரு உலகளாவிய அணுகலை நோக்கிய சரியான பாதைக்கான ஒரு படியாக அமையும்.

## பல்வேறு திட்டங்களின் கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கீடு

- 2024 ஆம் ஆண்டுக்குள் பல்வேறு திட்டங்களின் கீழ் ஏழை மக்களுக்கு செறிவூட்டப் பட்ட அரிசியினை வழங்க உள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- ஏழைப் பெண்கள் மற்றும் ஏழைக் குழந்தைகளின் மத்தியில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் அவசியமான ஊட்டச்சத்துகள் இல்லாதிருத்தல் போன்றவை அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் வெவ்வேறு திட்டங்களின் கீழ், அரசானது அரிசியினை விநியோகிக்க உள்ளது.




## TAPAS

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது உற்பத்தித் திறன் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி (TAPAS – Training for Augmenting Productivity and Serices) எனப்படும் இணையத் தளம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது சமூகப் பாதுகாப்பு சார்ந்த படமாக்கப்பட்ட விரிவுரைகள் / பாடங்கள் மற்றும் இணையப் புத்தகங்கள் போன்றவற்றை வழங்குவதற்காக தொடங்கப்பட்டுள்ளது.
- TAPAS என்பது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.

## 'IndiGau'

- டாக்டர் ஜிதேந்திர சிங் 'இன்டிகாவ்' (Indigau) எனப்படும் இந்தியாவின் முதலாவது கால்நடை மரபணு சிப் (சில்லு) ஒன்றினை வெளியிட்டார்.
- கிர், கன்க்ரெஜ், சாஹிவால், ஒங்கோல் போன்ற உள்நாட்டுப் பூர்வீகக் கால்நடை இனங்களைப் பாதுகாப்பதற்காக இது வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த சில்லானது (chip) உயிரித் தொழில்நுட்பத் துறையின் கீழான, ஹைதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரித் தொழில்நுட்ப நிறுவனத்தின் அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

- இது சிறந்த பண்புகளைக் கொண்ட நமது நாட்டின் கால்நடை இனங்களைப் பாதுகாத்தல் எனும் இலக்கை அடைவதிலும் 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதலில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளிலும் உதவும்.

## வடிவமைப்பு வள மையம் – சென்னை

- மத்திய ஜவுளித்துறை அமைச்சகமானது சென்னையில் உள்ள நெசவாளர் சேவை மையத்தில் ஒரு வடிவமைப்பு வள மையத்தை அமைத்து வருகிறது.
- கைத்தறித் துறையில் சிறப்பான வடிவமைப்பு அம்சத்தினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் தங்களது மாதிரிகள் / தயாரிப்புப் பொருட்களை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்த வடிவமைப்புக் களஞ்சியங்களை அணுகச் செய்வதும் இதன் நோக்கமாகும்.
- மத்திய ஜவுளித்துறை அமைச்சகமானது இதற்காக தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.
- இதே போன்ற வள மையங்கள் ஏழு மையங்களில் முன்பே அமைக்கப் பட்டுள்ளன.
- அவற்றுள் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மையமானது சமீபத்தில் திறந்து வைக்கப் பட்டது.

## நீரியல் வானிலைப் பேரிடர்கள் பற்றிய தரவுகள்

- நீரியல் வானிலைப் பேரிடர்களால் கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவில் கிட்டத்தட்ட 6,800 பேர்கள் உயிரிழந்துள்ளனர்.
- நீரியல் வானிலைப் பேரிடர்களுள் திடீர் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு மற்றும் புயல் ஆகியவை அடங்கும்.
- அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மேற்கு வங்காளத்தில் (964 உயிரிழப்புகள்) அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இது நீரியல் வானிலைப் பேரிடர்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 14% ஆகும்.
- மேற்கு வங்காளம் தவிர மத்தியப் பிரதேசத்தில் 833 உயிரிழப்புகளும் அதனைத் தொடர்ந்து கேரளாவில் 708 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

- அந்த இரு மாநிலங்களிலும் ஏற்பட்ட அதிக அளவிலான உயிரிழப்புகள் வெள்ளத்தினால் ஏற்பட்டவையாகும்.
- தமிழ்நாட்டில் 201 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

## இந்துஸ்தான் – 228

- இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனமானது 'இந்துஸ்தான் – 228' எனும் பயணிகள் விமானத்தினை உருவாக்குவதற்காக அதன் தரைகளச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- UDAN எனும் ஒரு பிராந்திய இணைப்புத் திட்டத்தினை ஆதரிக்கும் நோக்கோடு இந்துஸ்தான்–228 விமானமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த விமானமானது மாநிலங்களுக்கு உள்ளே மற்றும் மாநிலங்களுக்கு இடையே என்ற வகையிலான விமானப் போக்குவரத்திற்காக விமான இயக்குநர் நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளால் பயன்படுத்தப் படும்.
- இந்துஸ்தான் நிறுவனமானது அரசிற்குச் சொந்தமான ஒரு விமானம் மற்றும் பாதுகாப்புசார் நிறுவனமாகும்.
- இதன் தலைமையகம் பெங்களூருவில் அமைந்துள்ளது.




## பாரத் இணையவசதித் திட்டம்

- 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலுள்ள 6 லட்சம் கிராமங்களுக்கு பாரத் இணைய வசதித் திட்டத்தின் கீழ் இணைய இணைப்பு வசதி கிடைக்கும்.
- ஒவ்வொரு வீட்டிற்கும் இணைய வசதி வழங்குதல் மற்றும் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மலிவு விலையிலான சாதனத்தின் உதவியுடன் இணைய வசதியை வழங்குதல் என்ற தனது குறிக்கோளை நோக்கி அரசு செயல்பட்டு வருகிறது.

### *பாரத் இணைய முன்னெடுப்பு*

- இது பாரத் பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் என்ற ஒரு நிறுவனத்தினால் அமல்படுத்தப்படும் ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- இந்தச் சிறப்புப் பயன்பாட்டு நிறுவனமானது 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், இந்திய அரசினால் நிறுவப்பட்டது.




## விருக்சரோபன் அபியான் – 2021

- ❖ நிலக்கரி அமைச்சகத்தின் விருக்சரோபன் அபியான் 2021 திட்டமானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ நிலக்கரித் துறையில் ஆசாதி கா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டத்தின் கீழ் இது ஒரு முக்கிய நிகழ்வாக நடைபெற உள்ளது.
- ❖ சுரங்க நடவடிக்கைகளில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை இது கொண்டு வரும்.
- ❖ நிலக்கரி அமைச்சகத்தின் நிலக்கரிப் பொதுத் துறை நிறுவனங்களானது 'Go Greening' எனும் ஒரு இயக்கத்தினை இந்த ஆண்டில் தொடங்க உள்ளன.
- ❖ பல பகுதிகள் உயிரி-மீட்பு அல்லது மரம் நடுதல் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
- ❖ விருக்சரோபன் அபியான் 2021 திட்டத்தைத் தொங்குவது 'Go Greening' இயக்கத்திற்கு சரியான உந்துதலை வழங்கும்.
- ❖ இத்திட்டமானது மத்திய நிலக்கரி, சுரங்கங்கள் மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோசி என்பவரால் தொடங்கி வைக்கப்படும்.

## NDA தேர்வில் பெண்களின் பங்கேற்பு

- ❖ தேசிய பாதுகாப்பு பயிற்சி நிறுவனத் தேர்வில் பெண்களும் பங்கேற்பதற்கு வேண்டி உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
- ❖ NDA (National Defence Academy) நுழைவுத் தேர்வில் பெண்களும் பங்கேற்பதற்கு அனுமதி வேண்டி குஷ் கலரா என்பவர் மனு தாக்கல் செய்தார்.
- ❖ இந்த மனுவானது அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 14, 15, 16 மற்றும் 19 ஆகியவற்றின் மீதான விதிமீறல்களை எடுத்துக்காட்டி வலியுறுத்தியுள்ளது.

***NDA***

- ❖ NDA என்பது இந்திய ஆயுதப் படைகளின் கூட்டுப் பாதுகாப்பு (இராணுவ) சேவைப் பயிற்சி நிறுவனமாகும்.
- ❖ இது மகாராஷ்டிராவின் புனே நகரில் கதக்வஸ்லா (Khadakwasla) என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

- இது உலகின் முதலாவது முத்தரப்புச் சேவைகளுக்கான பயிற்சி நிறுவனமாகும்.




## மாணாக்கர் தொழில்முனைவுத் திட்டம் 3.0

- அடல் மேம்பாட்டு ஆய்வகங்களின் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான மாணாக்கர் தொழில்முனைவுத் திட்டத்தின் 3வது பதிப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டமானது லா பவுண்டேசன் டசால்ட் சிஸ்டெம்ஸ் என்ற அமைப்புடன் இணைந்து நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்க திட்டத்தினால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் 3வது பதிப்பின் கருத்துரு, "Made in 3D – Seed The Future Entrepreneurs Program" என்பதாகும்.
- இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொருப் பள்ளியிலிருந்தும் 6 மாணாக்கர்கள் மற்றும் ஓர் ஆசிரியர் அடங்கிய குழுவிற்கு, அவர்களின் சொந்தப் புத்தாக்க நிறுவனம் மற்றும் அதன் வடிவமைப்பை உருவாக்குவதற்கான ஆதார நிதியானது (Seed Funding) வழங்கப் படும்.

## கொங்கன் பயிற்சி 2021

- இந்தியக் கடற்படை மற்றும் பிரிட்டனின் கடற்படைக்கு இடையேயான வருடாந்திர இருதரப்புப் பயிற்சியான 'கொங்கன் பயிற்சி' என்ற ஒரு பயிற்சியினை மேற் கொள்வதற்காக இந்தியக் கடற்படைக் கப்பலான தாபர் என்ற கப்பல் இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ்மவுத் (Portsmouth) துறைமுகத்தினைச் சென்றடைந்தது.
- இந்த இருதரப்பு கடற்படைப் பயிற்சியானது 2004 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான இணை செயல்பாடு, இணைதிறன் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சியானது மேற்கொள்ளப் படுகிறது.
- பிரிட்டன் கடற்படையின் சார்பாக அதன் HMS வெஸ்ட் மின்ஸ்டர் என்ற கப்பலானது பங்கேற்கின்றது.




## அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி சவால் – 2021

- ❖ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், 2021 ஆம் ஆண்டு அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி என்ற சவாலினைத் தொடங்கி வைத்தார்.
- ❖ பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிப்பு ஆகியவற்றை எளிதாக்கும் வகையில், பெண் தொழில்முனைவோர்களால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத் தீர்வுகளை ஊக்குவிப்பதற்காக இது தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ மகளிர்களுக்கு அவர்களது முழுத் திறனையும் அடைவதற்கான அதிகாரத்தினை வழங்குவதே இதன் நோக்கமாகும்.




## இருதரப்பு கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் வியட்நாம்

- ❖ இந்தியக் கடற்படை மற்றும் வியட்நாம் நாட்டினுடைய மக்களின் கடற்படை ஆகியவை இணைந்து தென் சீனக் கடலில் ஓர் இருதரப்புக் கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- ❖ இரு கடற்படைகளுக்கும் இடையேயான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சியானது மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ இந்தியா சார்பாக INS ரன்விஜய் மற்றும் INS கோரா ஆகிய கப்பல்கள் இப்பயிற்சியில் ஈடுபடுகின்றன.
- ❖ வியட்நாட் சார்பாக VPNS லி தாய் தோ (HQ – D12) எனும் போர்க்கப்பலானது இப்பயிற்சியில் ஈடுபடுகிறது.

- இந்த இருதரப்புப் பயிற்சியானது இரு கடற்படைகளுக்கும் இடையேயான வலுவான பிணைப்பினை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டதும், இந்தியா – வியட்நாம் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்குமான மற்றொரு படியாகவும் கருதப்படுகிறது.
- இந்தியக் கடற்படைக் கப்பல்கள் இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தினை வியட்நாமில் கொண்டாடியது, இந்தப் பயிற்சியின் ஒரு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

## சமையல் எண்ணெய்களுக்கான தேசிய திட்டம்




- சமையல் எண்ணெய்களுக்கான ஒரு தேசிய திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- அடுத்த 5 ஆண்டுகளில் உள்நாட்டிலேயே பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த ஒப்புதலானது வழங்கப்பட்டுள்ளது.
- இறக்குமதி மீது இந்தியா சார்ந்திருக்கும் சூழ்நிலையைத் தளர்த்த இது உதவும்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆகஸ்ட் 15 அன்று இந்தப் புதிய மத்திய அரசுத் திட்டத்தினை அறிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.

*இத்திட்டம் குறித்த தகவல்கள்*

- சமையல் எண்ணெய்களுக்கான தேசிய திட்டமானது மத்திய அரசின் நிதி உதவியினைப் பெறும் ஒரு திட்டமாகும்.
- இத்திட்டமானது 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் – பாமாயில் திட்டத்தினை' உள்ளடக்கியதாக இருக்கும்.
- இது ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் வரிசையில் தொடங்கப்பட்டதாகும்.
- சமையல் எண்ணெய்களுக்கான தேசிய திட்டமானது 2025 – 26 ஆம் ஆண்டுக்குள் கூடுதலாக 6.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பாமாயில் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கோடு தொடங்கப்பட்டது.
- இது 10 லட்சம் ஹெக்டேர் எனும் இலக்கை அடைய முனைகிறது.

## UNITE AWARE

- ஐ.நா.வின் அமைதிகாப்புப் படையினரை பாதுகாப்பதில் உதவுவதற்காக "UNITE AWARE" எனும் தொழில்நுட்பத் தளத்தினைத் தொடங்குவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் S.ஜெய்சங்கர் அறிவித்தார்.
- நியூயார்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற "தொழில்நுட்பம் மற்றும் அமைதிகாப்பு" என்பது குறித்த ஐ.நா. பாதுகாப்பு அவையின் ஒரு உயர்நிலை விவாதத்திற்கு தலைமையேற்கையில் அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.
- UNITE AWARE என்பது, ஐ,நா.வின் அமைதிகாப்பு வீரர்களுக்கு நிலப்பரப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக வேண்டி இந்தியாவினால் உருவாக்கப்பட்ட கைபேசி தொழில்நுட்பத் தளமாகும்.
- அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.
- இது ஐ.நா.வின் அமைதிகாப்பு நடவடிக்கைகள் துறை மற்றும் நடவடிக்கை சார்ந்த ஆதரவுத் துறை ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

## உபார்தே சிதாரே நிதி

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உயர் லட்சியமிக்க உபார்தே சிதாரே நிதி எனும் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்காக வேண்டி இது தொடங்கப்பட உள்ளது.
- உபார்தே சிதாரே நிதியானது EXIM வங்கி மற்றும் SIDBI ஆகியவற்றால் இணைந்து அமைக்கப் பட்டதாகும்.
- இது லக்னோவில் தொடங்கப்பட உள்ளது.
- மேலும் அவர் 'உத்தரப் பிரதேசத்திலிந்து ஏற்றுமதிப் போக்குகள், வாய்ப்புகள் மற்றும் கொள்கையின் கண்ணோட்டங்கள்' என்ற இந்தியா எக்சிம் வங்கியின் ஆய்வினையும் வெளியிட்டார்.
- உபார்தே சிதாரே திட்டமானது உலகளாவிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில் உள்நாட்டு அரங்கில் ஜாம்பவான்களாகத் திகழும் இந்திய நிறுவனங்களையும் அடையாளம் காணும்.
- இந்த நிதியானது இந்திய நிறுவனங்களுக்கான தொகுப்பு ஆதரவு, கடன் மற்றும் தொழில்நுட்ப உதவிகளின் ஒரு கலவையாகும்.

## மேம்படுத்தப்பட்ட சாஃப் தொழில்நுட்பம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது ஒரு மேம்படுத்தப்பட்ட சாஃப் தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளது.
- எதிர்நாட்டு ஏவுகணைகளிலிருந்து இந்திய விமானப்படையின் ஜெட் போர் விமானங்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- சாஃப் என்பது உலகம் முழுவதுமுள்ள இராணுவங்களால் பயன்படுத்தப்படும் மின்னணு முறை எதிர்ப்பு தொழில்நுட்பமாகும்.

- இது ஜெட் போர் விமானங்கள் (அ) கடற்படை கப்பல்கள் போன்ற உயர்மதிப்புடைய இலக்குகளை ரேடார்களிலிருந்தும் எதிரி நாட்டின் ஏவுகணை அமைப்புகளின் ரேடியோ அதிர்வெண் வழிகாட்டு முறைகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக வேண்டி பயன்படுத்தப் படுகிறது.



## பொதுத் துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வு 2019 – 20

- நிதி அமைச்சகத்தின் பொதுத் துறை நிறுவனங்கள் துறையானது, பல்வேறு மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களின் செயல்திறன் குறித்த ஆய்வினை ஆண்டிற்கு ஒரு முறை வெளியிடுகிறது.
- 60வது பொதுத் துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வானது (2019-20) சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்றைய நிலவரப்படி இந்த ஆண்டில் பொதுத் துறை நிறுவனங்கள் குறித்த ஆய்வின் வரம்பில் 366 மத்தியப் பொதுத் துறை நிறுவனங்கள் இடம் பெறுகின்றன.
- இவற்றுள் 256 மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் கீழ் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்ற வேளையில் 96 மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் கட்டுமானப் பணியிலும் மீதமுள்ளவை மூடப்படும் நிலை/ தீர்வு காண வேண்டிய நிலையிலும் உள்ளன.

*குறிப்பு*

- மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மகாரத்னா, நவரத்னா மற்றும் மினிரத்னா என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தற்போது 10 மகாரத்னா, 14 நவரத்னா மற்றும் 74 மினிரத்னா பிரிவைச் சேர்ந்த மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன.

Figure 1.1: Trend analysis in number of CPSEs



## இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதி

- இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா தலைமையிலான உச்சநீதிமன்ற நியமனக் குழுவானது (கொலீஜியம்) உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்படுவதற்கு வேண்டி மூன்று பெண் நீதிபதிகள் உள்ளிட்ட 9 நீதிபதிகளின் பெயர்களைப் பரிந்துரை செய்துள்ளது.
- உச்சநீதிமன்ற நியமனக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 3 பெண் நீதிபதிகள் கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி B.V. நாகரத்னா, தெலங்கானா உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஹீமா கோஹ்லி மற்றும் குஜராத் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி பெலா M. திரிவேதி ஆகியோர் ஆவர்.
- உச்சநீதிமன்ற நியமனக் குழுவின் பரிந்துரையானது மத்திய அரசினால் பரிசீலிக்கப் பட்டால், இந்த மூன்று பெண் நீதிபதிகளுள் கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி B.V. நாகரத்னா அவர்கள், 2027 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படலாம்.

## இந்தியாவின் முதலாவது மின்சார வாகனங்களுக்கு ஏற்ற வகையிலான நெடுஞ்சாலை

- சூரிய சக்தி ஆற்றல் அடிப்படையிலான மின்சார வாகன மின்னூட்ட நிலையங்களின் கட்டமைப்போடு டெல்லி-சண்டிகர் நெடுஞ்சாலையானது இந்தியாவின் முதலாவது மின்சார வாகனங்களுக்கு ஏற்ற வகையிலான நெடுஞ்சாலையாக மாறியுள்ளது.
- இந்த நிலையங்களின் கட்டமைப்பானது பாரத் கனரக மின்தொழிற்சாலை நிறுவனத்தினால் (BHEL) அமைக்கப்பட்டுள்ளது.
- இது கனரக தொழில்துறை அமைச்சகத்தின் கலப்பு & மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் அவற்றைத் துரிதமான நடைமுறைக்குக் கொண்டு வருதல் (முதற் கட்டம்) என்ற திட்டத்தின் (FAME – I) கீழ் அமைக்கப்பட்டுள்ளது.




## ஆரோக்கிய தாரா 2.0

- ஆரோக்கிய தாரா 2.0 எனும் நிகழ்வானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 அன்று சுகாதாரத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியாவால் தொடங்கி வைக்கப் பட்டது.
- ஆயுஷ்மான் பாரத் – ஜன் ஆரோக்கிய யோஜனாவின் எல்லையை அதிகரிப்பதன் நோக்கில் இது தொடங்கப் பட்டுள்ளது.

- மேலும் இது ஆயுஷ்மான் பாரத் திட்டம் குறித்து அதிக விழிப்புணர்வை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது, சுகாதார அமைச்சர் பின்வரும் முன்னெடுப்புகளைத் தொடங்கி வைத்தார். அவை,
    - அதிகார் பத்ரா,
    - ஆயுஷ்மான் மித்ரா மற்றும்
    - அபிநந்தன் பத்ரா
- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழான பயனாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது அவர்களுக்கு அதிகார் பத்ரா என்பவை வழங்கப் படும்.
- இந்தப் பத்திரமானது, அந்தப் பயனாளிகள் இலவச மற்றும் கட்டணமில்லாச் சுகாதார சேவைகளைக் கோரும் வகையிலான அவர்களின் உரிமைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை அவர்களுக்கு வழங்கும்.
- அபிநந்தன் பத்ரா என்பது “ஒரு நன்றி குறிப்பு” ஆகும்.
- இது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று வீடு திரும்பும் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.
- ஆயுஷ்மான் மித்ரா என்பது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளைச் சரிபார்க்கும் செயல்முறையில் குடிமக்களைப் பங்கேற்க ஊக்குவிப்பதற்காக தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- மேலும் இது ஆயுஷ்மான் அட்டைகளைப் பெறுவதற்கும் பயனாளிகளுக்கு உதவும்.




## மணிராங்க் சிகரத்தில் முப்படைகளின் அனைத்து மகளிர் அணி

- முப்படைகளின் அனைத்து மகளிர் மலையேறும் அணியானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று மணிராங்க் சிகரத்தில் வெற்றிகரமாக ஏறியது.
- மணிராங்க் சிகரமானது (21,625 அடி) இமாச்சலப் பிரதேசத்தில் உள்ளது.
- ‘ஆசாதி கா அம்ருத் மகோத்சவ்’ என்ற நிகழ்வின் நினைவாக அவர்கள் அங்கு தேசியக் கொடியை ஏற்றினர்.
- இந்த அணியானது இந்திய விமானப் படைத் தளபதி பாவனா மெஹ்ராவின் தலைமையில் வழி நடத்தப் பட்டது.



## இந்தியப் பாதுகாப்பு புத்தாக்க நிறுவன சவால் – 5வது பதிப்பு

- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் இந்தியப் பாதுகாப்பு தொடக்க நிறுவன சவாலின் (Defence India Start-up Challenge – DISC) 5வது பதிப்பினைத் தொடங்கி வைத்தார்.
- DISC ஆனது பாதுகாப்புப் புத்தாக்க அமைப்பின் சிறப்பான பாதுகாப்பு சேவைக்கான புத்தாக்கங்கள் எனும் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இந்தச் சவாலானது பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையில் தன்னிறைவு அடைவதற்கும், அவற்றில் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்குமானதாகும்.
- இந்த சவாலானது அடல் புத்தாக்க திட்டத்துடன் இணைந்து பாதுகாப்பு அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டதாகும்.
- தேசிய ராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் முன்மாதிரிகளை உருவாக்கவும் (அ) தயாரிப்புப் பொருட்கள் மற்றும் தீர்வுகளை வணிகமயமாக்கவும் வேண்டி தொடக்க நிறுவனங்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஆதரவு வழங்கும் நோக்கத்தோடு இது தொடங்கப் பட்டது.

## பொருளாதார வளர்ச்சிக் கழக நிறுவனம் – புதிய அதிபர்

- 15வது நிதி ஆணையத்தின் தலைவர் N.K. சிங் பொருளாதார வளர்ச்சிக் கழக நிறுவனத்தின் (Institute of Economic Growth Society – IEG) புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 1992 ஆம் ஆண்டு முதல் IEG நிறுவனத்தின் தலைவராக இருந்து வந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையடுத்து இவர் இந்தப் பதவியை ஏற்று உள்ளார்.

*பொருளாதார வளர்ச்சிக் கழகம்*

- இது மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் தன்னாட்சி கொண்ட ஒரு பல்துறை மையமாகும்.

- 1952 ஆம் ஆண்டில் VKRV ராவ் என்பவரால் நிறுவப்பட்ட இக்கழகமானது 1958 ஆம் ஆண்டில் தான் செயல்படத் தொடங்கியது.
- இது புதுடெல்லியிலுள்ள டெல்லி பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள் அமைந்து உள்ளது.



## பேரிடர் மேலாண்மை – இந்தியா மற்றும் வங்காள தேசம்

- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையே கையெழுத்தான பேரிடர் மேலாண்மை மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது இந்தியாவின் உள்துறை அமைச்சகத்தின் கீழான தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கும் வங்காளதேசத்தின் பேரிடர் மேலாண்மை & நிவாரண அமைச்சகத்திற்கும் இடையே மேற்கொள்ளப் பட்டது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது பேரிடர் மேலாண்மை, நெகிழ்திறன் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் துறைகளில் ஒத்துழைப்பினை மேம்படுத்தச் செய்வதற்கு என்று உள்ளதாகும்.

## சைகோவ்–டி தடுப்பு மருந்து



- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது சைடஸ் கேடிலா நிறுவனத்தின் சைகோவ்-டி எனும் தடுப்பு மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- சைகோவ்-டி தடுப்பு மருந்தானது இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட, டி.என்.ஏ. அடிப்படையிலான உலகின் முதல் கோவிட்-19 தடுப்பு மருந்தாகும்.
- 12 வயது சிறுவர்கள் மற்றும் அதற்கும் மேற்பட்ட இளம் பருவத்தினர் உள்ளிட்ட நபர்களுக்கு இம்மருந்தானது வழங்கப்படும்.
- சைடஸ் கேடிலா நிறுவனமானது கோவிட் சுரக்சா என்ற திட்டத்தின் கீழ் உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து இந்தத் தடுப்பு மருந்தினை உருவாக்கி உள்ளது.
- உயிரித் தொழில்நுட்பத் தொழில்துறை ஆராய்ச்சி உதவிக் கழகத்தினால் இது செயல்படுத்தப் படும்.
- இது மூன்று தவணையில் செலுத்தக்கூடிய ஒரு தடுப்பு மருந்து ஆகும்.
- சைடஸ் கேடிலா நிறுவனமானது கேடிலா ஹெல்த்கேர் லிமிடெட் எனவும் அழைக்கப் படுகிறது.
- இதன் தலைமையகம் குஜராத்திலுள்ள அகமதாபாத்தில் அமைந்துள்ளது.

## சிறு வணிகக் கடன் முன்னெடுப்பு

- பேஸ்புக் இந்தியா நிறுவனமானது "சிறு வணிகக்கடன் முன்னெடுப்பு" எனும் புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது 'இன்டிஃபை' எனும் ஒரு முன்னணி ஆன்லைன் தளத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இது சுயாதீன கடன்வழங்குநர் பங்குதாரர்களின் உதவியுடன் பேஸ்புக்கில் விளம்பரம் செய்யும் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள், விரைவாக கடன் உதவியைப் பெறுவதற்கு வேண்டிய உதவியினை வழங்கும்.
- பேஸ்புக் நிறுவனமானது இத்தகைய முன்னெடுப்பினைத் இந்தியாவில் தான் முதன் முறையாகத் தொடங்குகிறது.

## AK – 103 துப்பாக்கி


- AK – 103 ரக துப்பாக்கிகளை உடனடியாக வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது காலாட்படையினை நவீனமயமாக்குவதற்கான மிகப்பெரிய திட்டத்தின் ஓர் அங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ரக துப்பாக்கிகளானது இந்தோ-ரஷ்ய துப்பாக்கி தயாரிப்புக்கான தனியார் நிறுவனத்துடன் (Indo-Russia Rifles Private Limited) இணைந்து தயாரிக்கப்படும்.
- இது உத்தரப் பிரதேசத்திலுள்ள அமேதி மாவட்டத்தில் அமைந்த கோர்வா கிராமத்தில் அமைந்துள்ள ஒரு துப்பாக்கி தயாரிப்பு நிறுவனமாகும்.




## இந்தியாவின் மிக உயரமான மூலிகைப் பூங்கா

- ❖ உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்திலுள்ள மனா கிராமத்தில் அமைந்த இந்திய-சீன எல்லை அருகே, இந்தியாவின் மிக உயரமான மூலிகைப் பூங்காவானது (11,000 அடி) திறக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் பூங்காவானது பல்வேறு வகையான மருத்துவம் மற்றும் கலாச்சாரம் முக்கியத்துவம் வாய்ந்த ஆல்பைன் (alpine) இனங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த இனங்களின் பரவல் மற்றும் வாழ்விட சூழலியல் பற்றிய ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டு இது அமைக்கப்பட்டுள்ளது.

## மலபார் கலகம் – 1921




- ❖ மாப்பில்லா கலகம் (அ) மலபார் கலகமானது மோப்லா கலகம் (மோப்லா கலவரம்) எனவும் அழைக்கப்படுகிறது.

- 1921 ஆம் ஆண்டின் மலபார் கலகமானது மலபார் பகுதியில் (வடக்கு கேரளா), பிரித்தானிய மற்றும் இந்து நிலக்கிழார்களை எதிர்த்து மோப்லாக்களால் (மலபார் முஸ்லீம்) 19வது மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொடர் கலவரத்தின் உச்சநிலையாகும்.
- கிலாஃபத் இயக்கத்தின் ஓர் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்த எழுச்சியானது, கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தின் பகுதிகளில் நடைபெற்றது.
- இது வரியம் குன்னத் குஞ்சஹமது ஹாஜி என்பவர் தலைமையிலான ஓர் ஆயுதமேந்தியக் கிளர்ச்சி ஆகும்.
- 2021 ஆம் ஆண்டானது இந்த எழுச்சியின் 100வது நிறைவு ஆண்டாகும்.

## ஹீருன் குளோபலின் மிகவும் மதிப்பு மிக்க 500 நிறுவனங்களின் பட்டியல் – 2021

- 2021 ஆம் ஆண்டு ஹீருன் குளோபலின் மிகவும் மதிப்புமிக்க 500 நிறுவனங்களின் பட்டியலில், ஆப்பிள் நிறுவனமானது உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாகக் கூறப்பட்டுள்ளது.
- உலகின் முதல் ஆறு மதிப்புமிக்க நிறுவனங்கள் எனும் நிலையிலிருந்து மாறாமல் இருக்கும் நிறுவனங்கள் ஆப்பிள், மைக்ரோசாஃப்ட், அமேசான், ஆல்பாபெட், பேஸ்புக் மற்றும் டேன்சென்ட் ஆகியனவாகும்.
- உலகளவிலான 243 நிறுவனங்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- இப்பட்டியலில் 12 நிறுவனங்களுடன் இந்தியா 9வது இடத்தில் உள்ளது.

*2021 Jiaxing · Hurun Global 500* Top 10


| Rank | Company | Value (US$bn) | Change (%) |
|---|---|---|---|
| 1 - | Apple | 2,443 | 15% |
| 2 - | Microsoft | 2,114 | 29% |
| 3 - | Amazon | 1,802 | 12% |
| 4 - | Alphabet | 1,733 | 42% |
| 5 - | Facebook | 967 | 19% |
| 6 - | Tencent | 697 | -3% |
| 7 ↑ | Berkshire Hathaway | 635 | 16% |
| 8 ↑ | Tesla | 621 | 14% |
| 9 ↓ | Alibaba | 586 | -18% |
| 10 * | TSMC | 567 | 27% |

*Source: Hurun Research Institute*

↑ Rank increase yoy ↓ Rank decrease yoy - No Rank change yoy * New to Top 10

## INSACOG ஆய்வு

- இந்தியாவில் கோவிட்-19 பெருந்தொற்று தொடர்ந்து ஏற்படுவது பின்வரும் காரணங்களால் தான் என INSACOG ஆய்வானது குறிப்பிட்டுள்ளது.
  - டெல்டா மாற்றுரு
  - பாதிப்புக்குள்ளாகும் வகையிலான மக்கள்தொகை
  - நோய்ப் பரவலைத் தடுப்பதில் தடுப்பு மருந்தின் செயல்திறனின் குறைபாடு
- INSACOG என்பது இந்தியாவிலுள்ள மரபணு வரிசைப்படுத்துதலுக்கான ஒரு அரசக் கூட்டமைப்பாகும்.




## ஜலகன்யகா

- அந்தமான் & நிகோபர் தீவுகளில் குடை போன்ற வடிவமைப்புடன் கூடிய தொப்பி போன்ற அமைப்புடைய ஒரு புதிய கடல்பாசி இனமானது கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய கடல்பாசி இனத்திற்கு சமஸ்கிருத வார்த்தையான 'ஜலகன்யகா' எனும் வார்த்தையைக் கருத்தில் கொண்டு 'அசெட்டபுலேரியா ஜலகன்யகே' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இதன் பொருள் 'கடல் தெய்வம் (அ) கடல் கன்னி' என்பதாகும்.
- இந்த இனமானது இந்தியாவில் கண்டறியப்பட்ட அசெட்டபுலேரியா இனத்தைச் சேர்ந்த முதலாவது இனமாகும்.



## ARMY – 2021

- மாஸ்கோவில் குபின்கா என்னுமிடத்தில் நடைபெறும் 'ARMY – 2021' எனும் சர்வதேச இராணுவத் தொழில்நுட்ப மன்றத்தில் இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது பங்கேற்கிறது.
- 'ARMY – 2021' மன்றத்தில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனது LCA தேஜாஸ் ரக போர் விமானம், அர்ஜுன் பிரதான பீரங்கி (MKIA), பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டப்பட்ட ஏவுகணைகள் உள்ளிட்ட பிற தயாரிப்புகள் போன்றவற்றை இந்தியா சார்பாக காட்சிப்படுத்தும்.

*குறிப்பு*

- 'ARMY – 2021' எனும் சர்வதேச இராணுவத் தொழில்நுட்ப மன்றமானது, இராணுவ உபகரணங்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் செயல்விளக்கம் போன்றவற்றிற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக வேண்டி ரஷ்யக் கூட்டமைப்பின் இராணுவ அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- 'ARMY – 2021' என்பது 7வது சர்வதேச இராணுவத் தொழில்நுட்ப மன்றமாகும்.




## சைர்-அல்-பஹ்ர் கடற்படைப் பயிற்சி

- சைர்-அல்-பஹ்ர் – கடலின் சீற்றம் (Zair-Al-Bahr - Roar of the sea) 2021 எனும் 2வது இருதரப்பு கடற்படைப் பயிற்சியானது பாரசீக வளைகுடாவில் நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியானது இந்தியக் கடற்படைக்கும் கத்தார் அமீரக கடற்படைக்கும் இடையே நடத்தப் பட்டது.
- இந்தக் கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்தியக் கடற்படைக் கப்பலான திரிகந்த் எனும் வழிகாட்டப்பட்ட, ஏவுகணையுடன் கூடிய ரேடாரில் புலப்படாத போர்க் கப்பலானது கத்தாரின் தலைநகரான தோஹாவை (Doha) வந்தடைந்தது.
- இப்பயிற்சியானது தீவிரவாதம், கடல்கொள்ளை மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகியவை குறித்த ஈடுபாட்டினை கொண்டு மேற்கொள்ளப்பட்டது.



## நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மீதான N.S. விஸ்வநாதன் குழு

- நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான அமைப்பு குறித்துப் பரிந்துரைகளை வழங்கச் செய்வதற்காக N.S. விஸ்வநாதன் தலைமையிலான குழு ஒன்றினை இந்திய ரிசர்வ் வங்கி நியமித்துள்ளது.
- இக்குழுவானது, வைப்புத் தொகையின் அடிப்படையில் அவற்றின் அளவிற்கு ஏற்ப பல்வேறு மூலதன ஏற்றத் தாழ்வு விகிதம் மற்றும் ஒழுங்குமுறை விதிகளைப் பரிந்துரை செய்வதற்காக அமைக்கப்பட்டது.

### *குழுவின் பரிந்துரைகள்*

- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம் என இக்குழு பரிந்துரைத்துள்ளது. அவை
  - பிரிவு I – ரூ. 100 கோடி வரை வைப்புத் தொகை உள்ளவை.
  - பிரிவு II – ரூ. 100 கோடி முதல் ரூ.1000 கோடி வரை வைப்புத் தொகை உள்ளவை.
  - பிரிவு III – ரூ. 1000 கோடி முதல் ரூ.10000 கோடி வரை வைப்புத் தொகை உள்ளவை.
  - பிரிவு IV – ரூ. 10000 கோடிக்கும் மேல் வைப்புத் தொகை உள்ளவை.
- இந்தப் பிரிவுகளுக்கான இடர் உண்டாக்கும் சொத்துகளின் விகிதமானது 9% முதல் 15% வரையிலான வித்தியாசத்தில்இருக்கலாம் என இக்குழு பரிந்துரைக்கிறது.
- IV ஆம் பிரிவு சார்ந்த நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கு Basel III விதிமுறைகளைப் பின்பற்றலாம்.
- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் வெவ்வேறு பிரிவுகளில் பெறப்படும் தங்க நகைக் கடன்கள், வீட்டுக்கடன் மற்றும் பத்திரம் வழங்கப்படாத கடன்களுக்கு வேண்டி தனித் தனி வரம்புகளை இக்குழு பரிந்துரைக்கிறது.
- மேற்பார்வை நடவடிக்கையுடன் கூடிய ஒரு கட்டமைப்பானது இரு குறிகாட்டிகள் எனும் ஒரு அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.
- தற்போதுள்ள மூன்று குறிகாட்டிகள் அணுகுமுறைக்குப் பதிலாக நிகர வாராக்கடன் மற்றும் இடர் உண்டாக்கும் சொத்து விகிதம் ஆகியவை மூலம் அளவிடப்படும் சொத்துக்களின் தரம் மற்றும் மூலதனம் ஆகியவற்றை மட்டுமே இது கருத்தில் கொள்ள முடியும்.

## யுக்தாரா தளம்

- இந்திய அரசானது புவன் தளத்தின் கீழ் 'யுக்தாரா' எனப்படும் ஒரு புதிய புவிசார் திட்டமிடல் தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் புதிய தளமானது தொலை உணர்வு முறை மற்றும் புவிசார் தகவல் அமைப்பு அடிப்படையிலான தரவு ஆகியவற்றினைக் கொண்டு புதிய MGNREGA (மகாத்மா காந்தி தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டம்) வசதிகளை ஏற்படுத்த உதவும்.
- மேலும், பல்வேறு தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட புவியிடக் குறியீடுகளின் களஞ்சியமாகவும் இது செயல்படும்.
- இது இஸ்ரேல் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து உருவாக்கப் பட்டதாகும்.
- புவிசார் தளமான புவன் என்பது இஸ்ரோவின் ஒரு பலதரப்பட்ட தகவல் தளமாகும்.

- இது செயற்கைக் கோள் புகைப்படங்கள் மற்றும் பகுப்பாய்வுத் திறன்கள் ஆகியவற்றை வழங்குகிறது.




## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இயந்திரமயமாக்கப்பட்ட சக்கர நாற்காலி – ‘நியோபோல்ட்’

- சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது ‘நியோபோல்ட்’ எனப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டின் முதல் சக்கர நாற்காலியை உருவாக்கியுள்ளது.
- இதனைச் சாலைகளில் மட்டுமில்லாது சமனற்ற நிலப் பரப்புகளிலும் பயன்படுத்தச் செய்யலாம்.
- இது 25 கி.மீ/மணி என்ற அதிகபட்ச வேக வரம்பைக் கொண்டது.
- இது லித்தியம் – அயனிக் கலனால் இயக்கப்படுகிறது.



## படைப்பிரிவு தலைமைத் தளபதி ஆகும் 5 பெண் அதிகாரிகள்

- இந்திய இராணுவத்தின் தேர்வு வாரியமானது முதல்முறையாக 5 பெண் அதிகாரிகளை படைப் பிரிவு தலைமைத் தளபதி என்ற பதவிக்கு உயர்த்தியுள்ளது.
- இந்த 5 பெண் அதிகாரிகளும் ஏற்கனவே 26 வருடச் சேவையை நிறைவு செய்து உள்ளனர்.
- படைப்பிரிவு தலைமைத் தளபதி (கர்னல்) எனும் பதவிக்கு உயர்த்தப்பட்ட அந்த 5 பெண் அதிகாரிகள் பின்வருமாறு
    - மின்னணு மற்றும் இயந்திர பொறியாளர்கள் படைப்பிரிவின் துணைத்தளபதி நவ்நீத் துகால் மற்றும் துணைத் தளபதி சோனியா ஆனந்த்,
    - சமிக்ஞை படைப்பிரிவின் துணைத்தளபதி சங்கீதா சர்தனா, பொறியாளர்கள் படைப்பிரிவின் துணைத்தளபதி ரிச்சா சாகர் மற்றும் துணைத்தளபதி ரீனு கன்னா ஆகியோராவர்.

- இதற்கு முன்பாக, இராணுவக் கல்விப் படை, இராணுவத் தலைமை சட்ட அதிகாரி மற்றும் இராணுவ மருத்துவப் படை ஆகியவற்றில் பணிபுரியும் பெண் அதிகாரிகள் மட்டுமே படைப்பிரிவு தலைமைத் தளபதி என்ற பதவிக்கு உயர்வு அளிக்கப்பட தகுதி உடையவர்களாக அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.



## நாராயண் ரானே கைது

- மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேவிற்கு எதிராக மத்திய அமைச்சர் நாராயண் ரானே தெரிவித்த கூற்றைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.
- மத்திய அமைச்சர் (அ) பாராளுமன்ற உறுப்பினர்கள் சில சலுகைகளைக் கொண்டிருப்பர் எனினும் ஆனால் அவற்றில் பெரும்பாலனவை பாராளுமன்றக் கூட்டத் தொடர் நடப்பில் இருக்கும் போது மட்டுமே கிடைக்கும்.
- பாராளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறாத போது, காவல் துறை (அ) பிற சட்ட அமலாக்க முகவர்கள் மத்திய அமைச்சரவையின் அமைச்சரை ஒரு குற்றவியல் வழக்கில் கைது செய்யலாம்.
- ஆனால் மாநிலங்களவையின் நடைமுறைகள் மற்றும் பணி நடத்தை விதிகளின் 222A என்ற பிரிவின் கீழ், கைது செய்யப்படுவதற்கான காரணம் மற்றும் இடம் குறித்து மாநிலங்களவைத் தலைவரிடம் காவல் துறையோ (அ) கைது உத்தரவினைப் பிறப்பிக்கும் நீதிபதியோ தெரிவிக்க வேண்டும்.
- அவைத் தலைவர் இதனை மாநிலங்களவையில் வெளியிடுவார்.

*குறிப்பு*

- பாராளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு 40 நாட்கள் முன்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் மற்றும் அது நிறைவுற்ற பிறகு 40 நாட்கள் வரையிலும் ஒரு மத்திய அமைச்சர் (அ) பாராளுமன்ற உறுப்பினர் தாம் கைது செய்யப் படுவதில் இருந்து பாதுகாப்பினைப் பெறுகிறார்.
- எனவே உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 135வது பிரிவின் கீழ், பாராளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடர் இந்த மாதத்தின் தொடக்கத்தில் முடிவடைந்ததால் ஒரு குடிமையியல் வழக்கில் கைது செய்யப்படுவதிலிருந்து நாராயண் ரானே பாதுகாப்பு பெறுகிறார்.
- எனினும், அவரது இந்த கைது குற்றவியல் வழக்கில் உள்ளதாகும்.
- மேலும் கைதிலிருந்துப் பாதுகாப்பு பெறுதல் எனும் சலுகையானது குற்றவியல் குற்றங்கள் அல்லது தடுப்புக் காவல்களிலிருந்துப் பாதுகாப்பு வழங்காது.

## உலகளாவிய உற்பத்தி இடர்க் குறியீடு




- ❖ இந்தியா ஓர் உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளது.
- ❖ இந்திய நாடானது அமெரிக்காவினைத் திறம்பட்ட முறையில் பின்னுக்குத் தள்ளி உலகின் இரண்டாவது மிகவும் விரும்பத்தகு உற்பத்தி மையமாக மாறியுள்ளது.
- ❖ மற்ற நாடுகளை விட ஒரு விரும்பத்தகு உற்பத்தி மையமாக உற்பத்தியாளர்கள் மத்தியில் இந்தியா வளர்ந்து வரும் விருப்பத்தினை இது குறிக்கிறது.
- ❖ இந்தப் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது.
- ❖ இந்தியாவின் இந்தத் தரநிலை 2021 ஆம் ஆண்டு கஷ்மேன் & வேக்பீல்டின் உலக உற்பத்தி இடர்க் குறியீட்டில் (Cushman & Wakefield's 2021 Global Manufacturing Risk Index) பிரதிபலிக்கிறது.
- ❖ இக்குறியீடானது ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆசிய பசிபிக் பகுதிகளில் உள்ள 47 நாடுகளைத் தரவரிசைப்படுத்துகிறது.

## போக்குவரத்தில் கரிம நீக்கத்திற்கான மன்றம்

- ❖ நிதி ஆயோக் மற்றும் இந்தியாவிலுள்ள உலகவளக் கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து 'போக்குவரத்தில் கரிம நீக்கத்திற்கான மன்றத்தினை' இந்தியாவில் தொடங்கியுள்ளன.
- ❖ இதில் இந்தியாவிற்கான அமலாக்கப் பங்குதாரர் நிதி ஆயோக் ஆகும்.
- ❖ ஆசியாவில் பசுமை இல்ல வாயுக்களில் உச்ச நிலையை (போக்குவரத்துத் துறையில்) குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- ❖ இந்த மன்றமானது NDC ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பு (NDC-TIA [Nationally Determined Contributions–Transport Initiative for Asia]) என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.

- NDC-ஆசியாவிற்கான போக்குவரத்து முன்னெடுப்பு (TIA 2020-2023) என்பது சீனா, இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் போக்குவரத்துத் துறையில் கரிம நீக்கம் செய்வதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை ஊக்குவிப்பதற்கான ஏழு அமைப்புகளின் கூட்டுத் திட்டமாகும்.

## இ-ஷ்ராம் தளம்

- தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகமானது இ-ஷ்ராம் தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் தளமானது முறைசாரா தொழிலாளர்களின் (ஷ்ரம் யோகிஸ்) குறித்த தேசிய அளவிலான தரவுத் தளமாக விளங்கும்.
- முறைசாரா தொழிலாளர்களை அடையாளம் காணுதல் என்ற பணியினை இத்தளம் மேற்கொள்ளும்.
- சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் இத்தளம் உதவும்.
- பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 12 இலக்க தனித்துவ எண்ணுடன் கூடிய இ-ஷ்ராம் அட்டையானது வழங்கப்படும்.
- இந்த நடவடிக்கையானது மத்திய அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை ஒருங்கிணைக்கும்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க வாரக் கொண்டாட்டங்கள்

- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அனுராக் தாகூர் 'அசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற கொண்டாட்டத்திற்கான தொடர் நிகழ்வுகளைத் தொடங்கி வைத்தார்.
- அந்த அமைச்சகத்தினால் தொடங்கப்பட்ட இந்த நிகழ்வுகள், இளம், புதிய மற்றும் சிறப்புமிக்க இந்தியாவின் இலட்சியங்கள் மற்றும் கனவுகளுடன், கடந்த கால சுதந்திரப் போராட்டத்தின் மதிப்புகள் மற்றும் மகிமைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை ஆகும்.

- தாகூர் 'ஜான் பாகிதாரி மற்றும் ஜன் அந்தோலன்' (Jan Bhagidari and Jan Andolan) என்ற ஒரு ஒட்டு மொத்தக் கருத்தின் கீழ் நாடு முழுவதிலிமிருந்தும் பங்கேற்பினை ஈர்க்கும் வகையிலான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வாரத்தினை (Iconic Week) தொடங்கி வைத்தார்.




## GUAREX

- வேளாண் பொருட்கள் பிரிவில் இந்தியாவின் முதல் துறைசார் குறியீடான "GUAREX" என்ற குறியீடு தேசியப் பண்டக வகையீட்டுப் பரிமாற்ற நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- சுத்திகரிக்கப்பட்ட பிளவுபட்ட கொத்தவரை மற்றும் கொத்தவரை விதைகள் மீதான வருங்கால ஒப்பந்தங்களின் செயல்பாட்டினை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கும் ஒரு விலை அடிப்படையிலான குறியீடே GUAREX ஆகும்.

GUAREX

- இந்தக் குறியீடானது மதிப்புத் தொடரில் பல வாய்ப்புகளை வழங்கும்.

- இக்குறியீட்டில் சுத்திகரிக்கப்பட்ட பிளவுபடுத்தப்பட்ட கொத்தவரை மற்றும் கொத்த வரை விதைகளின் மதிப்பு முறையே 63% மற்றும் 37% ஆகும்.
- இந்தியா உலகின் மிகப்பெரிய கொத்தவரை உற்பத்தி நாடாகும்.
- ராஜஸ்தான் நாட்டின் முன்னணி கொத்தவரை உற்பத்தியாளராக திகழ்கிறது.

## இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதி

- உச்சநீதிமன்ற நியமனக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 9 பெயர்களும் மத்திய அரசினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இது 2027 ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல் பெண் தலைமை நீதிபதி நியமிக்கப் படுவதற்கான வழியை வகுத்துள்ளது.
- அந்த 9 பெயர்களில் நீதிபதி ஹீமா ஹோலி, நீதிபதி B.V. நாகரத்னா, நீதிபதி பேலா திரிவேதி ஆகிய மூன்று நீதிபதிகளும் அடங்குவர்.
- பணி மூப்பு நிலையின் படி நீதிபதி நாகரத்னா 2027 ஆம் ஆண்டில் இந்தியாவின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படலாம்.




## KAZIND – 21



- 5வது இந்திய-கசகஸ்தான் கூட்டுப் பயிற்சி ஒத்திகையான “KAZIND-21” என்ற பயிற்சி 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 11 வரை நடத்தப் பட உள்ளது.
- இராணுவ அரசு முறைமை நடவடிக்கையின் ஒரு அங்கமாக இந்த கூட்டுப் பயிற்சி ஒத்திகையானது நடத்தப் பட உள்ளது.
- இது கசகஸ்தான் உடனான உத்திசார் உறவுகளை வலுப்படுத்த விழைகிறது.
- கசகஸ்தானின் ஆயிஷா பிபி என்னுமிடத்தில் இப்பயிற்சியானது மேற்கொள்ளப் படும்.
- பீகார் படைப் பிரிவின் பட்டாளத்தினர் இந்திய இராணுவம் சார்பாக இதில் பங்கேற்பர்.

## m-RNA அடிப்படையிலான இந்தியாவின் முதல் கோவிட்-19 தடுப்பு மருந்து

- இந்தியாவின் முதலாவது m-RNA அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பு மருந்திற்கான இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்டப் பரிசோதனைகளுக்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது அனுமதி வழங்கியுள்ளது.
- m-RNA அடிப்படையிலான இந்த முதல் கோவிட்-19 தடுப்பு மருந்தானது HGC019 என அழைக்கப் படுகிறது.
- இது அமெரிக்காவின் HDT பயோடெக் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து புனேவிலுள்ள ஒரு உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான ஜெனோவா பயோ பார்மாசிட்டிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு வருகிறது.

## சுஜாலாம்

- ஜல்சக்தித் துறை அமைச்சகமானது ‘சுஜாலாம்’ (SUJALAM) எனப்படும் ஒரு ‘100 நாட்கள் அளவிலான பிரச்சாரத்தை’ தொடங்கியுள்ளது.
- கிராம அளவில் கழிவுநீர் மேலாண்மையை மேற்கொள்வதன் மூலம் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற உபரி வகை கிராமங்களை மேலும் அதிகளவில் உருவாக்க வேண்டி இது தொடங்கப் பட்டுள்ளது.



## கரும்பிற்கு இதுவரை இல்லாத அளவிலான நியாய மற்றும் இலாப விலை

- கரும்பு விவசாயிகளுக்காக இதுவரை இல்லாத அளவில் அதிகமான நியாய & இலாப விலையினை (Fair & Renumerative Price – FRP) வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கரும்பிற்கான FRP ஆனது 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.290 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- இது 10% மீள்வின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.
- இதில் மீள்வானது 9.5% என்ற அளவிற்குக் குறைவாக இருந்தால் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.275 என்ற விலையில் FRP ஆனது வழங்கப்படும்.
- அக்டோபர் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான சந்தைப்படுத்துதல் ஆண்டிற்கு FRP உயர்த்தப் பட்டுள்ளது.
- FRP என்பது விவசாயிகளிடமிருந்து சர்க்கரை ஆலைகளால் வாங்கப்படும் கரும்பிற்கான குறைந்தபட்ச விலையாகும்.
- இந்த விலையானது வேளாண் செலவினம் மற்றும் விலைகள் மீதான ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படுகிறது.




## மலபார் பயிற்சி

- நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை அமைப்பின் (அல்லது குவாட்) நான்கு உறுப்பினர் நாடுகளுடைய (இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா) கடற்படைகள் 25வது மலபார் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- இது பசிபிக் பெருங்கடலிலுள்ள குவாம் கடற்கரையருகே தொடங்கியது.

- மலபார் பயிற்சியானது 1992 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே ஓர் இருதரப்பு கடற்படைப் பயிற்சியாகத் தொடங்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் ஜப்பான் இணைந்ததையடுத்து இப்பயிற்சி ஒரு முத்தரப்பு பயிற்சியாக மாறியது.




## கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ்

- இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் தென்சீனக் கடலில் சமீபத்தில் ஒரு கடற்படைப் பயிற்சியை மேற்கொண்டன.
- இந்தியக் கடற்படையானது ஐ.என்.எஸ். ரன்விஜய் என்ற ஏவுகணை தாக்குதல் கப்பலையும் ஐ.என்.எஸ். கோரா என்ற வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க் கப்பலையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்தியது.
- பிலிப்பைன்ஸ் கடற்படையானது BRP அன்டோனியோ லூனா எனப்படும் ஒரு பீரங்கிக் கப்பலினை இப்பயிற்சியில் ஈடுபடுத்தியது.

*குறிப்பு*

- தென்சீனக் கடலானது சீன இராணுவத்தின் வளர்ந்து வரும் விரிவாக்கத்தைச் சந்தித்து வருகிறது.

## ஹைட்ரஜன் மின்பகுப்பு பல்முனைத் தொழிற்சாலை

- ஒஹ்மியம் நிறுவனமானது இந்தியாவின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் மின்பகுப்பு பல்முனைத் தொழிற்சாலையைத் தொடங்கியுள்ளது.
- அமெரிக்காவைச் சேர்ந்த ஒஹ்மியம் இன்டர்நேஷனல் என்ற ஒரு நிறுவனமானது கர்நாடகாவின் தலைநகர் பெங்களூருவில் இந்தியாவின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் மின்பகுளிகளை (Electrolytes) தயாரிக்கும் அலகினைத் தொடங்கியுள்ளது.
- இத்தொழிற்சாலையானது இந்தியாவில் உருவாக்கப்பட்ட புரோட்டான் பரிமாற்றச் சவ்வுடன் (Proton Exchange Membrane) கூடிய ஹைட்ரஜன் மின்பகுளிகளைத் தயாரிக்கும்.
- ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவற்றைப் பிரிப்பதற்கு வேண்டி புதுப்பிக்கத் தக்க ஆற்றல் வளங்களிலிருந்துப் பெறப்பட்ட ஆற்றலை அது பயன்படுத்துகிறது.
- பசுமை ஹைட்ரஜன் என்பது புதைபடிமங்களிலிருந்து பெறப்படும் நீல ஹைட்ரஜனுக்கு மாற்றாக புதைபடிமம் அல்லாத ஆற்றல்களிலிருந்து பெறப் படுவதாகும்.

## மாலே இணைப்புத் திட்டம்

- ❖ மாலத்தீவு அரசானது மாலே இணைப்புத் திட்டத்தைக் கட்டமைப்பதற்காக AFCONS எனப்படும் ஒரு மும்பை நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ❖ இந்த உள்கட்டமைப்புத் திட்டமானது மாலத்தீவில் இந்தியாவினால் மேற்கொள்ளப் படும் மிகப்பெரிய ஒரு திட்டமாகும்.
- ❖ இதில் வில்லிங்லி, குல்ஹிஃபல்ஹு மற்றும் திலாஃபுசி (Villingli, Gulhifalhu and Thilafushi) போன்ற அண்டைத் தீவுகளுடன் மாலத்தீவின் தலைநகர் மாலேயை இணைக்கும் கரைப்பால இணைப்பு மற்றும் 6.74கி.மீ. பாலமானது கட்டமைக்கப்படும்.
- ❖ 400 மில்லியன் டாலர் கடன் சார்பு தொடர் வரிசையில் (line of credit) 100 மில்லியன் டாலர் மானியத்தில் இந்தியா இத்திட்டத்திற்கு நிதி வழங்கி வருகிறது.
- ❖ கடன் சார்பு தொடர் என்பது மானியம் அல்ல, ஆனால் வளர்ந்து வரும் நாடுகளுக்கு சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் வகையில் கடன் பெறும் அரசு திருப்பிச் செலுத்த வேண்டிய ஒரு 'குறைந்த வட்டி கடன்' ஆகும்.




## WEP Nxt

- ❖ நிதி ஆயோக், சிஸ்கோ நிறுவனத்துடன் இணைந்து 'WEP Nxt' எனத் தலைப்பிடப்பட்ட மகளிர் தொழில் முனைவுத் தளத்தின் (Women Entrepreneurship Platform) இரண்டாம் கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது இந்தியாவில் மகளிர் தொழில்முனைவினை ஊக்குவிப்பதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.

WEP NXT

- இது 2017 ஆம் ஆண்டில் நிதி ஆயோக் அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- WEP என்பது பல்வேறு பின்னணியைச் சேர்ந்த பெண்களை ஒன்று திரட்டி வளங்கள், ஆதரவு மற்றும் கற்றல் போன்றவற்றை அணுகுவதற்கான ஏராளமான வாய்ப்புகளை வழங்கும் ஓர் ஒன்றிணைந்த தளமாகும்.
- WEP Nxt என்பது WEP தளத்தின் அடுத்த கட்டமாகும்.

## EASE 4.0




- மத்திய நிதி மற்றும் பெருநிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சர் நிர்மலா சீதா ராமன், 2021-22 ஆம் ஆண்டிற்கான 'EASE 4.0' எனப்படும் பொதுத்துறை வங்கிகளுக்கான சீர்திருத்த நிரல்களின் 4வது பதிப்பினை வெளியிட்டார்.
- இது ஓர் எளிமைப்படுத்தப்பட்ட, தொழில்நுட்ப வசதியுடன் கூடிய ஒரு கூட்டு வங்கி முறையாகும்.
- EASE 4.0 என்பதின் முக்கிய கருத்துரு, "தொழில் நுட்ப வசதி கொண்ட, எளிமையாக்கப் பட்ட மற்றும் கூட்டு வங்கி முறை" என்பதாகும்.
- EASE என்பதன் விரிவாக்கம் Enhanced Access & Service Excellence (மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் சிறப்பான சேவை) என்பதாகும்.

## NERDSD இலக்கு குறியீட்டு அறிக்கை மற்றும் முகப்புப் பக்கம்

- வடகிழக்குப் பகுதியில் உள்ள மாவட்டங்களுக்கான முதலாவது நிலையான மேம்பாட்டு இலக்கு குறியீட்டு அறிக்கை மற்றும் ஒரு முகப்புப் பக்கமானது 2021-22 (North Eastern Region District Sustainable Development (NERDSD) Goal Index Report and Dashboard) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது இந்தியாவில் இந்த வகையிலான முதலாவது பிராந்திய வாரியிலான மாவட்ட நிலையான மேம்பாட்டுக் குறியீடாக இருக்கும்.
- இந்தக் குறியீடானது நிதி ஆயோக் மற்றும் வட கிழக்கு பகுதித் துறை அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இது எட்டு மாநிலங்களிலும் உள்ள மாவட்டங்களின் செயல்திறனை மதிப்பிடும்.
- இந்தப் பட்டியலில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் கிழக்கு சிக்கிம் மாவட்டம் முன்னிலையில் இருக்கின்றது

- ❖ நாகாலாந்தின் கிப்பயர் மாவட்டம் இந்தப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.




## ஆனந்தா கைபேசி செயலி

- ❖ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமானது தனது முகவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் வருங்கால வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கு ஏதுவாக “ஆனந்தா கைபேசி செயலி” என்பதைத் தொடங்கியுள்ளது.
- ❖ ANANDA என்றால் ஆத்ம நிர்பர் முகவர் – புதிய வணிக டிஜிட்டல் செயலி (Atma Nirbhar Agents New Business Digital Application) என்பதாகும்.
- ❖ ANANDA என்பது புதிய வணிக செயல் முறைகளுக்கான ஒரு காகிதமற்ற தீர்வாகும்.

## காசநோய் ஒழிப்புக் கூட்டிணைவு வாரியத்தின் தலைவர்

- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சர், மான்சுக் மாண்டவியா அவர்கள் காசநோய் ஒழிப்புக் கூட்டிணைவு வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.
- ❖ அவர் உடனடியாக பதவிப் பொறுப்புகளை ஏற்று 2024 ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் நீடிப்பார்.
- ❖ 2022 ஆம் ஆண்டுக்குள் ஐக்கிய நாடுகளின் காசநோய் தொடர்பான இலக்குகளை அடைவதற்காக காசநோய் ஒழிப்புக் கூட்டிணைவு செயலகம், பங்குதாரர்கள் மற்றும் காசநோய் சமூகத்தினர்கள் ஆற்றும் முயற்சிகளை இவர் முன்னின்று வழிநடத்துவார்.
- ❖ இந்தக் கூட்டிணைவானது, ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக திகழும் காசநோயை அகற்றும் முயற்சியாக 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## SAMRIDH திட்டம்




- தயாரிப்புப் பொருளில் புதுமை, மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான புத்தாக்க நிறுவனங்களுக்கான வழிகாட்டுத் திட்டமானது (Start-up Accelerators of MeitY for pRoduct Innovation, Development and growth [SAMRIDH] programme) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைக்கத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- SAMRIDH திட்டமானது தங்களது தயாரிப்புப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் தங்களது வணிகத்தை முன்னேற்றுவதற்கான முதலீடுகளைப் பெறுவதற்கும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் தயாராக உள்ள வளர்ந்து வரும் இந்திய மென்பொருள் தயாரிப்பு புத்தாக்க நிறுவனங்களுக்கான ஒரு உகந்த தளத்தினை உருவாக்கும்.
- இந்த நிலையில் புத்தாக்க நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிதி உதவி வழிகாட்டல் மற்றும் இதர உதவிகளை இது வழங்கும்.

## INDIASize

- ஜவுளித்துறை அமைச்சகம் மற்றும் தேசிய ஆடை வடிவமைப்புக் கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து, அளவு நிலைகளில் உள்ள குழப்பத்தைப் போக்கும் பொருட்டு இந்தியா அளவு என்ற கணக்கெடுப்பினைத் தொடங்கியுள்ளன.
- இதற்கு INDIASize எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் ஆயத்த ஆடைத் துறையில் ஒரு புதிய தரப்படுத்தப்பட்ட அளவு அட்டவணையினை அறிமுகம் செய்யும் நோக்கத்தோடு இந்த முன்னெடுப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
- தற்போது 18 நாடுகள் மட்டுமே தங்களது சொந்த அளவு அட்டவணைகளைக் கொண்டுள்ளன.



## “Shared Density 2021” - பாதுகாப்புப் பயிற்சி

- சீனா, மங்கோலியா, தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் இராணுவங்கள் “Shared Density 2021” எனப்படும் ஒரு பன்னாட்டு அமைதிகாப்புப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- இது சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்திலுள்ள கூட்டு ஆயுத உத்திசார் பயிற்சித் தளத்தில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தினால் நடத்தப்படும்.
- இது நான்கு நாடுகள் ஈடுபடும் முதலாவது நேரடி பன்னாட்டு அமைதிகாப்புப் பயிற்சி ஆகும்.
- பெரும்பாலும் சோங்யுவான் (அ) சோங்சுவோ (Zhongyuan or Zhongzhou) என்றும் குறிப்பிடப் படும் ஹெனான் (Henan) மாகாணம் என்பது நிலப்பரப்பால் சூழப்பட்ட சீன மாகாணமாகும்.

## அதிகம் கண்காணிக்கப்பட்ட நகரங்கள்




- உலகின் அதிகம் கண்காணிக்கப்பட்ட நகரங்கள் குறித்த தரவுகளில், ஒரு சதுர மைல் கல் தொலைவிற்கு 1,826.6 அளவிலான கேமராக்களுடன் இந்தியத் தலைநகர் புது டெல்லி முதலிடத்தில் உள்ளது.
- இதில் சென்னை மூன்றாமிடத்தில் உள்ளது.
- மேலும் இதில் லண்டன் இரண்டாமிடத்திலும் மும்பை 18வது இடத்திலும் உள்ளன.

## இந்தியா-ஜெர்மனி கூட்டுப் பயிற்சி

- இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளின் கடற்படைகள் ஏடென் வளைகுடாவில் ஒரு கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டன.
- இப்பயிற்சியில் ஹெலிகாப்டர் தரையிறக்கம், தேடல் மற்றும் கைப்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளும் அடங்கும்.
- இந்தியக் கடற்படையின் போர்க் கப்பலான 'திரிகந்த்' என்ற கப்பலானது ஜெர்மனி நாட்டின் போர்க் கப்பலான 'பெய்ரென்' என்ற கப்பலுடன் இணைந்து இப்பயிற்சியில் ஈடுபட்டது.
- ஏடென் வளைகுடா பகுதியில் கடற்கொள்ளைக்கு எதிரான ரோந்துப் பணிகளுக்காக ஐ.என்.எஸ். திரிகந்த் கப்பலானது பணியமர்த்தப் படும்.
- இப்பயிற்சியானது கடல்சார் துறையில் இரு நாடுகளுக்கிடையேயான ஒரு இணைச் செயல்பாட்டினை மேம்படுத்தவும் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் உதவியது.
- இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகியவை 2006 ஆம் ஆண்டில் கடற்கொள்ளை எதிர்ப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினை மேற்கொண்ட பிறகு, இரு நாடுகளின் கடற்படைகளும் 2008 ஆம் ஆண்டில் முதலாவது கூட்டுப் பயிற்சியினை மேற்கொண்டன.

## தீபார் பீல் வனவிலங்குச் சரணாலயம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகமானது அசாமின் குவஹாத்தியின் தென்மேற்கு முனையிலுள்ள தீபார் பீல் என்ற வனவிலங்குச் சரணாலயத்தின் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலத்தினை அறிவித்துள்ளது.
- தீபார் பீல் என்பது அசாமிலுள்ள மிகப்பெரிய நன்னீர் ஏரிகளுள் ஒன்றாகும்.
- இது ஒரு முக்கியப் பறவை வாழிடமாக இருப்பதைத் தவிர அந்த மாநிலத்தின் ஒரே ராம்சார் தளமாகவும் உள்ளது.



*குறிப்பு*

- சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் (அ) சுற்றுச்சூழல் ரீதியாக பாதிப்படையக் கூடிய பகுதிகள் என்பவை பாதுகாக்கப்பட்டப் பகுதிகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் போன்றவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப் படும் பகுதிகளாகும்.
- ஆனால் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தில் "சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள்" என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## காண்டீவ் பயிற்சி

- 'காண்டீவ்' (காண்டீபம்) எனப்படும் ஒரு வார அளவிலான வருடாந்திரப் பயிற்சியின் 3வது பதிப்பானது தேசிய பாதுகாப்புப் படையினால் நடத்தப்பட்டது.
- தேசிய மாதிரிப் பயிற்சிகளின் ஒரு அங்கமாக ஒருங்கிணைந்த கமாண்டோ படைப் பயிற்சிகள் தீவிரவாத எதிர்ப்புப் படையான தேசியப் பாதுகாப்புப் படையினால் (National Security Guard – NSG) நடத்தப்பட்டது.
- பிணைக் கைதியாக்குதல் மற்றும் கடத்தல் போன்ற சூழ்நிலைகளில் அவற்றை எதிர்த்து செயல்படும் நேரம் மற்றும் எதிர்வினை போன்றவற்றைச் சோதிப்பதற்காக வேண்டி இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- 'காண்டீவ்' என்பது மகாபாரதத்தில் வரும் அர்ஜுனனின் வில்லினுடைய பெயராகும்.
- NSG ஆனது தீவிரவாதம் மற்றும் கடத்தல் ஆகிய அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்காக கமாண்டோ நடவடிக்கைகளை மேற்கொள்ளிட வேண்டி 1984 ஆம் ஆண்டில் ஒரு கூட்டு தீவிரவாத எதிர்ப்புப் படையாக உருவாக்கப்பட்டது.



# சர்வதேசச் செய்திகள்

## செரண்டிபிட்டி சபையர்

- உலகின் மிகப்பெரிய சபையர் கிளஸ்டர் (sapphire cluster) இலங்கையில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- இதன் எடை 510 கிலோகிராம் அல்லது 2.5 மில்லியன் காரட் ஆகும்.
- இந்தக் கல்லுக்கு 'செரண்டிபிட்டி சபையர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.



## K2 சிகரத்தில் ஏறிய இளம் வயது வீரர்

- பாகிஸ்தானைச் சேர்ந்த 19 வயதான மலையேறும் வீரர் ஒருவர் K2 சிகரத்தினை ஏறிய உலகின் இளம் வயது வீரர் எனும் சாதனையைப் படைத்துள்ளார்.
- K2 சிகரமானது உலகின் இரண்டாவது உயரமான சிகரமாகும்.
- லாகூரைச் சேர்ந்த செஹ்ரோஷ் காசிப் என்பவர் ஒரு குடுவையில் நிரப்பப் பட்ட ஆக்சிஜனின் உதவியோடு 8611 மீட்டர் உயரம் கொண்ட அந்தச் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.
- பாகிஸ்தான், நேபாளம் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் உலகின் 14 உயரிய சிகரங்கள் அமைந்துள்ளன, இவை 8000ers எனவும் அழைக்கப்படுகின்றன.
- K2 மற்றும் நங்க பர்வதம் உள்ளிட்ட ஐந்து 8000 மீட்டர் உயர சிகரங்கள் பாகிஸ்தானில் அமைந்துள்ளன.



## 7 புதிய உலகப் பாரம்பரியத் தளங்கள் சேர்ப்பு

- உலகப் பாரம்பரியத் தளங்கள் குழுவானது யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் மேலும் ஏழு தளங்களைச் சேர்த்துள்ளது.
- இவற்றுள் நான்கு தளங்கள் அதன் வளமான உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்திற்காக இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுளளன. அவை,
  - அமாமி – ஒஷிமா தீவு, டோகுனோஷிமா தீவு, ஒகினாவா தீவின் வடப்பகுதி மற்றும் இரியோமோட் தீவு (ஜப்பான்)
  - கெட்டோல் எனும் கொரிய நாட்டின் ஓதப்பகுதி (கொரியா)
  - காங் கிரச்சன் வனப்பகுதி (தாய்லாந்து) மற்றும்
  - கொல்கிக் மழைக்காடுகள் மற்றும் ஈரநிலங்கள் (ஜார்ஜியா)
- அதில் சேர்க்கப் பட்டுள்ள மூன்று கலாச்சாரத் தளங்களாவன,
  - டென்மார்க்கின் நீர்ப் பாதுகாப்பு வரம்பு,
  - துருக்கியிலுள்ள அர்ஸ்லான்டேப் மலை தொல்பொருள் ஆய்வுப் பகுதி மற்றும்
  - பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்திலுள்ள நல்வாழ்வு காலனிகள் (குடியிருப்புகள்)


## உலகளாவிய மேம்பாட்டிற்கான முத்தரப்பு ஒத்துழைப்பு

- ஆப்பிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் ஒன்றிணைந்துச் செயல்படுத்துவதற்கான ஒரு உலகளாவிய மேம்பாட்டுக் கூட்டாண்மை ஒப்பந்தத்தினை இந்தியா மற்றும் அமெரிக்கா இரண்டும் இணைந்து மேலும் 5 ஆண்டுகளுக்குப் புதுப்பித்துள்ளது.
- வட்டார இணைப்பு, தூய்மையான ஆற்றல் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகளில் இவை ஒன்றிணைந்து செயல்படும்.
- உலகளாவிய மேம்பாட்டிற்கான முத்தரப்பு ஒத்துழைப்பு குறித்த வழிகாட்டுதல் கொள்கைகளின் அறிக்கையினுடைய 2வது திருத்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.
- 2014 ஆம் ஆண்டில் கையெழுத்தான வழிகாட்டுதல் கொள்கைகளின் அறிக்கை ஒப்பந்தமானது மூன்றாம் தரப்பு நாடுகளில் குறிப்பாக ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் மேம்பாட்டு ஒத்துழைப்பிற்கான கட்டமைப்பினை வழங்குகின்றது.
- இந்த ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட 2வது திருத்தமானது இதன் காலவரம்பை 2026 ஆம் ஆண்டுசெப்டம்பர் மாதம் வரை நீட்டித்துள்ளது.

## முகவர் ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா

- வங்கி அல்லாத கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு முகவர் சேவையை வழங்குவதற்கான மசோதாவானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிவாரணம் அளித்து, சுமூகமான மூலதனச் சுழற்சியையும் நல்லமுறையான பணப் புழக்கத்தினையும் உறுதி செய்வதில் அந்த நிறுவனங்களுக்கு உதவும்.
- தற்போதுள்ள முகவர் ஒழுங்குமுறைச் சட்டமானது 2011 ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது.

- இது ஒரு வங்கி அல்லாத நிதியியல் நிறுவனமானது முகவர் வணிகத்தினை ஒரு முதன்மை வணிகமாகக் கொண்டிருந்தால் மட்டுமே இந்த வேலையைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் அளித்துள்ளது.
- அதாவது அந்த நிறுவனத்தின் பாதிக்கும் மேலான சொத்துகள் பயன்படுத்தப்பட்டு முகவர் வணிகத்தின் மூலம் வருவாய் ஈட்டப்பட வேண்டும்.
- இந்த மசோதாவில் இந்த வரம்பானது நீக்கப்பட்டுள்ளது.




## உலகளாவியப் புகையிலைத் தொற்று குறித்த அறிக்கை 2021

- "உலக சுகாதார அமைப்பினுடைய உலகளாவியப் புகையிலைத் தொற்று குறித்த அறிக்கை 2021: புதிய மற்றும் வளர்ந்து வரும் தயாரிப்புகள் குறித்த கண்காணிப்பு" (WHO report on the global tobacco epidemic 2021: Addressing new and emerging products) எனும் அறிக்கையானது முதல் முறையாக மின்னணு சிகரெட்டுகள் மற்றும் இதர ENDS எனும் பொருட்கள் குறித்த தரவுகளை வழங்கியுள்ளது.
- ENDS என்பது மின்னணு நிகோட்டின் வழங்கீட்டுப் பொருட்கள் (Electrotic Nicotin Delivery Systems - ENDS) ஆகும்.
- ஒவ்வோர் ஆண்டும் 8 மில்லியனுக்கும் மேலானவர்கள் புகையிலைக்குப் பலியாகின்றனர் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இவற்றுள் 7 மில்லியனுக்கும் மேலான உயிரிழப்புகள் நேரடிப் புகையிலைப் பயன்பாட்டின் காரணமாக ஏற்படுகிறது.
- சுமார் 1.2 மில்லியன் உயிரிழப்புகள், புகை பிடிப்பவர்களுக்கு அருகிலுள்ள புகைப் பிடிக்கும் பழக்கமில்லாதவர்களுக்கு ஏற்படுகிறது

*குறிப்பு*

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது மின்னணு சிகரெட்டுகள் மற்றும் இதர ENDS பொருட்களுக்கு முழுமையாக தடை விதிக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

## ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான நிரந்தர மன்றம்

- ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான ஒரு நிரந்தர மன்றத்தினை நிறுவுவதற்கான தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த நிரந்தர மன்றமானது இனவாதம், இனவெறி, இனப்பாகுபாடு மற்றும் சகிப்புத் தன்மையின்மை குறித்த சவால்களை எதிர்கொள்வதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கும்.
- இந்த தீர்மானமானது 193 உறுப்பினர்கள் கொண்ட உலக அமைப்பின் ஒருமித்த கருத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தப் புதிய மன்றமானது 10 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
- அனைத்துப் பிராந்தியங்களிலிருந்தும் 5 உறுப்பினர்கள் இதற்காக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- மற்ற 5 உறுப்பினர்கள், பிராந்தியக் குழுக்கள் மற்றும் ஆப்பிரிக்க வம்சாவளி மக்கள் அமைப்புகளின் ஆலோசனையுடன் மனித உரிமைகள் சபையினால் நியமிக்கப் படுவர்.

## பன்னாட்டு சூரியசக்தி கூட்டிணைவு கட்டமைப்பு ஒப்பந்தம் – ஜெர்மனி

- பன்னாட்டு சூரியசக்தி கூட்டிணைவு கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 5வது நாடாக ஜெர்மனி மாறியுள்ளது.
- இக்கூட்டிணைவு ஒப்பந்தத்தில் இணைவதற்கு ஐக்கிய நாடுகள் அவையின் அனைத்து உறுப்பினர் நாடுகளுக்கும் அனுமதி வழங்குவதற்காக மேற்கொள்ளப் பட்ட திருத்தங்கள் நடைமுறைக்கு வந்ததையடுத்து இது சாத்தியமானது.

*குறிப்பு*

- இதற்கு முன்பு பன்னாட்டு சூரியசக்தி கூட்டிணைவிற்கான உறுப்பினர் அந்தஸ்து 121 நாடுகளுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டிருந்தது.
- அவை வெப்பமண்டலப் பகுதியினுள் பகுதியளவு அல்லது முழுவதுமாக அமைந்துள்ள நாடுகள் ஆகும்.
- இந்த வரையறையானது ஜெர்மனி போன்ற மிகப்பெரிய சூரியசக்தி பொருளாதார நாடுகள் இந்தக் கூட்டிணைவில் இணைய அனுமதிக்கவில்லை.

## இப்ராஹிம் ரைசி

- ஈரானின் புதிய அதிபராக இப்ராஹிம் ரைசி அதிகாரப் பூர்வமாகப் பதவியேற்றார்.
- ஜூன் மாதம் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டு ஈரானிய அதிபர் தேர்தலில் 62% வாக்குகளுடன் இவர் வெற்றி பெற்றார்.
- 60 வயதான ரைசி ஹாசன் ரூஹானியை (Hassan Rouhani) அடுத்து அவர் அந்தப் பதவியினை ஏற்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஈரானின் தலைமை நீதிபதியாகவும் அவர் பணியாற்றி உள்ளார்.



## ஃபோர்ப்ஸ் நிகழ்நேர கோடீஸ்வரர்கள் பட்டியல்

- ❖ லூயிஸ் வூயிட்டான் என்ற நிறுவனத்தின் தலைவர் பெர்னார்டு அர்னால்டு, அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸைப் பின்னுக்குத் தள்ளி உலகின் பெரும் பணக்காரராக உருவெடுத்துள்ளார்.
- ❖ ஃபோர்ப்ஸ் நிகழ்நேர கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்தத் தகவலானது கூறப்பட்டு உள்ளது.
- ❖ டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் X ஆகியவற்றின் தலைவர் எலான் மஸ்க் மூன்றாமிடத்தில் உள்ளார்.

## DBS வங்கி

- ❖ ஃபினான்சியஸ் டைம்ஸ் பத்திரிக்கையின் வெளியீடான தி பேங்கர் எனும் இதழால் டிஜிட்டல் வங்கிச் சேவையில் மிகவும் புதுமைமிக்க வங்கிக்கான ஒரு உலகளாவிய வெற்றியாளராக DBS வங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆசிய-பசிபிக் பகுதியின் வெற்றியாளராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த வங்கியானது அதன் பாதுகாப்பான அணுகல் முறை மற்றும் தொலை உணர்வுச் செயல்பாட்டுத் தீர்வுகள் ஆகியவற்றிற்காக இணையவழிப் பாதுகாப்புப் பிரிவிலும் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்து.
- ❖ யூரோமணி பிராந்திய விருது விழாவில் DBS வங்கியானது ஆசியாவின் சிறந்த வங்கி எனவும் ஆசியாவின் சிறந்த டிஜிட்டல் வங்கி எனவும் குறிப்பிடப்பட்டது.

## பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான கூட்டணி

- ❖ பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் இன்று வரை 25 நாடுகள் மற்றும் 7 சர்வதேச அமைப்புகள் உறுப்பினராக இணைந்துள்ளன.
- ❖ இக்கூட்டணியின் புதிய உறுப்பினர்களாக வங்காளதேசமும் கனடாவும் இணைந்து உள்ளன.
- ❖ 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பருவநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் உரையாற்றிய போது பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான கூட்டணியைத் தொடங்கி வைத்தார்.

- உள்கட்டமைப்பு, இடர் மேலாண்மை, நிதிவழங்கல், தரநிலைகள் மற்றும் மீட்பு வழிமுறைகள் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பகிர்வை ஊக்குவிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.




## கில்கிட் – பல்திஸ்தான்

- மூலோபயமிக்க வகையில் அமைந்துள்ள கில்கிட் – பல்திஸ்தான் பகுதிக்கு தற்காலிக மாகாண அந்தஸ்து வழங்குவதற்கான ஒரு சட்டத்தினைப் பாகிஸ்தான் நாட்டு அதிகாரிகள் இறுதி செய்துள்ளனர்.
- கில்கிட் – பல்திஸ்தான், இந்தியாவின் சர்ச்சை மிகுந்த பகுதிகளுள் ஒன்றாகும்.
- இது லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் வடக்கு முனையில் அமைந்துள்ள உயரமானப் பிராந்தியத்தின் ஒரு பகுதியாகும்.
- இது பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் சீனா ஆகியவற்றின் எல்லையாக அமைந்திருப்பதால் மூலோபயமிக்கப் பகுதியாக உள்ளது.




- இது 1947 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு முன்னாள் சுதேச மாகாணமான ஜம்மு & காஷ்மீரின் ஒரு பகுதி என இந்தியா இப்பகுதி மீது உரிமை கோருகிறது.
- இருப்பினும் பழங்குடியினப் போராளிகள் மற்றும் பாகிஸ்தான் இராணுவம் ஆகியவற்றின் படையெடுப்பைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு நவம்பர் 04 முதல் இப்பகுதியானது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ளது.

- தற்போது கில்கிட் – பல்திஸ்தான் ஒரு தன்னாட்சி பகுதியாகும்.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்டப் பிறகு இது பாகிஸ்தானின் 5வது மாகாணமாக மாறும்.
- தற்போது பாகிஸ்தானில் பலுச்சிஸ்தான், கைபர் பக்துன்க்வா, பஞ்சாப் மற்றும் சிந்து ஆகிய 4 மாகாணங்கள் உள்ளன.

## சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நீதி அமைச்சர்கள் சந்திப்பு

- இந்த 3 நாட்கள் அளவிலான சந்திப்பானது தஜிகிஸ்தானில் நடைபெற்றது.
- தஜிகிஸ்தான் நாட்டின் நீதித் துறை அமைச்சர் M.K. அசுரியோன் இந்தச் சந்திப்பிற்குத் தலைமை ஏற்றார்.
- இந்தியா, கசகஸ்தான், சீனா, கிர்கிஷ் குடியரசு, பாகிஸ்தான், ரஷ்யக் கூட்டமைப்பு, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் சட்டம் & நீதித் துறை அமைச்சகத்தின் அமைச்சகர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.
- மத்தியச் சட்டத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு காணொலி வாயிலாக இச்சந்திப்பில் பங்கேற்றார்.
- சட்டம் மற்றும் நீதித் துறைக்கான இணை அமைச்சர் பேராசிரியர் S.P. சிங் பாகேல் அவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.


## மார்பர்க் வைரஸ் நோய்

- மேற்கு ஆப்பிரிக்காவின் தெற்கு குக்கெடோ மாகாணத்தில் மார்பர்க் வைரஸ் நோய் பதிவாகியுள்ளதை உலக சுகாதார அமைப்பு உறுதி செய்துள்ளது.
- வௌவால்களால் பரப்பப் படுகின்ற இந்த வைரசானது 88% வரையில் உயிரிழப்பு வீதத்தினைக் கொண்டதாகும்.
- மார்பர்க் வைரசானது குருதிப் போக்குக் காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய, எபோலா நோயை உண்டாக்கும் அதே வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தீவிரமான வைரஸ் நோயாகும்.

## உலக இளையோர் மேம்பாட்டுக் குறியீடு, 2020

- 2020 ஆம் ஆண்டு உலக இளையோர் மேம்பாட்டுக் குறியீட்டில் இடம்பெற்ற 180 நாடுகளில் இந்தியா 122வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- 181 நாடுகளின் இளையோர் மேம்பாடு குறித்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இந்தக் குறியீட்டினை காமன்வெல்த் செயலகம் வெளியிடுகிறது.
- உலகெங்கிலும் உள்ள 181 நாடுகளின் இளையோர்களின் நிலையை இக்குறியீடானது மதிப்பிடுகிறது.
- இக்குறியீட்டில் முதன்முறையாக சிங்கப்பூர் நாடு முதலிடத்தினைப் பெற்றுள்ளது.
- இதனையடுத்து, சுலோவேனியா, நார்வே, மால்டா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் உள்ளன.

- சாட், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, தெற்கு சூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜர் ஆகியவை இக்குறியீட்டின் கீழ்நிலையிலுள்ள நாடுகளாகும்.




## DABUS – காப்புரிமை

- உலகிலேயே முதன்முறையாக ஒரு ‘செயற்கை நுண்ணறிவு’ அமைப்பிற்கு தென் ஆப்பிரிக்க நாடு காப்புரிமையினை வழங்கியுள்ளது.
- இந்த காப்புரிமையானது பின்ன வடிவியல் அடிப்படையிலான உணவுக் கொள்கலனுடன் (food container based on fractal geometry) தொடர்புடைய DABUS எனும் செயற்கை நுண்ணறிவு அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- DABUS என்பது (Device for the autonomous boot strapping of Unified Sentience) ஸ்டீபன் தாலேர் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு அமைப்பாகும்.

## ஆசியான் பிராந்திய மன்றத்தின் வெளியுறவு அமைச்சர்களின் 28வது சந்திப்பு

- ஆசியான் பிராந்திய மன்றத்தின் வெளியுறவு அமைச்சர்களின் 28வது சந்திப்பில் பங்கேற்ற இந்தியப் பிரதிநிதிக் குழுவிற்கு வெளியுறவுத் துறை இணை அமைச்சர் டாக்டர். ராஜ்குமார் ரஞ்சன் சிங் தலைமை வகித்தார்.
- இந்தச் சந்திப்பானது புருனே தாருசலாம் தலைமையில் நடைபெற்றது.
- ஆசியான் பிராந்திய மன்றத்தின் அமைச்சர்கள் இணைந்து இளையோர், அமைதி மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான செயல்பாட்டு நிரல்கள் குறித்த ஒரு இணை அறிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## கொரோனா வைரஸ் தொடர்பான கண்டுபிடிப்புகளின் தரவரிசை

- உலக நாடுகளுக்கான கொரோனா வைரஸ் தொடர்பான கண்டுபிடிப்புகளின் தர வரிசையில் இந்தியா ஆறு இடங்கள் பின்தள்ளப்பட்டு 32வது இடத்தைப் பெற்றுள்ளது.
- UNAIDS அமைப்பின் சுகாதாரப் புதுமைப் பரிமாற்ற அமைப்புடன் இணைந்து ஸ்டார்ட் அப் பிளிங்க் (StartupBlink) என்ற அமைப்பினால் உருவாக்கப்பட்ட அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.

- பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட புதுமையான தீர்வுகளின் அடிப்படையில் உலகின் முதல் 40 நாடுகளையும் முதல் 100 நகரங்களையும் இந்த அறிக்கை தரவரிசைப்படுத்துகிறது.
- இந்தியாவின் பெங்களூரு (49வது) மற்றும் புதுடெல்லி (55வது) ஆகிய இரு நகரங்கள் முதல் 100 இடங்களில் உள்ளன.
- இந்த ஆண்டு இந்தியாவில் கோவிட் தொடர்பான 15 புதுமையான கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு
    - தடுப்பு நடவடிக்கையில் நான்கு கண்டுபிடிப்புகள்
    - உதவி மற்றும் ஆதரவு நடவடிக்கைகளில் மூன்று,
    - தகவல் வழங்கீட்டில் ஒன்று,
    - சிகிச்சை வழங்கலில் மூன்று மற்றும்
    - பரிசோதனையில் நான்கு
- அமெரிக்க நாடானது இந்தப் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.



Source: COVID-19 Innovation Report 2021 by StartupBlink and Health Innovation Exchange, UNAIDS

## Wolf – Warrior இராஜதந்திரமுறை

- சீன வெளியுறவுத் துறை அமைச்சகமானது சமீபத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளுக்கு எதிராக ஒரு அதிகரிக்கப்பட்ட அளவில் தனது கடுமையானப் போக்கினை மேற்கொண்டு உள்ளது.
- ‘Wolf-Warrior இராஜதந்திர முறை’ என்று அழைக்கப்படும் இந்தப் புதிய அணுகுமுறையானது சீன நாட்டிற்குள் பிரபலமாக உள்ளது.

- இது சீனாவின் பழமையான, செயலற்ற மற்றும் தாழ்நிலையிலான ஒரு இராஜதந்திர அணுகுமுறையை உறுதியான, செயல்திறன்மிக்க மற்றும் உயர்நிலையிலான ஒன்றாக மாற்றுவதை ஊக்குவிக்கிறது.
- Wolf Warrior மற்றும் Wolf Warrior II ஆகியவை சீன சிறப்புப் படைப் பிரிவின் முகவர்களை முன்னிலைப்படுத்தும் வகையில் சீனாவில் வெற்றி பெற்ற சிறப்புத் திரைப்படங்கள் ஆகும்.
- அந்தத் திரைப்படங்களின் பாணியில் பெயரிடப்பட்ட Wolf-Warrior எனும் இராஜதந்திர அணுகுமுறையானது, சீனாவின் தேசநலன்களைப் பாதுகாப்பதற்காக பெரும்பாலும் மோதல் ரீதியிலான வழிகளைக் கையாண்ட சீன அரசின் ராஜ்ஜிய அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து விவரிக்கின்றது.

## SEACAT கடற்படைப் பயிற்சி

- சிங்கப்பூரில் அமெரிக்கக் கடற்படையினால் நடத்தப்பட்ட தென்கிழக்காசிய ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி எனும் ஒரு இராணுவப் பயிற்சியில் இந்தியக் கடற்படை பங்கேற்றது.
- இணைச் செயல்பாடுகளை மேம்படுத்துவதும் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களைப் பகிர்வதும் விதிமுறைகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குமுறையைக் காப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- இது 20வது இராணுவப் பயிற்சியாகும்.
- இது முதன்முறையாக 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.




## காபூலில் தாலிபன் படைகள்

- ஆப்கானிஸ்தான் அரசானது தாலிபன் படைகளிடம் சரணடைந்ததையடுத்து அந்நாட்டு அதிபர் அஷ்ரஃப் கானி தனது ராஜினாமா குறித்து அறிவித்துள்ளார்.
- இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி தஜிகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றார்.
- ஆப்கானிஸ்தானின் இராணுவப் படைகளானது தலைநகர் காபுலை தாலிபன்களிடம் ஒப்படைத்தது.
- தாலிபன் படைத் தலைவர் அப்துல் கானி பராதர், ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராகப் பொறுப்பேற்க உள்ளார்.




## SAGO

- உலக சுகாதார அமைப்பானது புதிய ஆலோசக சேவைக் குழு ஒன்றை உருவாக்கி உள்ளது.
- இதற்கு புதிய நோய்க் கிருமிகளின் தோற்றம் குறித்த சர்வதேச அறிவியல் ஆலோசக சேவைக் குழு என (International Scientfic Advisory Group for Origins of Novel Pathogens - SAGO) பெயரிடப் பட்டுள்ளது.
- வருங்காலத்தில், பெருந்தொற்றை ஏற்படுத்தக்கூடிய வல்லமையுடன் கூடிய புதிய நோய்க் கிருமிகளின் தோற்றத்தைப் பற்றிய முறையான ஆய்வினை மேற்கொள்ளச் செய்வதும், உலக சுகாதார அமைப்பிற்கு இது குறித்த மேம்பாட்டு ஆலோசனைகளை வழங்குவதுமே இதன் செயல்பாடு ஆகும்.
- SARS – CoV – 2 எனும் வைரசின் தோற்றத்தினைக் கண்டறிவதிலும் இந்தக் குழு ஈடுபட உள்ளது.

## தெற்காசியாவின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் மன்றம்

- 2021 ஆம் ஆண்டிற்கான தெற்காசிய தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் மன்றத்தினுடைய 11வது வருடாந்திரச் சந்திப்பானது இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரும், இம்மன்றத்தினுடையத் தலைவருமான சுசீல் சந்திரா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இவரோடு தேர்தல் ஆணையர்கள் ராஜீவ்குமார் மற்றும் A.C. பாண்டே ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.
- இந்தக் காணொலி வாயிலான சந்திப்பானது பூடானின் தேர்தல் ஆணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- தங்க முத்துக்களைக் கொண்ட இம்மன்றத்தின் சின்னமானது ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை, பாரபட்சமின்மை மற்றும் ஒத்துழைப்பின் நித்திய மதிப்புகளைக் குறிக்கிறது.
- இந்தச் சந்திப்பானது ‘தேர்தல்களில் தொழில்நுட்பப் பயன்பாடு’ (Use of Technology in Elections) எனும் கருப்பொருளின் கீழ் நடத்தப் பட்டது.




## தொலை உணர்வு செயற்கைக்கோள் தரவுப் பகிர்வில் ஒத்துழைப்பு

- BRICS நாடுகளானது (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா) தொலை உணர்வு செயற்கைக்கோள் தரவுப் பகிர்வில் ஒத்துழைப்பிற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது BRICS நாடுகளின் விண்வெளி நிறுவனங்களுடைய குறிப்பிட்ட தொலை உணர்வு செயற்கைக் கோள்களின் ஒரு மெய்நிகர் தொகுப்பினை உருவாக்கி அந்தந்த நாடுகளின் விண்வெளி மையங்கள் தரவுகளைப் பெற வழி வகுக்கும்.
- இந்த BRICS ஒப்பந்தமானது, இந்தியாவின் தலைமையின் கீழ் கையெழுத்தானது.

## இந்தியாவில் வியட்நாம் தூதரக அலுவலகம்

- வியட்நாம் நாடானது இந்தியாவில் தனது முதல் தூதரக அலுவலகத்தினை பெங்களூருவில் திறந்துள்ளது.
- N.S. ஸ்ரீனிவாச மூர்த்தி என்பவரை தனது தூதராக வியட்நாம் நியமித்துள்ளது.
- இந்திய நாடானது வியட்நாமின் 26வது முதலீட்டுப் பங்குதாரர் நாடு ஆகும்.
- வியட்நாம் நாடானது தென் கிழக்காசிய நாடுகள் கூட்டிணைவில் இந்தியாவின் 4வது மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாகும்.

## கொலராடோ ஆற்றுப்படுகை – தண்ணீர் பற்றாக்குறை

- வரலாற்றில் இல்லாத வறட்சி காரணமாக கொலராடோ ஆற்றுப்படுகையில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதாக முதல்முறையாக அமெரிக்காவின் மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டு முதல், கொலராடோ ஆற்றுப்படுகையில் நீடித்த வறட்சியானது தொடர்ந்து நிலவி வருகிறது.
- இந்த தொடர் வறட்சியானது, பல ஆண்டுகளாக நீர்த்தேவையைப் பூர்த்தி செய்து வந்த இந்த ஆற்றுப் படுகையிலுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்களை குறைக்க வழி வகுத்துள்ளது.
- மீயட் ஏரி மற்றும் பாவெல் ஏரி (Lake Mead and Lake Powell) ஆகியவை இந்த தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளான இரு ஏரிகளாகும்.

- கொலராடோ நதியானது ராக்கி மலைகளிலிருந்து தென்மேற்கு அமெரிக்காவிலும் மெக்சிகோவிலும் பாய்கின்றது.
- இந்த நதிக்கான நீர்வரத்தானது ராக்கி மற்றும் வாசாட்ச் மலைகளிலுள்ள பனிப் பாறைகள் உருகுவதன் மூலம் கிடைக்கின்றன.




## ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

- முல்லா அப்துல் கனி பராதர் ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக அறிவிக்கப் பட்டு உள்ளார்.
- அந்த நாட்டின் பெயரானது "ஆப்கானிஸ்தானிய இஸ்லாமிய அமீரகம்" என மாற்றப் பட்டுள்ளது.
- ஷஹாதாவுடன் (shahadah) கூடிய ஒரு வெள்ளைக் கொடியானது மீண்டும் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.



## ஆப்கானிஸ்தானில் நிலவும் பட்டினி நிலை

- உலக உணவுத் திட்டமானது ஆப்கானிஸ்தான் நாட்டு மக்கள் தீவிரமான பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர் என்று கூறியுள்ளது.
- இது கடந்த மூன்று ஆண்டுகளில் ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளும் மூன்றாவது வறட்சி ஆகும்.

- இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியானது நாட்டில் நிலவிய மோதல்களோடு ஒன்றிணைந்து ஏற்பட்டுள்ளது.
- உலக உணவுத் திட்டம் என்பது உணவு சார்ந்த உதவிகள் வழங்குவதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு கிளை அமைப்பாகும்.
- இது உலகின் மிகப்பெரிய மனிநேய அமைப்பாகும்.
- 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த அமைப்பின் தலைமையகமானது ரோமில் அமைந்துள்ளது.

## குழந்தைகளின் பருவநிலை இடர்க் குறியீடு

- "பருவநிலை நெருக்கடி என்பது ஒரு குழந்தை உரிமைகள் நெருக்கடி : குழந்தைகளின் பருவநிலை இடர்க் குறியீட்டினை அறிமுகப்படுத்துதல் (The Climate Crisis Is a Child Rights Crisis: Introducing the Children's Climate Risk Index)" எனும் அறிக்கையினை யுனிசெஃப் வெளியிட்டுள்ளது.
- இக்குறியீடானது புயல் மற்றும் வெப்பக்காற்று போன்ற பருவநிலை மற்றும் சுற்றுச் சூழல் இடர்களில் குழந்தைகளின் வெளிப்பாட்டின் அடிப்படையில் நாடுகளைத் தரநிலைப் படுத்துகிறது.
- பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா உள்ளிட்ட நான்கு தெற்காசிய நாடுகளில் உள்ள குழந்தைகள் பருவநிலை நெருக்கடியில் அதிகப் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர்.
- இவை முறையே 14, 15, 25 மற்றும் 26வது இடங்களில் உள்ளன.
- இக்குறியீடானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சமூக-பொருளாதார ரீதியில் பாதகமான விளைவுகள் ஏற்பட வழி வகுப்பதோடு, மீண்டும் மீண்டும் உருவாகி வரும் சுற்றுச்சூழல் இடர்களாக உள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் காற்று மாசுபாடு போன்றவற்றுடன் கூடிய 33 மிக அதிக இடர் உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியாவை வைத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் மிகவும் மாசுபட்ட காற்றுடைய உலகின் 30 நகரங்களுள் 21 நகரங்கள் இந்தியாவில் இருந்தன.




## 3 வயது குழந்தைகளுக்கான கோவிட் எதிர்ப்பொருள் சோதனை – இஸ்ரேல்

- 3 வயது குழந்தைகளுக்கான கோவிட் எதிர்ப்பொருள் (ஆன்டிபாடி) சோதனையை இஸ்ரேல் தொடங்கியுள்ளது.
- இது தடுப்பூசி போடப்படாத, கொரோனா வைரசிற்கு எதிரான எதிர்ப்பொருட்களைப் (ஆன்டிபாடியை) பெற்ற இளையோர்களின் சரியான எண்ணிக்கையைப் பெறுவதற்காக தொடங்கப்பட்டுள்ளது.
- பள்ளிகள் திறக்கப்படுவதைத் தொடர்ந்து இந்த சோதனைகள் தொடங்கப் பட்டு உள்ளன.
- 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டக் குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்துவதை இஸ்ரேல் ஏற்கனவே தொடங்கி விட்டது.

## வெப்பமண்டலப் புயல் – ஹென்றி

- ஹென்றி எனப் பெயரிடப்பட்ட ஒரு வெப்ப மண்டலப் புயலானது மேற்கு ரோடே தீவின் அருகே சமீபத்தில் கரையைக் கடந்தது.
- ரோடே தீவு என்பது அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து பகுதியிலுள்ள ஒரு மாகாணம் ஆகும்.
- பரப்பளவைப் பொருத்தவரை இது அமெரிக்காவின் மிகச்சிறிய மாகாணமாகும்.
- 30 ஆண்டுகளில் நியு இங்கிலாந்து பகுதியைத் தாக்கிய முதல் சூறாவளி இதுவாகும்.




## 100% புதைபடிமமற்ற ஹைட்ரஜன்

- ஸ்வீடனிலுள்ள பசுமை எஃகு உற்பத்தி நிறுவனமான 'HYBRIT', நிலக்கரியைப் பயன்படுத்தாமல் தயாரிக்கப்பட்ட எஃகினை உலகிலேயே முதல்முறையாக தனது வாடிக்கையாளருக்கு விநியோகம் செய்துள்ளது.
- இந்த எஃகானது ஹைட்ரஜன் ஊடு வழி இரும்புத் தயாரிப்புத் தொழில்நுட்பத்தை (Hydrogen Breakthrough Ironmaking Technology) கொண்டு உருவாக்கப்பட்டது.
- இந்நிறுவனம் தனது தயாரிப்புப் பொருளின் சோதனை ஓட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் புதைபடிமமற்ற எஃகினை வால்வோ குழுமத்திற்கு விநியோகிக்கத் தொடங்கி உள்ளது.




## உலகப் பொருளாதார மன்றத்தின் ‘நிலையான மேம்பாட்டின் தாக்கம்’ குறித்த உச்சி மாநாடு – 2021

- உலகப் பொருளாதார மன்றத்தின் ‘நிலையான மேம்பாட்டின் தாக்கம்’ குறித்த ஒரு வருடாந்திர உச்சி மாநாடானது சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 20 முதல் 23 வரை நடைபெற உள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த ஆண்டிற்கான இந்த உச்சி மாநாட்டை “சமமான, உள்ளார்ந்த மற்றும் நிலையான மீள்வினை வடிவமைத்தல்” என்ற ஒரு கருப்பொருடன் நடத்துகிறது.




## பாதுகாப்பான நகரங்களின் குறியீடு 2021

- ‘டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகன், 2021 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பான நகரங்களின் குறியீட்டில்’ மதிப்பிடப்பட்ட 60 உலக நாடுகளுள் உலகின் பாதுகாப்பான நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது பொருளாதார நுண்ணறிவு அலகு (EIU) என்ற அமைப்பினால் வெளியிடப் படுகிறது.
- யாங்கோன் நகரம் இப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.
- இதில் புதுடெல்லி 48வது இடத்திலும் மும்பை 50வது இடத்திலும் உள்ளன.




## Fatah – 1

- பாகிஸ்தான் நாடானது Fatah – 1 என்ற ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்து உள்ளது.
- Fatah – 1 என்பது பாகிஸ்தான் நாட்டினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டப்பட்ட பல ஏவு தளங்களில் இருந்து செலுத்தப்படும் முறையிலான (ராக்கெட்) ஒரு ஏவுகணை அமைப்பாகும்.
- பாகிஸ்தான் இராணுவமானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சாகீன் I-A எனப்படும் ஒரு நடுத்தர வரம்புடைய உந்துவிசை ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.


## உலகின் உயரமான ராட்டினம்

- ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள துபாயில் உலகின் மிகப்பெரிய மற்றும் உயரமான ராட்டினமானது திறக்கப்பட உள்ளது.
- 250 மீ உயரமான (820 அடி) 'அயின் துபாய்' என்றழைக்கப்படும் இந்த ராட்டினமானது புளூவாட்டர்ஸ் தீவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது தற்போது உலகின் உயரமான ராட்டினமாக திகழும் லாஸ்வேகாசில் அமைந்த 'ஹை ரோலர்' என்ற ஒரு ராட்டினத்தை விட உயரமானதாகும்.



## ஹவானா குறைபாட்டு நோய்

- ஹவானா குறைபாட்டு நோய் என்று குறிப்பிடப்படும் ஒரு மர்ம நோய் வியட்நாமின் ஹானோய் என்னுமிடத்தில் சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- ஹவானா குறைபாட்டு நோயானது 2016 ஆம் ஆண்டில் கியூபாவில் தங்கியிருந்த அமெரிக்க அரசின் வெளியுறவுத் துறை அதிகாரிகளிடையே முதன்முதலில் கண்டு பிடிக்கப் பட்டது.
- ஹவானாவில் தங்கியிருந்த அமெரிக்க அரசின் வெளியுறவுத் துறை மற்றும் ஊழியர்கள் வித்தியாசமான ஒலிகளைக் கேட்ட பின்பு வித்தியாசமான உடல் உணர்வுகளை உணர்ந்து உடல்நிலை சரியில்லாமல் போனதாக தெரிவித்தனர்.
- தேசிய அறிவியல் கல்விக் கழகத்தின் சமீபத்திய அறிக்கையில் "குறிப்பிட்ட" நுண்ணலை கதிர் வீச்சு தான் இதற்கான ஒரு நம்பத் தகுந்த காரணமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.




## எப்பொழுதும் உள்ள (என்டமிக்) நிலையை எட்டும் கோவிட்-19 தொற்று

- உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியாலாளர் டாக்டர் சௌமியா சுவாமி நாதன் கோவிட்-19 தொற்றானது என்டமிக் அல்லது எப்பொழுதும் உள்ள நிலையை எட்டக் கூடும் எனக் கூறியுள்ளார்.
- இந்த அறிவிப்பின் மூலம், சில மக்களுக்குத் தொற்று ஏற்பட்டாலும் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் தொற்றுப் பரவல் விகிதம் குறைவானது முதல் மிதமானது வரை இருக்கும் என்று தெரிய வருகிறது. அந்தக் காரணங்களாவன
  - இயற்கையான நோயெதிர்ப்பு
  - தடுப்பூசியால் தூண்டப்பட்ட நோயெதிர்ப்பு மற்றும்
  - புவியியல் இடம் சார்ந்த மக்கள்தொகை
- SARS-Cov-2 தொற்றானது இன்னும் சில வருடங்களில் சாதாரண சளியை விட குறைந்த தாக்கத்தைக் கொண்ட ஒரு நிலைக்கு மாறி விடும் என ஒரு மாதிரி ஆய்வில் கூறப் பட்டுள்ளது.

*குறிப்பு*

- ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்கள்தொகையின் மத்தியில் நிலவும் ஒரு நோய் அல்லது தொற்றுநோய் காரணி தொடர்ந்து அப்பகுதியில் நிலவி வருதல் (அ) வழக்கமாக பரவி வருதல் என்பதைக் குறிப்பதே என்டமிக் நிலையாகும்.



# பொருளாதாரச் செய்திகள்

## முன்தேதியிட்ட வருமான வரிச் சட்டப்பிரிவு நீக்கம்

- ❖ நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வருமான வரிச் சட்டத்தின் விதிமுறைகளை ரத்து செய்வதற்கான ஒரு மசோதாவினைப் பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தி உள்ளார்.
- ❖ இந்த மசோதாவானது வோடஃபோன், கெயிர்ன் மற்றும் இதர சில நிறுவனங்களின் மீது 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் முந்தைய திருத்தங்களின் கீழ் கோரப்பட்ட கோரிக்கைகளைத் திரும்பப் பெறுகிறது.
- ❖ இந்த மசோதாவானது வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க முனைகிறது.
- ❖ 2012 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதிக்கு முன்பு பரிமாற்றம் மேற்கொள்ளப் பட்டிருந்தால், முந்தைய காலத்தின் திருத்தங்களின் படி வருங்காலத்தில் எந்தவொரு மறைமுக இந்தியச் சொத்துப் பரிமாற்றத்திற்கும் வரி கோரிக்கை விடுக்கப்படாது என இந்த மசோதா கூறுகிறது.

**WAS INTRODUCED IN MARCH 2012**

**2007:** Hutch sells 67% interest in Hutch Essar to Vodafone's Dutch affiliate through a Cayman Islands entity holding direct and indirect stake in the Indian company telco

➤ I-T demands $2.2bn capital gains as it involved Indian firm. Vodafone refuses to pay, says deal carried out offshore. Bombay HC rules for tax dept

**Jan 2012:** Supreme Court rules in favour of Vodafone

**March 2012:** Govt introduces 'retro amendment' to tax laws

**Jan 2014:** Tax probe against Cairn

**March 2015:** Cairn begins international arbitration under India-UK investment treaty

**2016:** Vodafone seeks arbitration under India-Netherlands treaty

**Sept 2020:** Vodafone wins arbitration award

**Dec 2020:** Int'l tribunal rules in favour of Cairn, orders govt to refund $1.4bn (with interest)

**2021:** Govt challenges rulings

## செல்வச் சிறப்புமிக்க கிராமம்

- ❖ குஜராத்திலுள்ள மதாபர் கிராம மக்கள் 17க்கும் மேற்பட்ட வங்கிகளில் 5000 கோடி ரூபாய் மதிப்பிலான வைப்புத் தொகையினை வைத்துள்ளனர்.
- ❖ இதன் மூலம் குஜராத்திலுள்ள மதாபர் கிராமம் உலகளவில் செல்வச் சிறப்புமிக்க கிராமமாக திகழ்கிறது.
- ❖ மதாபர் கிராமம் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## ரூ.3 டிரில்லியன் சந்தை மூலதனத்தை எட்டிய 4வது தகவல் தொழில்நுட்ப நிறுவனம் – HCL

- ❖ HCL டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் சந்தை மூலதனமானது முதல்முறையாக 3 டிரில்லியன் ரூபாயை எட்டியுள்ளது.
- ❖ டாடா ஆலோசக சேவை நிறுவனம், இன்ஃபோசிஸ் மற்றும் விப்ரோ ஆகியவற்றை அடுத்து இந்த மைல்கல்லை எட்டியுள்ள 4வது இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் HCL நிறுவனம் ஆகும்.

❖ டாடா மற்றும் இன்ஃபோசிஸ் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக வருவாய் அடிப்படையில் 3வது மிகப்பெரிய ஒரு தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனமாக HCL டெக்னாலஜீஸ் நிறுவனம் திகழ்கிறது.

**THE LEADERBOARD**

| Rank | Name | Mcap (₹ Tn) |
|---|---|---|
| 1 | Reliance Industries | 14.23 |
| 2 | TCS | 12.81 |
| 3 | HDFC Bank | 8.44 |
| 4 | Infosys | 7.26 |
| 5 | Hindustan Unilever | 5.65 |
| 6 | ICICI Bank | 4.88 |
| 7 | HDFC | 4.88 |
| 8 | State Bank of India | 3.85 |
| 9 | Bajaj Finance | 3.71 |
| 10 | Kotak Mahindra Bank | 3.54 |
| 11 | Bharti Airtel | 3.50 |
| 12 | Wipro | 3.37 |
| 13 | HCL Technologies | 3.04 |
| 14 | Asian Paints | 2.87 |
| 15 | ITC | 2.60 |

Source BSE; Compiled by BS Research Bureau

## சந்தை மூலதனம் – TCS

❖ டாடா ஆலோசக சேவை நிறுவனமானது (Tata Consultancy Services – TCS) 13 லட்சம் கோடி ரூபாய் அளவிலான சந்தை மதிப்பினைக் கடந்த இரண்டாவது இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.

❖ ரிலையன்ஸ் நிறுவனத்தைத் தொடர்ந்து TCS 2வது இடத்தினைப் பெற்றுள்ளது.

❖ TCS நிறுவனத்தின் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.



## நிதி உள்ளடக்கக் குறியீடு – RBI

**Financial Inclusion Index (FI-Index)**

- Introduced by RBI.
- Made without any 'base year'.
- Will be published annually in July every year.
- Its value ranges from 0 (complete financial exclusion) to 100 (full financial inclusion).
- Comprises of three parameters viz., Access (weightage 35%), Usage (weightage 45%) and Quality (weightage 20%).

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது நாட்டில் நிதி உள்ளடக்கத்தின் பரவலை அளவிடுவதற்கான கூட்டு நிதி உள்ளடக்கக் குறியீட்டினை (Financial Inclusion – FI) அறிவித்துள்ளது.

❖ 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலகட்டத்தில் 43.4 ஆக இருந்து FI குறியீட்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த கால கட்டத்திற்கான FI குறியீடானது 53.9 ஆக உள்ளது.

***FI குறியீடு பற்றிய தகவல்கள்***

❖ இந்த வருடாந்திரக் குறியீடானது ஒவ்வொரு வருடத்தின் ஜூலை மாதத்திலும் வெளியிடப்பட உள்ளது.

❖ இக்குறியீடானது அரசு மற்றும் அந்தந்த துறைகளின் ஒழுங்குமுறை அமைப்புகளின் ஆலோசனையோடு ஓய்வூதியத் துறை, வங்கி, முதலீடுகள், காப்பீடுகள், மற்றும் தபால் ஆகிய துறைகள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது.

❖ 0 முதல் 100 வரையிலான ஒற்றை மதிப்பில் பல்வேறு நிதி உள்ளடக்க அம்சங்கள் குறித்த தகவல்களை இந்தக் குறியீடு வெளிப்படுத்துகிறது.

❖ இங்கு 0 என்பது முழுமையான நிதி உள்ளடக்கத்தைக் குறிக்கிறது.

❖ 100 என்பது நிறைவான நிதி உள்ளடக்கத்தைக் குறிக்கிறது.

❖ இது எந்தவொரு அடிப்படை ஆண்டும் நிர்ணயிக்கப்படாமல் உருவாக்கப்பட்டுள்ளது.

## புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டில் ராதாகிஷன் தமானி

❖ Dmart (டிமார்ட்) பல்பொருள் அங்காடிகளின் கோடீஸ்வர நிறுவனதாரரான ராதா கிஷன் தமானி புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டின் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளார்.


❖ இக்குறியீடானது நிகர சொத்து மதிப்பின் அடிப்படையில் உலகின் முன்னணி கோடீஸ்வரர்களைத் தரவரிசைப்படுத்துகிறது.

❖ தமானி இப்பட்டியலில் 98வது இடத்தில் உள்ளார்.

## ஐசிஐசிஐ, ஸ்டான்சார்ட் மற்றும் HSBC - ‘பரிமாற்று வணிக ஒப்பந்தம்’

- ஐசிஐசிஐ வங்கியானது HSBC மற்றும் ஸ்டாண்டர்டு சார்டர்டு வங்கி ஆகிய வங்கிகளுடனான இந்தியாவின் முதலாவது பரிமாற்று வணிக ஒப்பந்தத்தினை (Swaption) துவங்கியுள்ளது.
- உள்நாட்டு கடன் சொத்துக்களுள் மேலும் அதிக வெளிநாட்டு நிதிகளை ஈர்ப்பதற்கு, உலகத் தரம் வாய்ந்த தீர்வுகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ள நாட்டின் வட்டி விகித கொணர்வுச் சந்தைகளில் இடர் மேலாண்மைக்கான ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க இது வழிவகுக்கிறது.
- ‘பரிமாற்று வணிக’ வட்டி விகித கொணர்வுச் சந்தை முறையானது உள்நாட்டு கடன்வாங்கு நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் உயர்ந்து வரும் விகித சூழ்நிலையில் நிதிச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும், வீழ்ச்சியுறும் சூழ்நிலையில் முதலீட்டு வருமானத்தைத் தக்க வைக்கவும் உதவ வேண்டும்.
- இந்திய ரிசர்வ வங்கியானது 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பரிமாற்று வணிக முறை ஒப்பந்தம் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது.

## உலகளாவிய இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீடு – 2021





- உலகளவிலான இணைய சங்கேதப் பண (crypto) ஏற்புக் குறியீட்டில் வியட்நாமைத் தொடர்ந்து இந்தியா 2வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இது செயின் அனாலிசிஸ் என்ற தொடர் சங்கிலி தொழில்நுட்ப தரவுத் தளத்தினால் வெளியிடப்படும் உலகளாவிய இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீட்டில் கூறப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, ரிப்பிள், எத்தேரியம் மற்றும் பிட்காயின் கேஷ் ஆகியவற்றை அடுத்து இந்தியாவில் பிட்காயின் மிகவும் பிரபலமானதாக உள்ளது.

## இணையவழிப் பாதுகாப்பு பல்முனை நன்கொடையாளர் அறக்கட்டளை நிதி

- உலக வங்கியானது பரவலான டிஜிட்டல் மேம்பாட்டுக் கூட்டிணைவு எனும் ஒரு தலைமைத்துவத் திட்டத்தின் கீழ் புதிய இணையவழிப் பாதுகாப்புப் பல்முனை நன்கொடையாளர் அறக்கட்டளை நிதி (Cybersecurity Multi-Donor Trust Fund) என்ற ஒன்றைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய நிதியானது இணையப் பாதுகாப்பு மேம்பாட்டுச் செயல்பாட்டு நிரல்களை சிறப்பாக வரையறுத்து, அவற்றை முறையாகச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக வங்கிகளின் திட்டங்கள் மற்றும் நிதி வழங்கலில் இணையப் பாதுகாப்பு கருதுகோள்களின் கணிசமான விளைவுகளின் பிரதிபலிப்பை உறுதி செய்ய இது உதவுகிறது.
- எஸ்தோனியா, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நன்கொடையாளர்களின் பங்களிப்புகளானது இந்த அறக்கட்டளை நிதியை தொடங்க வழி வகுத்தது.

## தேசியப் பணமாக்கல் தொடர் திட்டம்

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தேசியப் பணமாக்கல் தொடர் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- அடுத்த 4 ஆண்டுகளில் விற்கப்பட இருக்கும் அரசின் உள்கட்டமைப்பு சார்ந்த சொத்துகளைப் பட்டியலிடுவதற்கான முயற்சிகளை இது மேற்கொள்கிறது.
- இது அரசின் உற்பத்தித் துறை (பிரவுன்ஃபீல்டு) உள்கட்டமைப்பு சார் சொத்துகளின் 4 ஆண்டு தொடர் திட்டத்தினை உள்ளடக்கியதாகும்.
- 2021-22 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் உள்கட்டமைப்பிற்கான புத்தாக்க மற்றும் மாற்று நிதி வழங்கலை உருவாக்குவதற்காக வேண்டி அரசின் சொத்துக்களைப் பணமாக்குதல் குறித்து பெருமளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பல முக்கிய அறிவிப்புகளும் அதில் உள்ளடக்கப்பட்டது.



## 100 பில்லியன் டாலர் சந்தை மூலதனத்தைக் கடந்த இன்போசிஸ் நிறுவனம்

- மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்போசிஸ் நிறுவனத்தின் பங்குகள் சந்தை மூலதனத்தில் 100 பில்லியன் டாலர் என்ற மதிப்பைக் கடந்தது.
- இந்த மைல்கல்லை அடைந்த 4வது இந்திய நிறுவனம் இதுவாகும்.
- மற்ற மூன்று இந்திய நிறுவனங்கள் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ், டாடா ஆலோசக சேவை நிறுவனம் மற்றும் HDFC வங்கி ஆகியனவாகும்.




## பாரத்பே – புதிய செயலி

- பாரத்பே நிறுவனமானது "12% club" எனப்படும் செயலி ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது 12% வருடாந்திர வட்டி வீதம் வரை முதலீடு செய்யவும் மற்றும் வருமானம் ஈட்டவும் அல்லது அதே வீதத்தில் கடன் பெறவும் வாடிக்கையாளர்களுக்கு வழி வகை செய்கிறது.





- இந்தச் செயலிக்காகவும் கடன் வழங்கு ஏற்பாடுகளுக்காகவும் வேண்டி பாரத்பே நிறுவனம் லென்டென்கிளப் (LenDenClub) என்ற ஒரு நிறுவனத்துடன் (இந்திய ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி சாரா நிதியியல் நிறுவனம்) கைகோர்த்து உள்ளது.
- வாடிக்கையாளர்கள் 12% Club செயலியில் கடன் வழங்குதலை தேர்வு செய்வதன் மூலம் எப்போது வேண்டுமானாலும் அதில் தங்கள் சேமிப்பை முதலீடு செய்யலாம்.
- இது தவிர, 12% Club செயலியில் 3 மாத காலத்திற்கு ரூ.10 லட்சம் வரை பிணையற்றக் கடன்களை வாடிக்கையாளர்கள் பெற இயலும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குறுகிய காமா கதிர் வெடிப்புகள்

- இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வானியலாளர்கள் குழு ஒன்று மிகக் குறுகிய, சக்தி வாய்ந்த கதிர்வீச்சு வெடிப்பினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது ஒரு விநாடி வரை நீடித்தது.
- இது பிரபஞ்சத்தின் தற்போதைய வயதின் பாதியளவு காலமாக புவியை நோக்கி நகர்ந்து வருகிறது.
- நாசாவின் பெர்மி – காமா கதிர் விண்வெளி தொலைநோக்கியால் கண்டுபிடிக்கப் பட்ட இந்த வெடிப்பானது ஒரு மிகப்பெரிய நட்சத்திரத்தின் செயலிழப்பினால் ஏற்பட்ட மிகக்குறுகிய காமா கதிர் வெடிப்பாக கூறப்படுகிறது.




## உலகின் முதல் மறுபதிவு செய்யக் கூடிய வணிக செயற்கைக்கோள்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது உலகின் முதலாவது மறுபதிவு செய்யக் கூடிய வணிக செயற்கைக் கோளினை விண்ணில் செலுத்த உள்ளது.
- இது யூடெல்சாட் குவாண்டம் (Eutelsat Quantum) என்று அழைக்கப்படுகிறது.
- இது ஏரியன் 5 ராக்கெட்டினுடைய விண்வெளி தாங்கு பொருளின் ஓர் அங்கமாக லத்தீன் அமெரிக்காவிலுள்ள கயானா விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் ஏவப் பட உள்ளது.
- யூடெல்சாட் குவாண்டம் ஆனது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் கூட்டிணைவுத் திட்டத்தின் கீழ், யூடெல்சாட் மற்றும் மேனுபேக்சரர் ஏர்பஸ் எனும் செயற்கைக்கோள் இயக்குநர் அமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்டதாகும்.
- குவாண்டம் செயற்கைக் கோளானது ஆசியா முதல் மேற்கு ஆப்பிரிக்கா வரையில் மிகப்பெரிய புவியியல் பகுதிகளுக்கு 15 ஆண்டு காலம் வரையில் சேவையினை வழங்கும்.




## நிசார் செயற்கைக்கோள்

- மேம்பட்ட ரேடார் வரைபடமிடுதல் முறையைப் பயன்படுத்தி உலக நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான இஸ்ரோ மற்றும் நாசா ஆகிய நிறுவனங்களால் இணைந்து உருவாக்கப்பட்ட NISAR (நாசா – இஸ்ரோ சிந்தெட்டிக் அப்பெர்சர் ரேடார்) என்ற செயற்கைக்கோளானது 2023 ஆம் ஆண்டின் முற்பகுதியில் விண்ணில் ஏவப்பட உள்ளது.
- இது ஒரு இரட்டை வரிசை (L கற்றை மற்றும் S கற்றை) ரேடார் வரைபடமிடுதல் திட்டமாகும்.
- இது நிலம், தாவரங்கள் மற்றும் தாழ்வெப்ப மண்டலப் பகுதிகளில் ஏற்படும் சிறு மாற்றத்தினையும் அளவிடக் கூடியது.
- நாசா நிறுவனமானது L கற்றையிலான (band) SAR மற்றும் அதன் இணை அமைப்புகளை உருவாக்கி வருகிறது.
- இஸ்ரோ நிறுவனமானது S கற்றையிலான SAR விண்வெளி கலம், ஏவுகலம் மற்றும் இதர ஏவுகல அமைப்புகள் ஆகியவற்றை உருவாக்கி வருகிறது.
- NISAR ஆனது இஸ்ரோ மற்றும் நாசா ஆகியவற்றின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஒன்றிணைவு ஆகும்.
- 2015 ஆம் ஆண்டில் முன்னாள் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா அவர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்த போது இந்தியாவும் அமெரிக்காவும் இத்திட்டத்தினை மேற்கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டன.

## சனி மற்றும் புவி

- சனிக் கோளும் புவியும் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 அன்று ஒன்றுக்கொன்று அருகருகே வந்தன.
- ஒவ்வொரு ஆண்டும் நிகழும் இந்நிகழ்வானது இரண்டு கோள்களும் தனது சுற்றுப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகையில் ஒன்றுக்கொன்று அருகே வரும் போது ஏற்படுகிறது.
- அறிவியல் ரீதியாக இந்நிகழ்வு 'Opposition' (எதிர்ப்பு) என்றழைக்கப் படுகிறது.




## நிலவின் மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகள்

- இஸ்ரோவின் சந்திரயான் – 2 விண்கலமானது நீரின் மேற்பரப்பில் நீரியல் மூலக் கூறுகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- நிலவில் 29 டிகிரி வடக்கு மற்றும் 62 டிகிரி வடக்கு அட்சரேகைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் OH மற்றும் $H_2O$ ஆகியவற்றின் தெளிவற்ற தடயங்களும் பரவலான சந்திர நீரேற்றமும் உள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பானது 'Science' என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளது.
- நீர் மூலக்கூறுகள் அல்லது ஹைட்ராக்சைல் உருவாக்கமானது விண்வெளிச் சிதைவு (space weathering) எனும் செயல்முறையால் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- நிலவின் மேற்பரப்பில் சூரியக்காற்று வீசும் போது விண்வெளிச் சிதைவு நடைபெறுகின்றது.

## உயிருள்ள மூளையிலுள்ள புரதங்களைக் கண்டறிய புதிய முறை

- உயிருள்ள விலங்கின் மூளையிலுள்ள வெவ்வேறு வகையான நியூரான்களினுள் உள்ள புரதங்களை அடையாளம் காண்பதற்கான புதிய மற்றும் வெற்றிகரமான அணுகுமுறை ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக வெளிக் கொணர்ந்து உள்ளனர்.
- இந்தப் புதிய ஆய்வானது நார்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகம் மற்றும் பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

*குறிப்பு*

- ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட இந்தப் புதிய ஆய்வில் ஒரு உயிருள்ள எலியின் மூளையிலுள்ள ஒரு துல்லியமான இடத்திற்கு ஒரு நொதியினைக் கொண்டுச் செல்வதற்கான ஒரு வைரசினை அவர்கள் வடிவமைத்துள்ளனர்.
- சோயா பீன்களிலிருந்து பெறப்பட்ட இந்த நொதியானது அதனருகே உள்ள புரதங்களை ஒரு குறிப்பிட்ட துல்லியமான இடத்தில் மரபணு ரீதியாக இணைக்கின்றது.


- இந்தத் தொழில்நுட்பமானது உயிருள்ள நியூரான்களினுள்ள உள்ள ஒட்டு மொத்த புரதங்களையும் புகைப்படமெடுத்து, பின்னர் ஒரு நிறமாலை மானியைக் (spectroscopy) கொண்டு பகுப்பாய்வு செய்கிறது.

## பென்சில் இழையைப் பயன்படுத்தி கோவிட் பரிசோதனை

- அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைகக்கழகத்தின் அறிவியலாளர்கள் ஒரு புதிய மலிவான, விரைவான மற்றும் துல்லியமான கோவிட் பரிசோதனை முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது SARS-Cov-2 வைரசைக் கண்டறிவதற்கு வேண்டி கிராபைட்டால் (graphite) ஆன மின்முனைகளைப் பயன்படுத்துகிறது.
- இதுவே பென்சில் இழையிலுள்ள பொருளாகும்.

### *கிராபைட்*

- கிராபைட் என்பது கார்பன் தனிமத்தினுடைய ஒரு படிக வடிவமாகும்.
- கிராபைட்டில் கார்பன் அணுக்கள் அறுகோண (hexagonal) அமைப்பில் அமைக்கப் பட்டிருக்கும்.
- இது பிளாம்பாகோ (plumbago) என்றும் அழைக்கப் படுகிறது.





## டைனோசர்களின் அழிவுக்குக் காரணமான குறுங்கோளின் தோற்றம்

- புவியிலிருந்து டைனோசர் இனத்தையே ஒட்டு மொத்தமாக அழித்த ஒரு குறுங்கோளானது மெக்சிகோ அருகே மோதி இருந்தது.
- இந்த மிகப்பெரியப் பாறையானது சிக்ஸ்யுலப் இம்பேக்டர் (Chicxulub impactor) என அழைக்கப் படுகிறது.
- டைனோசர்கள் மற்றும் இதர சில உயிரினங்களின் ஒட்டு மொத்த அழிவானது 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது.
- இது மீசோசோயிக் சகாப்தத்தின் முடிவாகப் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ‘அணுக்கரு இணைவு’

- கலிஃபோர்னியாவின் இயற்பியலாளர்கள், மூன்று கால்பந்தாட்ட மைதானங்கள் அளவிலான லேசரைப் பயன்படுத்தி, அணுக்கரு இணைவிலிருந்து மிகப்பெரிய அளவிலான ஆற்றலை உருவாக்கியுள்ளனர்.
- ஒரு புதிய தூய ஆற்றல் மூலத்தினை உருவாக்குவதற்கான நம்பிக்கையை இது அளிக்கிறது.
- இந்த சோதனையில், ஹைட்ரஜனின் இரு ஐசோடோப்புகளை அறிவியலாளர்கள் பயன்படுத்தி ஹீலியத்தினை உருவாக்கியுள்ளனர்.




## கோவிட்-19 மற்றும் காசநோய் தொற்றுநோய்களின் இணைவு – ஆய்வு

- பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்களின் கூட்டமைப்பானது இந்த நாடுகளில் காசநோய் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுகளின் தாக்கம் மற்றும் ஒன்றிணைவு குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது தெரிவித்துள்ளது.
- கொரோனா தொற்றுப் பாதிப்புகளில் பிரேசில், இந்தியா, ரஷ்யா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவை தற்போது 2வது முதல் 5வது வரையிலான இடங்களில் உள்ளன.
- மேலும் இந்த நாடுகள் உலகிலேயே அதிக காசநோய் பாதிப்புடைய நாடுகளாக உலக சுகாதார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட 24 நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- மேலும் பிரிக்ஸ் நாடுகளில் மருந்து எதிர்ப்புத் திறனுடைய காசநோய் பாதிப்புகளும் அதிக அளவில் உள்ளன.

## குறுங்கோள் 2016 AJ193

- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 அன்று பெரிய குறுங்கோள் ஒன்று புவியைக் கடந்து சென்றது.
- 2016 AJ193 எனப் பெயரிடப்பட்ட இந்தக் குறுங்கோளானது அதன் 5.91 ஆண்டு சுற்றுப் பாதையில் சூரியனை நோக்கி உள்ளீர்க்கப் படுவதாகக் கூறப்படுகிறது.
- இந்தக் குறுங்கோளானது அபாயமிக்க சாத்தியக் கூறு உள்ள குறுங்கோள் எனவும் ஆனால் மோதல் நிகழ்வது குறித்த அபாயம் எதுவும் இதில் இல்லை எனவும் நாசா/JPL அமைப்புகளால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.


## நிலவில் சூரியனால் தூண்டப்பட்ட மாற்றம் கண்டுபிடிப்பு

- வட அரிசோனா பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வானது செயல்பாட்டிலிருக்கும் நிலவின் மேற்பரப்பினைப் புரிந்து கொள்வதற்கான சில தடயங்களைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.
- இந்த ஆய்வில், புவியில் இயற்கையாகவே காணப்படும் சிறிய இரும்பு நுண்துகள்கள் நிலவின் எல்லா பகுதிகளிலும் காணப்பட்டன.
- முன்பு நினைத்ததற்குப் பதிலாக, நிலவின் இரும்பு நுண்துகள்களுக்கு சூரியக் கதிர் வீச்சு தான் ஒரு முக்கிய ஆதாரமாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

*குறிப்பு*


- குறுங்கோள்கள் மற்றும் சூரியக் கதிர்வீச்சு ஆகியவை நிலவின் மண் மற்றும் பாறை ஆகியவற்றை உடைக்கச் செய்வதன் மூலம் இரும்பு நுண்துகள்கள் உருவாகின்றன.
- நிலவைச் சுற்றி வரும் செயற்கைக் கோள்களின் உபகரணங்கள் மீதிருந்து இந்த நுண் துகள்கள் கண்டறியப்படுகின்றன.

## செவ்வாய்க் கிரக மாதிரிகள் – JAXA




- ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனமானது (JAXA) அமெரிக்கா மற்றும் சீனா ஆகியவற்றிற்கு முன்பாகவே செவ்வாய்க் கிரகத்தின் மண் மாதிரிகளைப் புவிக்குக் கொண்டு வர திட்டமிட்டுள்ளது.
- JAXA நிறுவனமானது போபோஸ் என்ற துணைக் கோளின் மீது 2024 ஆம் ஆண்டில் ஓர் ஆய்வுக் கலத்தினைத் தரையிறக்கத் திட்டமிட்டுள்ளது.
- 10 கிராம் அளவிலான மண் மாதிரியைப் பெற்று அதனை 2029 ஆம் ஆண்டில் புவிக்குக் கொண்டு வருவதே இதன் பணியாகும்.
- போபோஸ் என்பது செவ்வாய்க் கிரகத்தின் துணைக்கோள் ஆகும்.
- செவ்வாய்க் கிரக பொருட்களோடுச் சேர்த்து போபோஸ் மண் மாதிரிகளையும் ஆய்வு செய்வதன் மூலம் செவ்வாய்க் கிரகத்தின் உயிர்க்கோள பரிணாமம் பற்றி அறிய முடியும் என அறிவியலாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.


## மூன்று கருந்துளைகளின் இணைவு கண்டறியப்பட்டது




- இந்தியாவின் வானியல் இயற்பியலாளர் குழு ஒன்று 3 மிகப்பெரிய கருந்துளைகளின் அரிதான ஒன்றிணைதல் நிகழ்வினைக் கண்டறிந்துள்ளது.
- அந்த மூன்று ஒன்றிணைவு கருந்துளைகளும் டுகான் (Toucan) விண்மீன் திரளிலுள்ள அண்டங்களின் ஒரு அங்கமாகும்.
- இந்தக் கண்டுபிடிப்பானது,
    - முதலாவது இந்திய விண்வெளி ஆய்வுக்கலமான ASTROSAT என்பதில் உள்ள புற ஊதாக் கதிர் வரைபடத் தொலைநோக்கி,
    - சிலியிலுள்ள மிகப்பெரிய தொலைநோக்கியின் மீது பொருத்தப்பட்ட MUSE எனப்படும் ஐரோப்பிய ஒருங்கிணைந்த தள ஒளியியல் தொலைநோக்கி,
    - தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஒளியியல் தொலைநோக்கியிலிருந்துப் பெறப்படும் அகச்சிவப்புப் புகைப்படங்கள் ஆகியவற்றிலிருந்துப் பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்திக் கண்டறியப்பட்டது.


## குவாண்டம் கணினி உருவகக் கருவித் தொகுப்பு

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது இந்தியாவின் முதலாவது ‘குவாண்டம் கணினி உருவகக் கருவித் தொகுப்பினை’ (Qsim - Quantum Computer Simulator Toolkit’) வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இந்த வகையிலான முதல் கருவித் தொகுப்பு ஆகும்.
- குவாண்டம் கணினிகளின் உதவியோடு நிரலாக்கத்தின் நடைமுறை அம்சங்களைக் கற்றுக் கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் இது ஒரு முக்கியக் கருவியாகும்.
- இந்தக் கருவித் தொகுப்பானது ரூர்க்கியின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், C-DAC மற்றும் பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் அறிவியலாளர்களால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆதரவு மற்றும் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### சர்வதேச தூய காற்று ஊக்கத் திட்டம் – இந்தூர்



- மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் நகரம் அல்லது இந்தியாவின் தூய்மையான நகரமானது சர்வதேச தூய காற்று ஊக்கத் திட்டத்திற்கு வேண்டி தேர்வான ஒரே இந்திய நகரமாகும்.
- இந்தத் திட்டமானது 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.
- இது இந்தூர் மாநகராட்சி கழகம் மற்றும் மத்தியப் பிரதேச மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நகரின் காற்று மண்டலத்தை சுத்திகரிக்கச் செய்வதற்கான ஒரு திட்டமாகும்.

## பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் 2021




- 2021 ஆம் ஆண்டின் பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினமானது கிட்டத்தட்ட ஒரு மாதம் முன்னதாக ஜூலை 29 அன்று நிகழ்ந்தது.
- மாசு உமிழ்வுகளின் அதிகரிப்பு மற்றும் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க இழப்புகள் ஆகியவற்றின் காரணமாக இது முன்னதாகவே ஏற்பட்டுள்ளது.
- இந்த தேதியானது உலகளாவியத் தடப்பிணையம் என்ற அமைப்பினால் ஒவ்வோர் ஆண்டும் அறிவிக்கப் படுகிறது.
- புவியானது ஒரு வருடத்திற்குத் தேவையான இயற்கை வளங்களை ஒரு ஆண்டில் மீண்டும் தயாரிப்பதற்குள் அவற்றை மனித இனம் முழுமையாகப் பயன்படுத்திய ஒரு தினமே பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினமாகும்.
- பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினம் எனும் கருத்துருவாக்கமானது ஆன்ட்ரூ சிம்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது.

## மின்கழிவுகள் உற்பத்தி

- கடந்த ஆண்டைவிட 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்கழிவு உற்பத்தியானது 31.6% அதிகமாக உள்ளது.
- சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சர் அஷ்வினி குமார் சௌபே, இந்தத் தகவலை மாநிலங்களவையில் தெரிவித்தார்.


- இந்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகமானது மின்கழிவுகளாக கருதப்படக் கூடிய 21 வகையான மின் மற்றும் மின்னணு உபகரணங்களை அறிவித்துள்ளது.

## சிறுத்தைகள், இணை இரையுண்ணிகள் மற்றும் பெரிய தாவர உண்ணிகளின் நிலை – 2018

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது 2018 ஆம் ஆண்டு சிறுத்தைகள், இணை இரையுண்ணிகள் மற்றும் பெரிய தாவர உண்ணிகள் நிலை (Union Environment Ministry has released a new report titled- Status of Leopards, Co-predators and Megaherbivores-2018) என்று தலைப்பிடப்பட்ட புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2021 ஆம் ஆண்டு உலகப் புலிகள் தினமான ஜூலை 29 அன்று வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி,
    - இந்தியாவிலுள்ள சிறுத்தைகளின் அதிகாரப்பூர்வமான எண்ணிக்கையானது 2014-18 காலகட்டத்திலிருந்து 63% ஆக உயர்ந்துள்ளது.
    - அதிக எண்ணிக்கையிலான சிறுத்தைகள் மத்தியப் பிரதேசத்தில் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளன, அதையடுத்து கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

***சிறுத்தை பற்றிய தகவல்கள்***

- அறிவியல் பெயர் – பாந்தெரா பார்டஸ்
- இது 1972 ஆம் ஆண்டு இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதல் அட்டவணையில் இடம் பெற்றுள்ளது.
- இது CITES அமைப்பின் I பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது IUCN சிவப்புப் பட்டியலில் பாதிக்கப்படக்கூடிய இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- தற்போது சிறுத்தைகளின் 9 துணை இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- அவை ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா ஆகியப் பகுதிகளில் பரவிக் காணப்படுகின்றன.




| Tiger reserve | Leopards using the reserve | Leopards within the reserve | Density (Per 100 sq km) |
|---|---|---|---|
| Anamalai | 115 | 70 | 6.96 |
| Kalakkad-Mundanthurai | 156 | 111 | 10.18 |
| Mudumalai | 209 | 138 | 12.11 |
| Sathyamangalam | 172 | 132 | 7.05 |

*2018 population estimates with standard error limits

## பவளப் பாறைகளைப் பாதிக்கும் சன்ஸ்கிரீன் லோசன்களுக்குத் தடை – தாய்லாந்து

- நாட்டின் அனைத்து கடல்சார் தேசியப் பூங்காக்களிலுள்ள பவளப் பாறைகளைப் பாதிப்புக்குள்ளாக்கும் வேதிப்பொருட்கள் அடங்கிய சன்ஸ்கிரீன் லோசன்களை உபயோகிக்க தாய்லாந்து அரசு தடை ஒன்றை விதித்துள்ளது.
- சன்ஸ்கிரீன்களில் உள்ள 4 பொருட்கள் பவளப்பாறை லார்வாக்களை அழித்து, அவற்றின் இனப்பெருக்கத் தன்மையைத் தடுக்கின்றன எனவும், பவளப்பாறைகளில் வெளிர்தலை ஏற்படுத்துகின்றன எனவும் தாய்லாந்து வளங்காப்புத் துறை கூறுகிறது.
- ஆக்சிபென்சோன், ஆக்டினாக்சேட், 4-மெத்தில் பென்சிலின் காம்பர் (கற்பூரம்) அல்லது பியூட்டைல்பாராபின் ஆகியவற்றைக் கொண்டுள்ள லோசன்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- இதே போன்று பசிபிக் தீவான பலாவு மற்றும் அமெரிக்கத் தீவான ஹவாய் ஆகியவற்றிலும் சன்ஸ்கிரீன் லோசன்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

## ஆக்ஸ்பாம் அமைப்பின் அறிக்கை


- ஆக்ஸ்பாம் அமைப்பானது "Tightening the Net" என்று தலைப்பிடப்பட்ட புதிய அறிக்கை ஒன்றினை சமீபத்தில் வெளியிட்டது.
- பல நாடுகளால் அறிவிக்கப்பட்ட நிகர-சுழியக் கார்பன் இலக்குகள் ஆனது கார்பன் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான அவற்றின் முன்னுரிமையிலிருந்து விலகச் செய்வதற்கான ஆபத்து மிக்க மாற்றாக இருக்கலாம் என இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டுக்குள் உலகின் அதிகப்படியான கார்பன் உமிழ்வினை நீக்குவதற்கு சுமார் 1.6 பில்லியன் ஹெக்டேர் அளவிலான காடுகள் தேவை என இந்த அறிக்கை கூறுகிறது.
- உலக வெப்பமயமாதலை 1.5°C என்ற அளவிற்குக் கீழ் குறைப்பதற்கும், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் மீள முடியாத சேதங்களைத் தடுப்பதற்கும் 2030 ஆம் ஆண்டுக்குள் உலகின் கார்பன் உமிழ்வினை 2010 ஆம் ஆண்டில் இருந்த நிலையிலிருந்து 45% வரை குறைக்க வேண்டும்.
- தற்போது உமிழ்வினைக் குறைக்கத் திட்டமிட்டுள்ள நாடுகளின் முயற்சியானது 2030 ஆம் ஆண்டுக்குள் 1% குறைப்பினை மட்டுமே நல்கும்.

## அரபிக்கடலில் அடிக்கடி உருவாகும் புயல்கள் : இந்திய வானிலை ஆய்வு மையத்தின் ஆய்வறிக்கை

- தீவிரமான வானிலை நிகழ்வுகளின் 50 ஆண்டுகால (1970-2019) தரவுநிலைகளின் அடிப்படையில் இந்திய வானிலை ஆய்வு மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது சமீபத்திய தசாப்தத்தில் தீவிரமான புயல்கள் உள்ளிட்ட மோசமான வானிலை நிகழ்வுகள் ஏற்படுவது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றது.
- உலகம் முழுவதும் சராசரி வெப்பநிலையில் கணிசமான உயர்வு ஏற்பட்டுள்ளது.
- 1891-2020 ஆகிய காலக்கட்டத்தின் போது வட இந்தியப் பெருங்கடலில் உருவான புயல்களின் கடந்தகாலத் தரவுகளை மதிப்பிடுகையில்,

- 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரபிக்கடலில் சமீபத்திய சில ஆண்டுகளில் அதி தீவிரப் புயல்கள் உருவாவது அதிகரித்துள்ளது எனவும்
- வங்காள விரிகுடாவில் மாற்றம் எதுவும் இல்லாமல் அதே நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## பருவநிலை மாற்றம் 2021 அறிக்கை





- ❖ ஐக்கிய நாடுகள் அவையின் பருவநிலை தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுவானது சமீபத்தில் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இந்த அறிக்கையானது, உலகளாவிய பருவநிலை மாற்றம் மற்றும் உலகச் சமுதாயங்கள் மீது அது ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த ஒரு எச்சரிக்கையை (ரெட் அலர்ட்) விடுத்துள்ளது.
- ❖ 'பருநிலை மாற்றம் 2021 : இயற்பியல் அறிவியல் அடிப்படை' எனப்படும் இந்த அறிக்கையானது 1988 ஆம் ஆண்டில் பருவநிலை தொடர்பாக அரசுகளுக்கு இடையேயான குழு தொடங்கப் பட்டதிலிருந்து, இந்த அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ள 6வது மதிப்பீட்டு அறிக்கையாகும்.
- ❖ உலகளாவிய வெப்பநிலையானது தொழில்துறைக் காலத்திற்கு முந்தைய நிலையிலிருந்து வெறும் 20 ஆண்டுகளுக்குள் 1.5-2 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்ற திடுக்கிடும் தகவலானது இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது பருவநிலை மாற்றத்தின் பிராந்திய அளவிலான விளைவுகளைக் கணிப்பதற்கான IPCC குழுவின் முதல் அறிக்கையாகும்.
- ‘தீவிரமான வெப்ப அலைகள்’ என்பவை இந்தியாவிற்கான முதல் சவாலாக இருக்கும்.
- தீவிர மழைப் பொழிவினால் ஏற்படும் வெள்ளப் பெருக்கம் தெற்காசியா மற்றும் இந்தியா ஆகிய பகுதிகள் முழுவதும் அதிகரிக்கும்.

## House Fresh அறிக்கை

- 2020 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத் நகரானது உலகின் 50 மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தத் தகவலானது House Fresh எனும் ஒரு பிரித்தானிய நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- சின்சியாங் மாகாணத்திலுள்ள ஹோடான் எனும் சீன நகரானது உலகின் மிகவும் மாசுபட்ட நகராக கூறப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி 2020 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் மாசடைந்த நாடாக வங்காளதேசம் உள்ளது.
- தூய்மையான காற்றுள்ள நகரங்கள் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஜுட்புரி (Judbury) நகரம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## கிகாலி திருத்தம்



- ஓசோன் அடுக்கினைப் பாதுகாப்பதற்காக 1989 ஆம் ஆண்டின் மாண்ட்ரியல் கோட்பாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தத்தினை இந்தியா சமீபத்தில் அங்கீகரித்துள்ளது.
- கிகாலி திருத்தத்தின் கட்டமைப்பு நாடுகளுள் ஒன்றாக இருந்த போதிலும் அதனை அங்கீகரிப்பதற்கான தனது முடிவை அறிவித்த கடைசி நாடு இந்தியா ஆகும்.
- மாண்ட்ரியல் கோட்பாட்டில், ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன்களை நீக்குவது குறித்த கிகாலி திருத்தத்தை மேற்கொள்வதற்காக ருவாண்டாவில் பேச்சுவார்த்தை (2016) மேற்கொள்ளப் பட்டது.
- இந்தத் திருத்தத்தின் கீழ், மாண்ட்ரியல் கோட்பாட்டின் கீழான கட்டுப்படுத்தப்பட்ட வாயுக்கள் எனும் பட்டியலில் ஹைட்ரோ ஃபுளூரோ கார்பனையும் சேர்ப்பதற்கு உலக நாடுகள் ஒப்புக் கொண்டன.
- இந்தத் திருத்தத்தின் கீழ், ஹைட்ரோ ஃபுளூரோ கார்பனின் பயன்பாடானது 2050 ஆம் ஆண்டுக்கு முன் 85% வரைக் குறைக்கப்பட வேண்டும்.
- இந்திய நாடானது இந்த இலக்கை 2047 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும்.
- வளர்ச்சியடைந்த நாடுகள் 2036 ஆம் ஆண்டுக்குள் இந்த இலக்கினை அடைதல் வேண்டும்.
- சீனாவிற்கு 2045 ஆம் ஆண்டானது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கிரீன்லாந்து சிகரத்தில் மழை


- கிரீன்லாந்து சிகரத்தில் வெப்பநிலையானது 10 ஆண்டுகளுக்குள் 3வது முறையாக உறைநிலைக்கு மேலே சென்றதன் காரணமாக வரலாற்றிலேயே முதன்முறையாக அங்குப் பனிப்பொழிவிற்குப் பதிலாக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படத் தொடங்கியது முதல், கிரீன்லாந்து பெற்ற மழைப்பொழிவிலேயே இது தான் அதிகன மழை என அமெரிக்க தேசியப் பனிப் பொழிவு மற்றும் பனிக்கட்டித் தரவு மையமானது கூறியுள்ளது.

*குறிப்பு*

- கிரீன்லாந்து ஆனது ஆர்க்டிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களுக்கு இடையே அமைந்த உலகின் மிகப்பெரிய தீவாகும்.
- இத்தீவின் மேற்பரப்பில் முக்கால் பகுதி ஆனது பனியால் மூடப்பட்டிருக்கும்.

## புதிய விலங்குகள் கண்டுபிடிப்பு 2020

- அனிமல் டிஸ்கவரிஸ் 2020 (புதிய விலங்குகள் கண்டுபிடிப்பு 2020) என்பது இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆவணமாகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் விலங்குகள் பட்டியலில் 557 புதிய இனங்கள் சேர்க்கப் பட்டுள்ளதை இது தெளிவுபடுத்துகிறது.
- இதில் 407 புதிய இனங்களும் 150 புதிய பதிவுகளும் அடங்கும்.
- தற்போது இந்தியாவிலுள்ள விலங்கினங்களின் எண்ணிக்கை 1,02,718 இனங்களாக உயர்ந்துள்ளது.




***சேர்க்கப்பட்ட சில இனங்கள்***

- டிரிமெரசரஸ் சலாசர் (Trimeresurus salazar) எனும் புதிய புல்விரியன் பாம்பு இனமானது அருணாச்சலப் பிரதேசத்தில் கண்டறியப்பட்டது.
- லைகோடன் டெக்கனென்சிஸ் (Lycodon deccanensis) எனும் தக்காண வெள்ளிக் கோல் வரையன் பாம்பினமானது கர்நாடகாவில் கண்டறியப்பட்டது.
- ஸ்பெரோடெகா பெங்களூரு (Sphaerotheca Bengaluru) எனப்படும் பொந்து அமைக்கும் தவளையினத்திற்குப் பெங்களூரு நகரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- சைரியாஸ் அஞ்சலை (Xyrias anjaalai) எனப்படும் புதிய ஆழ்கடல் விலாங்கு மீன் இனமானது கேரளாவில் கண்டறியப்பட்டது.
- கிளைபோதோரக்ஸ் கியூடிகையென்சிஸ் (Glyptothorax giudikyensis) எனும் ஒரு புதிய கெளுத்தி மீன் இனமானது மணிப்பூரில் கண்டறியப்பட்டது.
- க்ளைஸ்டர் காலேடான்சிஸ் (Clyster galateansis) எனும் புதிய வண்டினமானது நிகோபர் உயிர்க் கோளப் பகுதியில் கண்டறியப்பட்டது.
- மியோட்டிஸ் கப் ஃப்ரேட்டர் (Myotis cf. frater) எனும் ஒரு புதிய வெளவால் இனமானது முதன்முறையாக உத்தரகாண்டில் தென்பட்டுள்ளது.
- சூதெரா சிட்ரினா கிப்சோன்ஹில்லி (Zoothera citrina gibsonhilli) எனும் ஒரு செந்தலை பூங்குருவி இனமானது அந்தமான் & நிகோபர் தீவுகளிலுள்ள நார்கொண்டம் தீவில் முதன்முறையாக தென்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ராஜா மிர்ச்சா ஏற்றுமதி

- நாகாலாந்திலிருந்து சுமார் 250 கிலோகிராம் அளவிலான ராஜா மிர்ச்சா லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
- ராஜா மிர்ச்சா ஆனது நாகா கிங் சில்லி (மிளகாய்) எனவும் அழைக்கப்படுகிறது.
- இது நாகலாந்திலிருந்து மேற்கொள்ளப்படும் முதல் ஏற்றுமதி ஆகும்.
- 2008 ஆம் ஆண்டில் ராஜா மிர்ச்சாவிற்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- ஸ்கோவில் வெப்ப அலகுகளின் அடிப்படையில் உலகின் காரமான மிளகாய்கள் பட்டியலில் இது தொடர்ந்து முதல் ஐந்து இடங்களில் இடம் பெற்றுள்ளது.




## இளஞ்சிவப்பு (பிங்க்) பாதுகாப்புத் திட்டம்

- கேரள மாநில காவல்துறையானது இளஞ்சிவப்பு பாதுகாப்புத் திட்டம் எனும் புதிய ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது பொது, தனியார் மற்றும் இணையதளம் (டிஜிட்டல்) ஆகிய பகுதிகளில் பெண்களைப் பாதுகாப்பதற்கான திட்டமாகும்.
- வரதட்சணை தொடர்பான பிரச்சினைகள், இணைய வழியிலான வன்முறைகள் மற்றும் பொது இடங்களில் அவமதிப்பு போன்ற பல பிரச்சினைகளைத் தடுப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தேவரண்யா திட்டம்

- மத்தியப் பிரதேசத்தில் ஆயுஷ் மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் அதனை வேலை வாய்ப்புடன் இணைப்பதற்கும் வேண்டி அம்மாநில அரசானது 'தேவரண்யா' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மாநிலத்திலுள்ள பழங்குடியினர் வாழ் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக வேண்டி இத்திட்டமானது தொடங்கப் பட்டு உள்ளது.
- ஆயுஷ் மருந்துகளின் உற்பத்திக்கான முழுமையான மதிப்புத் தொடரானது தேவராண்யா திட்டம் மூலம் உருவாக்கப்படும்.
- சுய உதவிக் குழுக்களும் இப்பணியில் முக்கியப் பங்கு வகிக்க உள்ளன.

## கிருஷிகர்ணா திட்டம்

- கிருஷிகர்ணா திட்டத்தின் கீழ், ஒரு வகையான பசுமை இல்லமான சிறிய பாலிதீன் கூடமானது (பாலிஹவுஸ்) கட்டமைக்கப்படும்.
- இது கேரள மாநிலத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது தேசிய வேளாண் தோட்டக்கலைச் சங்கம், நீடித்த வளர்ச்சிக்கான அறக்கட்டளை மற்றும் Qore 3 இன்னோவேசன்ஸ் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சி ஆகும்.

## சிறுத்தைகளின் டி.என்.ஏ. விவரக்குறிப்பு – ஒடிசா

- ஒடிசா மாநிலத்தின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையானது அம்மாநிலத்தில் சிறுத்தைகளுக்கான (leopards) டி.என்.ஏ. விவரக் குறிப்பினை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.
- சிறுத்தைகளின் உயிரிழப்பு மற்றும் வேட்டைக்காரர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து தோல் மற்றும் இதர உறுப்புகள் கைப்பற்றப்படுவதை அடுத்து அவற்றின் தோற்றக் காரணத்தைக் கண்டறிந்து அதனை உறுதி செய்ய இந்த செயல்முறை உதவும்.
- இது சிறுத்தைகளை வேட்டையாடுதல் உள்ளிட்ட வனவிலங்கு சார்ந்த குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தும்.


## இரட்டைச் சாலை சுரங்கப் பாதை

- திருச்சூர் - பாலக்காடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்த கேரளாவின் முதலாவது இரட்டைச் சாலை சுரங்கப் பாதையான குதிரன் சுரங்கப் பாதையின் ஒரு பக்கத்தில் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.
- இது கேரள மாநிலத்தின் முதலாவது சுரங்கப்பாதைச் சாலையாகும்.
- இது தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கான போக்குவரத்து இணைப்பைப் பெருமளவில் மேம்படுத்தும்.
- 1.6 கி.மீ. நீளமான இந்த சுரங்கப் பாதையானது பேச்சி - வழனி (Peechi-Vazahani) என்ற வனவிலங்குச் சரணாயலத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ளது.



## குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பிற்கான வலையமைப்பு

- ஹரியானா மாநில அரசானது 100% மதிப்புடன் குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பிற்கான வலையமைப்பில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அதில் குஜராத் மாநிலம் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.
- அதில் இமாச்சலப் பிரதேசம் மூன்றாவது இடத்தில் உள்ளது.



## SKOCH விருதுகள் – மேற்கு வங்காளம்

- மேற்கு வங்காள அரசானது தனது வணிகத்தை எளிமையாக்கல் முன்னெடுப்பின் கீழான திட்டங்களுக்காக 4 SKOCH விருதுகளைப் பெற்றுள்ளது.
- அம்மாநிலத் திட்டமான 'சில்பசக்தி' எனும் இணையவழி ஒற்றைச் சாளரத் தளமானது பிளாட்டினம் விருதினைப் பெற்றுள்ளது.
- அம்மாநிலத்தின் நகர்ப்புறப் பகுதிகளுக்கான பதிவுச் சான்றிதழை இணையவழி மூலம் தாமாகப் புதுப்பிக்கும் முறையானது தங்க விருதினைப் பெற்றுள்ளது.
- அம்மாநிலத்தின் கிராமப்புறப் பகுதிகளில் வர்த்தக உரிமைகளை இணைய வழியில் வழங்குதல் மற்றும் இ-நதிக்கரன் ஆகியவை இரண்டு வெள்ளி விருதுகளை வென்று உள்ளன.




## தகவல் தொழில்நுட்பத் துறைக்கான ராஜீவ் காந்தி விருது

- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் நினைவாக மகாராஷ்டிரா அரசு ஒரு புதிய விருதினை அறிவித்துள்ளது.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு வேண்டி இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- மகாராஷ்டிராவில் ராஜீவ் காந்தி விருதானது, தகவல் தொழில்நுட்பத் துறையில் குறிப்பிடத் தக்கப் பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**Maharashtra government announces Rajiv Gandhi award for IT sector**

## இந்தியாவின் முதலாவது தண்ணீர் உபரி நகரம்

- ❖ இந்தியாவின் தூய்மையான நகரமான இந்தூர் நகரமானது தற்போது 'சுவச் சர்வேக்சன் 2021' என்ற ஆய்வின் கீழ் தண்ணீர் உபரி நகரம் என அறிவிக்கப்பட்டு உள்ளது.
- ❖ இந்தூர் நகரமானது மத்திய அரசிடமிருந்து இதற்கான சான்றிதழைப் பெற்றுள்ளது.
- ❖ ஆறுகள் மற்றும் வடிகால்களில் தூய்மை நிலையைப் பேணி காக்கும் நகரங்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- ❖ சுவச் சர்வேக்சன் திட்டமானது சுவச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.





## நகரப் பகுதிகளில் வன வளங்களுக்கான உரிமைகள்

- ❖ நகரப்பகுதிகளில், சமூக வன வளங்களுக்கான உரிமைகளை (Community Forest Resource Rights) அங்கீகரித்துள்ள முதல் மாநிலமாக சத்தீஸ்கர் மாறியுள்ளது.
- ❖ 4,217 ஹெக்டேர் அளவிலான காடுகள் பரவியுள்ள தம்தாரி மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் உரிமைகளை அம்மாநில அரசு அங்கீகரித்துள்ளது.
- ❖ 2006 ஆம் ஆண்டின் வன உரிமைகள் சட்டத்தின் கீழ், ஒட்டு மொத்தச் சமூகம் (அ) கிராமத்தினால் உபயோகிக்கப்படும் எந்தவொரு வன வளங்களையும் பாதுகாப்பதற்கும், புனரமைப்பதற்கும் (அ) அதன் வளங்களைக் காப்பதற்கும் (அ) பராமரிப்பதற்கும் வேண்டி கிராம சபைகளுக்கு சமூக வனவள உரிமைகளானது வழி வகுக்கிறது.

## வண்ணக் குறியீட்டு முறை – கோவிட் தடுப்பு நடவடிக்கை

- ❖ டெல்லி அரசானது நகரில் புதிதாக கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக தரப்படுத்தப்பட்ட எதிர்ப்புச் செயல்திட்டத்தை வகுத்துள்ளது.
- ❖ வண்ணக் குறியீட்டு முறையிலான தரப்படுத்தப்பட்ட எதிர்ப்புச் செயல்திட்டமானது டெல்லியில் தடுப்பு நடவடிக்கைகளை அறிவிப்பதில் நிலவும் நிர்வாக தாமதங்களை தடுக்கும்.
- ❖ அரசினால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளானது மஞ்சள், ஆம்பர், ஆரஞ்ச் மற்றும் சிவப்பு போன்ற வண்ணக் குறியீட்டு முறையிலான எச்சரிக்கை அடிப்படையில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

- ❖ மஞ்சளானது மிகக் குறைந்த நிலையிலான எச்சரிக்கை ஆகும்.
- ❖ சிவப்பு எச்சரிக்கையானது நகரை முழு ஊரடங்கின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு உச்சக் கட்ட எச்சரிக்கை ஆகும்.




## அசாம் கால்நடைப் பாதுகாப்பு மசோதா, 2021

- ❖ 2021 ஆம் ஆண்டு கால்நடைப் பாதுகாப்பு மசோதாவானது அசாம் மாநில சட்ட சபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.
- ❖ இது கால்நடைகளை வெட்டுதல், இறைச்சியினை உட்கொள்ளுதல் மற்றும் அவற்றை இடம் மாற்றுதல் போன்றவற்றை ஒழுங்குமுறைப்படுத்த விழைகிறது.
- ❖ இந்த மசோதாவானது ஒரு குறிப்பிட்ட பகுதியின் அங்கீகரிக்கப்பட்ட கால்நடை நல அலுவலரிடமிருந்து அவசிய சான்றிதழைப் பெறாமல் ஒருவர் கால்நடையினை வெட்டுவதைத் தடை செய்கிறது.
- ❖ ‘கால்நடை’ எனும் சொற்கூறில் எருதுகள், காளைகள், பசுக்கள், கிடாரிகள், கன்றுகள், ஆண் மற்றும் பெண் எருமைகள் மற்றும் எருமைக் கன்றுகள் ஆகியவை அடங்கும்.

## முதலாவது ஆளில்லா விமானத் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையம்

- இந்தியாவின் முதலாவது ஆளில்லா விமானத் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையமானது கேரளாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- சைபர்டோம் என்பது கேரளக் காவல்துறையின் ஒரு தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாகும்.
- இந்த மையமானது அங்கீகரிக்கப்படாத ஆளில்லா விமானங்களைக் கண்காணிக்கச் செய்வதிலும், காவல்துறையின் பயன்பாட்டிற்காக வேண்டி ஆளில்லா விமானங்களை உற்பத்தி செய்வதிலும் உதவும்.
- இந்த ஆய்வக மற்றும் ஆராய்ச்சி மையமானது ஆளில்லா விமானங்களின் பயன்பாடு மற்றும் அச்சுறுத்தல் அம்சங்கள் குறித்து ஆராயும்.

## தேச பக்தர்கள் தினம் – மணிப்பூர்

- மணிப்பூரின் சுதந்திரத்தைக் காப்பதற்காக தங்களது உயிர்களைத் தியாகம் செய்த வீரர்களின் நினைவாக ஆகஸ்ட் 13 ஆம் தேதியானது மணிப்பூரில் தேசபக்தர்கள் தினமாக அனுசரிக்கப் பட்டது.
- சிறையில் அடைக்கப்பட்டிருந்த திகேந்திரஜித் மற்றும் தங்கல் ஆகியோர் 1891 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 அன்று வெளியே கொண்டு வரப்பட்டு போலோ மைதானத்தின் அருகே உள்ள ஓர் இடத்தில் பொது மக்கள் மத்தியில் தூக்கிலிடப்பட்டனர்.
- மணிப்பூர் மாநிலமானது இவர்கள் தூக்கிலிடப்பட்ட தினத்தினை தேசபக்தர்கள் தினமாக அனுசரிக்கின்றது.




## மரபணு வங்கி – புதுடெல்லி

- உலகின் 2வது மிகப்பெரிய புதுப்பிக்கப்பட்ட தேசிய மரபணு வங்கியை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார்.
- இது புதுடெல்லியின் புசா எனுமிடத்திலுள்ள தேசிய தாவர மரபணு வள வாரியத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த அதிநவீன தேசிய மரபணு வங்கியானது விதைகளின் மரபினை – 20°C வெப்ப நிலையில் பல ஆண்டுகளுக்குப் பாதுகாத்து வைப்பதற்கான ஜெர்ம் பிளாச வசதியை வழங்குகிறது.

## ஸ்மார்ட் சுகாதார அட்டைகள் – ஒடிசா




- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அம்மாநில மக்களுக்காக வேண்டி ஸ்மார்ட் சுகாதார அட்டைத் திட்டத்தினை அறிவித்தார்.
- இத்திட்டமானது பிஜு ஸ்வஸ்திய கல்யாண் யோஜனா எனும் ஒரு திட்டத்தின் கீழ் அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, மாநிலத்தின் சுகாதாரச் சேவை வழங்கீட்டு முறையை மாற்றியமைப்பது மட்டுமின்றி, நாட்டின் சுகாதாரத் துறையில் ஒரு வரலாற்றை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஸ்மார்ட் சுகாதார அட்டைகள் மூலம் ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரையிலான சிகிச்சையினைப் பெற இயலும்.
- ஒரு குடும்பத்தின் பெண் உறுப்பினர்கள் இந்த அட்டை மூலம் ஆண்டுக்கு ரூ.10 லட்சம் வரையிலான பயன்களைப் பெற இயலும்.
- மக்களுக்கு இவ்வகையிலான ஸ்மார்ட் சுகாதார அட்டைகளை வழங்கிய முதல் இந்திய மாநிலம் ஒடிசாவாகும்.

## அலிகரின் பெயர் மாற்றம்

- அலிகரின் ஜில்லா பஞ்சாயத்து பரிசத் அமைப்பானது அலிகர் என்ற பெயரை ஹரிகர் என மாற்றுவதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இந்தத் தீர்மானமானது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பஞ்சாயத்து அமைப்பின் முதல் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- இந்தத் தீர்மானமானது இறுதி முடிவிற்காக தற்போது உத்தரப் பிரதேச அரசிடம் அனுப்பப் பட்டுள்ளது.


*குறிப்பு*

- உத்தரப் பிரதேச அரசானது ஏற்கனவே பல இடங்களில் அதன் பெயர்களை மாற்றி உள்ளது.
- அவை பின்வருமாறு,
    - ஃபைசாபாத் என்பதை அயோத்தியா எனவும்,
    - அலகாபாத் என்பதை பிரயாக்ராஜ் எனவும்,
    - முகல்சாராய் என்பதை தீன்தயால் உபத்யாய் நகர் எனவும் மாற்றியுள்ளது.

## ஒரு கைதியின் வாழ்க்கை

- பெலகாவியின் ஹிண்டல்கா மத்திய சிறைச்சாலையின் அதிகாரிகள் (கர்நாடகா), சிறைக் கைதிகளின் வாழ்க்கையை சாமானிய மக்கள் 24 மணிநேரம் வரை வாழ்ந்து பார்ப்பதற்கு வேண்டி அனுமதிப்பதற்கான ஒரு புதிய முன்னெடுப்பினைக் கொண்டு வந்துள்ளனர்.
- இந்த சுற்றுலா கருத்து முறையானது, 'A day in the life of a prisoner' (கைதியின் வாழ்க்கையில் ஒரு நாள்) என்பதாகும்.
- சிறைத்துறை அதிகாரிகள் இந்த முன்னெடுப்பினை அமல்படுத்துவதற்காக அரசாங்கத்தின் ஒப்புதலை வேண்டி காத்திருக்கிறார்கள்.

## ஆந்திரப் பிரதேசத்தில் 3 தண்ணீர் உபரி நகரங்கள்



- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது சுவச் பாரத் திட்டம் மற்றும் சுவச் சர்வவேக்சன் மதிப்பீடு ஆகியவற்றின் கீழ், ஆந்திரப் பிரதேசத்தின் 3 நகரங்களுக்குத் 'தண்ணீர் உபரி' சான்றிதழை வழங்கியுள்ளது.
- ஒன்றுக்கும் மேற்பட்ட தண்ணீர் உபரி சான்றிதழ் பெற்ற நகரங்களைக் கொண்ட முதல் மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் மாறியுள்ளது.
- அந்த மூன்று நகரங்களாவன;
    - விசாகப்பட்டினம் மாநகராட்சிக் கழகம்,
    - விஜயவாடா மாநகராட்சிக் கழகம்,
    - திருப்பதி மாநகராட்சிக் கழகம்
- இந்தியாவில் மொத்தம் 9 நகரங்களுக்கு "தண்ணீர் உபரி" சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது.

## வாஞ்சுவா திருவிழா – அசாம்

- அசாமில் நடைபெறும் வாஞ்சுவா திருவிழாவில் பங்கேற்கும் போது திவா பழங்குடியினர் தங்களது பாரம்பரிய நடன நிகழ்ச்சியை நிகழ்த்துவர்.
- நல்ல முறையிலான அறுவடையைக் கொண்டாடுவதற்காக வேண்டி திவா பழங்குடியினர் இத்திருவிழாவை நடத்துகின்றனர்.
- லாலுங் என்றும் அறியப்படும் இந்த திவா பழங்குடியினர் அசாம் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களில் வசிக்கும் பழங்குடியினச் சமூகத்தினர் ஆவர்.
- அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் ஆகியவற்றின் சில பகுதிகளிலும் இவர்கள் வாழ்கின்றனர்.
- இந்தப் பழங்குடியினர் அசாம் மாநிலத்தினுள் பட்டியலிடப்பட்ட பழங்குடியினராக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.
- இவர்கள் ஜூம் அல்லது சுழற்சி முறை வேளாண்மை என்ற ஒரு முறையை மேற்கொள்கிறார்கள்.




## வாத்சல்யா திட்டம்

- ❖ மகாராஷ்டிரா அரசானது, கோவிட்-19 தொற்றினால் தங்களது கணவர்களை இழந்த பெண்களுக்கு உதவுவதற்காக வேண்டி வாத்சல்யா திட்டம்" என்ற ஒரு சிறப்புத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ வாத்சல்யா திட்டமானது அந்த பெண்களுக்குப் பல சேவைகளையும் 18 வகையான பயன்களையும் ஒரே அமைப்பின் கீழ் வழங்கும்.
- ❖ இத்திட்டத்தின் கீழ், சஞ்சய் காந்தி நிராதார் யோஜனா மற்றும் கர்குல் யோஜனா ஆகிய திட்டங்கள் பெண்களுக்குப் பயனளிக்கும்.
- ❖ இத்திட்டமானது அம்மாநிலத்தின் பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப் படுகிறது.

## பசையடுக்குப் பிரிவின் உட்பிரிவு – ஹரியானா

- ❖ பசையடுக்குப் பிரிவிற்கான வரையறைகளை நிர்ணயிக்கும் போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முழுவதுமாக பொருளாதார அடிப்படையில், உட்பிரிவுகளாகப் பிரித்து வகைப்படுத்தி ஹரியானா அரசு இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டு உள்ளது.
- ❖ ஹரியானா அரசின் இந்த அறிவிப்பை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- ❖ பசையடுக்குப் பிரிவினரை வருமான வரம்பின் அடிப்படையில் மட்டுமே வகைப் படுத்தப்பட்ட ஹரியானா அரசின் அறிவிப்பானது இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பில் அறிவித்ததை மீறியதாக உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பசையடுக்குப் பிரிவின் வரம்பினை நிர்ணயிப்பதற்கு முன்பாக, பொருளாதார வரையறை மட்டுமின்றி சமூகம், கல்வி மற்றும் இதர காரணிகளுயும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இந்தியாவின் சிறந்த சிறுவணிக வெற்றியாளர்கள் – ஐக்கிய நாடுகள் சபை

- ஐக்கிய நாடுகள் சபையினால் அறிவிக்கப்பட்ட உலகளாவிய சிறந்த சிறு வணிகங்கள், போட்டியின் வெற்றியாளர்கள் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த மூன்று நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் போட்டியானது ஐ.நா.வின் உணவு அமைப்பு முறைகள் உச்சி மாநாட்டிற்கு தகுந்தவாறு ஏற்பாடு செய்யப்பட்டது.
- அந்த மூன்று வெற்றி நிறுவனங்களாவன : ஊர்ஜா டெவலப்மெண்ட் சொல்யூசன்ஸ் இந்தியா, எடிபில் ரூட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் தாரு நேச்சுரல்ஸ் ஆகியன ஆகும்.




## நாட்வெஸ்ட் குரூப் எர்த் ஹீரோஸ் விருது

- மத்தியப் பிரதேசத்தின் சாத்பூரா புலிகள் காப்பகமானது அதன் சிறப்பு வாய்ந்த மேலாண்மைக்காக புவிப் பாதுகாவலர் பிரிவில் நாட்வெஸ்ட் குரூப் எர்த் ஹீரோஸ் (NatWest Group Earth Heroes award) என்ற விருதினைப் பெற்றுள்ளது.
- சாத்பூரா புலிகள் காப்பகமானது ஹோசங்காபாத் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது நாட்டின் பழமையான ஒரு வளம் செறிந்த காடாகும்.
- சாத்பூரா புலிகள் காப்பகமானது மத்திய இந்தியப் பகுதியின் சூழல் அமைப்பின் ஆன்மாவாக (soul of the eco-system of the central region of India) கருதப்படுகிறது.

## லோகமான்யா திலகர் விருது 2021



- சைரஸ் பூனாவாலா என்பவருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க தேசிய லோகமான்யா திலகர் விருது வழங்கப்பட உள்ளது.
- இவர் பூனேயிலுள்ள இந்திய சீரம் நிறுவனத்தின் நிறுவனராவார்.
- கோவிட் – 19 பெருந்தொற்றின் போது அவர் ஆற்றிய பணிகளுக்காக வேண்டி அவருக்கு இந்த விருதானது வழங்கப்பட உள்ளது.
- இந்த விருதானது முதன்முதலாக 1983 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## மகாராஷ்டிரா பூஷன் விருது 2021

- மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்ரே தலைமையிலான மகாராஷ்டிர பூஷன் தேர்வுக் குழுவானது புகழ்பெற்ற பின்னணிப் பாடகி ஆஷா போன்ஸ்லே அவர்களை இந்த மதிப்புமிக்க விருதிற்கு வேண்டி ஒருமனதாக தேர்வு செய்துள்ளது.
- ஆஷா போன்ஸ்லே இந்தித் திரைப்படத்துறையின் பின்னணி பாடல்களுக்கு மிகவும் பிரபலமானவராவார்.
- ஆஷா போன்ஸ்லே அவர்கள் இசை வரலாற்றிலேயே அதிகளவில் பாடல்கள் பதிவு செய்யப் பட்ட இசைக்கலைஞர் என கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய அரசானது இவருக்கு 2000 ஆம் ஆண்டில் தாதா சாகேப் பால்கே விருதினையும், 2008 ஆம் ஆண்டில் பத்ம விபூசன் விருதினையும் வழங்கி கௌரவித்தது.
- இவர் பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் அவர்களின் சகோதரி ஆவார்.



## ஈஸ்னர் விருது

- வரைகலை நிபுணர் ஆனந்த ராதாகிருஷ்ணன் என்பவருக்கு நகைச்சுவை தொழில்துறையின் வில் ஈஸ்னர் விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- நகைச்சுவை உலகில் இந்த விருதானது ஆஸ்கருக்கு இணையாகக் கருதப்படுகிறது.
- இந்த விருதானது ஒவ்வோர் ஆண்டும் வழங்கப் படுகிறது.
- ராதாகிருஷ்ணன் வென்றுள்ள "சிறந்த ஓவியர்/பல்லூடக கலைஞர் (உள் அமைப்பு கலை)" விருதானது வரைகலை புனைக்கதையின் கலை மற்றும் வரைபடங்களை உருவாக்குபவருக்கு அங்கீகாரம் அளிக்கிறது.

- ராதாகிருஷ்ணன் ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த வண்ணவியல் ஓவியர் ஜான் பியர்சனுடன் இந்த விருதினைப் பகிர்ந்து கொள்கிறார்.
- ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த நூலாசிரியர் ராம் வி என்பவரின் 145 பக்க வரைகலை புதினப் புத்தகமான 'Blue in Green' எனும் புத்தகத்திற்கான அவர்களதுப் படைப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இப்புத்தகமானது இமேஜ் காமிக் எனும் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

## இந்தியத் தலைமைக் கணக்கு கட்டுப்பாட்டாளர்

- தீபக் தாஸ் என்பவர் தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அலுவலராக பொறுப்பினை ஏற்றுள்ளார்.
- இவர் 25வது தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அலுவலர் (Controller General of Accounts – CGA) ஆவார்.
- தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அலுவலர் என்பவர் அரசியலமைப்பின் 150வது சட்டப் பிரிவின்படி அரசின் கணக்கு வைப்பு அதிகாரி ஆவார்.

## கடற்படை அதிகாரிகளின் புதிய துணைத் தலைவர்



- துணைக் கடற்படைத் தலைவர் S.N. கோர்மேட் கடற்படை அதிகாரிகளின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் துணைக் கடற்படைத் தலைவர் G. அசோக் குமார் என்பவரை அடுத்து அந்தப் பதவியினை ஏற்றுள்ளார்.
- இவர் அதி விசிஷ்த் சேவா (Ati Vishisht Seva Medal - AVSM)) பதக்கம் மற்றும் நவ்சேனா பதக்கம் (Nausena Medal - NV) ஆகியவற்றைப் பெற்றவராவார்.

## பேராசிரியர் C.R. ராவ் நூற்றாண்டு நினைவுத் தங்கப்பதக்கம்

- இந்தியப் பொருளாதாரக் கழக அறக்கட்டளையானது பேராசிரியர் C.R. ராவ் நூற்றாண்டு நினைவுத் தங்கப்பதக்க விருதிற்கு இரண்டு புகழ்பெற்றப் பொருளாதார வல்லுநர்களைத் தேர்வு செய்துள்ளது.
- புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்கள் ஜகதீஷ் பகவதி மற்றும் C. ரங்கராஜன் ஆகியோருக்கு முதலாவது பேராசிரியர் C.R. ராவ் நூற்றாண்டு நினைவு தங்கப்பதக்க விருதானது வழங்கப்பட்டது.

- பகவதி அவர்கள் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம், சட்டம் மற்றும் பன்னாட்டு உறவுகள் ஆகிய துறைகளின் பேராசிரியர் ஆவார்.
- C. ரங்கராஜன் அவர்கள் பிரதமருக்கான பொருளாதார ஆலோசகக் குழுவின் முன்னாள் தலைவரும், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரும் ஆவார்.
- இது அளவீட்டுப் பொருளாதாரம் மற்றும் அதிகாரப்பூர்வப் புள்ளி விவரங்களின் தத்துவார்த்தமான மற்றும் பயன்பாட்டு அம்சங்கள் துறையில் வாழ்நாள் அளவிலான பங்களிப்பினை ஆற்றிய ஓர் இந்திய அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வல்லுநருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் விருதாகும்.




## டாக்டர் திருதி பானர்ஜி – இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் புதிய இயக்குநர்

- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் புதிய இயக்குநராக டாக்டர் திருதி பானர்ஜி அவர்களை நியமிப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- எனவே, கடந்த 100 ஆண்டுகளில் முதல்முறையாக இந்திய விலங்கியல் ஆய்வு மையத்திற்கு ஒரு பெண் இயக்குநர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையமானது 1916 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நிறுவப் பட்டது.
- இதன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.
- இது 16 பிராந்திய மையங்களைக் கொண்டுள்ளது.
- இது சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையமானது 1949 ஆம் ஆண்டு முதல் பெண் அறிவியலாளர்களைப் பணியமர்த்த தொடங்கியது.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் முதல் பெண் ஊழியர் மீரா மன்சுகானி (Mira Mansukhani) என்பவராவார்.

## மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது

- ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதானது மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது எனப் பெயர் மாற்றப்படும்.
- தயான் சந்த் அவர்களின் பிறந்த தினமானது தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- இவர் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் மூன்று முறை தங்கப் பதக்கம் வென்றவர் ஆவார்.

*குறிப்பு*

- இந்த விருதானது 1991-92 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த விருதினைப் பெற்ற முதல் நபர் சதுரங்க விளையாட்டு ஜாம்பவான் வீரரான விஸ்வநாதன் ஆனந்த் ஆவார்.




## ரேகா சர்மா

- தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரான ரேகா சர்மா அவர்களின் பதவிக் காலம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- கொரோனா பெருந்தொற்றுக் காலங்களில் வீடுகளில் தனியாக சிக்கித் தவிக்கும் முதியவர்களுக்கு உதவுவதற்காக வேண்டி "Happy to Help" எனும் சிறப்புப் படைப் பிரிவை உருவாக்கியதில் ரேகா சர்மா முன்னோடியாக திகழ்ந்தார்.
- மேலும் பெருந்தொற்றுக் காலங்களில் மகளிர் தங்களது வழக்குகளைப் பதிவு செய்வதற்காக வேண்டி ஒரு வாட்ஸ்அப் எண்ணினைத் தொடங்கியதற்காகவும் சேர்த்து அவருக்குப் பாராட்டுகள் வழங்கப் பட்டன.

## Order of British Columbia விருது



- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழில்முனைவர் அஜய் தில்வாரிக்கு கனடாவின் மதிப்பு மிக்க விருதான 'Order of British Columbia' என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- திரு. தில்வாரி கனடாவின் மிகப்பெரிய வாகன உற்பத்திக் குழுமத்தின் (தில்வாரி குழுமம்) உரிமையாளர் ஆவார்.
- இவர் தற்போது 'Order of British Columbia' விருதினைப் பெற்ற 16 சிறந்த நபர்களில் ஒருவராக மாறியுள்ளார்.

## புரூனெல் பதக்க விருது

- பூடான் நாட்டிலுள்ள இந்தியாவின் உதவி பெற்ற, மாங்க்டெச்சு நீர்மின் நிலையத் திட்டத்திற்கு புரூனெல் பதக்க விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது லண்டனிலுள்ள கட்டிடப் பொறியாளர்கள் நிறுவனத்தினால் வழங்கப் படுகிறது.
- தொழில்துறையில் சிறந்த கட்டிடப் பொறியியல் வல்லுனராக திகழ்வதைக் குறிக்கும் வகையில் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- மாங்டெச்சு நீர்மின் நிலையத் திட்ட ஆணையத்தின் தலைவர் லியோன்டோ லோக்நாத் சர்மாவிடம் இந்த விருதானது ஒப்படைக்கப்பட்டது.
- மாங்டெச்சு திட்டத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டதற்கு அதன் சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார் நற்சான்றுகளும் ஒரு காரணம் ஆகும்.
- ஒவ்வொர் ஆண்டும் 2.4 மில்லியன் டன் அளவிலான பசுமை இல்ல வாயு உமிழ்வினை இத்திட்டம் குறைக்கும்.
- புரூனெல் பதக்க விருதானது உலகெங்கிலும் உள்ள மிகப்பெரிய திட்டங்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விருதாகும்.

## AI கேம் சேஞ்சர் விருது




- நாஸ்காம் அமைப்பினால் நடத்தப்பட்ட Xperience-AI எனும் உச்சி மாநாட்டில் தெலுங்கானா அரசானது AI கேம்சேஞ்சர் என்ற விருதினை வென்றது.
- 'செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி மக்களைக் கண்காணித்தல்' எனும் அரசின் முன்னெடுப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ஸ்டார்ட்அப் அவிரோஸ் என்பது இத்திட்டத்திற்கான ஒரு தொழில்நுட்பப் பங்குதார அமைப்பு ஆகும்.

## வீரதீர விருதுகள்

- இராணுவப் படைகளின் உயர் தளபதியான குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள் ஆயுதப்படைகள், காவல்துறை மற்றும் துணை இராணுவ ஊழியர்கள் ஆகியோருக்கான 144 வீரதீர விருதுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.
- ஜம்மு & காஷ்மீர் காவல்துறையின் துணை உதவி ஆய்வாளர் பாபு ராமிற்கு அசோக் சக்ரா (மரணத்திற்குப் பிறகு) விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் காவல்துறையின் காவலர் அட்லஃப் ஹுசைன் பத் (மரணத்திற்குப் பிறகு) என்பவருக்கு கீர்த்தி சக்ரா விருதானது வழங்கப்பட்டது.
- மேலும் சௌரிய சக்ரா, பர் தோ சேனா பதக்கம், வாயு சேனா பதக்கம் மற்றும் சேனா பதக்கம் ஆகியவையும் வழங்கப்பட்டன.




## தேசிய இளையோர் விருது



- தெலங்கானாவின் கரீம்நகர் மாவட்டத்தைச் சேர்ந்த முகமது ஆசம் என்பவருக்கு தேசிய இளையோர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- மகத்தான தலைமைத்துவ குணாதிசயங்களைக் கொண்டுள்ளதன் காரணமாக இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் இரத்த தானம், உடலுறுப்பு தானம் தொடர்பான பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் மற்றும் ஹரிதா ஹரம் என்ற திட்டத்தின் கீழ் மரக்கன்று நடுதல் திட்டங்களையும் நடத்தியுள்ளார்.

## காங்கிரசினல் தங்கப் பதக்கம்

- மகாத்மா காந்தி அவர்களுக்கு (மரணத்திற்குப் பிறகு) மதிப்பு மிக்க காங்கிரசினல் தங்கப் பதக்கமானது (Congressional Gold Medal) வழங்கப்பட உள்ளது.
- அமைதி மற்றும் அகிம்சை வழியை ஊக்குவித்ததற்காக வேண்டி மகாத்மா காந்தி அவர்களுக்கு இவ்விருதானது வழங்கப்பட உள்ளது.
- இந்தப் பதக்கமானது அமெரிக்காவின் உயரிய குடிமை விருதாகும்.
- இந்தப் பதக்கத்தினை பெறும் முதல் இந்தியர் மகாத்மா காந்தி ஆவார்.

## மகி காஜி

- சுடோகு (Sudoku) எனும் ஒரு புதிர் விளையாட்டை உருவாக்கிய மகி காஜி (Maki Kaji) காலமானார்.
- இவர் சுடோகுவின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- இவர் ஜப்பானைச் சேர்ந்தவர் ஆவார்.



## தீக்சா ஷிண்டே

- தீக்சா ஷிண்டே என்பவர் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் சிறுபான்மை சேவை நிறுவனத்தின் காணொலி வாயிலான தோழமைக் குழுவின் ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- இவர் அவுரங்காபாத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமி ஆவார்.
- இவர் கருந்துளை குறித்த கோட்பாடு ஒன்றை எழுதினார்.
- 'We live in Black Hole?' என்ற இவரது ஆராய்ச்சிக் கட்டுரையானது 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் சர்வதேச அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி இதழினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## மெல்போர்ன் விருதுகள் 2021 – இந்தியத் திரைப்பட விருதுவிழா




- சமீபத்திய மெல்போர்ன் விருதுகளின் இந்தியத் திரைப்பட விருது விழாவில் ஃபேமிலி மேன் 2 திரைப்படத்தின் நடிகர்கள் மனோஜ் பாஜ்பாயி மற்றும் சமந்தா அக்கினேனி ஆகியோர் விருதுகளை வென்றுள்ளனர்.
- சிறந்த திரைப்படத்திற்கான விருதானது 'சூரரைப் போற்று' என்ற திரைப்படத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- சிறந்த நடிகருக்கான விருதானது (திரைப்படம்) சூர்யா சிவக்குமாருக்கு (சூரரைப் போற்று) வழங்கப்பட்டது.
- சிறந்த இயக்குனருக்கான விருதானது அனுராக் பாசு (லூடோ) என்பவருக்கு வழங்கப் பட்டது.

## ஸ்ரீபசவா சர்வதேச விருது

- கர்நாடக மாநில அரசானது ஸ்ரீபசவா சர்வதேச விருதிற்கு ஸ்ரீபசவலிங்க பட்டதேவரு என்பவரைத் தேர்வு செய்துள்ளது.
- இவர் பால்கி ஆன்மீக மடத்தின் ஒரு மூத்த தீர்க்கத் தரிசி ஆவார்.
- பெங்களூருவில் ரவீந்திர கலாசேத்திரத்தில் கன்னடம் மற்றும் கலாச்சார அமைச்சர் V. சுனில் குமார் இவ்விருதினை அவருக்கு வழங்க உள்ளார்.
- 70 வயதான இவர் பிடார் மாவட்டத்திலுள்ள லிங்காயத் சமய நிறுவனத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேல் தம் வாழ்வினைக் கழித்துள்ளார்.



## EASE சீர்திருத்தக் குறியீட்டு விருது 2021

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன் EASE 3.0 விருதுகளை அறிவித்துள்ளார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான EASE சீர்திருத்தக் குறியீட்டு விருதுகளின் ஒட்டு மொத்த வெற்றியாளர் பாரத் ஸ்டேட் வங்கியாகும்.
- பாங்க் ஆப் பரோடா இரண்டாமிடத்திலும் யுனியன் பாங்க் ஆஃப் இந்தியா மூன்றாமிடத்திலும் உள்ளன.
- இந்தியன் வங்கி, அடிப்படை செயல்திறனில் நல்ல முன்னேற்றத்திற்கான விருதினை வென்றது.

**There were awards for various themes and the winners of these themes are given below**

| S.No | Theme | Winner |
|---|---|---|
| 1. | Smart Lending for Aspiring India | Bank of Baroda |
| 2. | Tech-enabled ease of Banking | SBI |
| 3. | Institutionalised Prudent Banking | Bank of Baroda |
| 4. | Governance and Outcome centri c HR | Union Bank of India |
| 5. | Deepening FI and Customer Prot ection | Union Bank of India |

## டாக்டர் கெயில் ஓம்வெட்

- அமெரிக்காவில் பிறந்த புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரும் அம்பேத்கரியக் கொள்கை மற்றும் தலித் இயக்கம் குறித்த எழுத்தாளருமான டாக்டர். கெயில் ஓம்வெட் (Dr. Gail Omvedt) மகாராஷ்டிராவின் காசிகோனில் காலமானார்.
- அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்திலுள்ள மின்னப்போலிஸ் எனுமிடத்தில் பிறந்த டாக்டர் ஓம்வெட் அவரது உயர்கல்வியை முடித்த பிறகு இந்தியா வந்தார்.

- தலித், ஏழை மற்றும் அடித்தட்டு மக்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இதர பொதுப் பிரச்சினைகளுக்கான பல்வேறு சமூக இயக்கங்களில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.





# விளையாட்டுச் செய்திகள்

## இணையவழி சதுரங்கப் போட்டி

- டெல்லியைச் சேர்ந்த இளம் வயது வந்திகா அகர்வால் தேசிய மகளிர் இணையவழி சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- அதில் மேற்கு வங்காளத்தின் அர்பிதா முகர்ஜி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.
- அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீஜா சேஷாத்திரிதூக் (Sreeja Seshadritook) மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
- அதில் மகாராஷ்டிராவின் சௌமியா சுவாமிநாதன் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த R. வைசாலி ஆகியோர் முறையே 4வது மற்றும் 5வது இடங்களைப் பெற்றுள்ளனர்.
- ஜூனியர் ஓபன் போட்டிப் பிரிவில் தமிழ்நாட்டின் V.S. ராகுல் முதலிடத்தைப் பெற்று உள்ளார்.



## பி.வி. சிந்துவின் சாதனை




- சீனாவைச் சேர்ந்த 'ஹி பிங்ஜியாவோ' என்பவரை வீழ்த்தியதை அடுத்து இரண்டு ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி எனும் பெருமையை பி.வி. சிந்து பெற்றுள்ளார்.
- இவர் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.
- 2016 ரியோ ஒலிம்பிக் போட்டியில் பி.வி. சிந்து தனது முதல் ஒலிம்பிக் பங்கேற்பில் மகளிருக்கான பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- டோக்கியா ஒலிம்பிக் போட்டியில் இவர் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- சுசில் குமாரை அடுத்து தனிநபர் போட்டிகளில் 2 ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற இரண்டாவது இந்திய விளையாட்டு வீரர் எனும் பெருமையை பிவி சிந்து பெற்று உள்ளார்.
- சுசில் கமார் 2008 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் 2012 ஆம் ஆண்டில் லண்டன் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.
- 2012 ஆம் ஆண்டின் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அதிகபட்சமாக இந்தியா மொத்தம் 6 பதக்கங்களைப் பெற்றது.

## பாரா ஒலிம்பிக் கருத்துருப் பாடல் வெளியீடு

- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாகூர், இந்திய பாரா ஒலிம்பிக் குழுவினருக்கான கருத்துருப் பாடலை புதுடெல்லியில் வெளியிட்டார்.
- இந்தப் பாடலுக்கு "கர் தே கமல் தூ" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்தப் பாடலை இயக்கிப் பாடியவர் சஞ்சீவ் சிங் ஆவார்.
- இவர் லக்னோவைச் சேர்ந்த திவ்யாங்க் கிரிக்கெட் வீரராவார்.
- டோக்கியோவில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் 9 விளையாட்டுத் துறைகளில் 54 பாரா விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.

## லாவ்லினா போர்கோஹெய்ன்

- லாவ்லினா இந்தியாவிற்கு மூன்றாவது ஒலிம்பிக் பதக்கத்தை வென்று தந்துள்ளார்.
- 69 கிலோ எடைப் பிரிவிற்கான அரையிறுதிப் போட்டியில் துருக்கியைச் சேர்ந்த புசெனாஸ் சர்மேனலியை வீழ்த்தி லாவ்லினா வெண்கலப் பதக்கத்தினை வென்று உள்ளார்.

- மேரி கோம் அவர்களையடுத்து லாவ்லினா போர்கோஹெய்ன் ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தை வென்ற இரண்டாவது இந்தியப் பெண் குத்துச்சண்டை வீராங்கனை ஆவார்.
- ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற முதல் அசாமியப் பெண்மணி எனும் பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர்கள் மேரி கோம் மற்றும் விஜேந்தர் சிங் ஆகியோரை அடுத்து ஒலிம்பிக் வெண்கலப் பதக்கத்தினை வென்ற 3வது இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனையும் இவரே ஆவார்.
- மேரி கோம் மற்றும் விஜேந்தர் சிங் ஆகியோர் முறையே 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்ஸ் மற்றும் 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக்ஸ் ஆகிய போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளனர்.



## ரவிக்குமார் தாஹியா வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்


- ஒலிம்பிக் இறுதிப் போட்டியின் ஆடவருக்கான 57 கிலோகிராம் ஃப்ரீஸ்டைல் பிரிவில் ரஷ்ய ஒலிம்பிக் குழுவின் சவூர் உகுவேயிடம் தோல்வியுற்றதைத் தொடர்ந்து இந்திய மல்யுத்த வீரர் ரவிக்குமார் தாஹியா வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- இது டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்குக் கிடைத்துள்ள 5வது பதக்கமாகும்.
- மேலும் இது இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்குக் கிடைத்துள்ள 2வது வெள்ளிப் பதக்கம் ஆகும்.
- K.D. ஜாதவ், சுசில் குமார், யோகேஷ்வர் தத் மற்றும் சாக்சி மாலிக் ஆகியோரையடுத்து ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற 5வது இந்திய மல்யுத்த வீரர் ரவிக்குமார் ஆவார்.



## இந்திய ஆடவர் ஹாக்கி அணி – வெண்கலப் பதக்கம்

- வெண்கலப் பதக்கத்திற்கான ஆடவர் ஹாக்கிப் போட்டியில், இந்திய அணியானது 5 – 4 என்ற கோல் கணக்கில் ஜெர்மனி அணியினை வீழ்த்தி ஒரு வரலாற்றுச் சாதனையினை நிகழ்த்தியது.
- இது இந்தியா தனது 8வது தங்கப்பதக்கத்தை வென்ற 1980 ஆம் ஆண்டின் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு 41 ஆண்டுகள் கழித்து இந்திய ஹாக்கி அணிக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.
- இது ஒலிம்பிக் வரலாற்றில் இந்திய ஹாக்கி அணிக்குக் கிடைத்த மூன்றாவது வெண்கலப் பதக்கமாகும்.

## பஜ்ரங் புனியா – வெண்கலப் பதக்கம்




- இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டிகளில் ஆடவருக்கான 65 கிலோ ப்ரீஸ்டைல் பிரிவில் வெண்கலப் பதக்கத்தினை வென்று உள்ளார்.
- கசகஸ்தானின் தௌலத் நிசாஸ்பெகோவ் என்பவரை 8 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதையடுத்து இவ்வெண்கலப் பதக்கத்தினை அவர் வென்றுள்ளார்.
- ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற 6வது இந்திய மல்யுத்த வீரர் எனும் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற மற்ற மல்யுத்த வீரர்கள் K.D. ஜாதவ், சுசில் குமார், யோகேஷ்வர் தத், சாக்சி மாலிக் மற்றும் ரவிக்குமார் தாஹியா ஆகியோர் ஆவர்.
- 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு ஒரே போட்டியில் இரண்டு இந்திய மல்யுத்த வீரர்கள் பதக்கம் வெல்வது இதுவே இரண்டாவது முறையாகும்.

## நீரஜ் சோப்ரா – தங்கப் பதக்கம்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் போட்டியில் நீரஜ் சோப்ரா இந்தியாவிற்கான தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- 87.58 மீ தூரம் ஈட்டி எறிந்ததன் மூலம் அவர் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

- 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 10மீ ஏர் ரைஃபில் பிரிவில் அபிநவ் பிந்த்ரா வென்ற தங்கப் பதக்கத்திற்குப் பிறகு இந்தியாவிற்குக் கிடைத்துள்ள முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.
- நீரஜ் சோப்ரா இந்தியாவிற்காக ஒலிம்பிக் போட்டியில் முதலாவது தடகளப் போட்டிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- இவர் ஹரியானாவின் பானிபட் எனும் இடத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- நீரஜ் சோப்ராவின் தங்கப் பதக்கத்தோடு சேர்த்து மொத்தம் 7 பதக்கங்களோடு இந்தியா தனது 32வது ஒலிம்பிக் போட்டியின் பங்கேற்பினை நிறைவு செய்துள்ளது.
- இதுவே கோடைகால ஒலிம்பிக் போட்டியில் இந்திய நாட்டின் சிறப்பான பங்கேற்பாக கருதப் படுகிறது.




## டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் 2021 மற்றும் இந்தியா

- இந்த சர்வதேசப் பல்விளையாட்டு நிகழ்வுகள் ஜப்பானிலுள்ள டோக்கியோவில் 2021 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 08 வரை நடத்தப் பட்டன.
- டோக்கியோ 1964 (கோடைகாலம்), சப்போரோ 1972 (குளிர்காலம்) மற்றும் நகானோ 1998 (குளிர்காலம்) போட்டிகளை நடத்தியதற்குப் பிறகு ஜப்பான் நாடு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது நான்காவது முறையாகும்.
- இது தவிர, கோடைகாலப் போட்டிகளை இரண்டு முறை நடத்தும் முதல் ஆசிய நகரம் டோக்கியோ ஆகும்.
- 113 பதக்கங்களுடன் ஒட்டுமொத்தப் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- 1 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் உள்ளிட்ட 7 பதக்கங்களை இந்தப் போட்டியில் இந்திய அணியினால் வெல்ல முடிந்தது.
- இந்திய நாடானது மொத்தம் 86 நாடுகள் அடங்கிய பதக்கப் பட்டியலில் 48வது இடத்தில் உள்ளது.
- கடந்த 40 ஆண்டுகளில் இது மிக உயரிய தரநிலை ஆகும்.
- வெண்கலப் பதக்கம் வென்ற பஜ்ரங் புனியா ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்தியக் கொடியைச் சுமந்து அணியை வழி நடத்தினார்.

Countries | Athletes

| Country | | 1 | 2 | 3 | |
|---|---|---|---|---|---|
| 1 | United States | 39 | 41 | 33 | 113 |
| 2 | China | 38 | 32 | 18 | 88 |
| 3 | Japan | 27 | 14 | 17 | 58 |
| 4 | Great Britain | 22 | 21 | 22 | 65 |
| 48 | India | 1 | 2 | 4 | 7 |

*குறிப்பு*

- ஒலிம்பிக் போட்டியில் இந்திய மகளிர் ஹாக்கி அணியானது முதன்முறையாக அரையிறுதி வரை அடைந்து வரலாறு படைத்துள்ளது.
- கோல்ஃப் போட்டியில் அதிதி அசோக் 4வது இடத்தினைப் பெற்றார்.
- படகு செலுத்தும் வீராங்கனை அர்ஜூன் லால் ஜாத் மற்றும் அர்விந்த் சிங் ஆகியோர் ஒலிம்பிக் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறிய முதல் இந்திய இரட்டை ஸ்கல்ஸ் இணை (Indian double sculls pair) ஆவர்.
- ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்திய வாள்வீச்சு வீரர் பவானி தேவி ஆவார்.

## Flame of Hope (நம்பிக்கையின் சுடர்)

- ஜப்பானியத் தலைநகரமானது முன்னோக்கிச் செல்லுதல் எனும் செய்தியோடு 'Flame of Hope' அல்லது நம்பிக்கையின் சுடர் என்ற கொடியைப் பாரீசிடம் ஒப்படைத்தது.
- மேலும் கோவிட் – 19 பெருந் தொற்றினால் தங்கள் உயிரினை இழந்தவர்களையும் அது நினைவு கூர்ந்தது.
- Flame of Hope என்ற சுடரிற்கு 2018 ஆம் ஆண்டில் சிகாகோ பார்க் டிஸ்டிரிக்ட் என்னுமிடத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டது.
- Flame of Hope ஆனது சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளின் சின்னமாகும்.
- சிறந்த ஒலிம்பிக் போட்டிகளானது மாற்றுத் திறனாளிகளுக்கான உலகின் மிகப் பெரிய விளையாட்டு அமைப்பாகும்.

## டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 3வது வீரர்

- ஜேம்ஸ் ஆன்டர்சன் டெஸ்ட் போட்டிகளில் 619 விக்கெட்டுகளை வீழ்த்திய அனில் கும்ப்ளேவைப் பின்னுக்குத் தள்ளி, டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 3வது வீரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- 163 போட்டிகளில் 621 விக்கெட்டுகளை இவர் வீழ்த்தியுள்ளார்.
- ஆன்டர்சன் வேகப்பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவரும், 600 விக்கெட்டுகளை வீழ்த்திய குழுவினைச் சேர்ந்த ஒரே வேகப்பந்து வீச்சாளரும் ஆவார்.

- இந்திய அணிக்கு எதிரான நாட்டிங்காம் டெஸ்ட் போட்டியின் 3வது நாளில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.



## சர்வதேச இராணுவ விளையாட்டுப் போட்டிகள்

- ரஷ்யாவில் நடைபெற உள்ள 2021 ஆம் ஆண்டின் சர்வதேச இராணுவ விளையாட்டுப் போட்டிகளில் இந்திய இராணுவம் பங்கேற்க உள்ளது.
- இந்திய இராணுவத்தின் 101 உறுப்பினர்கள் இப்போட்டியில் பங்கேற்க உள்ளனர்.
- சர்வதேச இராணுவ விளையாட்டுப் போட்டிகளானது ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகத்தினால் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும் ஒரு ரஷ்ய இராணுவப் போட்டி நிகழ்ச்சியாகும்.
- இப்போட்டியானது முதன்முதலில் 2015 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- இப்போட்டிகளானது போர் (வார்) ஒலிம்பிக்ஸ் எனக் குறிப்பிடப் படுகின்றது.

## ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்ப்பு

- 2028 ஆம் ஆண்டின் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட்டைச் சேர்ப்பதற்கான பிரச்சாரத்தினை சர்வதேச கிரிக்கெட் மன்றம் உறுதி செய்துள்ளது.
- கிரிக்கெட் போட்டியானது இதுவரையில் ஒருமுறை மட்டுமே ஒலிம்பிக் போட்டிகளில் நடத்தப்பட்டது.
- 1900 ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற போட்டிகளில் அது நடத்தப் பட்டது.
- பிரிட்டன் மற்றும் பிரான்சு நாட்டு அணிகள் மட்டுமே அப்போட்டியில் பங்கேற்றன.

## டோக்கியோ பாராலிம்பிக்ஸ் – இந்திய அணி

- நடைபெறவிருக்கும் டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கேற்பதற்காக மிகப்பெரிய இந்திய அணி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- 9 விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த 54 பாரா-விளையாட்டு வீரர்கள் (மாற்றுத் திறன் வீரர்கள்) இப்போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

- 2020 ஆம் ஆண்டு கோடைகால பாராலிம்பிக்ஸ் போட்டிகளானது ஜப்பானிலுள்ள டோக்கியோவில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று தொடங்கி செப்டம்பர் 05 வரை நடைபெற உள்ளன.

## ஹர்சித் ராஜா

- 2021 ஆம் ஆண்டு பீல் மாஸ்டர்ஸ் ஓபன் (Biel Masters Open) செஸ் போட்டியில் டெனிஸ் வேக்னெர் என்பவருக்கு எதிரான ஆட்டத்தினைச் சமன் செய்ததையடுத்து ஹர்சித் ராஜா கிராண்ட் மாஸ்டராக மாறியுள்ளார்.
- ராஜா இந்தியாவின் 69வது கிராண்ட் மாஸ்டர் ஆவார்.
- இவர் புனேவைச் சேர்ந்தவராவார்.



## இந்திய ஹாக்கி அணி – ஒடிசாவின் நிதி உதவி

- ஒடிசா அரசானது இந்திய ஹாக்கி அணிகளுக்கு மேலும் 10 ஆண்டுகளுக்கு நிதி வழங்க உள்ளது.
- தற்போதைய நிதி வழங்குதல் காலமானது 2023 ஆம் ஆண்டோடு முடிவடைகிறது.
- இந்த மாநில அரசானது தேசிய ஹாக்கி அணிகளுக்கு நிதி வழங்குவதை 2018 ஆம் ஆண்டில் தொடங்கியது.



## டோக்கியோ 2020 – கோடைகால பாராலிம்பிக் போட்டிகள்

- இப்போட்டிகள் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று தொடங்கி செப்டம்பர் 05 வரை நடத்தப் படுகின்றன.
- இந்தப் போட்டிகளுக்கான அதிகாரப் பூர்வச் சின்னம் ஆனது 'Someity' என்பதாகும்.
- இதில் ஏழு பேர் ஆடும் கால்பந்தாட்டத்திற்குப் பதிலாக முதல்முறையாக அலைச் சறுக்கு மற்றும் பாட்மிண்டன் மற்றும் டேக்வாண்டோ ஆகியவை அறிமுகப் படுத்தப் பட உள்ளன.
- 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா தனது மிகப் பெரிய அணியினைக் களமிறக்க உள்ளது.
- 9 விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த 54 தடகள வீரர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.
- 2016 ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் 19 இந்திய வீரர்கள் மட்டுமே பங்கேற்றனர்.
- ஈட்டி எறியும் வீரர் தேவேந்திர ஜஜாரியா (ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டியில் தங்கம் வென்றார்) மற்றும் உயரம் தாண்டுதல் வீரர் மாரியப்பன் தங்கவேலு ஆகியோர் தற்போதைய இந்திய அணியில் இடம் பெற்றுள்ள இரண்டு பாராலிம்பிக் சாம்பியன்கள் ஆவர்.
- டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியாவின் முதல் மாற்றுத் திறனாளிப் படகு செலுத்தும் போட்டியாளராக (Paracanoe) பிராச்சி யாதவ் பங்கேற்க உள்ளார்.
- அவனி லேகரா, பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கேற்க உள்ள முதல் இந்திய பாரா துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை ஆவார்.
- இப்போட்டிகளுக்குத் தேர்வான முதல் ஆடவர் வில்வித்தை வீரர்கள் ஹர்விந்தர் சிங் மற்றும் விவேக் சிகாரா ஆகியோர் ஆவர்.
- அனுராக் தாக்கூர் மற்றும் நிசித் பிரமானிக் ஆகியோர் பாராலிம்பிக்ஸ் போட்டிகளுக்கான 'கர் தே கமால் தூ' எனும் பாடலை வெளியிட்டனர்.
- இந்தப் பாடலை சஞ்சீவ் சிங் எனும் திவ்யாங் கிரிக்கெட் வீரர் இசையமைத்துப் பாடி உள்ளார்.




## மகளிருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் – சைலி சிங்

- ஜான்சியில் பிறந்த சைலி சிங், நைரோபியில் நடைபெற்ற உலகத் தடகள U20 சாம்பியன் சிப் போட்டியில் மகளிருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் 6.59 மீ என்ற அளவில் நீளம் தாண்டி வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.

- வெறும் 0.01 மி.மீ. வித்தியாசத்தில் அவர் தங்கப் பதக்கம் வெல்லும் வாய்ப்பினை இழந்தார்.
- ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த மாஜா அஸ்காக் என்பவர் தங்கப் பதக்கத்தினை (6.60 மீ) வென்றார்.




## NBA போட்டியில் பிரின்ஸ்பால் சிங்

- பிரின்ஸ்பால் சிங், தனது அணித் தரப்பினரான சாக்ரமென்டோ கிங்க்ஸ் அணி, 2021 ஆம் ஆண்டிற்கான NBA கோடைக்கால போட்டியில் வென்றதையடுத்து NBA போட்டியை வென்ற அணியினைச் சேர்ந்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- 6 அடி 9 அங்குலம் உயரமுடைய முன்கள ஆட்டக் காரரான இவர் NBA போட்டிகளின் எந்தவொரு நிலையிலும் சாம்பியன் ரோஸ்டர் பட்டம் பெற்ற அணியின் அங்கமாகத் திகழும் முதல் இந்தியன் என்று வரலாறு படைத்துள்ளார்.
- பாஸ்டன் செல்டிக்ஸ் அணிக்கு எதிரான சாம்பியன்சிப் விளையாட்டில் கிங்ஸ் அணி முன்னேறி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



### பாவினா படேல் – வெள்ளிப் பதக்கம்

- பாரா ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீரராக குஜராத்தின் பாவிவீனா படேல் வரலாறு படைத்துள்ளார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் போட்டியின் 4 ஆம் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- சீனாவின் சூ யிங் (Zhou Ying) என்பவரிடம் இவர் தோல்வியுற்றார்.



## முக்கிய தினங்கள்

### நண்பர்கள் தினம் 2021 – ஆகஸ்ட் 01

- இந்தியாவில் நண்பர்கள் தினமானது ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிறன்று கொண்டாடப் படுகிறது.
- இந்நாளில், நமது வாழ்நாளின் போது நாம் உருவாக்குகின்ற மற்றும் நம்மை வளமாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றுகின்ற நட்பின் பிணைப்பினைக் கௌரவிக்கும் வகையில் நாம் இத்தினத்தைக் கொண்டாடுகிறோம்.
- இத்தினமானது முதன்முறையாக 1958 ஆம் ஆண்டில் பராகுவே நாட்டில் சர்வதேச நட்பு தினமாக முன்மொழியப் பட்டது.
- இருப்பினும் இத்தினமானது முதன்முதலாக 1930களில் ஜோய்ஸ் ஹால் என்பவர் நிறுவிய ஹால்மார்க் கார்டுஸ் எனும் நிறுவனத்தில் தோன்றியதாக நம்பப் படுகிறது.

### தேசிய மலை ஏறுதல் தினம் – ஆகஸ்ட் 01

- நியூயார்க் மாகாணத்திலுள்ள அதிரோன்டாக் மலைகளில் உள்ள 46வது சிகரத்தில் வெற்றிகரமாக ஏறி சாதனை ஒன்றைப் படைத்த பாபி மேத்தியூஸ் மற்றும் அவரது நண்பர் ஜோஸ் மேடிகன் ஆகியோரைக் கௌரவிக்கும் விதமாக இத்தினமானது உருவாக்கப் பட்டது.
- 1965 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியன் எனும் பெருமையை அவதார் சிங் சீமா என்பவர் பெற்றார்.

- 1984 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி எனும் பெருமையை பச்சேந்திரி பால் (30வது வயதில்) பெற்றார்.

## இஸ்லாமிய மகளிர் உரிமைகள் தினம் – ஆகஸ்ட் 01

- முத்தலாக் முறைக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டத்தைக் கொண்டாடும் வகையில் நாடு முழுவதும் இஸ்லாமிய மகளிர் உரிமைகள் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- முதலாவது இஸ்லாமிய மகளிர் உரிமைகள் தினமானது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 2019 ஆம் அண்டு ஆகஸ்ட் 01 அன்று இந்திய அரசானது முத்தலாக் முறைக்கு எதிரான சட்டத்தை இயற்றியது.
- இச்சட்டமானது முறையாக 2019 ஆம் ஆண்டு இஸ்லாமிய மகளிர் (திருமண உரிமைகளின் பாதுகாப்பு) சட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- இச்சட்டமானது இஸ்லாமிய ஆண்கள் உடனடியாக விவாகரத்து செய்யும் ஒரு முறையினைத் தடை செய்கிறது.

## உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரம் – ஆகஸ்ட் 01 – 07

- தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தாய்ப்பால் ஊட்டுதலால் ஏற்படும் நன்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்த உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "Protect Breastfeeding : A shared Responsibility" என்பதாகும்.
- இந்த வருடாந்திர நிகழ்வானது 1991 ஆம் ஆண்டு முதல் உலகத் தாய்ப்பால் ஊட்டல் செயல் கூட்டிணைவு, உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் ஆகிய அமைப்புகளால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.




## ஹிரோசிமா தினம் – ஆகஸ்ட் 06

- இந்த நாள் இரண்டாம் உலகப் போரின் போது ஹிரோசிமா நகரின் மீது அணுகுண்டு வீசப்பட்ட நிறைவு ஆண்டினைக் குறிக்கிறது.

- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று, ஜப்பானிலுள்ள ஹிரோசிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசிய கொடூர சம்பவம் நடந்தேறியது.
- 1945 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கோடு இந்த தாக்குதலானது மேற்கொள்ளப்பட்டது.
- அமைதியை ஊக்குவிப்பதற்காகவும் அணுசக்தி மற்றும் அணு ஆயுதங்களின் ஆபத்து குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காகவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

## தேசிய கைத்தறி தினம் – ஆகஸ்ட் 07

- இந்தியக் கைத்தறித் தொழில்துறையின் மரபினை உணர்த்தும் வகையில் இந்தியா தனது 7வது தேசிய கைத்தறி தினத்தினைக் கொண்டாடியது.
- 'கைத்தறியானது இந்தியாவின் மரபு' (Handloom, an Indian legacy) என்பதே இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாகும்.
- சுதேசி இயக்கத்தினை நினைவு படுத்தவும், நாட்டின் பொலிவுமிக்க துணி இழைகள் மற்றும் வண்ணமயமான நெசவு முறைகளைக் கொண்டாடவும் இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தியக் கைத்தறித் தொழில்துறையின் மரபினை வெளிப்படுத்தவும் நாட்டிலுள்ள நெசவாளர்களைக் கௌரவிக்கவும் நாடு முழுவதும் இத்தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினமானது முதன்முதலாக 2015 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் அனுசரிக்கப் பட்டது.




## சர்வதேச பூனைகள் தினம் – ஆகஸ்ட் 08

- இத்தினமானது 2002 ஆம் ஆண்டில் சர்வதேச விலங்கு நல நிதியத்தினால் தொடங்கப் பட்டது.
- பூனைகள் வைத்திருப்பதற்கான தேவைகளையும் விருப்பங்களையும் ஊக்குவிக்கச் செய்வதற்கும் பூனை உரிமையாளர்கள் தங்கள் செல்லப் பிராணிகளுடனான பிணைப்பினை மேலும் அதிகரிப்பதற்கான புதிய வழிகளைக் கண்டறிய ஊக்குவிக்கச்

செய்வதற்கும் வேண்டி விலங்குகள் உரிமை நல அமைப்பானது இத்தினத்தினை அனுசரிக்கின்றது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Be cat curious – Training for cats and their humans” என்பதாகும்.


## நாகசாகி தினம் – ஆகஸ்ட் 09

- ஜப்பான் நாடானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 09 ஆம் தேதியினை நாகசாகி தினமாக நினைவு கூர்கிறது.
- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 அன்று அமெரிக்க இராணுவம் ஜப்பானின் நாகசாகி நகர் மீது அணுகுண்டினை வீசியது.
- இதற்கு “Fat - man” என்று குறியீட்டுப் பெயரிடப்பட்டது.




## உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் – ஆகஸ்ட் 09

- உலகப் பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற உலகப் பிரச்சினைகளை மேம்படுத்துவதில் பழங்குடியின மக்கள் மேற்கொள்ளும் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காகவும் இத்தினமானது அனுசரிக்கப்படுகின்றது.



- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Leaving no one behind : Indigenous Peoples and the call for a new social contract" என்பதாகும்.
- இத்தினமானது 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

## வெள்ளையனே வெளியேறு தினம் – ஆகஸ்ட் 09




- ஆகஸ்ட் கிராந்தி தின் அல்லது வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 79வது நிறைவு ஆண்டானது இந்த வருடம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதி அன்று மகாத்மா காந்தி அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு தெளிவான அழைப்பை விடுத்து, மும்பையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழு மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கினார்.
- கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்விக்குப் பிறகு, மும்பையிலுள்ள கோவாலியா டேங்க் மைதானத்தில் மேற்கொண்ட தனது வெள்ளையனே வெளியேறு உரையில் "செய் அல்லது செத்து மடி" எனும் முழக்கத்தினை காந்திஜி எழுப்பினார்.

## உலக சிங்கங்கள் தினம் – ஆகஸ்ட் 10

- விலங்குகளின் ராஜா எனப்படும் சிங்கங்கள் பற்றியும் அவற்றை பாதுகாக்கச் செய்வதற்குமான முயற்சிகளை மேற்கொள்வது பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த செய்வதற்காக இந்த நாளானது அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Slow Elimination of African Lion" என்பது ஆகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- பூனை இனத்தைச் சேர்ந்த இந்த விலங்கானது IUCN அமைப்பின் சிவப்புப் பட்டியலில் அருகி வரும் ஒரு இனமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த கம்பீரமான விலங்கானது புலிக்கு அடுத்தபடியாக ஃபெலிடே (Felidae - பூனை இனம்) குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாவது மிகப்பெரிய இனமாகும்.

## உலக உயிரி எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10

- வழக்கமான புதைப் படிம எரிபொருள்களுக்கு ஒரு மாற்றாக புதைப் படிமம் சாரா எரிபொருள்கள் இருப்பதன் முக்கியத்துவத்தை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- உயிரி எரிபொருள் துறையில், அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளையும் இத்தினம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- 2021 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "சிறந்த சுற்றுச்சூழலுக்காக உயிரி எரிபொருட்களை ஊக்குவித்தல்" என்பதாகும்.
- இத்தினமானது 2015 ஆம் ஆண்டு முதல் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சத்தினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இத்தினமானது சர் ரூடால்ஃப் டீசல் அவர்களின் ஆராய்ச்சி சோதனைகளைக் கௌரவிக்கிறது.
- இவர் 1893 ஆம் ஆண்டில் கடலை எண்ணெயைக் கொண்டு ஓர் இயந்திரத்தை இயக்கினார்.

## சர்வதேச இளையோர் தினம் – ஆகஸ்ட் 12


- உலகெங்கிலும் உள்ள இளையோரின் பிரச்சினைகள் குறித்து அரசுகள் மற்றும் மற்ற அமைப்புகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக வேண்டி ஒவ்வொரு வருடமும் சர்வதேச இளையோர் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக இளையோர் சமுதாயம் மேற்கொண்டு வரும் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இத்தினமானது கடைபிடிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உணவு முறையை மாற்றுதல் : மனிதன் மற்றும் புவியின் நலனுக்காக இளையோர் சமுதாயத்தின் மூலமான புத்தாக்கம்" (Transforming Food Systems: Youth Innovation for Human and Planetary Health) என்பதாகும்.
- இத்தினமானது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று முதன்முறையாக அனுசரிக்கப் பட்டது.




## தேசிய நூலகர்கள் தினம் – ஆகஸ்ட் 12

- ஒவ்வோர் ஆண்டும் பத்மஸ்ரீ டாக்டர் S.R. ரங்கநாதன் அவர்களின் பிறந்த தினமானது தேசிய நூலகர்கள் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.

- இந்தியாவில் நூலக மேம்பாட்டிற்காக இவர் பெரும் பங்கு ஆற்றியவராவார்.
- இந்த ஆண்டு இவருடைய 129வது பிறந்த நாளாகும்.
- இவர் நூலக அறிவியல், தகவல் அறிவியல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகியவற்றின் தந்தை என அழைக்கப்படுகிறார்.




## சர்வதேச இடதுகை பழக்கமுள்ளோர் தினம் – ஆகஸ்ட் 13

- இடதுகை பழக்கமுடையவர்களின் தனித்துவத்தினையும் வேறுபாடுகளையும் கொண்டாடுவதற்கும், வலது கை பழக்கமுடையவர்கள் நிரம்பிய உலகில் இடதுகை பழக்கமுடையவர்கள் எதிர்கொள்ளும் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இடதுகை பழக்கமுடையவர்கள் வலது கை பழக்கமுள்ள தங்களது சகாக்களை விட வாய்மொழித் திறனில் சிறந்தவர்களாக இருக்கலாம் என ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் 2019 ஆம் ஆண்டு ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- இத்தினமானது முதன்முதலில் 1976 ஆம் ஆண்டில் லெப்ட்ஹேண்டர்ஸ் இன்டர்நேஷனல் (Lefthanders International) என்ற நிறுவனத்தின் நிறுவனர் டீன் R. கேம்பல் என்பவரால் தொடங்கப்பட்டது.

## தேசிய துக்க தினம் (வங்காள தேசம்) – ஆகஸ்ட் 15

- வங்காள தேசத்தின் நிறுவன அதிபர் ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்களுடைய 46வது தியாக தினத்தினை வங்காளதேசம் அனுசரித்து வருகிறது.
- 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இரவு சில இராணுவ வீரர்களால் பங்கபந்து சேக் முஜிபூர் ரஹ்மான் படுகொலை செய்யப் பட்டார்.





## உலக ப்ரீ-டயாபட்டீஸ் (நீரிழிவுக்கு முந்தைய நிலை) தினம் – ஆகஸ்ட் 14

- 2021 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 14 ஆம் தேதியானது உலகம் முழுவதும் உலக ப்ரீ-டயாபட்டீஸ் (Prediabetes) தினமாக அனுசரிக்கப்படும்.
- இத்தினமானது ப்ரீ-டயாபட்டீஸ் குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதையும் நீரிழிவு நோயின் அதிகரிப்பு வீதத்தினைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதியானது முதலாவது உலக ப்ரீ-டயாபட்டீஸ் தினமாகும்.
- உலக நீரிழிவு நோய் தினத்திற்கு (நவம்பர் 14) 90 நாட்கள் முன்பாக இத்தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையை மாற்றுவதற்கும் அது மேன்மேலும் முன்னேறி முழுமையான நீரிழிவு நிலையை அடைவதைத் தடுப்பதற்கும் ஏற்ப வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு அறிவியல் ரீதியாக 90 நாட்கள் தேவைப்படும் என்பதே இதற்கான ஒரு காரணமாகும்.
- ப்ரீ-டயாபட்டீஸ் என்பது இரத்தத்தின் சர்க்கரை அளவு அதன் இயல்பான அளவை விட சற்று அதிகமாக இருப்பதும், ஆனால் 2 ஆம் வகை நீரிழிவு நோயாக (மோசமான வாழ்க்கை முறையில் உருவான) வகைப்படுத்தப்படும் அளவிற்கு இல்லாத வகையிலும் உள்ள ஒரு உடல்நிலை ஆகும்.

## உரிமை மாற்ற தினம் – ஆகஸ்ட் 16

- புதுச்சேரி ஒன்றியப் பிரதேசமானது இந்த ஆண்டு தனது 60வது உரிமை மாற்ற தினத்தைக் கொண்டாடுகிறது.
- 1954 ஆம் ஆண்டு அக்டோபர் 18 அன்று மேற்கொள்ளப்பட்ட ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் புதுச்சேரி விடுதலை பெற்றது.
- ஆனால் பிரஞ்சு மற்றும் இந்திய அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமானது 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 அன்று தான் பிரஞ்சு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

- ஆக, புதுச்சேரியைப் பொறுத்தவரையில் உரிமை மாற்ற தினம் தான் அது உண்மையில் சுதந்திரம் பெற்ற தினமாகும்.




## நவ்ரோஷ் முபாரக் தினம் – ஆகஸ்ட் 16

- பாரசீகர்களின் புத்தாண்டானது நவ்ரோஷ் என்று அழைக்கப்படுகிறது.
- நவ்ரோஷ் என்பதன் பொருள் புதிய தினம் என்பதாகும்.
- இது ஈரானிய தீர்க்கதரிசி ஜோராஸ்டர் என்பவரால் (Zoroaster) உருவாக்கப்பட்ட ஒரு திருவிழா ஆகும்.




## உலக மனிதநேய தினம் – ஆகஸ்ட் 19

- மனிதநேய நடவடிக்கைகளை மேற்கொள்கையில் தங்களது உயிரை இழந்த அல்லது உயிரைப் பணயம் வைத்த மனித நேயமிக்க ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் 12வது உலக மனிதநேய தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'The Human Race : a global challenge for Climate Action in Solidarity with people who need it the most' என்பதாகும்.
- ஆகஸ்ட் 19 ஆம் தேதியானது, பாக்தாத்திலுள்ள ஐ.நா. தலைமையகத்தின் மீது நிகழ்த்தப் பட்ட குண்டு வெடிப்பில் ஈராக் நாட்டிற்கான பொதுச் செயலாளரின் அப்போதைய

சிறப்புப் பிரதிநிதியான சர்கியோ வியரா டி மெல்லோ (Sérgio Vieira de Mello) என்பவரும் அவரது 21 சக ஊழியர்களும் கொல்லப் பட்டதை நினைவு கூறும் தினமாகும்.

- இத்தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று கடைபிடிக்கப் பட்டது.





## உலகப் புகைப்பட தினம் – ஆகஸ்ட் 19

- புகைப்படமெடுப்பதை ஒரு பொழுதுபோக்காக மேற்கொள்வதை ஊக்குவிக்கவும் உலகெங்கிலும் உள்ள புகைப்படக் கலைஞர்களை உலகோடு தங்களது ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கவும் வேண்டி ஒவ்வோர் ஆண்டும் உலகப் புகைப்பட தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- முதலாவது அதிகாரப்பூர்வமான உலகப் புகைப்பட தினமானது 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று கடைபிடிக்கப் பட்டது.
- உலகப் புகைப்பட தினத்தின் தோற்றமானது பாதரச ஆவி மூலம் நிழற்படமெடுக்கும் முறையின் (Daguerreotype) கண்டுபிடிப்பிலிருந்துத் தொடங்கியது.
- இது 1837 ஆம் ஆண்டில் பிரஞ்சுக்காரர்களான லூயிஸ் டாகுவேர் மற்றும் ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஒரு புகைப்படச் செயல்முறை ஆகும்.

## அக்சய் உர்ஜா திவாஸ் – ஆகஸ்ட் 20

- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மேம்பாடு மற்றும் ஏற்பு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்சய் உர்ஜா திவாஸ் எனும் தினமானது (புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தினம்) அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது 2004 ஆம் ஆண்டில் இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் வளங்கள் அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- இத்தினமானது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளின் நினைவாக தேர்ந்தெடுக்கப்பட்டது.




## உலக கொசு தினம் – ஆகஸ்ட் 20

- மலேரியா ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் உலக கொசு தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- மலேரியாவினால் ஏற்படும் நோய்களை எதிர்கொள்வதில் பணியாற்றி வரும் சுகாதார நல அலுவலர்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் இதர சிலரின் முயற்சிகளை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டு இத்தினத்திற்கான கருத்துரு, "மலேரியா அற்ற நிலை எனும் இலக்கை அடைதல்" என்பதாகும்.
- மேலும், இத்தினமானது 1897 ஆம் ஆண்டில், பெண் கொசுக்கள் மனிதர்களிடையே மலேரியாவைப் பரப்புகின்றன என்பதைக் கண்டுபிடித்த பிரித்தானிய மருத்துவர் சர் ரொனால்டு ரோஸ் என்பவருடைய கண்டுபிடிப்பினையும் நினைவு கூறுகிறது.
- 1902 ஆம் ஆண்டில் ரோஸ் அவர்கள் மருத்துவத்திற்கான நோபல் பரிசினைப் பெற்று, இந்த விருதினைப் பெற்ற முதல் பிரித்தானியர் எனும் பெருமையைப் பெற்றார்.

## சத்பவனா திவாஸ் – ஆகஸ்ட் 20

- மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பிறந்த நாளினை நினைவு கூறும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் இத்தினமானது அனுசரிக்கப் பட்டு வருகின்றது.
- இந்த ஆண்டானது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் 77வது பிறந்தநாள் நிறைவு ஆண்டாகும்.
- அவர் இறந்த ஒரு வருடத்திற்குப் பிறகு 1992 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி சத்பவனா எனும் விருதினை இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கியது.
- மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் தமது 40 வயதிலேயே இந்தியாவின் இளம் வயது பிரதமராகப் பொறுப்பேற்றார்.




## சமஸ்கிருத வாரம் – ஆகஸ்ட் 19 முதல் 25 வரை

- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 முதல் 25 ஆம் தேதி வரை சமஸ்கிருத வாரமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தப் பண்டையகால மொழியை ஊக்குவிப்பதற்கும் பிரபலமாக்குவதற்காகவும் வேண்டி சமஸ்கிருத வாரமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இது விஷ்வ சமஸ்கிருத தினம் எனவும் அழைக்கப்படுகிறது.

## உலக முதியோர் தினம் – ஆகஸ்ட் 21

- முதியோர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களுக்கு ஆதரவு, கௌரவம் மற்றும் ஊக்குவிப்பினை வழங்கவும் அவர்களின் சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப்பட்டது.
- இத்தினமானது முதியோர்களுக்கும் அவர்களின் பிரச்சினைகளுக்கும் சேர்த்து ஒரு தினத்தை அர்ப்பணிப்பதற்காக வேண்டி 1988 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ரொனால்டு ரீகன் அவர்களால் அதிகாரப் பூர்வமாக நிறுவப் பட்டது.

## தீவிரவாதத்தினால், பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21

- ஐக்கிய நாடுகளானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 21 ஆம் தேதியினை தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினமாக அனுசரிக்கிறது.
- உலகம் முழுவதும் தீவிரவாதத் தாக்குதல்களின் காரணமாக தாக்கப்பட்ட, காயம் அடைந்த, அதிர்ச்சியடைந்த (அ) உயிரிழந்த நபர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிர்ணயிக்கப் பட்டது.

- ❖ இது முதன்முதலாக 2018 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இணைப்புகள்" (Connections) என்பது ஆகும்.




## சமஸ்கிருத தினம் – ஆகஸ்ட் 22

- ❖ 2021 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 22 ஆம் தேதியானது சமஸ்கிருத தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இத்தினமானது ஷ்ரவண மாதத்தின் முழு நிலவு (பௌர்ணமி) தினத்தன்று அனுசரிக்கப் படுகிறது.
- ❖ மேலும் இத்தினம் ஒவ்வோர் ஆண்டு ரக்சா பந்தன் தினத்தினையும் குறிக்கிறது.
- ❖ உலக சமஸ்கிருத தினமானது முதன்முறையாக 1969 ஆம் ஆண்டில் ரக்சா பந்தன் நாளன்று இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டது.

## மதம் (அ) நம்பிக்கை சார்ந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினம் – ஆகஸ்ட் 22

- ❖ சமயம் (அ) நம்பிக்கை சார்ந்த சுதந்திரம் குறித்த மனித உரிமைகளை ஊக்குவிக்கச் செய்வதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் முயற்சிகளின் ஓர் அங்கமாக சமய வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இது முதன்முதலாக 2019 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- ❖ இதற்கான தீர்மானமானது போலந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜசெக் சாபுடோவிச் என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டது.

## தேசிய தேனீக்கள் தினம் 2021 – ஆகஸ்ட் 21

- ❖ அமெரிக்காவில் ஒவ்வோர் ஆண்டிலும் ஆகஸ்ட் மாதத்தின் 3வது சனிக்கிழமை என்பது தேசிய தேனீக்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டு இத்தினம் ஆகஸ்ட் 21 (சனிக்கிழமை) அன்று நிகழ்ந்தது.
- ❖ இத்தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று அனுசரிக்கப் பட்டது.

## சென்னை தினம் – ஆகஸ்ட் 22

- ❖ ஆகஸ்ட் 22 அன்று சென்னை தனது 382வது பிறந்த தினத்தை (உருவான தினம்) கொண்டாடியது.
- ❖ 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று மதராசப்பட்டினம் எனும் கிராமத்தை விஜய நகரப் பேரரசிடம் இருந்து கிழக்கிந்திய கம்பெனி வாங்கியது.
- ❖ சென்னை தினத்தைக் கொண்டாடுவது என்ற கருத்தானது 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.





## ஸ்டாலினியவாதம் மற்றும் நாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கான ஐரோப்பிய தினம் – ஆகஸ்ட் 23

- ❖ இத்தினமானது சில நாடுகளில் கருப்புப் பட்டை தினம் எனவும் அழைக்கப்படுகிறது.
- ❖ இது சர்வாதிகார ஆட்சியினால் குறிப்பாக ஸ்டானிய வாதம், வகுப்புவாதம், நாசிசம் மற்றும் பாசிசம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கான ஒரு சர்வதேச தினமாகும்.
- ❖ இது "தீவிரவாதம், சகிப்புத் தன்மை மற்றும் ஒடுக்குமுறை" ஆகியவை நிராகரிக்கப் படுவதைக் குறிக்கிறது.
- ❖ இத்தினமானது 2009 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஒன்றியத்தினால் அனுசரிக்கப் பட்டு வருகிறது.
- ❖ மோலோடோவ் – ரிப்பன்ரோப் என்ற ஒரு ஒப்பந்தம் கையெழுத்தான தேதியுடன் ஒன்றிணையும் வகையில் ஆகஸ்ட் 23 ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ மோலோடோவ் – ரிப்பன்ரோப் ஒப்பந்தமானது 1939 ஆம் ஆண்டில் USSR மற்றும் நாஜி ஜெர்மனி இடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்பந்தமாகும்.




## அடிமை வர்த்தகம் மற்றும் அதன் ஒழிப்பினை நினைவு கூறுவதற்கான சர்வதேச நினைவு தினம் – ஆகஸ்ட் 23

- அடிமை வர்த்தகத்தினால் பாதிக்கப்பட்ட அனைவரின் நினைவாக வேண்டி அடிமை வர்த்தகத்தின் துயரத்தைப் பாதிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- 1791 ஆம் ஆண்டில் செயின்ட்-டொமிங்கோவில் புரட்சியில் ஈடுபட்டு அடிமை வர்த்தகத்தினையும் மனிதநேயமற்றச் செயல்களையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கான பாதைக்கு வழிவகுத்த ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய அனைவரின் நினைவாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.




## உலகத் தொழில்முனைவோர் தினம் – ஆகஸ்ட் 21

- பங்குதாரர்களிடையே தொழில் முனைவு, புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதற்காக வேண்டி ஆண்டுதோறும் உலக தொழில்முனைவோர் தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

- ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கும் தனிநபரின் முயற்சிகளை அங்கீகரித்துப் பாராட்டுவதற்காகவும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச வணிகக் கூட்டமைப்பானது முன்னின்று உலகத் தொழில் முனைவோர் தினத்தைக் கொண்டாட உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது.
- தொழில்முனைவினை ஆதரிப்பதற்காக இந்திய அரசினால் தொடங்கப்பட்ட சில முன்னெடுப்புகள், ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் மற்றும் பிரதான் மந்திரி முத்ரா யோஜனா ஆகியனவாகும்.

## உலக தண்ணீர் வாரம் – ஆகஸ்ட் 23 முதல் 27 வரை

- உலக தண்ணீர் வாரமானது ஸ்டாக்ஹோம் சர்வதேச தண்ணீர் நிறுவனத்தினால் 1991 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- உலகளாவிய அளவிலான தண்ணீர் நெருக்கடிகளை எதிர்கொள்ளவும் சர்வதேச மேம்பாடு குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்யவும் வேண்டி இந்த நிகழ்வானது அனுசரிக்கப் படுகிறது.
- 2021ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் வாரத்தின் கருத்துரு, “Building Resilience Faster” என்பதாகும்.

## சர்வதேச நாய்கள் தினம் – ஆகஸ்ட் 26

- நாய் வளர்ப்பு பற்றியும் அவற்றிற்குப் பாதுகாப்பான மற்றும் அன்பானச் சூழலை வழங்குவதன் முக்கியத்துவத்தினையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச நாய்கள் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது அமெரிக்காவில் கோலீன் பைகே (Colleen Paige) என்பவரால் 2004 ஆம் ஆண்டில் தேசிய நாய்கள் தினமாக தொடங்கப் பட்டது.

## அணுசக்தி சோதனைக்கு எதிரான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 29


- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஆகஸ்ட் 29 ஆம் தேதியினை அணுசக்தி சோதனைக்கு எதிரான சர்வதேச தினமாக அறிவித்தது.
- அணு ஆயுதங்களின் சோதனை வெடிப்புகளின் விளைவுகள் பற்றியும் (அ) எந்தவொரு அணுசக்தி வெடிப்பின் விளைவினைப் பற்றிய விழிப்புணர்வினையும் கல்வியையும் அதிகரிப்பதற்காகவும் அணுசக்தி ஆயுதமற்ற உலகை உருவாக்குதல் என்ற இலக்கை அடைவதற்கான ஒரு வழிமுறையாக அணுசக்தி ஆயுதங்களின் பயன்பாடு நிறுத்தப் பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தத் தீர்மானம் அழைப்பு விடுக்கிறது.
- இந்தத் தீர்மானமானது கசகஸ்தான் குடியரசினால் முன்மொழியப் பட்டது.
- 2010 ஆம் ஆண்டானது அணுசக்தி சோதனைக்கு எதிரான முதலாவது சர்வதேச தினத்தைக் குறிக்கின்றது.

## தேசிய விளையாட்டு தினம் – ஆகஸ்ட் 29


- இந்திய ஹாக்கி ஜாம்பவானான மேஜர் தயான் சந்த் அவர்களின் பிறந்தநாளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- அவர் தற்போதுள்ள பிரயாக்ராஜ் (உத்திரப் பிரதேசம்) எனுமிடத்தில் 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று பிறந்தார்.
- இவர் 1936 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெர்லின் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியின் தலைவராக இருந்தவராவார்.

*குறிப்பு*

- பி.டி. உஷா உடன்பாரி என்றும், சச்சின் டெண்டுல்கர் மாஸ்டர் பிளாஸ்டர் என்றும் அழைக்கப்படுவது போல மேஜர் தயான் சந்த் அவர்கள் 'ஹாக்கி விசார்டு' என அழைக்கப் படுகிறார்.




## தெலுங்கு மொழி தினம் – ஆகஸ்ட் 29



- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 29 அன்று தெலுங்கு மொழி தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது தெலுங்குக் கவிஞர் கிடுகு வெங்கட ராமமூர்த்தி அவர்களின் பிறந்த நாளோடு ஒன்றி வருமாறு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- தெலுங்கு மொழியானது 'கிழக்கின் இத்தாலிய மொழி' எனக் குறிப்பிடப்படுகிறது.

## ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30

- உறவினர்களுக்கும் சட்டப்பூர்வப் பிரதிநிதிகளுக்கும் தெரியாத வகையில் மோசமான சூழ்நிலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தனி நபர்களின் நிலை குறித்த கவனத்தை ஈர்ப்பதற்காக வேண்டி இத்தினமானது உருவாக்கப்பட்டது.
- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் உருவாக்கப் பட்டது.
- ஆள்கடத்தலுக்கு உள்ளான அனைத்து நபர்களின் பாதுகாப்பிற்குமான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் நாடுகளின் தங்களது கடமைகளைப் பூர்த்தி செய்வதைக் கருத்தில் கொள்வதையும் இந்த தினம் வழி வகுக்கிறது.




## சிறுதொழில் தினம் – ஆகஸ்ட் 30

- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30 அன்று தேசிய சிறுதொழில் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ஓர் ஆண்டில் இவை அடைந்த ஒட்டுமொத்த வளர்ச்சித்திறன் மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சிறுதொழில் என்பது தற்போதுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சமச்சீரான வளர்ச்சியை வழங்கும் ஓர் ஊடகமாகவும் உள்ளது.
- மேலும் அரசின் நிதி வளத்தினை மேம்படுத்துவதற்காக புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் இது உதவியினை வழங்குகிறது.




## சர்வதேச திமிங்கலச் சுறா தினம் – ஆகஸ்ட் 30

- இந்த அற்புதமான கடல்வாழ் உயிரினத்தினைக் கொண்டாடுவதற்கும் அது பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் இத்தினமானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- திமிங்கலச் சுறாக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருவதால் அவற்றைப் பாதுகாப்பது மிகுந்த அவசியமாகும்.
- 2016 ஆம் ஆண்டில் திமிங்கலச் சுறா பாதிக்கப்பட்ட உயிரினத்திலிருந்து அருகி வரும் இனமாக மறுவகைப் படுத்தப்பட்டது.

## அதிகப்படியான மருந்து உட்கொள்ளல் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 31


- இத்தினமானது 2001 ஆம் ஆண்டில் மெல்போர்னின் செயின்ட் கில்டா (St Kilda) என்னுமிடத்தில் அமைந்த தி சால்வேசன் ஆர்மியைச் சேர்ந்த சால்லி ஜெ ஃபின் என்பவரால் தொடங்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டு முதல் இத்தினமானது பென்னிங்டோன் இன்ஸ்டிடியூட் எனும் ஆஸ்திரேலிய லாபநோக்கமற்ற பொதுச் சுகாதார அமைப்பினால் ஒருங்கிணைக்கப் பட்டு வருகிறது.
- உலகின் மிக மோசமான பொதுச் சுகாதார நெருக்கடிகளுள் ஒன்றான அதிகப் படியான மருந்து உட்கொள்ளல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆதார அடிப்படையில் அதிக மருந்து உட்கொள்ளலைத் தடுத்தல் மற்றும் மருந்து கொள்கை பற்றி விவாதிக்கவும் அது குறித்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.



# இதரச் செய்திகள்

## தேசிய அந்துப்பூச்சி வாரம் - ஜூலை 17/25, 2021

- இந்த ஆண்டின் தேசிய அந்துப்பூச்சி (Moth) வாரமானது அதன் 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- தேசிய அந்துப்பூச்சி வாரமானது அந்துப்பூச்சிகளின் அழகு, வாழ்க்கைச் சுழற்சி மற்றும் அதன் வாழ்விடங்கள் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது.
- இது உலகம் முழுவதும் ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தின் போது அனுசரிக்கப் படுகின்றது.
- தேசிய அந்துப்பூச்சி வாரமானது 2012 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உருவாக்கப் பட்டது.
- இது நியூ ஜெர்சியிலுள்ள ஃபிரண்ட்ஸ் ஆஃப் ஈஸ்ட் ப்ரூன்ஸ்விக் சுற்றுச்சூழல் ஆணையம் (Friends of the East Brunswick Environmental Commission) எனும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பினால் உருவாக்கப்பட்டது.




## ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிலைய விருது தரவரிசை – 2021

- இந்த தரவரிசையின் படி, டெல்லியின் இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையம் 2021 ஆம் ஆண்டில் உலகின் 50 முன்னணி விமான நிலையங்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- டெல்லி விமான நிலையமானது 45வது இடத்திலுள்ளது.
- இந்தத் தரவரிசையைப் பெற்ற முதல் இந்திய விமான நிலையம் இதுவாகும்.
- டெல்லி விமான நிலையமானது தொடர்ந்து 3வது ஆண்டாக இந்தியாவின் சிறந்த விமான நிலையமாகத் திகழ்கிறது.
- மும்பை, ஹைதராபாத் மற்றும் பெங்களூரு போன்ற விமான நிலையங்களும் உலகின் 100 முன்னணி விமான நிலையங்களுள் இடம் பெற்றுள்ளன.
- உலகின் 3 முன்னணி விமான நிலையங்கள்

- தோஹா ஹமத் (Doha Hamad) பன்னாட்டு விமான நிலையம்
- டோக்கியோ ஹனேடா (Tokyo Haneda) விமான நிலையம் மற்றும்
- சிங்கப்பூரின் சாங்கி (Changi) விமான நிலையம் ஆகியன ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★